உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

---

அஷ்டாஷ்டமூர்த்தங்களாகிய

# சிவபராக்கிரமம்.

இதனை
சென்னைக் கிறிஸ்டியன் காலேஜ்
தமிழ்ப்பண்டிதர்

## ஈ - இரத்தினவேலு முதலியார்

அறுபத்துநான்கு திருவுருவப் படங்களோடும்
வேதாகமாதிவடநூன்மேற்கோள்களோடும்
வசனரூபமாகச்செய்து

தா - குப்புசாமிநாயகரவர்களால்

சென்னை
ஸ்டார் ஆப் இந்தியா பிரஸ்ஸில்
பதிப்பித்தனர்.

1895.

# விளம்பரம்.

---

இதனுல யாவாககு மறிவிபபதெனனெனில, இபட
தகம் வேணடுவோா செனனை "ஸடாா ஆப இநதியாபிர
தலைவா ம-ா-ாஸ்ரீ, தா - குபபுசாமிநாயகரிடத்திலு
செனனைககிருஷ்ணமபேடடைஹா மிலடனவாராவதிரோ
23 - வது நெமபா வீடடில ம-ா-ா-ஸ்ரீ, இரததின முத
யாரிடததிலும, திருசசிராபபளளியில புததகஷாபபு வை
திருககும ம-ா-ா-ஸ்ரீ சந்திரசேகரமுதலியாரிடததி
விலைக்குப பெறறுககொளளலாம.

உடனே அசசிடும நூலகள.

ஹரிஹரதாரதமமியம

நவதாணடவம.

நத்மே நந்ரபாகம் பீடத்தின அதோபாகத்தின அடிநானகு பிரமபாகம் நடுவின எட்டுமேலே விஷ்ணுபாகம் இவற்றுட பாகம நபும்சகலிங்கம் விஷ்ணுபாகம ஸ்திரீலிங்கம் உருத்திர ம புஸ்லிங்கமாம இதுவே பிரணவமுதற்பொருள இதனசோதி மே மகார அகார உகாரமா யிருக்கும அகார வாச்சியமே ம் உகாரவாச்சியமே சத்தி மகாரவாச்சியமே பரம் எனவும, ரம நாதம், உகாரம விந்து, மகாரம கலை எனவும், வேதங ம இவை சிவனது அவ்யக்தஉருவாகிய நிஷ்களம இவ வோங சிவசத்தி லிங்கத்திற சதாசிவாதியா தோறறலயமாவா அகாரங டம, உகாரங கோமுகம, மகாரம வட்டமாய, சிவசாதாக்கியம- ாத்திசாதாக்கியம - மூர்த்திசாதாக்கியம - கர்த்திருசாதாக்கியம- சாதாக்கியமாகும. அவற்றுள சிவசாதாக்கிய மாவது கரண த்தியதீதமாய அதிருக்குமமாய மகாசோதியுருவாய நிரஞ்சனமா ராசத்தியால அதிஷ்டிக்கப்பட்டுள்ளது. இதுவே லயத்தானம. ந யதிஷ்டிக்குஞ சத்தி சாந்தியத்தை அமூர்த்திசாதாக்கிய து வடிவற்றியாய்க கலைகளுக கப்பாறபட்டு அநேக சூரிய ருதி தயொத்த தாணுலிங்க மத்தியத்திற காணடற்கரிய திருவுருப ெழுந்தருளியிருப்பது. இது அமூர்த்தமாகிய சாந்தி யென ந்த்தியால அதிஷ்டிக்கப்பட் டிருக்கும மூர்த்திசாதாக்கிய வ்ணப்பட்ட வடிவையுடைத்தாயக் காலாக்கினி தேஜஸை த்தாய இலிங்கவடிவாகி ஊர்த்வபாகத்து ஒரு திருவதனமு ஞானக்கிரியைகளாகிய மூன்று திருநேத்திரங்களும அகண்டி, ர்த்தமுமுடையது. இது வித்தை;என்னுஞ்சத்தியால அதிஷ் பட்டிருக்கும,கர்த்திருசாதாக்கியமாவது சததாய,சுத்தபடிக கொண்ட இலயலிங்கமாய நாலு திருமுகமும துவாதச திர ங்களு முடைத்தாய் வலப்பால் சூலம் கட்கம வாள் அபய ல் நாகம் பாசம் மணி வரதம் என்னு மவைகளைப் பெற்று

உ

சிவமயம

திருசசிறறமபலம

பரமபதியேநம

---

முதலாவது

# இலிங்கமூர்த்தி.

ஒலி முதலிய புலனக ளினறி மனோ வாககுகளுக கெடட
ாய, அளவிலலாத பேரொளியாயத தனககுமேல நாயக மிலல
ாய அருவமாய நிரமலமாயக குணரகிதமாய அநநதகுணமணிய
ணமறறதாய நாசரகிதமாயச சாவஜஞகததுககும ஏதுவாய அவ
மெனப பழமறை பகாவதாகி யுளளது சுத்தசிவம் மேறகூ
ிலககணஙகளை யுடைய அப பரசிவம ஆனமாககளின தியாந
ருநிமிததம நிடகள சகளத திருவுருக கொணட நிலை இல
மணபபடும. அவவிலிஙகததின பிணடிகை யானது சத்தியுரு
பிஙக மானது சிவரூபம். ஆகவே, இலிஙகம ஞானசததிவடி
_ம கிரியாசததி வடிவம் ஆதலின இவவிரணடுஞ சிவனதிவ
க தேகம. இததேகததை யதிஷ்டித துளளவனாகிய பரசிவன
கியாம. முனனாக கூறிய அவ் விலிஙகம, வியகதம் -வி
ாகதம-அவயகத மென மூவிதமாம. அவறறுட சநதிரசேகர
பல திருவுருவஙகளை யுடைய சகள வுருவமே வியக்தம்.
களமே வியக்தாவ்யக்தம். நிஷ்களமே அவ்யக்த மெ



உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

அஷ்டாஷ்டமூர்த்தங்களாகிய

# சிவபராக்கிரமம்.

## பாயிரம்.

### விநாயகர் துதி.

திருவி ளையகன், மருக ளுகிய,

# கடவுள் வாழ்த்து.

## நடேசர்.

கானேந்துகுழற்கவுரிவிழிகளிப்பவிருமுனிவர்கனிந்துபோற்ற,
தேனேந்துமலர்ப்பொழில்சூழ் தில்லைநடந்தனைக்குயிற்றுநே
வானேந்துமைம்பூதவகையனைத்துந்தனுருவாயவயங்கக
மானேந்துகரத்தொருவனமலரேந்துசரணமலர்வழுத்திவாழ

## சிவகாமியம்மையார்.

சிலையொருகையடக்கியலைகடலொருகையடக்கியபின்சொந்த
நிலையதனைவயக்குமமாமுனிவனுக்கோமொழியுதவுநிமலனை
தலைமகளைக்கலைமகளையணிவிழியாகக்கொண்டகிலமளிக்குந்தெ
மலையரையன்பயந்தபரமபரையடியையிறைஞ்சிமனவாட்டந்

## குமாரக்கடவுள்.

அன்றேங்கிசூர்தடிந்திட்டறனோங்குமமரர்துயரனைத்துமோ
சென்றேங்கிவருந்தகளாயூர்ந்திமையாவிழிபடைத்ததேவர்க
உன்றேங்கவருள்றையுநாடுதவிக்கலலாரநலக்கமேவுங
யூன்றேங்குமொருகுகனைக் குறைநீங்க நெஞ்சகத்தாற் குறித்த

## சமயகுரவர்

நந்தாணமலரயனருழக்காழிவருமறைக்கன்றைக்கலைதனலை
யந்தமிலசீராயாறறிறகண்டவருட்பெருங்கடலையானையூர்ந்து
கொந்தவிழுமலர்க்கொன்றை யானபரமபுகண்டகுணக்குன
ந்திராகளபெருந்தகையாயவாதவூரவருமணியைவழுத்துவாம

## அறுபத்துமூவர்.

சித்த மாசகல, முத்தி சேர்வு,
பத்து மூவாறு, கத்த ராவரோ.

## அவையடக்கம்.

மதிவளர் சடாடவி மன்ற வாணனார்
விதியுளி பூசைபோல விதியில பூசையுங
கதுமெனக் கோடலாற கடையன் புனசொலு
மதியுடை யறிஞரு மரபிற் கொள்வரோ.

## நூல வரலாறு.

மமஹாதேவா அடியாாககுறற இடுககண களைநது
ததிகளை யருளுமபடி சகளீகரிதத அவசரஙக ெ
ஷடாஷ்டமூாததமாகிய சிவபாாககிரமததை நன
டி அநுககிரகஞசெயயவேணடும" என று விண
தமுனிவா "நைமிசாரணணியவாசிகளே! பெரிே
சேவிததது வீண போகாமற சிவபுணணியததைப
செயதீாகள" என று கூறிச சிறிதுநேரம அசைவ
காளகணடமுங கணமூெனறு மூனறுந தோளொரு ந
சுடர்முக மைநதுமுளள சுயஞசோதியாகிய சிவபிர
ளததிருததி "நீஙகள விருமபிப சரிதை பதினெண
களிலுஞசிறநத புராணரததினமாகவிளஙகுமு ஸ்ரீமக
ராணததிலுளள சனறகுமாரசஙகிதை சூதசஙகின
ரஙகிதை - விஷ்ணுசஙகிதை - பிரமசஙகிதை-சூரிய
பாகிய ஆறு சஙகிதைகளுள், சனறகுமாரசஙகிதை
ததிமானமிய முனாதத சாககததில, திருநநதிதேவா
மாரமுநிவருககுக் கூறியதாக வுளளது. இதனை
றெரிநத வியாதமுனிவா எனக குபதேசிததருளினா
ஒருவகையாகக கூறுகினறேன. திரிகரண சுததியா
பீாகளாக" என று சூதமுனிவா கூறககேடடு உன
உடலசைய, உள்ளமுருக, இன்பவெள்ளமபெருக
பாடினா-ஆநநதககூததாடினா் பரவசராய் அத தி
ளை யருச்சிதது அரிய புணணியததைக கைக்கெ

சிவமயம.

# நூல் வரலாறு.

---

சாவ மஙகள தேஜோமயமாகிய சிவபெருமானே
ரீருளென றுணாநத உணமைஞானததை யுடைய
வேதாரணியா-புலததியா-துருவாசா-சுகா-மாண
வாததா-சுநசசேபா-சமடபுபததா-சதாநநதா-ஆததி
ாநகா-புலகா-சமதககினி-சஙகா-மாதேசா-லிகிதா
குறசா-கறகா-நாரதா-விசசுவாமித்திரா-பாரதுவாச
பகா-காசிபா-வாமதேவா-கணணுவா முதலாகிய
ஷ்டாகள முனனொரு காலததில நைமிசாரணிய
வெணணீறு சணணிதது, திரிபுணடரமணிநது அகக
டிச் சிவததியானபராய வேதாகமஙகளாற பரமபதி
கிததுவாழநதிருநதனா. அககாலததுச சதுாவேத ஷ
ஷ்டாதசபுராணஙகளே வியாதமுனிவாபால ஐயந தி
ாநத புணணியவடிவினராகிய சூதபுராணிகா அஙகெ
நளககணடு முனிவாகள எதிாகொண டழைதது அரு
ததிய ஆசமநாதிகளா லுபசரிததுத தகுநதஆதநததிரு
மமலமறற முனிபுங்கவரே! எமதுதவபபேற்றால தே
டெழுநதருளபபெறறோம. சிவபிரானே அகில தே
ஷ்டியாதி பஞசகிருத்தியகாரண னெனறும, அவரது
யே அழிவறற நற்கதியை யளிபபதெனறும, அவரை
செய்வது ஸ்ரீ பஞசாக்ஷரமநதிரமே யென்றும யாங்
ாநதிருந்தும, அபபெருமானது புகழைக்குறிக்கும்
ணங்களைத் தேவரீர் அடியேங்கட் குபதேசித்திருந்

மகாமகோபாத்யாய, டாக்டர்
உ. வே. சாமிநாதையர் நூல் நிலைய
அடையாறு, சென்னை-20.

சிவமயம்.

# கையொப்ப ஜாபிதா

சிதம்பரம் ஸ்ரீமத்- இராமலிங்க சுவாமிகள்

## Accountant General's Office

M. முநிசாமிசெட்டியார்
C. தங்கவேலுமுதலியார்.
C. சிவராமமுதலியார்
V. கலியாணசுந்திரம்பிள்ளை.
A. குருசாமிமுதலியார்
C. கணபதிமுதலியார்.
P. குமாரசாமிமுதலியார்.
A. முருகேசமுதலியார்.
பு. சிங்காரவேலுமுதலியார்.
P. சபாபதிசெட்டியார்.
T. பதராயமுதலியார்.
A. கோபாலமுதலியார்.

## Pay Examiner's Office.

C. பச்சையப்பநாயகர்.
S. தியாகராயசெட்டியார்.
C. தங்கவேலுசெட்டியார்.
C. நடேசமுதலியார்.
P. பாலசுந்திரமுதலியார்.
M. அப்பாதுரைமுதலியார்.
M. பாலு முதலியார்.

## Tamil Translatio

T. பாலசுந்தரமுதலி

## High Cou

A. சோமசுந்திரமுத
Com Examiner
M. இராஜவேலுமு

## Port Offi

P. சிவகுருநாதமுத

## Madras C

V. M. அணைலுசா
T. இராஜரத்தின
M. காளிதாஸலால
N. [illegible] சின்னயமு
B. திருமூர்த்திமுத
B. புருஷோத்தமந
V. கோவிந்தராஜ

## Post Of

P. M. கந்தசாமி
A. முருகேசமுதல்
T. செங்கலவராய
சி, மாணிக்கமுதல்

Hindu Office

M. கொழந்தைவேலுமுதலியார். 2
வி. சபாபதிமுதலியார்.

Gun Carriage Factory

V. வடிவேலாச்சாரி.
குமாரசாமிஆச்சாரி

Bank of Madras

C. N. கலியாணசுந்தரமுதலியார். 10

Board of Revenue

J. M. சிவசங்கரமுதலியார்.

Rev. Settlement Office

M. நாதமுநிமுதலியார்
2 சேஷாசலமுதலியார்

Rev Survey Office

ஆ. சங்கரநாராயணபிள்ளை. 10
C. S. தங்கவேலுமுதலியார்.

Messsr Spencer & Co

ஆ. வேதாசலமுதலியார்
குமாரசாமிமுதலியார்.

P Orr & Sons.

T. அண்ணாமலைமுதலியார்.

Messrs Rutherford & Co.

P. கிருஷ்ணசாமிமுதலியார்.

Supt. of Pensions Office

P. சந்திரநாதசெட்டியார்.
சந்திரசேகரராவ்.
C சிங்காரவேலுமுதலியார்.
P. S. சுப்பராயஆச்சாரி
T. வெங்கிடகிருஷ்ணபிள்ளை

M W D Office.

P சிவசங்கரம்பிள்ளை.

Clothing Examiner's Office

I ஆதிமூலமுதலியார்
C பாலசுந்தரம்.

Army Clothing Office

தி. இரத்தினசெட்டியார்.

Sea Customs Office

N S. தங்கவேலுமுதலியார்.
அருமபுநாயகர்.

Commissariat Department

T. V. இரங்கசுவாமி

Messrs. Higginbotham & Co

அருணாசலநாயகர்.

Messrs Wilson & Co

T. V. முருகேசமுதலியார்.

Messrs. Deschamps & Co.

C. அப்பாசாமிமுதலியார்.

## கையொபப ஜாபிதா.

P W Secretariat.

M. ஆறுமுகமுதலியார.

Municipal Office.

N. குமாரசாமிபிளளை. 2
P. விஜயானநதரஙகமுதலியார.

Mail Office.

பொனனுசுவாமிமுதலியார.

Inspector General of Police

M. C நிதயானநதமுதலியார.
M ஷணமுகமுதலியார.
M. கோவிநதசாமிமுதலியார.

Govt. Office Rev Dept.

T. முனிசாமிமுதலியார.

Small Cause Court

C. இரஙகசுவாமிமுதலியார.
C. A. வீராசாமிமுதலியார. 2

M. Ry Co.

ப. சாமிநாதமுதலியார.

வக்கீல குமஸ்தாக்கள.

T. தெய்வசிகாமணிமுதலியார்.
P. தணிகாசலமுதலியார்.

Teacher.

க. வ. திருவேங்கிடநாயுடு.

Students.

P அரஙகசுவாமி.
M. நாராயணசுவாமி.
V. முருகையசெட்டியார.

திருவலலிகேணி.

தி. க மாணிககசெட்டியார.
சீ கோ பாாததசாரதிசெட்டியார.
அபபுசெட்டியார
ஆ கோவிநதசெட்டியார.
ஆ முருகபபசெட்டியார.
லால மாணிககசெட்டியார.
தஙகவேலுமுதலியார.
M ஷணமுகசெட்டியார.
பெரியதனம. குபபுசெட்டியார.
மணிகை பபராய நாயகர.
வெ கஙகாதரமுதலியார.
A கோவிநதராஜலுசெட்டியார.
T A அபபாசாமிசெட்டியார.
முனிசாமிசெட்டியார.
மாணிககாசாரி.
கா. இரததினசாரி.
முததாசாரி.
கணணியாசாரி.
கோவிநதசெட்டியார் ஷராப.

திருமயிலை.

க. விநாயகமுதலியார.
சபாபதிமுதலியார.
சி. சிங்காரமுதலியார்.
ரங். பாாததசாரதிசெட்டியார்.
மயிலை தாண்டவராயசெட்டியார்
செங்கழனிசெட்டியார்.

சிவமயம.

# இவ்வசனநூலில் ஆண்டாண்டெடுத்துதகரித்த
# சமஸ்கிருதபபிரமாணநூலகள.

ாதுளாகமம
ாமநபுராணம.
ித்தாநதஸாராவளி.
ுதாவணவேதம.
ைகவலயோபநிஷதது.
ருதிகள.
ஸாநசமஹிதை.
ரஹமோததரகாணடம.
ிவரஹஸயம.
மாயணம.
மஸகநதம.
ஷ்ணுபுராணம.
காநதபுராணம.
ூஸ்ஸம்ஹிதை.
ஸிம்நஸ்துதி.
சிம்ஹபுராணம்.
கவதபுராணம.
ாஸமஹிதை.
ஙகபுராணம்.
ிதயபுராணம்.
ைவபுராணம்.
ந்தலஹரி.

ஸௌநதாயலஹரி.
நருஸிமஹோததரபுராணம.
தாருவநகரீடாவிலாஸம.
ருகவேதம.
தைததிரீயகம-ஶருதி.
காஶிகணடம.
பரஹமாணடபுராணம.
பராஶரபுராணம.
வாயுஸமஹிதை
அதாவஶிகோபநிஷதது
கூாமபுராணம.
காளிகாகணடம.
ஶவேதாஶவதரோபநிஷதது
நிகணடு.
மநதரோபநிஷதது.
ஸமருதி.
ஹரதததாவாகயம்.
ருதரகோடிமஹாதம்யம.
பாரதம்.
அநுஶாஸநிகபர்வம்.
சாநதிபர்வம.
ஸௌப்திகபாவம்.

ப்ரஹ்மஸ்ரீ

# முலுகுட்ல - விசுவநாத சாஸ்தரிணும் விரசித

# சுலோகௌ.

---

ஸ்ரீரதநவேலமுதலியா ரவநீதலேத்ய சாஸீயயஸாவ ஸிவஸம்மத மூலதந்த்ரான- அஷ்டாஷ்ட விக்ரஹ ஸமாஹ்வய ஸைவ லீலாக்ரந்தசகார ஸிவபக்தபராயணோஸௌ-க.

த்ருஷ்டோஹ்யேதத்க்ரந்த ஸர்வஸ்ருதிஸார ஸம்மதோஜயதி சித்ரபடைஸ ஸம்யுக்த ஸ்சித்ரதயா ஸகலபக்த ஸம்ஸேவ்ய.-உ.

బ్రహ్మశ్రీ- ములుకుట్ల. విశ్వనాథశాస్త్రిణ విరచితశ్లోకౌ.

---

శ్రీరత్నవేల్మొదలియారవనీతలేద్య చాసీయ్యసర్వశివసమ్మత మూలతంత్రాత్ । అష్టాష్టవిగ్రహ సమాహ్వయశైవ లీలాగ్రంథంచకార శివభక్త పరాయణోసౌ॥౧॥

దృష్ట్వాహ్యేతద్గ్రంథ స్సర్వశ్శృతిసార సమ్మతోజయతి ।
చిత్రపటైస్సంయుక్త శ్చిత్రతయా సకలభక్త సంసేవ్యః॥౨॥

# சிறப்புப்பாயிரம்.

சிவபராக கிரமமா முவமையின மாணமியம
மாசிலாத தவாககிறை கேசிமா முனிவரன
சீரியல போஙக வாரியத தமைததனன
செபபரு மேனமை யபபெரு நூலை
எணடகு சீாததித தணடமிழப பாஷையின
மொழிபெயாத தெவரும பழுதறத தோவான
இமிழதரு வேதா கமவுப நிடதப்
பிரமா ணஙகள திரமுறக காடடி
வசனகா வியமா விசைதர வியறறினன
ஆககமே பெருகு மீககா டதனகண *
தஙகைகயங் குலமவி ளஙகவந துதிததோன
புஙகவா புகழு மரஙக சாமிமால
நறறவ மனைததும பெறறிசே ருருவா
யுதிததெனன றறிஞா மதிததிடு புதலவன
ஒழுகக மனைததும விழுததக வமைநதோன
கலைவலா புகழதரு நிலைமை யாளன
அரனடி யவனா யரனெனப போறறுறூஉம
பததிமை தழைநத ரததினவே லோநதலே.

சிவமயம்.

# முகவுரை.

அஷடாஷ்டகவிகரகலீலை எனபது சிவபிரான அறுபததுநானகு திருவுருவமைநது அடியாாகட கருளசெயத திருவிளையாடலெனபபடுமெ. இதனையே அஷடாஷட மூாததமெனவும சிவபராககரமமெனவும வழஙகுவா.

இவ்விகரஹலீலையை வேதாகமபுராணஙகளுள, **வேதம்** தியாநரூபமாகவும, **ஆகமம்** அதனைவிரிததுச சகளததிருமேனியில அடியாாகள வழிபடடுயயும்பொருடடு கிரியாரூபமாகவும, **புராணங்கள்** அவவாறு வழிபடடுப பேறுபெறறோ ரிவரெனக கதாரூபமாகவுங கூறும. இனனுமபலவாககூறுஞ சரிதஙகளியாவு மிதனுளடஙகும.

புராணஙகளகூறுஞ சரிதஙகளினசுருககததுடனும, பூஜிபபோருணருமவணணம திருவுருவபபடததுடனும, தயானிபபோருககுப பயனபட தயானசலோகததுடனும, இஃது வெளியிடபபடடது.

இதனை நனகாராயநது தததமககுவேணடிய பலனகளை சிததிககுமபொருடடு அவவவறறிறகுரிய திருவுருவஙகளை அவவவறறின நியமபபடி தயானிததும பூஜிததும வழிபடுவோாக கெயதாதன வுலகஙகளு ளொனறுமிலலை, திணணம

இநநூல பல வருடஙகளாகப பலரால அசசிட்டு வெளியிடக கருதியும, ஸவயலாபத தேடடததாற சரிததிரஙகளை யெழுதிப பூாததிசெயயாது சிவபுணணியததைக கைககொளளாது விடுததனா. மிலலாதுளாககலவிசசஙகததுஉபாதயாயா ஈ-இரததினவேலுமுதலியாரெனபவா இசசரிததிரஙகள யாவும யாவரு முணாநது இடுககணதீாநது இஷடசிததிக ளடைநது சிவபுணணியததை மேறகொளளச செயதனரால,இவரும பெறுதறகரிய சிவபுணணியததைபபெறறுச சிவாநநதமுற்று வாழ்வாரெனபதே உணமை! உணமை! உணமை!.

சிந்தாதிரிபபேட்டை
ஜய ஞு மாாகழி௴

இஙஙனம:
☞ **கோ-ஷண்முகசுந்தரமுதலியார்.**

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

---


# அஷ்டாஷ்டமூர்த்த நாமத் தியானம்.

லிங்கம் லிங்கோத்பவஞ்சைவ முகலிங்கம் சதாஶிவம்
மஹாஸதாஶிவஞ்சைவோ மாமஹேஶம்த பரம்
ஸுகாஸநமுமேஸந்து ஸோமாஸ்கந்தந்ததைவச
சந்த்ரஶேகரமூர்த்திஞ்ச வ்ருஷாரூடம் வ்ருஷாந்திகம்
புஜங்கலளிதஞ்சைவ புஜங்கத்ராஸமேவச
ஸந்த்யாந்ருத்தம் ஸதாந்ருத்தம் தாண்டவம் ஜாஹ்நவீதரம்
கங்காவிஸர்ஜநஞ்சைவ த்ரிபுராந்தகமேவச
கல்யாணஸுந்தரஞ்சைவ அர்த்தநாரீஶ்வரந்ததா
சஜயுத்தம் ஜ்வராபக்நம் ஶார்த்தூலஹரவிக்ரஹம்
ததாபாஶுபதஞ்சைவ கங்காளம் கேஶவார்த்தகம்
பிக்ஷாடநந்து ஸிம்ஹக்நம் சண்டேஶ்வரப்ரஸாதகம்
தக்ஷிணமூர்த்திதத்பேதம் யோகவீணாதரந்ததா
காலாந்தகந்து காமாரிம் லகுளேஶ்வரபைரவம்
ஆபத்தாரணஞ்சைவ வடுகம் க்ஷேத்ரபாலகம்
வீரபத்ரமகோராஸ்த்ரம் தக்ஷயஜ்ஞஹரந்ததா
கிராதகுருமூர்த்திஞ்ச அஶ்வாரூடம் கஜாந்திகம்
ஜலந்தரவதஞ்சைவ மேகபாதத்ரிமூர்த்திகம்
த்ரிமூர்த்தித்ரிபதஞ்சைவ ததாகௌரீவரப்ரதம்
சக்ரதாநஸ்வரூபஞ்ச கௌரீலீலாஸமந்விதம்
விஷாபஹரணஞ்சைவ கருடாந்திகமேவச
ததாப்ரஹ்மஶிரஶ்சேதம் கூர்மஸம்ஹாரமேவச
மத்ஸ்யாரிந்து வராஹாரிம் ப்ரார்த்தநாமூர்த்திமேவச
ரக்தபிக்ஷாப்ரதாநஞ்ச ஶிஷ்யபாவந்ததைவச
ஷடாககந்ததாஷ்ட விக்ரஹம்பாவயேத்சதா.

## అష్టాష్టవిగ్రహనామధ్యానమ్.

లింగంలింగోద్భవంచైవ ముఖలింగంసదాశివం ।
మహాసదాశివంచైవో మామహేశమతఃపరం।
సుఖాసనమమేశంతు సోమాస్కందంతథైవచ ।
చంద్రశేఖరమూర్తించ వృషారూఢంవృషాంతికం॥
భుజంగలలితంచైవ భుజంగత్రాసమేవచ ।
సంధ్యానృత్తంసదానృత్తం తాండవంజాహ్నవీధరం।
గంగావిసర్జనంచైవ త్రిపురాంతకమేవచ ।
కల్యాణసుందరంచైవ అర్ధనారీశ్వరంతథా॥
గజయుద్ధంజ్వరాపఘ్నం శార్దూలహరవిగ్రహం ।
తథాపాశుపతంచైవ కంకాళంకేశవార్ధకం ।
భిక్షాటనంతుసింహఘ్నం చండేశ్వరప్రసాదకం ।
దక్షిణామూర్తితచ్ఛేదం యోగవీణాధరంతథా।
కాలాంతకంతుకామారిం లకులేశ్వరభైరవం ।
ఆపదుద్ధారణంచైవ వటుకంక్షేత్రపాలకం।
వీరభద్రమఘోరాస్త్రం దక్షయజ్ఞహరంతథా ।
కిరాతంగురుమూర్తించ అశ్వారూఢంగజాంతికం।
జలంధరవధంచైవ మేకపాదంత్రిమూర్తికం ।
త్రిమూర్తిత్రిపదంచైవ తథాగౌరీవరప్రదం ॥
చక్రదానస్వరూపంచ గౌరీలీలాసమన్వితం ।
విషాపహరణంచైవ గరుడాంతికమేవచ।
తథాబ్రహ్మశిరశ్ఛేదం కూర్మసంహారమేవచ ।
మత్స్యారింతువరాహారిం ప్రార్థనామూర్తిమేవచ॥
రక్తభిక్షాప్రదానంచ శిష్యభావంతథైవచ ।
షడాననంతథాష్టాష్ట విగ్రహంభావయేత్సదా ।, ఇతికాశికే.

---



கன்மசாதாக்கியமாவது தொழிலெனனும யோகநாமததையடைந்த நாதமயமான ஞானலிங்கமும, அபேதவிந்துமயமான கிரியாபீடமுங்கூடிய பஞசகிருததியஞ் செயவது. இது நிவர்த்திசத்தி யுடன கூடியிருக்கும். சிவ சாதாக்கியம அமூர்த்தி சாதாக்கியம மூர்த்தி சாதாக்கியம கர்த்திரு சாதாக்கியம இவை நானகும நாததததொழில அறுதி. கனமசாதாக்கியம தொழில நிவர்த்தி பிரதிட்டை விததை சாநதி யெனனுஞ சத்திகள நானகும விந்துவிறறொழில சாநதியதீதையில தொழிலறுதி. இவவகைததொழிறகொண்ட நிவர்த்தியே முதலான பீடமும, தொழிலறுதியான கர்த்திருமுதலான லிலிங்கமும, கனமசாதாக்கியமானலிலிங்கமும, சாநதியதீதையான நானகும, தந தொழில்களை யுளளடக்கித திரண்ட குடிலாபீடதது வியாபிநிமுதலியசத்திகளாற பிரேரிக்கப்பட்டுளள இநதிகை யாதியாய நாதகலைகளோதும பொருநதின இடம **நாதமயமான இலிங்கமாம்.** இந நாதமயமான லிலிங்கத்தினகண இடை குடக்கு வடக்கு தெற்கு கிழக்கு முதலிய திசைகளினுளள சதாசிவன ஈசன பிரமன ஈசுரன ஈசானன முதலிய மூர்த்திகளிடத்துச சாதாக்கிய முதலிய ஐந்தும பொருநதியுளள அவசரம கனமசாதாக்கியமாம. முனனாமொழிநத ஐவகைச் சாதாக்கியங்களுட சிவசாதாக்கியம பரமசிவததையும, அமூர்த்திசாதாக்கியஞ சிவசாதாக்கியததையும, மூர்த்திசாதாக்கியம அமூர்த்திசாதாக்கியததையும, கர்த்திருசாதாக்கியம மூர்த்திசாதாக்கியததையும, கனமசாதாக்கியங் கர்த்திருசாதாக்கியததையும் பொருநதிநிற்கும். இது அழிவிலலாப பொருளகட்கெலலா மாதாரமாய் அழிபொருளகளை யதிஷ்டிபபித்திருபபது. இது பஞசமூர்த்திகளுடைய ஒருமைப்பாட்டி லுண்டாதலாலும, அண்டததுடபிண்டங்கட்குயிராய நிற்றலாலும், பிண்டிகை யெனப்பட்ட பீடத்தில் எழுந்தருளியிருத்தலாலும், பிண்டமான சத்திதானே திருமேனியாதலாலும், கருணைநிலையான நிஷ்களமும பெருமை யுற்ற சகளமுந் திரண்டு பிண்டமென்னும் பெயரையுடையதாயிருக்கும்.

**பி**ரம விஷ்ணு ருத்திரரா யதிஷ்டிக்கப்பட்ட பீடமும், அதற்கு ஏதுவான மஹேசுவரரா யதிஷ்டிக்கப்பட்ட கல்லபத்திரமும், இவ்வகைய சிவபீடத் தெழுந்தருளியிருக்குஞ் சிவமூர்த்தியான சதாசிவமும், அவர் திருமுகமுதலிய திருவுருப்புகளை யதிஷ்டிக்குஞ் சிவசத்தி கிரியைகளாகிய வித்தியாதேகமும், அதற்கு மூர்த்திமானாகிற சிவோபாதி ஐந்தும், அபரநாதம் அபரவிந்துவையும் பரநாதம் பரவிந்துவையும் அதிஷ்டிக்கப்பட்ட சாதாக்கியமென்று பெயருற்றதே **இலிங்கம்.**

**பி**ன்னும் சிவபெருமான் அதிகாரத் தானமாகிய சதாசிவரொழுந்தருளியிருக்கும் பத்மத்தின் கிழங்கு பிரமாண்டமாகிய பிரிதிவித்தத்துவம். அப்பு முதலிய கலையீறுகச் சொல்லிய இருபத்தொன்பது தத்துவமும் நாளம். அமரேசமுதலிய புவன மெழுபத்திரண்டும் நாளத்தின் கண்டங்களாகிய முள்ளுகள். புத்தி குணமாகிய பஞ்சசற்பாவம் நாளத்தின் சூத்திரமான நூல். புறவிதழைச் சமந்துநிற்கும் முடிச்சுப்பட்ட மாயாதத்துவம் உள்ளிதழ் சுத்தவித்தியா தத்துவம் சுத்தவித்தியா புவன கலாசத்திக ளறுபத்து நான்குங் கன்னிகை கலை யறுபத்துநான்குங் குண்டலி வித்தை ஐம்பத்தோரக்ஷரம். வட்டம் ஈனகும் ஞானக்-கிரியை-யிச்சையாதி சத்திகளால் வியாபிக்கப்பட்ட சூரியன்-சந்திரன்-அக்கினி மண்டலமாம். பிருதிவி முதலிய முப்பத்தொரு தத்துவங்களையு மதிஷ்டிக்குஞ் சுத்தவித்தையினுடைய வியாத்தியான சத்திமண்டல மென்னும் அபரவிந்து, அபரநாதம், பரவிந்து, பரநாதமாயநிற்பது சிவாதநமாம். சுத்தத்தத்துவ மிருபத்துமூன்றும் இவற்றை யதிஷ்டிக்கும் சமனை யுன்மனைகள் திருமேனியாம். இவ்வகைப் பெருமை யுற்றதே **ஞானலிங்கமாம்.**

**இலிங்க = லயம், கம் = தோற்றம்; ஆகவே சிருஷ்டியாதி பஞ்ச கிருத்தியத்தைச் செய்யு மீசுரப்பிரபாவம் இலிங்க மெனப்படும்.**

### வாதுளாகமம்.

"ஸௌவீரயமநாஸதிததேஹே மாமஸாஸ்திருதிரஞச
இநதரசாபஇவாகாஸே தரபபணேபரதிபிமபவத.
அமூரததவாதகலாஹீநம ததரூபமலிஙகவதபவேத
ஸூரயகோடிபரதீகாஸம ஜயோதிஸதமபாகருதிஸதிதம
ஏதஸயாநதரகதாமூரததிரமூரததா திரிஹோசயதே."

"ஏததவைதிவயலிஙகநது மூலஸதமபமிஹோசயதே
லிஙகேஸரவமஸமுதபநநம லயஸததரைவசோசயதே
ஸருஷடிஸஸமஹாரஏவோகதமலிஙகாநாமஸயசோசயதே."

సౌవీర్యం నాస్తితద్దేహే మాంసాస్థిరుధిరంనచ ।
ఇంద్రచాపఇవాకాశే దర్పణేప్రతిబింబవత్॥

అమూర్తత్వాత్కలాహీనం తద్రూపంలింగవత్భవేత్ ।
సూర్యకోటిప్రతీకాశం జ్యోతిస్తంభాకృతిస్థితం॥
ఏతస్యాంతర్గతామూర్తి రమూర్తాదిరిహోచ్యతే ।
ఏతద్వైదివ్యలింగంతు మూలస్తంభమిహోచ్యతే॥
లింగేసర్వంసముత్పన్నం లయస్తత్రైవచోచ్యతే ।
సృష్టిస్సంహారఏవోక్తం లింగానామస్యచోచ్యతే॥ ఇతివాతులే.

### திருமந்திரம்.

"மலாநதஅயனமாலு[illegible]திரனமகேசன
பலநதருமைமமுக[illegible]நதாநாதம
நலநதருசததி சிவனவ[illegible]
பலநதருலிஙகம பராந[illegible]மே.

அகாரமுதலா யனைததுமாயநிறகும
உகாரமுதலா வுயிரபபெய்துநிற்கும
அகாரவுகார மிரண்டுமறியில
அகாரவுகார மிலிங்கமதாமே."

இலிங்கமூரத்தியோநம:

உ

சிவமயம.

திருசசிறறமபலம.

# இ ர ண ட ா வ து
# இலிங்கோற்பவமூர்த்தி.

இரணடாயிரஞ சதுாயுகம பிரமனுககொருநா ளாதலின, ஆயிரஞ சதுாயுக மொழிய ஓா பகல கழிதலாற **பிரமன்** துயினறனன. அபபொழுது சூரியா சநதிரா நக்ஷததிரஙகள நவககிரகங கள இநதிரன முதலிய தேவாகள, மாறியபதினனகு மநுககள யாவரும மகலோக முறறனா கறபாநத வெளளநதோனறி உலகிலுளள உயிாகளை யழிததது. முனிவா சனலோகஞசோநதனா. கடறபெருககால உலகமறையத **திருமால்** ஓ ராலிலையினபோிற குழநதைவடிவு கொணடு சிவததியானததுடன நிததிரைசெயதனா. அதைச சனலோகததுளள முனிவா கணடு [illegible]திகக விழிததுப பழைய வுலகைத தேட, அது பாதலதத மிழுநததால **வராகவுரு** வேறறுப் பிலததின வழியே சென்று கணடு தன[illegible] கொமபிற குததி யெடுததுவநது முறைபபடி நிறுததிப பாற்[illegible]ற படுதது யோகநிததிரையி லிருந்தனா. இதனுள ஆயிர[illegible]யுகங கழிய,பிரமனுககு இரவு நீஙகிப பகறகால மெயதியதால,கண[illegible]ழித துலகைப பார்ததுத தேவா அசுரா மனிதா விலஙகு முதலிய தாவர சஙகமஙகளைச சிருட்டிததுத தேவலோகம பூவுலகஙகளை நிரபபி இநதிரனை அரசிலிருததி அட்டதிக்குப பாலகரை அவரவா பதவியில வைததுத தான துயின்றால் உலகந துயிலும், தானெழுநதால உலக மெழும ஆதலின தனனை விட வேறே கடவுளிலலை யென்று தருககெய்தித தாணிமுழுவதும பார்த்துவருகையில், க்ஷீராப்தியிலே திருமால் இறுமாந்து கண்ணயில்



வந்து கண்டு அகந்தையால் மார்பிற்றட்டி "எழுந்திரு" என, விண்டு விழிக்க, பிரமன் "நீ யாரென்று வினவ, "யானுன் தந்தை" என, "நீ யின்னும் விழிக்கவில்லை நீ யென்மகன் யானே யுன்னைப் படைத்தேன்" என, திருமால் "நீ யென்னுந்தியிற் பிறந்தோனன்றோ" என், பிரமன் "பிருகு முனிவன் சாபத்தா லுன்னைப் படைத்துப் படைத்துக் கை சிவந்திருக்கின்றனபார்" என, திருமால் "நான்முக! உனது நடுச்சிரத்தைச் சிவபிரான் கிள்ளியபோது அச்சமுற்றதை மறந்தாய்" என்று பலவகையாகக் கூற, கமலாசனன் கடுஞ்சினங் கொண்டு "நாமிருவரும் போர்புரிந்தால் நம்மில் வெற்றியுற்றவனே பெரியவன்" என இருவருஞ் சம்மதித்துப் போர்க்கோலங்கொண்டு வில்லைவளைத்துப் பலவகைப் பாணங்களைப் பிரயோகித்துச் சமர் புரிகையில் அவ்வத்திரங்கள் அவனிமுழுவதுந் திரிந்தனவாதலால், பலரிறந்தனர், பலர் கரிந்தனர், பலர் கயிலைமலையையடைந்தனர். மேகங்கள் கரிந்தன தேவலோகமும் பூவுலகமு மெரிந்தன. கடல்நீர் முழுவதும் வறந்தன. இவ்வாறு செருச்செய்கையிற் சிவாக்கினையினால் நாரதமுனிவர் அங்குவந்து "நீங்க ளிருவரும் நான்முதல் நான்முதலென்று சண்டைசெய்கிறீர்கள். உங்களிருவரில் ஒருவருமல்ல. முதலவர் சிவபிரான் இன்னும் போர்செய்வீரேல் முதற்பொருள் சோதிவடிவாய் வரும்" என்று தேற்றிப்போகவும், அதனைக் கவனியாமல் இருவரும் முன்போலவே சமர்விடாதிருக்கக்கண்ட சிவபெருமான், இன்னுஞ் சமரைத்தடுக்காதிருந்தால் உலகமழியுமென்று திருவுளங்கொண்டு, யாவர்க்கு முற்றவிடுக்கண் களைவாராய் ஓரக்கினித்தம்பமாய் இருவருமஞ்சும்படி அவர்களிடையே தோன்றினார் அப்பொழுது அசரீரி "சிறுவர்களே! உங்கள் வல்லமையைச் சோதிக்கக் கருதிச் சிவபெருமானே சோதிவடிவாய் எழுந்தருளினார் இதனடிமுடிகளை யறியுங்கள்" என, அவ் வொளிப்பிழம்பைத் தரிசித்து அசரீரியைக் கேட்டவுடனே கோப மொழிந்தும் அகந்தை நீங்காதவர்களாய்ப் பிரம விஷ்ணுக்கள் "இதன் முடியையும் அடியையுந் தேடுவோம்

அவற்றி லொன்றைக் கண்டவரோ மேலோர்" எனச் சபதஞ்செய்து பிரமன் "யான் முடியைக் காண்பேன்" என்றும், விஷ்ணு "அடியைக் காண்பேன்" என்றும் நிர்மாணித்துக் கொண்டனர். மாயவன் வராக வடிவேற்றுக் கொம்புகளாற் பூமியைத் தோண்டி அதலம் விதலம் சுதலம் நிதலம் தராதலம் ரசாதலம் பாதலமென்னுஞ் சத்தலோகங்களுந் தேடிச் சென்று மேலுஞ் செல்லுகையில் அநேககாலமாகியும் அடியைக் காணவில்லை. நாவறண்டு ஒளிமழுங்கிக் காதடைப்புற்றுச் சலித்துத் திருமாலுக்குப் பண்டைய வுணர்வு தோன்றியது. மீண்டு வரவுஞ் சக்தியற்றுத் திரிநேத்திரனைப் பலவகையாகத் துதித்து "அடியேன் அறியாமையாற் செய்த பிழையைப் பொறுப்பீராக" என்று பிரார்த்தித்துப் பெருமானருளாற் சிறிது வலிபெற்றுப் பூமியை யடைந்து சோதிமலையைச் சமீபித்து வணங்கி நின்றனர். இது நிற்க. முடிகாண்பதாகச் சபதஞ்செய்த பிரமன் அன்னப்பறவை வடிவேற்றுப் பூலோகம் புவர்லோகம் சுவர்லோகம் சனலோகம் தபோலோகம் மகாலோகம் சத்தியலோகமென்னுஞ் சத்தலோகங்களுந் தேடி ஆயிரம்வருஷந் திரிந்துதிரிந்து உழலவும் முடியைக் காணாமல் திரும்ப விரும்பானாய் "திருமால் அடி கண்டு வருவான். தலைவனாவானே, யான் முடிகண்டல்லது திரும்பேன்" என்று மேலுஞ் சென்றமையாற் கண் சுழன்று சிறகுகள் கொந்து காலோய்ந்து மனந் திரிந்து துன்புறுகையில் "ஐயோ இவ்வண்ணம் இன்னுஞ் சிறிதுநேரம் பறந்தாலிறக்கும். சோதியைச் சிவமென்றறியாதோ? அம்முடியைக் காணமுடியுமோ? திருமாலே அடியைத் தேடமுடியாமற் சிவனே சரணெனத் திரும்பிச் சோதியை யடைந்தனன்" எனச் சித்தர் சிலர் செப்பக்கேட்டு அவரை வணங்கிச் சிவபிரானது புகழைச் சிந்தித்து, சிவார்ச்சனை செய்யத் துணிந்து திரும்பிப் பூலோகத்தை யடைந்து சோதியருகே தொழுது நிற்கும் வாசுதேவனைக் கண்டு "மாலே! நாமிருவரும் மால்கொண்டு கெட்டோம். அடிமுடி தேடி யறியாமற் போனோம். இனிப் பெரு

மானை யருச்சித்துக் காண்போம்" என, இருவரு மொத்து ஆங்கோர் சிவலிங்கப் பிரதிட்டைசெய்து, திருமஞ்சன முதலியவற்றை யியற்றி முறைப்படி பூசிக்க, பெருமான் நீலகண்டமும், மானமழு வரதாபயமும் பொருந்திய சதுர்ப்புஜமும், நெற்றிக்கண்ணும், நிலவணி சடையும், பார்ப்பதிபாகமுமாகக் காட்சியளிக்க, இருவரும் அஷ்டாங்க பஞ்சாங்கமாக நமஸ்காரஞ்செய்து "யாங்க ளறியாமற் செய்தபிழையை க்ஷமிக்கவேண்டும். புத்திரர் செய்த குற்றத்தைப் பெற்றவர் பொறுக்கவேண்டுமன்றோ" என்று பலவகையாகப் பிரார்த்திக்க, சிவபெருமான், "மைந்தர்களே! அஞ்சாதீர்கள் உங்கள் பிழையைப் பொறுத்தோம் நீங்கள்செய்த பூசைக்குக் களித்தோம் உங்கள் பதவியை யளித்தோம் வேண்டியவரங்களைக் கேளுங்கள்" என, பிரமவிஷ்ணுக்கள் "தேவரீர் திருவடிகளில் நீங்காத அன்பு அநுக்கிரகிக்க வேண்டும்" என்று வேண்ட, அம்பிகாபதி அருளிச்செய்கிறார்.

கூர்மபுராணம்.

"மைந்தநின்னையென் வலப்புறத் தளித்தனன் றிய
பைந்துழாயகத் துவண்ணனையென் னிடப்பாலிற்
றந்தளித்தனன் வீரவெங்கரிமுகன் றழல்வேற்
கந்தனோ டெனக்கருணையி னுச்சிமோந் துரைத்தான்."— என


றபடியே "பிரமனே! நீ யென் வலப்புறத்திற் பிறந்தாய். திருமால் என்னிடப் புறத்திற் பிறந்தான் நீங்களிருவரும் எனக்குக் கணபதியுங் கந்தனும்போல்வீர். பகையின்றி ஒற்றுமையாக வாழக்கடவீர்." என்றருள்செய்து "உங்கட்கு ஞானமுண்டாகக்கடவது" என்று சீர்வதித்து அந்தர்த்தானமாயினர். சோதிசிறிது சிறிதாகச் சுருங்கி மலைவடிவாய் உலகத்தாரால் துதிசெய்ய நின்றது. இஃது அருணாசலம் என்பர். பிரமவிஷ்ணுக்கள் அவ்வருணகிரியை மும்முறை வலஞ்செய்து பணிந்து தத்தம் பதவியடைந்து பண்டுபோல் வாழ்ந்திருந்தனர். இவ்வகைய அத்தாணுவில், தோன்றிய திருவுருவமே இலிங்கோற்பவமெனப் படும்.

## வாமநபுராணம்.

ததபிதாமஹோதேவ கேஸவஸசஜகதபதி
ஆஜகமதுஸதமுததிஸய யதரலிஙகமபவஸயது இதயாதி
நைவாநதமமபராதபரஹமா விஸமித:புநராகத
விஷ்ணுாகதவாதபாதாளாநஸபதலோகபராயண
சகரபாணிாவிசிஷகராநதோ லிஙகமநலபதேமுநே
விஷ்ணு.பிதாமஹஸசோபௌ ஹரலிஙகமஸமேதயஹி
கருதாமஜலிபுடௌபூதவா ஸதோதரமதேவஸயசகரது '

తతఃపితామహోదేవః కేశవశ్చజగత్పతిః ।
ఆజగ్మతుస్తముద్దిశ్య యత్రలింగంభవస్యతు॥—ఇత్యాది
నైవాంతమంబరాద్బ్రహ్మా విస్మితంపునరాగతః ।
విష్ణుగత్వాధపాతాళాన్ సప్తలోకపరాయణః।
చక్రపాణిర్వినిష్క్రాంతో లింగంనలభతేమునే ।
విష్ణుఃపితామహశ్చోభౌ హరలింగంసమేత్యహి ।
కృతాంజలిపుటౌభూత్వా స్తోత్రందేవస్యచక్రతుః॥ వామనపురాణే.

இலிஙகோறபவாயநம



3. முகலிங்க மூர்த்தி.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்

---

## மூன்றாவது

# முகலிங்கமூர்த்தி.

மேலிலிங்கப் பிரபாவத்திற் பிரதிபாதித்த சிவலிங்கம், திருமுகங்களைப்பெற்றிருக்கின் முகலிங்கமெனப்பெறும். அதுதான் ஆட்யம், அநாட்யம், ஸுரேட்யம், ஸாவஸம்மம் என நான்கு வகைப்படும். ஆட்யம் ஆயிரத்தொரு லிங்கங்களுடையது. ஸுரேட்யம் நூற்றெட்டு லிங்கங்களுடையது. அநாட்ய ஸுரேட்யலிங்கங்கள் திருமுகங்களைப்பெறா. ஸர்வஸமம் ரு-ச-ந உ-க இவ்வகை ஐந்து முகபேதங்களைப் பெறும். ஈசானம் தற்புருஷம் வாமம் அகோரம் ஸத்யோஜாதம் முதலிய ஐந்தும், ஈசானமொழிந்த நான்கும், தற்புருஷ அகோர வாமதேவ முகங்கள் மூன்றும், தற்புருஷ ஸத்யோஜாதமிரண்டும், தற்புருஷமொன்றும் பெற்றிருக்கநிற்பது ஸாவஸம்மமாகும்.

மேற்கூறிய ஸாவஸமலிங்கம் அல்லது முகலிங்கத்தின் பிரபாவத்தினை மற்றுமொரு வகையால் ஆகமங்கள் கூறும். அதனையொருவாறு சுருக்கிக் கூறுவாம்.

அநாசிருதா அநாதா அநந்தா வியோமரூபர் வியாபகனென்னும் மூர்த்திகளைவரும், பராசத்தி கிரியாசத்தி ஞானசத்தி இச்சாசத்தி ஆதிசத்தியென்னும் ஐவகைச் சத்திகளைக்கொண்டு, முறையே சிவசாதாக்கியம் கன்மசாதாக்கியம் கர்த்திருசாதாக்கியம் மூர்த்திசாதாக்கியம் அமூர்த்திசாதாக்கியங்களால், அசுத்த பஞ்சகிருத்தியங்களை நடாத்துதலால், இவை அநாசிருதருடைய அவதாரகாரியமென்னுங் கன்மசாதாக்கியருக்குச் சுத்தாசுத்த பஞ்சகிருத்தியங்க

ளின் தொழில்களதாமே ஐந்து திருமுகங்களாம். இதில் அநாசிரு
ராவார் சமனையாம் பராசத்தியும், உன்மனையாம் பரமாநந்தமு
ளொன்றி ஆன்மாக்களைத் திருவுளத் தடைத்த நிலையர்.

அநாசிருதராகிய இவர்க்குப் பிரமனளவாகவும், அநாகதர்
க்கு விஷ்ணு அளவாகவும், அநந்தர்க்கு உருத்திர னளவாகவும்
வியோமரூபர்க்கு மகேசுர னளவாகவும், வியாபகர்க்குச் சதாசிவ
னளவாகவும் வியாத்தி. மேற்கூறிய ஐவருள், வியாபகருடைய மூ
ர்த்திபேதமான ஆடகேசுரர் பாதாளாதிபதியாய் ஆங்குள்ளவர்தொழு
எழுந்தருளுவர். வியோமரூபருடைய மூர்த்திபேதமான கூர்மாண்ட
தேவநாயனார் இருபத்தெட்டுக்கோடி நரகத்திற் கதிபதியா யிருப்
பர். அநந்தருடைய மூர்த்திபேதமான காலாக்கினி ருத்திரதேவர்
பிரமாண்டத்தை யதிஷ்டித்தெழுந்தருளியிருப்பர். அநாகதருடைய
மூர்த்திபேதமான ஆதாரசத்தி அண்டங்களைச் சுமந்து எழுந்தருளி
யிருக்கும். இவ்வகைச் சகலபுவனாதாரமாய் நின்று சிருட்டி-திதி-சங்
காரம்-திரோபவம்-அநுக்கிரகம் என்னும் பஞ்ச கிருத்தியங்களையும்
நடத்துமிடத்துப் பிரம - விஷ்ணு - ருத்திர - மகேசுர - சதா
சிவபேதமே முகலிங்க மெனவும்பெறும். விரிவு சிவாகமங்களுட்
காண்க.

**சித்தாந்த சாராவளி.**

" ஏகாதிகமலிங்கஸஹஸ்ரமாட்யே
த்வஷ்டோத்தரம்லிங்கஶதமஸுரோட்யே
விஶேஷதஸ்ஸ்ஸாவஸமேஸவக்த்ர
மாட்யேப[illegible]ட்யேவிநதேவபூஜ்யே. "

ఏకాదికం లింగ [illegible] ద్వే త్వష్టోత్తరం లింగ శతంసురేద్వే ।
విశేషతస్సర్వ సమే[illegible]ద్వే ప్యనాద్వే విభదేవపూజ్యే ॥

[illegible]ங்காயநம:



4. சதாசிவ மூர்த்தி.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்

---

## நான்காவது

# சதாசிவமூர்த்தி.

சாந்தராயும் சர்வகர்த்தாவாயும் அவ்யயராயும் சர்வஞ்ஞரா யும் ஸ்வயம்பிரகாசராகியும் அசலராகியும் அமேயராகியும் அநாதி யாயும் அதுலராயும் சூக்ஷுமராயும் மஹானாகியும் சிதகன ராகியும் வியாபியாகியும், முத்தப்பிரியராகியும் அமலராகியும் பராசத்தியுடன் கூடியுமுள்ள சதாசிவமூர்த்தி, ஈசானம்-தற்புருஷம்-வாமம்-அகோரம் ஸத்தியோஜாதம் முதலாகிய ஐந்து திருமுகங்களுட னியைந்து எழுந்தருளி ஆன்மாக்களின் பாசச்சேதநிமித்தம் சித்தாந்தமாகிய காருடம்- வாமம் - பூதந்தரம்-பைரவ மீருகிய ஆகம பேதங்களை ஈசானமொழிந்த நான்கு திருமுகத்தினும், காமிகாதி இருபத்தெட்டாக மங்களை ஈசானமுகத்தினும் அருளிச்செய்தனர். அக் காமிகாதி ஆகமங்க ளாவன :— காமிகம் - யோகஜம் - சிந்தியம் - காரணம் - அஜிதம் - தீப்தம்-சூக்ஷுமம்-ஸஹஸ்ரம் - அம்சுமான் சுப்ரபேதம் - விஜயம் நிஸ்வாஸம் - ஸ்வயம்பூதம் - ஆக்நேயம் - வீரம் - ரௌரவம் - மகுடம் - விமலம் - சந்த்ரஞானம் - முகபிம்பம் - ப்ரோத்கீதம் - லளிதம்- சித்தம்-சந்தானம் - சர்வோத்தமம் - பாரமேசுரம்-கிரணம் - வாதுளமென்பன. இவைகளைக் கேட்டோர் பிரணவர் - திரிகலர் - ஹரர் - சுதர் - பஸ்மர் - காரணர்-சர்வருத்திரர் - பிரசாபதி - சுசிவர் - சிவர் அச்சுதர் - ஈசர் - ஈசானர் - ஹுதாஸனர் - சூக்ஷுமர் - வைச்சிரவணர் ப்ரபஞ்சனர் - காலர் - பீமர் - தாமர் - அம்புஅக்ரர் - ரவி - தசேசர் - விக்நேச்சுவரர் - சசி - அநாதிருத்தரர் - பரமேசர் - தசார்ணர் - சைலஜர் - நிதகேசர் - பிரமர் - வியோமர் - ஹுதாஸனர் - தேஜசு - ப்ர

ஜாபதி - பிராமஹணேசா - நநதிகேசர் - சிவர் மஹாதேவா - சாவாத மகா - வீரபததிரா - அநநதா - பிரஹஸபதி - பிரசாநதா - தரிசிசூலி - கவசா - ஆலயேசா லளிதா பிநது - சணடிகேசசுவரா - சிகிஷடா - அசமவாயா - சோமா - நருசிமஹா - ஸ்ரீதேவி - உசநா தேவவிபவா - சமவாததகா - சிவா மஹாகாளா முதலியோா இவவாகமஙகளுள முதலிறகூறியபததும சிவபேதஙகளாம. ஏனைய பதினெடடும உருததிரபேதஙகளாம. இச சிவாகமஙக ளிருபததெடடும **வக்த்ராரம்** முதல **விஸ்வாதமகம்** ஈருயுளள இருநூறறெடடு உடபிரிவுடையன. அவறறைக **காமிகந் தந்திராவதாரப்படலத்துட்** காணக.

இவவாகமங்கள சாதாகியமூாததியாகிய இப பெருமானுககுத திருவடிகள - கணைககால- அஙகுலி - கெணடைககால - முழநதாளகள ஊருககள-குஹயம - கடிததாநம - முதுகு - கொபபூழ வயிறு - ஹருதயம - ஸதநஙகள - நயநம - கணடம - செவிகள - கிரீடஙகள - கரஙகள - மாாபு - முகம - நா - கனனம - நெறறி - குணடலஙகள - உபவீதம - ஹாரம - ஆபரண முதலியவாயத திருமேனியாகக கூறப்படும. [திருவை ஏனைய அஙகஙகளுககும கூடடிக்கொளக].

இவா படிகநிறம் - சடைமுடி - ஐநது திருமுகம - பததுககரஙகள - ஓருதேகம - இரணடு திருவடிகள - வலககரதது இசசா ஞாநக கிரியை யெனனுமமூவிலைச சூலமும, பராசததி ரூபமாய மழுவும, காததருபாவமான கடஙகமும, வாளும, பீஜாபூரகமும, வசரமும, ஜநந பயததைப் போககுவதான அபயமும, இடககரததிரிததிகுணமாகிய நாகமும,தூல சூக்கும பூதஙகளை நடததும மாயா ரூபமாகியபாசமும, குணமாகிய நீலோறபலமும, அஙகுசமும, சுததா சுதத அத்துவாவைப் பிரவாதிககுங் குணமான தமருகமும், போகததைத்தரும வரதமும, நாதகுணமாகிய மணியும், சஙகாரகுணமாகிய அககினியும், திரோதாயி யென்னும் பரிவட்டமும, அருளாகிய

கந்தமும், பணையாகிய மாலையும, அநுக்கிரகாங்குரமான சிறுநகை
யும பொருநதித தியானபூஜா நிமித்தம சகளத திருவுருக்கொண
டெழுநதருளியிருப்பினும, இவையிறறிறகு அப்பாறபட்டுமிருப்பர்.
இஃது கன்மசாதாக்கியத் திருவுருவாதலின, மேறசிவலிங்கமூர்த்திக
ளுக கூறிய அனைத்தும ஈங்கு மொக்குமென வறிக.

## ஆகமம்.

பத்மாஸநஸ்தமபஞ்சாஸ்யம ப்ரதிவக்த்ரமதிரிலோசனம
த்ருக்க்ரியேச்சாவிஸாலாக்ஷம ஜ்ஞாநசந்த்ரகலாந்விதம
தவளேஸாநவதநம பீதமதத்புருஷாநநம
க்ருஷ்ணாகோரமுகோபேதம ரக்தாகோரக்தவக்த்ரகம
ஸுஸ்வேதமபஸ்சிமாஸ்யைகம ஸத்யோஜாதம ஸமூர்த்தகம
நாகோபவீதிநமஸாந்தம ஜடாகண்டேந்துமண்டிதம
ஸக்த்யஸீஸூலகட்வாங்கம வரவ்யக்ரகராமபுஜம
தக்ஷிணேதோதவாமாஸ்தே டமருமபீஜபூரகம
நாகாக்ஷஸூத்ரநீலாபஜம பிப்ராணமபஞ்சபி.கரை ”

పద్మాసనస్థంపంచాస్యం ప్రతివక్త్రంత్రిలోచనం ।
దృక్క్రియేచ్ఛావిశాలాక్షం జ్ఞానచంద్రకలాన్వితం ।
ధవళేశానవదనం పీతంతత్పురుషాననం ।
కృష్ణాఘోరముఖోపేతం రక్తాఘోర క్తవక్త్రకం ।
సుశ్వేతంపశ్చిమాస్యైకం సద్యోజాతసమూర్తకం ।
నాగోపవీతినంశాంతం జటాఖండేందుమండితం ।
శక్త్యసీశూలఖట్వాంగం వరవ్యగ్రకరాంబుజం ।
దక్షిణాతోధవామాస్తే డమరుంబీజపూరకం ।
నాగాక్షసూత్రనీలాబ్జం భిభ్రాణంపంచభి.కరైః ॥ ఆగమమ్.

உ


சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

---

# ஐந்தாவது
# மஹாசதாசிவ மூர்த்தி.

"உமாஸஹாயம் பரமேஶ்வரம் ப்ரபும் த்ரிலோசனம் நீலகண்டம் ப்ரஶாந்தம் த்யாத்வா முநிர்கச்சதி பூதயோநிம் ஸமஸ்தஸாக்ஷிம் தமஸ: பரஸ்தாத்" என்னுங் கைவல்யோபநிஷத்தாலும் "நாஸதாஸீந் நஸ ஏவாஸீத் தமஆஸீத்" என்னுஞ் சுருதிப்பிரமாணத்தாலும் பிரதிபாதிக்கப்பட்டும், படகாரியத்துக்குக் குயவன்போல நிமித்தகாரணமான எந்த நிஷ்கள சோதியினால் ஜங்கம ஸ்தாவர ரூபமான சராசரங்களனைத்தும் ஏககாலத்தும் ஓதப் புரோதரூபமாய் மேற்கீழாகச் சிருட்டிக்கப்பட்டிருக்கின்றனவோ, விஞ்ஞானகலப் பிரளயாகல சகலராகிய மூவகைப்பட்ட ஆன்மாக்களும், மல மாயை கன்மம் விந்து திரோதானசத்தி யென்னும் ஐவகைப் பாசசமூகத்தினின்று நீங்குகின்றனரோ, அத்தகைய பிரணவபிரசாதமந்திரோச்சாரணத் தவனிகதமாயும், அநாஹதசிவ சதாசிவ மஹேஶ்வர ருத்ர விஷ்ணு பிரமாதிகளுக்குத் தேஜசைக்கொடுப்பதாயும், வியாபிக்கு மேற்பட்ட வியோம வென்னுஞ் சமனை யிடத்தை வியாபித்த அநாஹதசிவத்திற்கு மேலானதாயப் பரிபூரணமாய நிஷ்களமாய் எழுந்தருளிய ஸ்ரீசிவபெருமான், இச்சையாற் சத்திகாரியத் திருவுருக்கொண்டு ஆன்மாக்களை யநுக்கிரகிக்கவெடுத்த உமாமகேசமுதலிய திருவுருவங்களை யதிஷ்டித்த சதாசிவநாயனார், நிவர்த்தி-பிரதிஷ்டை-வித்தை-சாந்தி-சாந்தியதீதைமுதலிய அபரவிந்து கலைகளாலும், இந்திகை - தீபிகை - ரோசிகை- மோசிகை ஊர்த்துவகாமினி யென்னும் அபரநாத கலைகளாலும், சூக்குமை-அதிசூக்குமை-மிருதை-அமிருதை-வியாபினி யென



5. மகாசதாசிவ மூர்த்தி.

பரவிந்து கலைகளானும், வியாபிநீ - வியோமரூபை - அநந்
நாதை - அநாசிருதை யென்னும் பரநாதகலாபேதத்தாலும்,
தைந்து திருமுகத்துடன் கூடிய பரசிவாபேக்ஷையுற்ற திரு
மே மகாசதாசிவம்.

இச் சதாசிவம் பரசிவ மிரண்டுமே தாமாதாமி ஸ்வரூபமாத
சதாசிவம் பரசிவமூர்த்தியாகவும், பரசிவம் சதாசிவ அந்தர்யா
வுஞ் சிவாகமங்கள் கூறும். அச்சதாசிவ பரசிவ மிரண்டுஞ்
ந்து பாவாகார மென்பர்.

இன்னு மிவற்றின் விரிவெல்லா மெழுதப்புகின், சாஸ்திரசங்
ாதலின், அச்சாஸ்திரமுதிர்ச்சி யுடையோர்க்கன்றி ஏனையோ
அருத்திபுகாது அருசிபிறக்குமாதலின் இவ்வளவில் நிறுத்தினன்.
விஸ்தாரம் காமிகாதி சிவாகமப் பெருங்கடலுட் காண்க.

కైవల్యోపనిషత్.

సహాయం పరమేశ్వరం ప్రభుం త్రిలోచనం నీలకంఠం ప్రశాంతం
ధ్యాముని ర్గచ్ఛతి భూతయోనిం సమస్తసాక్షిం తమసః పరస్తాత్॥
నాసదాసీన్నసదాసీత్ తమ ఆసీత్। ఇతిశ్రుతిః ॥

மேற்கூறிய விலக்கணமேயன்றி, இப்பெருமான் கண்கிட
த்தற கேலாத கரம் சிர முதலிய திருவுறுப்புக்களோடு கலந்த
ணியையுடையராகவு மிருப்பர் எனவுங் கொள்க.

**திருவிசைப்பா.**

" எண்ணில்பலகோடி சேவடிமுடிக ளெண்ணில்பல்கோடிதிண
ாக, ளெண்ணில்பலகோடி திருவுருநாமமோகொண்முகக்கண்முக
ு, மெண்ணில்பலகோடியெல்லைக்கப்பாலாய்நின்றை ஞூற்றந
ாதது, மெண்ணில்பலகோடிகுணத்தரோவீழியிவாகமமையா
யாரோ."

மஹா சதாசிவாயநம:.

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

---

## ஆறுவது

# உமாமஹேச்சுவரமூர்த்தி.

உலகமாதாவாகிய உமாதேவியார் இறைவன் திருக்குறிப்பின்வண்ணம் பஞ்சகிருத்திய மியற்றி அக்கினிக் குஷ்ணம்போல அபின்னாபாவமாயிருப்பாள். அக்கருணையுருவாகியசத்தியே பஞ்சகிருத்திய நிமித்தமாகக் கிருத்திய பேதத்தால் ஐவகைப்படும். அவை முறையே பராசத்தி-ஆதிசத்தி-இச்சாசத்தி-ஞானசத்தி-கிரியாசத்தி எனப்படுவாம். அவற்றுள் பராசத்தி பரமசிவத்தி லாயிரத்தொருகூறு கொண்டது. ஆதிசத்தி பராசத்தியிலாயிரத்தொருகூறு கொண்டது. இச்சாசத்தி ஆதிசத்தியி லாயிரத்தொருகூறு கொண்டது. ஞானசத்தி இச்சாசத்தியி லாயிரத்தொருகூறு கொண்டது. கிரியாசத்தி ஞானசத்தியி லாயிரத்தொருகூறு கொண்டது. இவற்றுள் ஆதிசத்தி ஆன்மாக்களுக்கு விஷய சுகத்தைப் பொருத்தும். இச்சாசத்தி சிருஷ்டியைச்செய்யும். ஞானசத்தி சர்வான்மாக்களுடைய கன்மங்களையும், அந்தக்கன்மங்களுக்கீடான தனு கரண புவன போகங்களையும், உபாதானத்திரவியங்களினின்று முண்டாக்கும். கிரியாசத்தி சிருஷ்டியாதி கிருத்தியங்களைச் செய்யும்.

**வாதுளாகமம்.**

“ தச்சிவேதுபராஶக்திஸ் ஸஹஸ்ராம்ஶாத்ஜாயத
தச்சக்தேஶாதுஸஹஸ்ராம்ஶா தாதிஶக்திஸமுத்பவ:
அஸ்யாஶ்ஶக்தேஸ்ஸஹஸ்ராம்ஶா திச்சாஶக்திஸமுத்பவ:
தச்சக்தேஸ்துஸஹஸ்ராம்ஶாத் ஜ்ஞானஶக்திஸமுத்பவ:
அஸ்யாஶ்ஶக்தேஸ்ஸஹஸ்ராம்ஶாத் க்ரியாஶக்திஸமுத்பவ:

மகாமகோபாத்தியாய, டாக்டர்
உ. வே. சாமிநாதையர் நூல் நிலையம்
அடையாறு சென்னை-20.



ஸ்ரீ உமாமகேச்வர மூர்த்தி.

ஏதாவைஶக்தய: பஞ்ச நிஷ்களத்வேந கீர்த்திதா.
ஶிவஸ்ருஷ்டிரியம்ப்ரோக்தே" இதி.

తదుక్తం వాతులే.

తచ్ఛివేతు పరాశక్తి స్సహస్రాంశాదజాయత ।
తచ్ఛక్తేస్తుసహస్రాంశా దాదిశక్తిసముద్భవః ॥
అస్యాశ్శక్తేస్సహస్రాంశా దిచ్ఛాశక్తిసముద్భవః ॥
తచ్ఛక్తేస్తుసహస్రాంశాత్ జ్ఞానశక్తిసముద్భవః ॥
అస్యాశ్శక్తేస్సహస్రాంశాత్ క్రియాశక్తిసముద్భవః ।
ఏతావై శక్తయః పంచ నిష్కళత్వేనకీర్తితాః ॥
శివసృష్టిరియంప్రోక్తే ॥ ఇతి

இவ்வகையாகத் தோன்றிய ஐவகைச்சக்திகளில், பின்வரும் பராசக்தியானது பக்குவமலராகிய ஆன்மாக்களைக் கருணையால் அநுக்கிரகிக்கும். ஆதிசக்தியானது ஆணவமலம் பக்குவமாகும்படி செய்த்தும். ஞானசக்தி சத்தாக்கு ஞானவொளியாகிச் சாமசக்ஷுராதி கராஹியமான தேஜோரூபமாம். இப் பஞ்சசக்திகளின் தசாம்சபத்தால் சகளநிஷ்களமாகிய சதாசிவரூபமாம். இக்கருத்துப்பற்றியே "**சத்திதான் சிவத்தையீன்றும்**" என **அருணந்திசிவாசாரி**ரீ திருவாய்மலர்ந்தனர். "கறைக்கண்டனுக்கு மூத்தவளே" என்றும் இப்பெற்றிநோக்கியே யென்க. தசாம்சம் என்றதாற் பத்திலொன்று **அகளமாகிய சாதாக்கியமாம்.**

**வாதுளாகமம்.**

"பராஶக்த்யோத்பவாம்ஶேந ஶிவஸாதாக்யஸம்பவ:
பராஶக்த்யுத்பவத்வாச்ச ஶுத்தத்வாச்சிவ உச்யதே."

పరాశక్తేర్దశాంశేన శివసాదాఖ్యసంభవః ॥
పరాశక్త్యుద్భవత్వాచ్చ శుద్ధత్వాచ్ఛివఉచ్యతే ॥ ఇతివాతులే

கிரியாசத்தியினால் சதாசிவத்தில ஸஹஸ்ராம்ஸமாக அநந்தேஸ்வர ரூபமாய இருபத்தைந்து விக்கிரஹபேதமாகிக கிருத்தியபேதத்தைச செய்யும. அவவுமையோடுகூடிய அழகனே உமாமஹேஸ்வரமூர்த்தி யென்று வேத சிவாகமங்கள கூறும

**வாதுளாகமம்.**

" காமேஸஸ்யஸஹஸ்ராம்ஸாத மஹேஸஸ்யஸமுதபவ
மஹேஸமஸகளமவிந்தயாத ஸருஷ்டி ஸதிதிலயாதமக:
பஞ்சவிம்ஸதிபேதேந தந்மூர்த்தி பஞ்சவிம்ஸதி
ஸுத்தேதவநிஸிவ கர்த்தா ப்ரோக்தோ நந்தோஸதேபரபுரிதி "

తదుక్తం వాతులే.

కర్త్రీశస్యసహస్రాంశా న్మహేశస్యసముద్భవః ।
మహేశంసకళంవింద్యాత్ స్సృష్టిస్థితిలయాత్మకః ।
పఞ్చవింశతిభేదేన తన్మూర్తిః పఞ్చవింశతిః ।
శుద్ధేధ్వనిశివఃకర్తా ప్రోక్తోనన్తో సతే ప్రభురితి ।

உமாமஹேஸாயநம.



காசனமூர்த்தி.

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

## ஏழாவது

# சுகாசநமூர்த்தி.

ஸ்ரீகயிலாயகிரியாகிய வெள்ளிமலையின் உச்சியிற் கோடி சூரியோதய மானாற்போன் ஒளிவீசும் நவரத்நமயமான ஆயிரக்கால் மண்டபத்தில், பக்தாநுக்கிரஹ காரணமாக ஹரி ப்ரஹ்மாதி தேவர்களும், பதினொருகோடி யுருத்திரர்களும், இந்திராதி திக்குப்பாலகர்களும், அஷ்டவசுக்களும் முதலாகிய முப்பத்துமூன்றுகோடி தேவர்களும், நாற்பத்தெண்ணாயிரம் முனிவர்களும், சநகாதி மகாருஷிகளும், நவசித்தர்களும், கருட காந்தர்வ சித்த வித்தியாதர யக்ஷ கிந்நரர் முதலாகிய பதினெண் கணங்களும் ஒவ்வொரு பக்கத்தி னிறைந்து ஹரஹர சிவசிவ கங்காதர சங்கர மகாதேவா வென்று துதித்து நமஸ்கரிக்கவும், வேதங்கள் கோஷிக்கவும், தும்புரு நாரதர் பாடவும், அரம்பையர் நடிக்கவும், திருநந்திதேவர் கூட்டத்தைப் பொற்பிரம்புகொண் டடித்து விலக்கவும், இஷ்ட காமியார்த்தங்களைப் பெற வெண்ணினோர் வரங்கேட்டுக் கையேற்று நிற்பவும், ஸ்ரீஉமாதேவியாருடன் இரத்னசிங்காதனத்தில் இறைவர் திருவோலக்கங் கொண் டெழுந்தருளியிருந்து, பக்தியே வடிவமாக வுள்ள ப்ருங்கி மஹாருஷி நடிக்கும் நடனத்திற் சிறிது நாழிகை திருக்கண் சாத்திப் பின் அவரவர்கட்குத் தக்கபடி சிரக்கம்பன மந்தஹாஸாதிகளான குறிப்புடன் அவரவர்கள் விரும்பினவற்றை யநுக்கிரகித்துத் தத்தமிடங்களிற் செல்ல ஆஞ்ஞாபித்தனர்.

அதன்பின்னர் அருள்வடிவாகிய அன்னையார் அரியாதனத் திருந்து எழுந்து டணிந்து, சிறிதுபொழுது கையேற்றுநின்று, " எம

பெருமானே! தேவரீர் திருவாய்மலர்ந்தருளிய வேதசிவாகமங்களி(ன்) உண்மை இத்தன்மையினதென்று எளியேன் எளிதினுணரும்படி திருவுளஞ்செய்து திருவாய்மலர்ந்தருள வேண்டும்" என்றிசைக்க, உம[illegible]பெருமான் "உமையே! இரு" என்று தமது வாமபாகத்திருத்தி, ஒரு திருமுகமும் ஆறு திருக்கரங்களுமுடையராய் "நாயகி! நன்று வினவினை. இஃதுனக்கேயன்றி ஏனைய அண்டங்களிலுமுள்ள அகிலசராசரங்கட்கும் பயனளிக்கும் பயனுள்ளது; அதனையுனக்குக் கூறுவேன்" என்று [ஐவகைப் பாசபந்தத்தின் நிலைமையும், அவை நீங்குமாறும், அவற்றை நீக்கினோரடையுந் தன்மையும், வேதசிவாகமாதியின் தோற்றமும், அவை அநாதியென வறிவிப்பதற்கு எடுத்துக் காட்டிய **வைகரி**யாதிய வாக்குகளுக்கு அதிஷ்டானமாயுள்ள சுத்தமாயாலக்ஷணமும், அம்மாயை பராசத்தியாகிய உன்னிடத்துள்ளதும், நீ என் வாமபாகத்தமர்ந்ததும் இவ்வியல் வரலாற்றுணென்று] திருவாய்மலர்ந்தருளினார். இத்தகைய வேதசிவாகமப்பொருளை உமாதேவியார் கேட்டுச் சிறப்பத் தாமெல்லா ஆசனத்தினு முயர்ந்த சுகாசனத்தி லிருந்து திருவாய் மலர்ந்ததால், சிவபெருமான் **சுகாசநமூர்த்தி** யெனப் பெயர்பெற்றனர்.

[] இக்குறியினுட் கூறப்பட்டுள்ள விஷயங்களை ஆசிரியர்மூலமாக அறிந்துகொள்ளவும்.

சுகாசநாயகம்



8. உமேச மூர்த்தி.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

---

## எட்டாவது

# உமேச மூர்த்தி.

முன்னொரு பிரம கற்பத்தில், நான்முகன் வழக்கப்படி பல கோடி ஜீவராசிகளையுஞ் சிருட்டிசெய்யக் கருதிச் சநகன் - சநந்தனன் - சநாதனன் - சநற்குமாரன் என்னும் நான்கு புத்திரர்களையுண்டுசெய்து அவர்களைக்கொண்டு உலகவிர்த்தி செய்ய உத்தேசித்திருப்ப, அப்புதல்வர் நால்வரும் நான்முகன் விருப்பிற்கிணங்காராய் நல்லுணர்வுற்றுத் தவச்செயலை நாடினர். அதன்பிறகு வேதா யாதுவழியிலும் சிருட்டிச் செயல் செவ்வைப்படாமையால், சித்தந் திகைத்து மெத்தவும் பிரமித்துத் தான் முன்பெற்ற தநயரோடு தாமோதரனைச் சார்ந்து தலைமேல் வீழ்ந்து பணிந்து தனக்குச் சிருட்டித்தொழில் கைவராமையைக் கழறி நின்றான். கமலை கேள்வன் "பிரமனே! உன் கருத்து நம்மிருவராலு முற்றாது. பன்னகாபரணன்பாற் கூறின் பதப்படும்" என்று, பிரமனு முனிவரு முடன்வர, விஷ்ணு வெள்ளிமலையையடைந்து விடையூர்திபால் தமது வருகையை விண்ணப்பிக்கும்படி நந்திதேவரை நமஸ்கரித்துக் கூற, அவர் அவ்வாறே ஆண்டவர் சந்நிதியில்டைந்துசாற்ற, சங்கரன் "அவர்களைத் தருக" என்று ஆஞ்ஞாபிக்க, திருநந்திதேவர் அவர்களைச் செல்லும்படி விடைதந்தனர்.

கட்டளைப்படி உட்சென்று கண்ணுதலைத் தரிசித்து யாவரும் நிற்கையில், திருமால் "பெருமானே! பிரமன் சிருட்டிசெய்ய வெண்ணி எத்தனித்தபொழுது அது விருத்தியாகவில்லை. அக்குறையை யகற்றவேண்டும்" என்று பிரார்த்திக்க, சிவபெருமான் தனது நீவிழி

யால் திருமால்-திசைமுகன்-முதல்வர்நால்வர் ஆகிய இவரைச் சா ராக்கினர். அக்காலத்துத் தவிடத்து ஒன்றியாக நின்ற பரமன் தம் வாமபாகத்திலுள்ள திருத்தோளைப் பார்க்க அதினின்று அப்பெ மானது சத்தியே உமாதேவியாகத் திருவுருவுற்றது அவ்வுமை மையாரைத் தமது இடப்புறத்திலிருத்தி இருவருமாக ஓர் திருவிளை யாடல்செய்து விஷ்ணு-பிரமன்-நான்கு முனிவர்களையும் முன்போ லவண்ணமே படைத்தனர். அவர்கள் அறுவரும், சிவபெருமானையும் உமையம்மையாரையும் பணிந்து பரவிநிற்கையில், பரமபதி பன்னக சயனனைப் பார்த்து "நாரண! நம தருளாகிய சத்தியோடு கூடிநின் றேம் ஆதலின், பண்டுபோற் பதுமனுக்குப் படைப்புத்தொழில் கைவ ரும்" என்று திருவாய்மலர்ந்தருள, அவர்கள் அகமகிழ்ச்சியடைந்து அம்மையையும் அப்பனையும் பணிந்து வலம்வந்து விடைபெற்று அப் பாற்போயினர். அதுமுதல் ஆரணன் ஆன்மாக்களை யாக்கு மாற்றல் பெற்றனன். உமாதேவியாருடன் அக்காலத்தில் ஆதிநாதன் கூடி நின்றதால் அகிலமெல்லாம் விருத்தியாயிற்று. சத்தி=வல்லமை


சிவபெருமான் உலகத்தி லுள்ள எல்லாப் பொருள்களையும் படைத்துக்காத்துத் துடைக்கும்வகையாய நாநாபேதம்பெற்ற தமது திருவருளாகிய சத்தியே உமையம்மையாக வாமபாகத்திலிருக்கக் கொண்டு வீற்றிருந்தமையின் உமேசமூர்த்தி யென ஓர் திருநாம முற்றனர்.

### கந்தபுராணம்.

"தந்துழியீசன் றனைத்தனயருமயனுமாலும்
வந்தனைசெய்துபோற்றமாயவன்வதனநோக்கி
நந்தமதருள்தாகுநங்கையோடினிதுசேர்ந்தாம்
முந்தையின்வேதாச்செயலைக்கமுற்றிடுமேபோதியென்றான்."

உமேசாயநம:

---



௯. சோமாஸ்கந்த மூர்த்தி.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்

# ஒன்பதாவது

# சோமாஸ்கந்த மூர்த்தி.

சிவபெருமான் பார்ப்பதி சமேதராய்த் திருக்கயிலாயகிரியில் திருவோலக்கங்கொண் டெழுந்தருளியிருக்கையில், தேவர்களெல்லாங் கூடி அம்மலையை யடைந்து ஆண்டு முதற்பெருங் காவலராக வீற்றிருக்கும் திருநந்திதேவரைப் பணிந்து விடைபெற்றுத் திருச்சந்நிதானத்தினுட் சென்று சாஷ்டாங்கமாக நமஸ்கரித்துக் கைகட்டி வாய்பொத்திநின்று, "மகாதேவனே! தேவரீர் உமையம்மையாரை மணந்தும், எங்களை நெடுநாளாகத் துன்புறுத்தி மகேந்திரபுரியி லரசு செய்யுஞ் சூரபன்மனைச் சங்கரிக்கத்தக்க தேவரீரைப்போன்ற ஓர் புத்திரனைப்பெற்று இன்னும் எங்கள்சங்கடத்தை ஒழிக்கவில்லையே. விரைவில் அருள்புரியவேண்டும்" என விண்ணப்பித்தனர்.

ஆதிமூர்த்தி அவர்கட் கிரங்கி ஆறு திருமுகங்களுடன் வீற்றிருந்து தமது திருமுகங்கடோறும் விளங்கும் நெற்றிக் கண்களாகிய ஆறு திருவிழிகளி னின்றும் ஆறு நெருப்புப் பொறிகள் வெப்பத்துடன் வெளிவரும்படி யருள்செய்ய, அப்பொறிகள் பார்முழுதும் பரந்திடக்கண்டு, பார்ப்பதியார் பாதத்தணிந்த சிலம்புகள் ஒன் றொன்று மோதும்படி விரைவிற் சென்று அந்தப்புர மடைந்தனர். தேவர்கள் சித்தங்கலங்கி மெத்தவும் திகைத்துச் சிதறி ஓடித் திரும்பி அத்தனை நாடி "ஐயனே! தீயோரைச் செயிக்கத்தக்க சிறுவனை யீராது எங்கட்குத் தீப்பொறிகளை யருளிச்செய்ததால் எவ்வாறு பிழைப்போம்" என நடுங்கி கூறினர். சிவபெருமான் திருமுகமொன்றுடனிருந்து தீப்பொறிகள் தம்பால்வரத் திருவுளஞ் செய்த

னர். பொறிகளாறும் புராரிமுன்னாடப்புக, அம்பிகாபதி அக்கினி யையும் வாயுவையும் நோக்கி, "இப் பொறிகளை நீங்க ளிருவரும் தாங் கொண்டுபோய்க் கங்கையில் விடுங்கள்" என்று கட்டளையிட்டுத் தக்க பலமுந் தந்தனர். மாதேவன் திருவாணைப்படி அவர்கள் மாறி மாறி யெடுத்துக்கொண்டுபோய்க் கங்கையில் வைத்தனர். தருவாகிய அக் கங்கையுஞ் சரவணத்தில் விடப், பத்துத்திக்குகளினும் விண்டுமுதலானோர் கண்டு காத்துக்கொண்டிருந்தனர். அப்பொழுது அச் சரவணப்பொய்கையில் ஆறுதிருமுகங்களுடனும் பன்னிரண்டு திருப்புயங்களுடனும் அரனே முருகேசனாகத் தோன்றியிருக்க அமரர் தெரிசித்து, அக் குழந்தைக்குப் பாலூட்ட ஆறுகிய கார்த்திகை நக்ஷத்திரத்தை யனுப்ப; அறுமுகப்பெருமான் ஆறு சிறுவர்களாகி அவர்கள் பாலுண் டிருந்தனர்.

இது நிற்க: அந்தப்புரமடைந்த அம்மையார் முக்கண்ணருடன் சிங்காதனத் தடைந்தனர். ஈசுவரியார் முன்னெழுந்துசெல்லுகையில், திருவடிச் சிலம்பினின்று சிதறிய நவரத்தினங்கள் பார்வதியின் சாயை யுற்று, பரமனழைக்கப் பக்கலில் வந்து, கட்டழகு நோக்கிக் கருப்பமடைய கவுரிகண்டு கடுங்கோபங்கொண்டு, "கருப்பயவாமல் தாங்குமின்" எனச் சபித்தனர். அவ் வநிதையர் கருப்பவாதனையால் வருந்துகையில், உடல் வியர்வையில் இலக்கம்வீரருதித்தனர். பின் பொருநாள் பெருமாட்டி விருப்பின்படி அவர்கள் வீரவாகு - வீரகேசரி - வீரமகேந்திரன் - வீரமகேசன் - வீரபுரந்தரன் - வீரராக்ஷசன் - வீரமார்த்தாண்டன்-வீரராந்தகன்-வீரதீரன் என்னும் ஒன்பது புதல்வரை யுதவினர். ஈசன் இமயவல்லியை நோக்கி "இந்த லக்ஷத்தொன்பதின்மரும் நமது புத்திரர்கள்" என்று, அவர்களை நோக்கி "எனது மைந்தனேவலைச் செய்திருங்கள்" என நிசைத்து, அம்மையாருடன் இடபவாகன மேறிச் சரவணப்பொய்கையைச் சார்ந்து "உமையே! உன் குழந்தையைக் கொண்வோ" என, தேவியார் விடையினின்றிழிந்து விசையுடன் சென்று, ஆறுகு

தனை அம்மை யெடுக்கையில, குழந்தை ஆறு திருமுகமும் பன திருக்கரமும் ஓரோதிருமேனியுமாக, இறைவியெடுத்து,உண்ணு யாதலின தனது திருமுலைப்பாலை வளளத்திற் கறந்து திருவ செயவித்து ஈசனைப் பணிவித்தனள். ஸ்கந்தன் எனறு அப் ழுத் திருநாமமுறற முருகேசனை முனனவன மாமிலணைத்து தஙகொணடு உமையுடன இடபவாகனத்தி லேறறி, (காரத்தி நக்ஷத்திர மாகிய மாதாகடகும, பராசர புத்லவாககும திருவ ருள புரிநது) ஏனைய தேவாகளை யவரவரிடத்திற கேக விடைதந்து, எமபெருமானும விடையேறி வெளளிமலையடைந்து, தேவியாருக் கும தமககு மிடையே ஸ்கநதரிருகக வீறறிருநதனா. இதனல சிவபெருமான ச+உமா+ஸகநதா=சோமாஸ்கந்தரெனப் பெய ருறறனா.

லக்ஷம வீரரும, நவவீரரும் ஸ்கநதமூாத்தியைப் பணிந்தனா. பிறகு குமாரககடவுள ஸகநதகிரியில இலக்ஷத்தொனபது வீரரு டன வீறறிருநது பல திருவிளையாடலகள செயது, சூரபனமனுதி யனாத தொலைதது, தேவா சிறையை விடுதது, இசசை கிரியைக ளாகிய தெய்வயானையம்மையார் வள்ளிநாயகியார் இவாகளை மணந் தெழுநதருளியிருநதனா.

கந்தபுராணம்.

என்றைசத்திகளுயிரொலாமொடுகுறுமெல்லை
மூந்துபோலவொன்றாகியேகூடியமுறைபோ
லநதமிலலதோாமூவிருவடிவுமொன்றாகிக்
கநதனெனறுபோபெறறனனகவுரிதனகுமரன.

ஏலவார்குழலிறைவிக்குமெமபிரானறனக்கும்
பாலனுகியகுமரவேணடுவுறுமபானமை
ஞாலமேலுறுமிரவொடுபகலுக்குநடுவாய்
மாலையானதொனறுமினறிவைகுமாறொக்கும்.

சோமாஸ்கந்தமூாததயேகு:

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்.

# பத்தாவது
# சந்திரசேகர மூர்த்தி.

பிரமதேவனது மானதபுத்திரர்களி லொருவனாகிய தக்ஷப் பிரசாபதி தான்பெற்ற அசுவினிமுதலிய நட்சத்திரங்களாகிய இருபத்தெழு பெண்களையும், அத்திரிமுனிவர் மனைவியாகிய அநுசூயையீன்ற சந்திரன் அழகிற்சிறந்தோனாயிருத்தல் கருதி மணம்புணர்த்தி அவனை நோக்கி "நீ இப்பெண்கள் யாவரிடத்தும் பாரபக்ஷமின்றிச் சமானமாக அன்புகொண்டிருக்கவேண்டும்" என்று கூறிப் புதல்வியரைச் சந்திரனோடனுப்பினன். சந்திரன் மாமனனுமதிப்படிச் சிறிது காலம் யாவரிடத்தும் அன்புடையவனாயிருந்து, பின்னர் கிருத்திகை உரோகணி என்னும் மாதரிருவரே தமது மனைவியருள் பேரழகுடையராயிருத்தலால், அவ்விரண்டுமனைவியரிடத்திலேயே அதிக அன்பு பாராட்டி ஏனையோர் முகநோக்கானாயினன். அக்கன்னியர் நெடுநாட்பொறுத்துப் பார்த்துச் சிறிதும் மனஞ்சகியாது தமது குறைகளைத் தந்தைபாற்சொல்ல, தந்தையாகிய தக்ஷன், சந்திரனையழைத்துப் பலவகையாகப்புத்திமதிகளைக்கூறி விடுப்பவும், சந்திரன் அவற்றைத் "தையலார் மயலிற் பட்டோர் தமக்கொரு மதியுண்டாமோ" என்னும் ஆன்றோர் வாசகத்தின்படி, தக்கன்சொல்லிய வுரைச் சிறிதுஞ் சிந்தியாமல், பண்டுபோல நடத்தல்கண்ட அப்பேதையர் மீண்டும் தந்தைபாற்சென்று "எந்தையே! எமது நாதன் எம்மை முன்போலவே முகநோக்காதிருக்கின்றனன்" எனக் குறைகூறக்கேட்ட தக்ஷன் வெகுண்டு "நாளுக்கொரு கலையாய்க் குறைந்தொழிகக்கடவன்" என்று சாபமிட, சந்திரன் அவ்வாறே கக்ஷ



10. சந்திரசேகர மூர்த்தி.

MAHAMAHOPADHYAYA

சாபத்தால் நாளுக்கோர் கலையாகப் பதினைந்து தினங்களில் தன்கலைக
ளெல்லாமழிந்து, ஓர் கலையோடு மனம்வருந்தி, தனக்குநேர்ந்த துன்
பத்தை இந்திரனிடஞ்சொல்லி யாசிக்க, இந்திரன் "நீ பிரமதேவ
னிடஞ் சொல்லிக்கொண்டால், பிரமதேவன் ஒருகால் தன்புதல்வ
னாகிய தக்ஷனிடஞ் சொல்லி, உனக்குச் சாபவிமோசனஞ்செய்தல்
கூடும்" என, அவ்வாறே பிரமதேவனை வேண்டிக்கொள்ள, பதுமன்
"சந்திரா! தக்கனுந் தந்தையென் றென்சொல்லைக் கேளான். யானு
மன்னவனிடஞ் செல்லேன். நீ கைலையையடைந்து கருணா
மூர்த்தியாகிய கண்ணுதலைப் பிரார்த்திக்கின் அவர் உனது குறை
தீர்ப்பர்" என, அதுமேற்கொண்டு சந்திரன் திருக்கயிலாயகிரியை
யடைந்து, திருநந்திதேவர் அநுக்ஞையால் மஹாசந்நிதானத்துட்
சென்று அருட்பெருங்கடலாகிய எமது சிவபெருமானைத் தரிசித்து
அஷ்டாங்கபஞ்சாங்கமாக நமஸ்கரித்துத் தனக்குநேர்ந்த சாபத்தை
விண்ணப்பஞ்செய்து யாசிக்க, பார்ப்பதிபாகராகிய பரமன் எஞ்சி
யுள்ள ஒருகலையைத் தமது சடைமுடியிற்றரித்து "உனது கலைகளி
லொன்று என்முடிமீதிருத்தலால் நாளுக்கொரு கலையாகவளர்ந்தும்,
தக்ஷன் சாபத்தால் நாளுக்கொரு கலையாகக் குறைந்தும் இருக்கக்
கடவாய். எப்போதும் ஒருகலை யுன்னைவிட்டு நீங்காது" என அநுக்
கிரகித்தனர். இதுகாரணத்தால் எம்பெருமானுக்குச் சந்திரசேகரர்
என்பதோர் திருநாமமெய்தியது.

சந்திரசேகரமூர்த்தயேநமஃ

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

---

பதினொருவது

# ருஷபாரூட மூர்த்தி.

ஆகாயவாசிகளாகிய இமையவர், திரிபுரத்தவர்களால் உலக்க துன்புறுகின்றதாதலின், அவர்களையடக்கியருளவேண்டுமெனச் சிவபெருமானிடம் விண்ணப்பஞ்செய்ய, சிவபெருமான் "அவர்கள் மேல் அமர்க்கோலங்கொண்டெழும்படி யுத்தத்திற்குரிய கருவிகளைச் சித்தஞ்செய்க" என்று கட்டளையிட்டருள, அவர்களவ்வாறே ஆயத்தஞ்செய்து அரவாபரணனுக்குத் திருநந்திதேவர்மூலமாக அறிவிக்க, ஐயர் அம்மையாருடன் தருமதேவதையாகிய தாவளயமான இடபவாகனத்தின்பேரிலாரோகணித்து, திருக்கயிலாயகிரியினின்றிறங்குகையில், திருமால் முதலாகிய தேவர்கள் கண்களாரத் தரிசித்துச் சிரசின்மேற் கைகளைக் குவித்து இறைஞ்சிப் பலவகையாகத் துதித்து மகிழ்ந்தனர். அம்பிகைபாகன் அமரராலாக்கிய இரதத்தைக் கண்டு இடபத்தினின்றும் இமயவல்லியுடனிழிந்து, மேருமலையாகிய வில்லுடன் சென்று தேரிலேறி மிதித்தவுடன் அதனச்சுமுறிந்தது.

அதுகண்ட அச்சுதர் அரனிடத்துள்ள அன்பின் மேலீட்டால் அப்பொழுதே ஓர் வெள்ளிய விடையுருவேற்றுத் தாங்கினர். சங்கரனைத் தாங்கின்ற சார்ங்கன் "என்னையன்றி எம்பெருமானைப் பரிப்போர் யாவர்? என் தவமே தவம். இறைவன் எனக்களித்த வரமே வரம்" என விதுபோற்பல நினைத்து இறுமாந்தனன். பத்தி வலையிற்படுவோனாகிய பரமபதி, மாயவன்மனத்திலுற்ற மமதையை யுதிர்த்து ஓர் திருவிளையாடல் புரிந்தனர். அதனால் அச்சுதர் ஐயனைத்



11 விருஷபாரூட மூர்த்தி

தாஙகமாட்டாமல் இருசெவியினும வாயவழியிலும் நாசியினும உதிர வெள்ளமொழுக, இருவிழிகளும பிதுஙக, காலகளை மடித்துககொண்டு நிலததினபேரில விழுநதனா. அப்பொழுது தேவாகளபயநது "அததா சரணம-அரனே சரணம-முததா சரணம-முதலவா சரணம சித்தா சரணம-சிவனே சரணம-நிததா சரணம்-நிமலா சரணம" எனப் பலவாறு துதிததனா. கருணாநிதி கமலைகேளவனவிஷயததில் மனங் கனிநது பூமியிலிறஙகினா. ஈசன இறஙகியபினனா கேசவன வலி பெறறெழுநிறக, பிரஹமேநதிராதி தேவாகள திகைததனா. சிவ பிரான புனசிரிபபுகொண்டு திருமாலைநோககி "சீதரா! யாதுவேண டினை விருமபியவறறைக கேட்பின, இபபொழுதே தருவேம" என, மாதவன மனமகிழசசியுறறு "தேவநாயகா! தேவரீரது வாமபாகததி னினறும் பிரியாது ஒரு சததியிருக்கவும, அடியேன விருமபியபடி எனனையும ஒருசததியாகக கொணடா. தொண்டருளளததில அவா வியவறறையெணணியாஙகேயுமஅருட்கறபகமாகிய தேவரீருககுத் தரும விடை யொன திருபபினும,மால்விடை யென யானும தேவரீரைத தாஙக வலிபெறவேணடும" என்று வருநதி யாசிததுநிறக, அருட்பெ ருஙகடல தமது அடியவருட் சிறநத திருமாலுககு அததகைய பெருமபே றெயததககக அரியவரததையும வலியையும அநுக்கிரகித்து அரியாகிய இடபததை வாகனமாககொணடு அதனபேரி லாரோகணிததனா. (எஞசியசரிதையைத திரிபுரதகனததிற கணடு கொளக.)

மாலாகிய இடபததை வாகனமாக்க் கொணடு அதனபேரில ஆரோகணிததலின சிவபிரானுககு ருஷபாருடமூாத்தி யெனபதோர் திருநாமம் விளங்குகினறது.

ஸூதசம்ஹிதை.

"சதுஷ்பாதவருஷரூபீதவம பரஹமண:புதரதாஙகத:
தாமஸஸாவாராசிதமஸமஸ்வத் வாஹநோமெபவாநீமம
தவஜேபிமமகோவிக்த தேநமாம்வ்ருஷபதவஜம்
அஹம்வருஷபவாஹஞ்ச ஸூரயோவேததத்பரா:"

## ఈశానసంహితః.

చతుష్పాద్వృషరూపీత్వం బ్రహ్మణఃపుత్రతాంగతః ।
ధర్మస్సర్వాచిఽతశ్శశ్వ ద్వాహనోమెభవానిశం ॥
ధ్వజేపిమమగోవింద కేనమాంవృషభధ్వజం ।
అహంవృషభవాహంచ సూరయోవేదతత్పరాః ॥

## உபதேசகாண்டம்

மூரிவெள்ளியிலேறுவிட்டிழிந்தனன்முதல்வன்
மேருமால்வரையொருதனிவில்லொடுமேவித்
தேரினோர்தனியெடுத்துறமிதித்தலுந்தெறித்துடை
பாருமச்சுமற்றிழிந்ததுதேர்த்தடம்பரப்பு
மடுத்தெடுத்தனன்வெள்விடையுருக்கொடுமாய
னெடுத்தவப்பரம்பொறுக்கலாணிருதொண்ணாகி
விடுத்தெழுந்தனகுருதிநீர்விழித்துணைபிதுங்கிப
படுத்தவாய்வழியுமிழ்ந்தனன்குருதிநீப்பப்பவை,
என்னையேயுனக்குப்பயமற்றெவ்வுயிர்த்தொகைக்குந்
தன்னையேயுனக்குப்பயமெத்தலைவர்க்குமுதலா
முன்னையேயுனக்குப்பயமென்றிரந்தனர்மொழிந்தா
ரிந்துசேகரனமாயவற்குறித்தனனிரங்கி.
சத்தியோர்புடையிருக்கவுமயானுமோர்சத்தி
யொத்திடப்புரிந்தருளினையாதுபோலுடையாய
வித்தகத்தனியேறனையாயினுமவினையே
னத்தனித்திறலேற்றெனத்தாங்குதற்கருள்வாய

ருஷபாரூடமூர்த்தயேநம:



12. விருஷபாந்திக மூர்த்தி.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

---

## பன்னிரண்டாவது

# ருஷபாந்திக மூர்த்தி.

சிவாகமங்களின்படி இரண்டாயிரஞ் சதுர்யுகங்கொண்ட காலம் பிரமனுக்கொருநாள் - அத்தகைய நாட்களாலாகிய நூறுவருடம் பிரமனுக்குரிய ஆயுட்காலம் அதுவே திருமாலுக்கொருநாள். அத்தன்மையாகவே திருமாலுக்கு வயது நூறு கழியின் உலகிலுள்ள சர்வான்மாக்களு மொழியும். அக்காலத்தில் சமஸ்த லோகங்களும் மஹாமாயாமயமாகும். அச்சமயத்தில் எஞ்சிநின்ற பரம்பொருளாகிய சிவபெருமான் தமது சத்தியாகிய உமையம்மை தரிசிக்கும்படி திருநடம்புரிந்தருள்வர். இத்தன்மைத்தான தேயுப்பிரளயத்தில்எல்லாத தருமங்கட்கும் அதிதேவதையாக விளங்கும் தருமதேவதை தானுமிறக்கவருமே யென்செய்வே னென்றெண்ணி, சிவபிரானைச் சரணடைந்தால் மரணத்தீமைநீங்கி யாண்டு முயிர்கொண்டிருப்பே னெனத்தெளிந்து ஓரிடபவடிவேற்று எம்பெருமானையடைந்து "ஈசனே! யானிறவாமையும் தேவரீருக்கு வாகனமாந்தன்மையும் சமானமில்லாவலியுடைமையும் பெற் றுயிர்வாழ அடியேனுக் கருள்வேண்டும்" எனப் பிரார்த்திக்க. அருட்கடலாகிய அம்பிகாபதி "அஞ்சாதே" என்றபயமளித்து அதன் சிரமேற் றமது அருமைத் திருக்கரமாகிய திதித்தொழிற்குரிய அபயாஸ்தத்தைச் சூட்டிப் பின்வருமாறு திருவாய்மலர்ந்தருளினர். "தருமதெய்வதமே! நீ விரும்பியவாறே யவற்றை யடைக: அன்றியும், தருமத்தின் கால்நிலை யிஃதென்று கண்டோருணர முற்பட்ட கிரேதாயுகத்தில் நான்குகால்களும், இரண்டாவதாகிய திரேதாயுகத்தில் மூன்றுகால்களும், மூன்றாவதாகிய



13. புஜங்கலளித மூர்த்தி.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# பதின்மூன்றாவது

# புஜங்கலளித மூர்த்தி.

காசிபன் மனைவியர் பதின்மூவரில் கற்பின் மேம்பட்ட கத்துரு விநதை யென்னுங் காரிகையரிருவர் தாம் அழகிற்சிறந்தவரென ஒருவரோ டொருவர் வாதிட்டுத் தமது நாதனை வினவி, அவர் தீர்மானித்தவண்ணந் தோற்றவள் சிறையிருப்பதாக ஏற்படுத்திக்கொண்டு முனிவரை யணுகிக் கேட்க, கத்துரு சிறந்தவளென, மற்றவள் சிறையிலகப்பட்டனள். சிறையிலிருக்கும் விநதை தன்மாற்றவளை நோக்கித் தன்னைவிடும்படி வேண்ட, "தேவலோகத்துள்ள அமிர்தமளித்தால், சிறை நீக்குவேன்" என, விநதை தன் குமாரனாகிய கருடனுக் கறிவிக்க, கருடன் தேவலோகஞ் சேர்ந்து அமுதகலசத்தைக் காத்திருந்த அந்தரத்தவரைச் செயித்துக் கைக்கொண்டு வருகையில் திருமால் எதிர்த்துச் செருச்செய்து செயிக்கமாட்டாமல் "பக்ஷிராசனே! உன் பராக்கிரமத்தை மெச்சினேன், வேண்டிய ஒருவரத்தைக் கேள்" என, கருடன் சிரித்து "கமலாக்ஷ! உன் வலிமைக்குக் களித்தேன். நீ விரும்பிய இரண்டுவரங்களைக் கேள்" என, விண்டு இதுதான் சமயமென் றுட்கொண்டு "சர்ப்பங்கட் கமுதூட்டாதிருக்கவொருவரமும், நீ எனக்கு வாகனமாகித் தாங்க மற்றொரு வரமும்வேண்டும்" என, கருடன் அவ்வாறே யிசைந்து அமுதகலசத்தைத் தாயினிடஞ் சேர்த்து, சர்ப்பங்கட் கமுதூட்டாவகையாகக் கூறிச் சிறைவிடுவித்து, சிவலிங்கபூஜைசெய்யப்பெருமான் களித்துப் பிரசன்னமாய்ப் பல வர மளித்து "விட்டுணு நம தடியரிற் சிறந்தோன். நீ யவனுக்கு வாகனமாதல்பற்றிக்களித்தோம்." என்று திருவாய்மலர்ந்தருளக் கருடன் மனம்பூரித்து மாலுக்குவாகனமாயினன்.

## காசிகண்டம்.

"கலுழ னுற்றிய காமரு தவத்தினை வியந்து
நிலவு தூங்கிளம் பிறையணி நீள்சடைக் கடவு
ளலகில் நல்வர மளித்தனம் மடியரிற் சிறந்தோ
னுலகு பூத்தசெந் தாமரை யுந்தியங் கடவுள்

ஆங்க வறங்குநீ யூர்தியா யடைதுமென் றறைந்த
நீங்கி னல்வர முவந்தனன் செல்கெனக் கலுழன்
வீங்கி னன்றடம் புயமுளங் குளிப்புற விழிநீர்
தூங்க மெய்ம்மயிர் சிலிர்ப்புறத் தொழுதிவை சொல்வான்

கருடன் சிவார்ச்சனை செய்துபெற்ற வல்லமையால், த
மாற்றாந்தாயாகிய கத்துரு வென்பாள் பெற்ற கட்செவிகளைக் க
கோபத்துடன் கொன்று துன்புறுத்தி வருதல் கண்டு, நாகங்க
"நாமும் சிவபிரானைப் பூசித்து வைநதேயனால் மாயாத வரமு
வேண்டும்" என் றாலோசித்துக்கொண்டு ஓர் சிவலிங்கக்குறியை
தாபித்து, விதிமுறையே சிவார்ச்சனைசெய்து நோற்று "ஆதிமத
யாந்த ரகிதராகிய அருட்பெருங்கடலே! தேவரீரது பூஜாபலத்
லும், திருமாலுக்கு வாகனமா யிருத்தலாலும், மாற்றாந்தாய் மை
னாதலாலும், கருடன் எங்களைக் கொல்கின்றான். அவனு விறவாவ
ணம் அருள்புரியவேண்டும்" என்று பிரார்த்தித்தன. சிவபிரா
அச்சர்ப்பங்கட்குத் திருவுள மிரங்கித் தம் தருமைத் திருமேனி
லாபரணமாக அவைஅழகுறும்படி அணிந்துகொண்டனர். இதுநிற

பின்னொரு காலத்தில் விஷ்ணு சிவதரிசனார்த்தமாக வந
பொழுது அச் சர்ப்பங்கள் அச்சமின்றிக் கருடனை நோக்கி "ஏ
கருடா சுகமா" என வினவின. இதனை உலகத்தார் வழக்க
சொல்லாகக்கூறுகின்றனர். அஃதெற்றுக்கெனில் சிறியோரைச்சே
தலினும் பெரியோரைக்கூடுதல் சிறந்ததென் றுணர்த்தற்கென வறி

புஜங்கம்=பாம்பு, லளிதம்=அழகுசெய்தல்.

புஜங்கலளிதமூர்த்தயே நம:



14. புஜங்கத்ராச மூர்த்தி.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

---

## பதினான்காவது

# புஜங்கத்ராச மூர்த்தி.

தாருகவனத்து முனிவர்கள் தவமே சிறந்ததென்றும், அவர் பன்னியர் கற்பேமிகுந்ததென்றுங் கருதிக் கடவுளர் பெருமானாகிய கண்ணுதலைப் பரம்பொருளென மதியாது மமதைகொண்டு வாழுந் இருக்குநாளில், **சிவபெருமான்** திகம்பரராயப் பிக்ஷாடனத் திருக்கோலங்கொண்டும், **திருமால்** மோகினிவடிவேற்றுஞ் சென்று அம்முனிபத்தினிகள் கற்பையும் அம்முனிவர் தவத்தையு மழித்தனர். அக்காலத்தில் அரிவையர் மயக்கி லவாவுற்றுத் தமதிருக்கைநாடிய அவ்வந்தணர் தத்தமவீதியிற் கற்பழிந்துழலுங் காரிகையரைப் பார்த்துத் தமது ஞானத்தால் "நம் தவத்தை யழித்து நமது மனைவியர் கற்பையொழித்தவன் சிவன், அவனேயல்லால் ஆயிழையா யடைந்தவன் அச்சுதன்" என்றறிந்து விஷவிருக்ஷங்களைச் சமிதையாக்கி வேம்புமுதலியவற்றின் நெய்யினால் **அபிசாரவேள்வி** செய்து அதினின்றெழுந்த பல பொருள்களையும் பரம்பதியின்பேரிற் பிரயோகிக்க, சிவபிரான் அவற்றை எண்ணியவகையெல்லாம் உடை, பாதச் சிலம்பு, ஆயுதம், சிரோமாலை, சேனைமுதலியவாகச் செய்துகொண்டனர்.

**தாம்** பிரயோகித்தவை பிரயோசனப்படாததுகண்டு தாருகவனமுனிவர் யாகாக்கினியினின்றெழுந்த சாபங்களையுஞ் சங்கரன் மேல்விட, அவை அச்சமின்றி அவனி யழியும்வண்ணம் அதிவேகமாகத் தமது காளி-காளாஸ்திரி-யமன் - யமதூதன் எனனும் நான்கு

நச்சுப்பற்களிலுள்ள தொளைவழி விஷஞ் சிந்திக்கொண்டு நாதனைக் கண்ண, அண்ணல் ஆதிநாளையில் விண்டுவின்வாகனமாகிய கருடனுக் கஞ்சித் தம்பால் சரண்புகுந்த சர்ப்பங்களைத் தம்முடலிற் றாங்கியிருந்ததுடன் இப்பாம்புகளையும் ஏற்று "உமது குலத்தாருடன் ஒன்று கூடி வாழுங்கள்" என்று திருவுள்ளஞ்செய்து அப்பாம்புக ளுஞ்சும்படி திருக்கரத்தாற்பற்றிச் சிறிதுபொழுது நடித்து, திருக்கரம் திருவடி அரை முதலியவிடங்களிற் கங்கணம் - காலணி - அரைநாண் - கடிசூத்திர முதலியவாகப் பிணித்தருளினர்.

தாருகவனத்து முனிவர் செலுத்திய சாபங்களை அச்சுறுத்தினமையால், சிவபெருமான் புஜங்கத்ராச மூர்த்தியெனத் திருநாமமெய்தினர்.

[இச்சரித்தத்தின் ஏனைய விஷயங்கள் பிக்ஷாடனம் சார்த்தூல ஹத மிவற்றில் விளக்கப்பட்டுள்ளன. ஆங்குக் கண்டுகொள்க.]

### கந்தபுராணம்.

ஏந்தியபின்னர் "வேள்வியெரியதற்கிடையேயெண்ணில்
பாந்தளங்கொழுந்தீயோர்பணியினற்சீற்றங்கொண்டு
போந்தனவவற்றைமாயோன்புள்ளினுக்கஞ்சித்தம்பால்
சேர்ந்தவோர்பணிகளோடுசெவ்விதிற்புனைந்தானெங்கோன்."

புஜங்கத்ராசமூர்த்தயோகம்.



15. சக்தியாகிர்த்த மூர்த்தி.

திருச்சிற்றம்பலம்.

---

## பதினைந்தாவது
# சந்தியாநிருத்த மூர்த்தி.

தேவர்கள் சிவாக்கினையின்றித் திருப்பாற்கடலை மதித்த பொழுது அதில்நாட்டிய மந்தரமலையாகிய மத்திற்குப் பூட்டப்பட்ட தாம்பாகிய வாசுகி யென்னும் பாம்பு தன்தலைவால்களைப் பற்றியீர்க்குந் தேவாசுரர் வலிக்காற்றுமல் வாய்வழி நஞ்சு கக்கியது. அவ்விஷம் யாவரையுமெதிர்க்கத் திருமால் அதனையெதிர்த்து உடல்கருகி உம்பர்குழுவுடன் வெள்ளியமலையையடைந்து சிவபிரானுக்கு விண்ணப்பஞ் செய்துகொள்ள, அருள்வள்ளல் அதனை அமுதுசெய்தனர்.

[இதன்விஸ்தாரம் விஷாபஹரணத்திற் காண்க.]

**ஆகமத்திரட்டு.**

"பொங்குங்கங்காதரன்காளமயின்றேயொன்றும்
புகலாமலிருந்தனன்றோ கணப்பொழுதுபுலவோர்
அங்கவனையிடைவிடாதருச்சனை முன்புரிந்தார்
அத்திதியேகாதசியாமத்தத்திதியதனிற்
புங்கவர்பாரணம்புசித்தேபூர்த்தியுற்றுறிதனமேற்
பொருந்துதிதிதனிலிமவான்பொற்கொடியைவைத்தே
சங்கரன்சூலஞ்சுழற்றிநடித்தனன்றோயாமஞ்
சதுர்மறைநூலதுபிரதோஷமெனவேசாற்றும்"—

என்னும் பிரமாணத்தின்படியே,

சிவபெருமான்தேவர்துயர்தொலையும்படி விஷபானஞ்செய்த காலத்தில், அதனால் தாமொருதீமையு மடைந்தாரில்லையாயினும், ஓர் திருவிளையாடல் செய்யக்கருதி ஓர்க்ஷணப்பொழுது ஒன்றுங்கூறாராய.

உமாதேவியாா தமமை யுபசரிககுமபடி மௌனமாயச சயனததிரு தனா. அதுகணட அமரா அரனை யருசசிததனா. அததிதியை ஆரோா ஏகாதசி யெனபா. அறறையநாள முறறும உணவிலலா அனறிரவெலலாம நிததிரையினினறுநீஙகி மறுநாளாகிய துவாதயிற பணணவா பாரணஞ்செய்தனா அதனமேறபடட திதியாகிய திரயோதசியிற சிவபிரான மலையரசபுததிரியாராகிய உமாதேவியரை நிறுததிச சூலததைச சுழறறி, கையில தமருகமேநதி ஓா சாமகாலம நிருததஞசெயதனா. அககாலததையே வேதசிவாகமஙகள பிரதோஷ மெனக கூறும. இதுபறறி பதினைநதுதினஙகட கோருமுறை வரும திரயோதசியைப பிரதோஷமெனபதனறி, தினநதேறுமமாலையு மிரவுஙகலககும ஒருசாமபபொழுதையும பிரதோஷகால மெனவும, வருடததிறகோாமுறை யெயதும மகாசிவராத்திரியை வருடப்பிரதோஷ மெனவுங கூறுநிறபா ஒவவொருதினமும உதயாதி இருபததாறேகால நாழிகைமுதல இரவு மூனறேமுககால நாழிகைவரையும நாழிகை ஏழரை இதில ரஜனிமுக காலததிற சமபவிபபது பிரதோஷ மெனவும, மததியான முகூாரத மெடடனுள ஏழு கழிதது எஞ்சிய எட்டாவது முகூாததமே பிரதோஷமெனவும ஆகமஙகள கூறும. இம முறைபறறி மாதபபிரதோஷததை மாத சிவராததிரி யெனபா.

இதுநிறக. சிவபிரான நிருததஞ்செயககணட தேவா களிதது இருகரஙகளையுஞ சிரமேற்குவிதது மனதை மகாதேவனபால் பதிதது அரனே பரனெனமதிதது ஆநந்தக்கூததாடினா. அனபுருகிப பாடினா, ஐயனைக கொணடாடினா. அருளாளா விடைபெற்றுத தமதிடததைநாடினா. இததகைய நிருததகாலததில தேவாகள தத தமககியைநத வாசசியஙகளும, திருமால் மிருதங்கமும் வாசித்தனா.

பெருமான் திருக்கயிலாயகிரியில் உமாதேவியார் முதலானோா காணப் பிரதோஷகாலத்தில் நடனஞ்செயத அவசரம் சநதியாநிருத்தமூாத்த மெனப்படும்.

## ப்ரம்மோத்தரகாண்டம்.

வாகதேவீதருதவலலகீஶதமகோவேணுமததபதமஜ
ஸதாளோநநிதரகரோரமாபகவதீகேயபரயோகாஞசிதா
விஷணுஸஸாநதரமருதஙகவாதநபடோதேவாஸஸமநதாதஸதிதா
ஸேவநதேதமநுபரதோஷஸமயேதேவமமருடாநீபதிம.

## బ్రహ్మోత్తరఖండము.

వాగ్దేవీధృతవల్లకీశతమఖో వేణుందధత్పద్మజః ।
స్తాళోన్నిద్రకరోరమాభగవతీగేయప్రయోగాంచితా ॥
విష్ణుస్సాంద్రమృదంగవాదనపటుర్దేవాస్సమంతాత్స్థితాః ।
సేవంతేతమనుప్రదోషసమయేదేవంమృడానీపతిం ॥

சநதியாநிருததஜாததயேநம

---

உ
சிவமயம்.
திருச்சிற்றம்பலம்.

---

# பதினைந்தாவது
# சதாநிருத்த மூர்த்தி.

சிவபெருமான் ஆன்மாக்களுக்குப் பெத்த முத்திகளைத் திருவருள்செய்தற்பொருட்டுப் பஞ்சாக்கரமே திருமேனியாகக்கொண்டு பஞ்சகிருத்தியத் திருநடனத்தை யெஞ்ஞான்றும் இயற்றுகின்றார்.

"தோற்றந்துடியதனிற்றோயுந்திதியமைப்பிற்
சாற்றியிடுமங்கியிலேசங்காரம்—ஊற்றமாய்
ஊன்றுமலர்ப்பதத்திலுற்றதிரோதமுத்தி
நான்றமலர்ப்பதத்தேநாடு"

"மாயைதனையுதறிவல்வினையைச்சுட்டுமலஞ்
சாயவமுக்கியருடானெடுத்து—நேயத்தால்
ஆனந்தவாரிதியிலான்மாவைத்தானழுத்தல்
தானெந்தையார்பரதந்தான்." என்னும் உண்மைவிளக்கத்தின்படி, பெருமான் மூன்று திருக்கரங்களாலும் இரண்டு திருவடிகளாலும் பஞ்சகிருத்தியமியற்றுகின்றார். எவ்வாறெனில் தமருக மேந்திய கரத்தினாற் சிருட்டியும், அமைத்த அஸ்தத்தினால் திதியும், மழுவேந்தியகையினாற் சங்காரமும், முயலகன் முதுகிலூன்றிய திருவடியினால் திரோபவமும், அநவரதநடம்பயிலும் அடித்தாமரையினால் அநுக்கிரகமும் புரிவர். அன்றியும்,

"உரையுணர்வுக்கெட்டாவொருவன்மிகுபஞ்சாக்
கரத்தால்வரைமகடான்பாதி—பரையிடமாய்க்
காணும்படியேகருணையுருக்கொண்டாடல்
பேணுமவர்க்குண்டோபிறப்பு."—என்றபடியே, ஆன்மாக்



16 சதாநிருத்த மூர்த்தி.

களை அநாதியே பந்திக்கப்பட்டுள்ள பாசவீக்கம்போக்கி முத்தியடைந்தற்பொருட்டே, அருள்வடிவாகிய அம்மையார் பக்தாநுக்கிரககாரணமாய், பஞ்சாக்கரவடிவாகிய அவ் வாநந்தத் திருநடனத்தை வாம பாகத்தினின்று தெரிசிப்பர் மேலும்,

"ஆடும்படிகேணல்லம்பலத்திலையனே
நாடுந்திருவடியிலேநகரம்—கூடும்
மகரமுதரம் வளர்தோள்சிகரம்
பகருமுகம்வா முடியப்பார்."—என்றபடியே சிவபிரான்

திருத்தக்கோலங்கொண்ட ஞான்று திருவடியில் நகாரமும், திருவயிற்றில் மகாரமும், திருத்தோளில் சிகாரமும், திருமுகத்தில் வாகாரமும், திருமுடியில் யகாரமுமாகக்கொண்டு ஸ்ரீபஞ்சாக்ஷரமே திருவுருவாக நின்று ஆன்மாக்களின்மீ துள்ள கருணையால் ஐவகையவான திருத்தியங்களையு மியற்று நிற்பர். இனி இந்நடனம் ஊனநடனம் ஞானநடனம் என இருவகைப்படும். சிவபிரான் திருக்கயிலாயமலை - ஸ்ரீமேருமலை - வடாரண்யம் - திருத்தில்லை - திருவாலவாய் - திருநெல்வேலி - திருக்குற்றாலம் - திருத்தெளிச்சேரி முதலாகக் கூறப்படும் பல விடங்களிற் பல காரணங்களாற் பலமுறை பதம்பெயர்த்தாடி யிருப்பினும் ஸ்ரீபஞ்சாக்கரமே திருமேனியாகக்கொண்டு பஞ்சகிருத்தியகாரணமாக எப்போதும் உமையம்மையார் தரிசித்து நிற்கும்படி திருமால் திருநந்திதேவர் பிரமதகணங்கள் முதலானோரது தோற்கருவி தொளைக்கருவி நரம்புக்கருவி கஞ்சக்கருவி மிடற்றுக்கருவி முதலிய வற்றினோசையோடு திருநடனஞ்செய்திருத்தலின், சதாநிருத்தமூர்த்தியெனப் பெயருற்றனர்.

சதாநிருத்தமூர்த்தயேநம:

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

## பதினேழாவது

# சண்டதாண்டவ மூர்த்தி.

ஸ்ரீவடாரணியத்தின் மகிமையைச் சிவபிரானார் சொல்லக்கேட்ட சுநந்தமுனிவர், பெருமான் அநுக்கிரகித்தவண்ணந் தாண்டவ தரிசனத்தை விரும்பி ஆங்கடைந்து தவத்திருந்தனர், அவ்வாறிருக்கையிற் கண்ணுதல் கைவிரலணியாகிய கார்க்கோடகன், திருவிரலில் விஷத்தைக் கக்க, விடையூர்தி "நம்மை மனத்திற் கருதாது மமதையோடு நீசெய்த தீமைக்காகத் திருக்கைலையை நீங்குக" என, நாகம் நடுநடுங்கிப் பணிய, நாதன் "வடாரணியத்தலத்திற் பலவாண்டுகளிருந்து அருந்தவஞ் செய்யுஞ் சுநந்தருடன் சண்டதாண்டவத்தைத் தரிசித்துப் பிறகுவருதி" என, கட்செவி கருடனுக்கஞ்சி முறையிட, இறைவர் "இத்தீர்த்தத்தில் மூழ்கி ஆண்டுள்ள முத்திதீர்த்தத்தில் முளைக்க" என, அரவு அவ்வாறே ஆலவனமடைந்து அருந்தவஞ் செய்யுஞ் சுநந்தரைக் கண்டு தொழுது தனது வரலாற்றைச் சொல்ல, சுநந்தமுனிவர் மகிழ்ந்து தன் பக்கலிற் றவமியற்றப் பணித்து, பழையபடி நெடுங்காலந் தவத்திருப்ப, முனிவரைப் புற்றுமூடி முடிமேல் முஞ்சிப்புல் முளைத்தமையால், அவர் முஞ்சிகேசமுனிவரென்னும் பெயர்பெற்றனர். இது நிற்க:

நிகும்பன் கும்பன் என்னும் நிசாசரரிருவர் செய்துவருந் தீமையைப் பொறாத தேவர்கள், பார்வதியாரை நோக்கிப் பலகாலந் தவஞ் செய்ய, இறைவி இமையவர்முன் தோன்றி "அமரரே! நீங்களாவலிய அடைவே அவர்களை யழிப்பேன்" என்றருளிச்செய்



17. காளிதாண்டவ மூர்த்தி.

மலைச்சாரலை யடைந்து தவவடிவேற்று வசித்திருக்கையில், சண்டன் முண்டன் என்னும் தானவ ரிருவர் சாமபவியைச் சார்ந்து, "தார் குழலே! தனித்திருப்பானேன்; சாற்றற்கரிய வலியுடைய சும்பனிடஞ் சேர்க" எனச் சொல்ல, அம்பிகை "அருந்தவமாற்றும் யான் ஆடவரோ டுரையாடேன். அவைகளைத் தகவுமின்" என்றறைய, அவர்கள் சுமபாசுரனபால், தேவியின் பொலிவை வியந்து செப்பி, அவ னேவலாற் சில படையுடன் மீடடுஞ் சென்றழைத்து வாராமை நோக்கி வலிந்திற் கைப்பற்றி யீர்க்கக் கருதுகையில், விமலை வெகுளி கொள்ள, அம்மையார்தோளிலிருந்து அநேகஞ்சேனையும் ஒரு சத்தியும் அவதரித்து, அவ விருவரையுஞ் சேனையுடன் சங்கரித்தனர். "சண்டனையு முண்டனையுஞ் சங்கரித்தமையாற் சாமுண்டி யெனப் பெயர்பெற்றுத் தரணியோர் தொழ வாழுதி" என அச் சத்திக் கருளினர். அவற்றை யறிந்த நிசும்பன்-சும்பன் எனபோர் அநேக அசுரருடன் ஆர்ப்பரித்து வந்து அம்மையை யெதிர்த்து அஸ்திரமாரி சொரிய, உமாதேவியார் தமதுடலினின்று சந்தமாதர்களையுஞ் சிவதூதியையும் உதிப்பித்து யுத்தத்திற் கனுப்பி அவர்களால் அசுரச் சேனையை யழிப்பித்து, தாமே முதலில் நிசும்பனையும் பிறகு சும்பனையு மாய்த்தனர்.

ஆற்ற லுடைய அவ் வீரன் டசுராகட் கிளையா ளாகிய துரோதி யெனபவள் பெற்ற இரத்தபீசன், தன துடற் சோரியில் ஒரு துளி தரைமேல் விழுந்தால் அத்துளி தன்னைப்போலத் தானவனாக வரம்பெற்றவன். இச்செய்தியையறிந்து இமைப்பொழுதி லெதிர்த்தனன். அக்கிருதனுடன் சத்தமாதர்கள் சமர்செய்கையில், உதிரத் துளிகட் கொவ்வோர் உருவேற்றதுகண் டோடிவந்து உமையம்மையா ரொப்ப, தேவியார் சின மிகத் திருத்தோளினின்று காளி தோன்றினள். "பெண்ணே! யான இரத்தபீசனைச்சங்கரிக்கையில் உதிரத்துளி யொன்றும் பூமியில் விழாமல் உன் கைக்கபாலத்தேந்தி யுண்ணக்கடவாய்" என்று பணித்து, அவ ளுதிரபானஞ்செய்துவர,

இறைவி இரததபீசனை இமைபபி லழிதது, இமையவரை அவரவா நாடடிற கேக விசைதது, காளியைக களிதது அவளுக்குச சண்டி யென றுபெயரும தெயவீகமும் சிவபெருமானிடம நிருததஞ்செயது அவா பககலில வசிததலும ஆகிய இவறறை அநுககிரகிதது, சதத மாதாகட கருளசெயது அநதாததானமாயினா. காளி அசுர ருதிர மருநதிய ஆறறலாலும, இறைவியாரிடம பெறற வரததாலு மிறுமாநது, மாமிசம நிண முதலியவறறைப புசிதது, மோகினி-இடாகினி பசாசு-பூதஙகள புடைசூழ ஒருவனததிலிருநது மறறொரு வனததிற குபபோய உலக முழுவது மூலவி வடாரணயத தருகிலவநது யாவரையும துனபுறுததி வாழநதிருநதனள. இஃதிவவாறிருகக

ஒருநாள திருவாலஙகாடு சென்ற நாரதமுநிவருககுக காளியின தீசசெயலகளைக கார்க்கோடக முனிவன கூற, நாரதா கேடடுச செலலுமளவில, காளி விழுஙகவர, அவா மறைநது சென்று விண்டுவைககணடு விஷயததைவாயவிணடனா. திருமால் சிவபிரானபால திருவிணணபபஞ்செயய, இறைவா "இபபொழுதே அககாளியின வனமை குனற வடவன மடைவோம" என்று கூறி, சுநத முநிவா காரககோடக முநிவாகட்குக கருணைசெயயக் கருதி ஆலவன மடைநதனா.

மாதேவன வயிரவவடிவுகொள்ள, அவருடனவந்த பூதகணஙகளுடன காளியின சேனை எதிதது ஆற்றாது, காளிக கறைய, அவள் அமாககோலங்கொணடுவநது ஐயனைக்கணடு பயநது "நிருததயுததஞ செய்வோம" எனநிகழ்தத, முனனே னிசைநது முஞ்சிகேசர் காரககோடகாகட்குத தரிசனந்தநது திருநடனத்துக்குத தேவருடன வந்தனா. அக்காலதது அமரா அவரவாகட் கிசைந்த பல வாததியஙகளை வாசித்தனர். அநவரதம் - அறபுதம் - இரௌத்ரம்-கருணை-குற்செய்-சாந்தம்-சிருங்காரம்-பயம்-பெருநகை-வீரிய மென்னும் நவரசங்களும் அபிநயமும் விளங்க வாத்தியங்கட் கொப்பப்

பாண்டரஙக மாகிய சண்டதாண்டவத்தைக் காளியுடன் செயகை யில, கருணாநிதியின திருசசெவியி லிருநத குணடலமானது நிருதத வேகததால நிலததில நழுவ, அதை இறைவரோ திருவடியொனறினு லெடுதது தரிததுத திருததாணடவஞசெயது காளியைத தோல்வி யடையசசெயதனா. அவள செயலறறு நாணிபபணிந்தனள. அருள வளளல் "ஈண்டோா சததியாயிருததி" என அநுக்கிரகிததது இரு முனிவரும எணணிலலா அடியாாகளும தமது தாணடவ கோலத தைச சாவகாலமுந தரிசிககுமபடி ஆணடு வீறறிருககினறனர்.

இதுகாரணததா லிறைவா காளிதாணடவமூாததி யெனப் பெய ரெயதினா.

### திருவாலங்காட்டுப்புராணம்.

"இனசுவைபொழியுஞசாயல்பினயமிலஙகசசெவவாய்
புனசிறுமுறுவலபூபபபுரணவானநதமபூரித
தனபுறுமவையோருளளமயாதரவியஙகடகேறப
வின்படுநடணஙகாளியோடரனவிளைததவேலை.

மடிதருமுலகமெனனவயஙகருணலகிமெலல
வடிபெயாததாடலசெயயவருகுறுஙகாளிநோககி
யொடிவுறுநாணினமேவியொளிமுகமிறைஞசியொல்கி
வடிவுறுபாவைபோலசசெயலறமயஙகினாளே."

சணடதாணடவ மூாததயேநம:

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

## பதினெட்டாவது

# கங்காதரமூர்த்தி.

திருக்கயிலாயகிரிக் கருகிலுள்ள ஓர் சிங்காரவனத்தில் சிவபிரான் உலாவுகையில் உமாதேவியார் ஒன்றுமுணராமல் ஓர் விளையாடல் கருதிப் பின்வந்து தமது திருக்கரங்களிரண்டினாலும் பெருமானது திருவிழிகளை மூடினார். அதனால் அளவில்லாத அண்டகோடிகளிலுள்ள ஆன்மாக்களெல்லாம் அல்லலுற்றழுங்கும்படி அந்தகாரம் நிறைந்தது. தினகரன் வெயிலும் திங்களின் நிலவும் தீயின் சுடரும் தேவர் ஒளியும் மற்றெங்குமுள்ள பிரகாசமும் மறைந்து உலகமுழுவதும் பேரிருண்மயமாயிற்று.

சிவபிரான் திருவிழியொளியால் எல்லாச் சோதியும் இயங்குந் தன்மையால், கங்காளனது கண்களைக் கவுரி கையால் மூடிய கணமொன்றில் உயிர்கட்கு ஊழி பல கழிதல் கருதி, கருணைமூர்த்தி மன்னுயிர்த்தொகைகட்கு இன்னருள்புரியத் தன்னுளமதனிலுன்னினராகி, நெற்றியிருப்புண் நீள்விழிதோன்றுவித்து அன்னதுகொண்டு உலகினை இன்னலை விலக்கி நீங்காநிலையாய நிறைந்தபேரிருளைத் தீர்த்து, திங்கள்-செஞ்சுடர்-தீ-முதலாய சுடர்கட்கொளிசெய்தனர். எண்ணிறந்த ஆன்மாக்கள் தத்தம் உண்ணிறைந்த பெருங்களிப்பால் உம்பரானை வழுத்தின. இத்திறச் செய்கையை இறைவி யறிந்து சித்தமதனில் மெத்தப்பிரமித்து ஈசன் இணைவிழிமூடிய இருகரத்தையும் இம்மடபொழுதில் எடுத்தனள். அவ்வாறெடுக்கையில், அம்மையாருக்கேற்ற அச்சத்தால் விரல்கள் பத்திலும் வியர்வுதோன்ற, விமலையன்னவை விதிர்க்க, பத்து விரலிலிருந்து பிறந்தவை பத்துக் கங்கைகளாகி.



18. கங்காதர மூர்த்தி.

பெருகிச சத்தசமுத்திரஙகடகுவழிகொண்டன. நூறு ஆயிரம் கோடி முதலிய கணககிலலாத முகமுறறு மூதுலகமுழுவதும் மூடிப் பரவக் கணடு மோசம்வநததெனறு இந்திரன பிரமன விணடு மூவரும திருக் கயிலாயகிரியில திருநநதிதேவா விடைபெற்றுத திருசசநநிதானததி னுட்சென்று திரியம்பகனைச சேவைசெயது "தேவதேவா! ஏதோ வோாவெளளம எஙகுமபெருகி எலலையிலலாதிரைாது யாவையுமழிய அணட முழுவதுங கவாநதது. அதனை யடககி அடியேஙகளையும அகிலததையும அளிககவேணடும்" என றறைய, பனனகாபரணன பாாவதி விரலிற பததுக கஙகைகள உறபவிததலை யுணாததி உல கைசசூழ்நத அவ வெளளததையுணணி யழைததுத தமது சடைக கறறையி லோா மயிாமுனையில தரிததனா. அது கணட மூவரும அரனை வணஙகி "அருள வெளளமே! அவனி முழுவது மழிக்கும் படி வநத அவ வெளளம அனனையாா திருவிரலினினறு ஜெனித தமையாலும, தேவரீா செஞசடைமீதிற சோததியதாலும புனித மாகப பொருநதுதலாலும எஙகள நகரததி லிருதத அதிற சிறிது அருளவேணடும" என்று பிராாததிகக, இறைவா சடையிலிருநத ஒரு கஙகையிற சிறிதுசிறிது வாஙகி மூவாகையிலும நலகி உடனசெல்லப் பணிததனர். எமபெருமானது விடைபெறறு இநதிரன் அமராவதி நகருக்கும், பிரமன் மனோவதி பட்டணததிற்கும், விஷ்ணு வைகுந்த பதவிககுங் கஙகைகயைக் கொணடு சோநதனா

தேவியாாது திருவிரல வியாவினு லுண்டாகிய கங்கை உல கததை யழிக்கும்படி இலாநது வருகையில, அதன வீறு குனற விம லா தமது வேணியி லணிநத காரணததினுல் ஐயனுக்குக் கஙகாதர மூாததி யெனபதோா அபிமான மெயதியது.

---

இஃ திவவாறிருக்கையில, வைணவரி லொருசாராா் "திரு மால் திரிவிக்கிரமாவதாரங்கொணடு, மாவலி பால மூவடிமண் ஏற்று ஆகாயததிற் றனதடியை நீட்டியபொழுது, பிரமன் கங்காசலத்தால் அபிடேகித்தனன்" எனவும், மற்றொருசாராா் "வாமனாவதாரஙகொ

ண்ட விஷ்ணுமூர்த்தியின் அங்குஷ்டத்தினின்றுங் கங்கை அவதரித்தது." எனவும் கூறி, "அத்தகைய கங்கையைச் சிவபிரானணிந்தனர்" எனவும், காணபரம்பரையில் வழங்கிவருகின்றனர். அவை யெவ்வர்: எவ்வாறெனில்,

ததீசி - கண்ணுவர்-பிருகு முதலிய முனிசிரேஷ்டர்கள் சாபத்தாற் பத்துப்பிறவி யடைந்த பத்மநாபர் (மச்சம் - கூர்மம்-வராகம் - நரசிம்ஹம் - வாமன மாகிய) ஐந்து அவதாரங்களில், (கண் - ஓடு-கொம்பு-தோல்-முதுகு ந்தண்டு இவற்றைப்பறிகொடுத்து) ஈசனால் தண்டிக்கப்பெற்றும், மற்றைந்தவதாரங்களில் மஹாதேவனை யருச்சித்து வரங்கள் பெற்றும், தான் பெற்ற சாபப்படி தசாவதாரங்களுஞ் செய்தொழிந்தனர் எனச் சிவபுராணங்கள் விளங்கக்கூறும். [இச் சரிதங்களை முறையே மச்சாரி - வராஹாரி - கூர்மாரி சிம்ஹக்ந - கங்காளமூர்த்தங்களிற் கண்டுகொள்க ஈண்டு விரிவு கருதி விடுத்தாம்]. இது நிற்க.

ஈண்டுக் குறளுரு வேற்று, மாவலிச்சக்கரவர்த்திபால் யாசித்து மூவடிமண் பெற்று, வையகமும் வானகமும் மாயோன் அளந்தபொழுது, அவ் வாமனனது அடி அங்குஷ்டம் மேலண்டகடாகம் முகட்டிற் பட்டு, அண்டகடாகம் பிளந்து, ஆங்குள்ள ஆகாயகங்கை அவ்வழியே லொழுகியதென்றும், அது கங்காத்வாரத்தின் வழியே, மாளவதேச மூலமாய்ச் சென்று மேற்கடலிற் சங்கமமாயிற்று என்றும், சிவரஹஸ்யம் துதீயாம்சத்தில் ஸ்ரீநந்தியெம்பெருமான் ஹிமவானுக்குப் பூலோக விசிஷ்டத்தைக்காட்டுகிற கட்டத்திற்கூறப்பட்டுளது.

ஶிவரஹஸ்யம் துதீயாம்சம்.

அந்யாவிக்ரமதோவிஷ்ணோ:பாததோநிர்கதாநகா
கங்காத்வாராத்ப்ரதீச்யாப்திம்ஸங்கதாமாச்வாநதிமே.

అన్యావిక్రమతో విష్ణోః పాదతో నిర్గతానఘా ।
గంగాద్వారాత్ప్రతీచ్యాబ్ధిం సంగతామాశ్వానంతిమే ॥ శివరహస్యం.

அவ்வாறன்றி, அவர்கள் கூறும் விஷ்ணு பாதோதக கங்கையைச் சிவபிரான் அணிந்தது மில்லை. கமலேகளவன் காலினின்று கங்கை ஜனித்தது மில்லை. அங்கு கங்கோற்பவமாகக் காரணமுமில்லை யென்பவை நன்கு விளங்குகின்றன. அல்லது அவர்கள் அநுமானிக்கும் வகையே அத்திரிவிக்கிரமன் தாளிற் கங்கை ஜனித்திருப்பினும், அது அத்திருமாலின் சிரமேலேயே விழுந்து அவருடலின் வழியே யிழிந்து தரையையடைந்து ஊர்கடக்கவோடியிருக்க வேண்டுமே யன்றி, சிவபெருமானதம்மால் காவபங்க நிமித்தமாய முதுகென்பைப் பறிக்கப்பட்ட வாமனனது பாதோதகத்தைச் சிரமேற்கொண்டா ரென்பது வேதாகம விருத்தமாகவே விளங்கும். வாமனாவதாரத்தின் சரிதமும், அதனைச் சங்கரிக்கவந்த ஸ்ரீகங்காளமூர்த்தியின் கனனியமும் பின்னர் வருமிடத்திற் கண்டுணர்க.

திருவாசகம்.

"மலைமகளையொருபாகம்வைத்தலுமேமற்றொருத்தி
சலமுகத்தாலவன்சடையிற்பாயுமதுவென்னேடி
சலமுகத்தாலவன்சடையிற்பாயாளேலுலகெல்லாம்
பிலமுகத்தேபுகப்பாய்ந்துபெருங்கேடாஞ்சாழலோ."

கங்காதரமூர்த்தயேநம.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

பத்தொன்பதாவது

# கங்காவிசர்ஜனமூர்த்தி.

அயோத்திநகரை யரசுபுரிந்த சகரன் என்னுஞ் சக்ரவர் விடுத்த அசுவமேதப்புரவியை அமரேசன் கண்டு மனம்பொறாஞ் தன் வாழ்வுக்கீனம் வந்ததே யென்று சிந்தை நைந்து வஞ்சனைய பற்றி, பாதலத்திற் கடுந்தவம்புரியுங் கபிலமுனிவர்பக்கலிற் கட் போயினன். அம்மன்னவன் மக்கள் அறுபதினாயிரவரும் தந்த கட்டளைப்படி தரணிமுழுதுந்தேடிக் காணாது, பாரைத் தோண்டி பாதலமடைந்து அரியதவசியாகிய கபிலர் பக்கலிற் கட்டியபரிை கண்டு இக்கள்வனே நமதுபுரவியைக் கவர்ந்து காவலன் யாகத்தை போகக் கருதியவனென்று கன்னற்று அவர் துன்புற வைதன அதனால் முனிவர் முனிந்து விழிக்க, விழித்தீயினால் சகரபுத்தி அறுபதினாயிரவரும் சாம்பராயழிந்தனர். அச்செய்தி யவருட போந்த தூதுவர் சொல்லத்தெரிந்த அரசன் தன் பௌத்திரனாகி அஞ்சுமானை யழைத்து "என் புதல்வ ரிறப்பினும் எடுத்த யாகத்தை விடலாமோ" என, அஞ்சுமான் பாதலஞ்சென்று கபிலமு னுள்ள சாம்பர் மலையைக் கண்ணுற்று ஏங்கி, முனிவர் முன்வந் குதிரையைக் கேட்க, முனிவர் மனமகிழ்ந்து புரவியைக்கொடுக்க பெற்று, பூவுல கடைந்து பிதாமகன்பால் விடுத்து அவ்யாகத்தை முடிப்பித்தான். அவன் சந்ததியி லொருவனான பகீரதன் அ சாட்சிக்காலத்தில், தன் மூதாதையர் முனிவன் முனிவால் முடிந் சாம்பராய் நரகத்தில் ஆழ்ந்துள்ளாரென்று தெரிந்து, அவர்களை



19. கங்காவிசர்ஜன மூர்த்தி.

சுவர்க்க மடைவிக்கக் கருதிப் பதுமனை நோக்கிப் பதினாயிரவருடந் தவம்புரிந்தனன். பகீரதன் பண்ணிய பெருந்தவத்திற்குக் களித்த பிரமன் பிரசன்னமாய் "ஆகாயகங்கை அவ்வாகாசத்தியிற்பட்டாற் சுவர்க்க மடைவர். அது அவனிமேல் வரில் அதன் வேகத்தை யாற்றுதல் அரனுக்கு அமையுமன்றி ஏனையோருக் கேலாதாதலின், சிவபிரானை நோக்கித் தவஞ்செய்க" எனச் சாற்றி மறைய, பகீரதன் பதினாயிரவருடந் தவம்புரிந்து பரமனருள்பெற்று, கங்கையைக் கருதி ஐயாயிரவருடம் அருந்தவம்புரிகையிற் கங்கை பெண்வடிவாக வந்து "என் வேக மதிகமாதலின் என்னைத் தாங்கும்படி ஈசனை நோக்கி இன்னுந் தவஞ்செய்க" என் றிசைப்ப, இறைவனை நோக்கி இரண்டாயிரத்தைஞ்ஞூறுவருடமீண்டுந் தவஞ்செய்து எம்பிரான் காட்சிதர, கங்கை பெண்வடிவாக வந்து கூறியதை விண்ணப்பித்து, "தாக்கிறேன்" என்றுகண்ணுதல் கொடுத்த வரத்தைப்பெற்று, திரும்பவும் கங்கையைக் கருதி இரண்டாயிரத் தைஞ்ஞூறுவருடந் தவமிழைத்தனன். கங்கை அப்பொழுது திரிலோகமும் அச்சமுற்று அலறும்படி ஆரவாரித்துக்கொண்டு வந்து தோன்றினள். அவ்வாறுவந்த கங்கையைச் சிந்தாமற் சிவபெருமான் சடைநுனியி லணிந்தனர்.

பகீரதன் கங்கையைக்காணும்ற கலங்கிநிற்பது கண்டு கருணைமூர்த்தி "நமது சடையிலிருக்கின்றனள்; அஞ்சாதே" என்று திருவாய்மலர்ந்து சிறுதிவலை விட, கங்கை நாதன் சடையிலிருந்து நதியுரு நண்ணி நானிலத் திறங்கினள். இவ்வாறு வந்த கங்கை முன் பகீரதன் படாகையில் இறந்தோரைக் கதியிற் சோக்க விரைந்து செல்லுங் கங்கையின் வேகத்தால், சந்நுமுநிவர் வேள்விச்சாலையழிய அவர் கோபித்து அந்நீரை உள்ளங்கையி லேற் றுட்கொண்டனர். அரசன் கங்கையைக் காணாமல் சந்நுமுனிவரைப் பணிந்து முன் நடந்தவற்றை மொழிய அவர் மனமிரங்கிச் செவிவழி விட்டமையாற் சாந்நவி யெனப் பெயர்பெற்று, இறந்துகிடந்த சகரர்க ளுடலுதிர்ந்த சாம்பரிற் படிய அவர்கள் நற்கதி யடைந்தனர்.

பகீரதனுற கொண்டுவரப்படுதலின கஙகைக்குப் பாகீரதி யெனவும ஓா பெயா வழஙகாநிறகும. மேல் கஙகாதரத்திற் கூறிய வணணம சிவப்பிரசாதததினுல பிரமன தனது மனோவதி நகர்றகுக கொணடுபோன கஙகை பகீரதன வேணடுகோளால பூமியில வநத பொழுது, உலக மழியாமல சிவபிரான தனது சடையி லேறறு, அவன பிராாததனைக் கிரஙகி அதிலோா துளி விடுததனா ஆதலின கஙகாவிசாஜனமூாததியென நாம மெயதினா.

### இராமாயணம்.

கஙகாயா பதநமராஜந ப்ருதிவீநஸஹிஷ்யதே
தாமவைதாரயிதுமவீரநாநயமபஸயாமிஸூலிந.
ரக்ஷஸாவாநிமாநலோகாநலோகாநகாதுமாஹஸி
தேவாநாம்சவச ஸ்ருதவாஸாவலோகமஹேஸவர.
ஸகுமிதயபரவீதஸாவாநபுநஸசேதமுவாசஹ

### రామాయణము.

గంగాయాఃపతనంరాజన్ పృథివీనసహిష్యతే ।
తాంవైధారయితుంవీర నాన్యంపశ్యామిశూలినః ।
రక్షసర్వానిమాన్లోకాన లోకాన్కర్తుమర్హసి ।
దేవానాంచవచఃశ్రుత్వా సర్వలోకమహేశ్వరః ।
సఖేమిత్యబ్రవీత్సర్వాన్ పునశ్చేదమువాచహ ।

### நவமஸ்கந்தம்.

கஸ்சதாரயிதாவேகமபுவிஷுயெளமிமஹீதலே-பகீரத.
தாரயிஷ்யதிதேவேகம்ருதாஸ்தவாதமாஸரீரிணாம
யஸ்மிநததமிதம்ப்ரோதமவிஸ்வமஸாடீவதந்துஷு.

### నవమస్కందము.

కశ్చధారయితావేగంపతిష్యామి మహీతలే । భగీరథః ॥
ధారయిష్యతితేవేగం రుద్రస్త్వాత్మాశరీరిణాం ।
యస్మిన్నోతమిదంప్రోతం విశ్వంశాటీవతంతుషు ॥

**விஷ்ணு புராணம்.**

ஶம்போஜடாகலாபாதஸாவிநிஷகராநதாஸதிஶாகராந
பலாவயிதவாதிவமநிநயேயாபாபாநஸகராதமஜாந·

విష్ణుపురాణం.

శంభోర్జటాకలాపాత్సా వినిష్క్రాంతాస్థిశర్కరాన్ ।
ప్లావయిత్వాదివంనిన్యే యాపాపాన్సగరాత్మజాన్ ॥

**ஸ்காந்தபுராணம் தக்ஷகாண்டம்**

இயமகாவபராகராநதாஈஶேநஶஶிமௌலிநா
ஜடாகோடீரநிலயாசக்ரேஸாசவிஸாஜிதா

స్కాందపురాణం.

ఇయంగర్వపరాక్రాన్తా ఈశేనశశిమౌళినా ।
జటాకోటీరనిలయా చక్రేసాంచవిసర్జితా॥

**கந்த புராணம்.**

"ஆநதிமூன றுதனணிலயனகாபுகுநதகஙகைக
தனனருநதிறலினமிககபகீரதனதவததானமீளப
பினனருமிமையாமுககட்பெருநதகைமுடிமேறறுஙகி
யிநநிலவணாபபிறசெலலவிறையதிலவிடுததலசெயதான."

கஙகாவிசாஜனமூாததயேநம.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# இருபதாவது

# திரிபுராந்தகமூர்த்தி.

தாரகாசுரன்பெற்ற தனயராகிய தாரகாக்ஷன் கமலாக்ஷன் வித்துன்மாலி யென்னு மூவரும், பிரமனை நோக்கிப் பெருங்காலந் தவம்புரிகையில், பதுமன் அவர்கட்குமுன் தோன்றக்கண்டு பணிந்து நின்று பலவகையாகத் துதித்து "அண்ணலே! அடியேங்கட் கழியாவர மருளவேண்டும்" என, மலரோன் "மைந்தரோ! மடியா திருப்போர் வையகத்திலில்லை; கற்பகாலங் கழியின் யானும் இந்திராதி தேவர்களும் இறப்போம். ஈசனே யிறவாதவன். ஆதலின் அது நீங்க மேம்பாடாவது மோக்ஷமாவது வேண்டிற் றருதும்" என, தானவர் "பொன்-வெள்ளி-இரும்பினு லமைந்த மதில்கள் பொருந்திய முப்புரம்-பூமி-அந்தர-சுவர்க்க மென்னும் மூவுலகங்களிலும் வேண்டும். அவை ஆயிரவருடத்திற்கொருமுறை விரும்பியவிடத்திற்குப் பெயர வேண்டும். அப்புரமூன்றும் ஒன்றுபட்டபொழுது சிவபெருமானே ஒரு கணையாலழித்தாலன்றி வேறொருவராலு மழியாவரம் வேண்டும்" எனக்கேட்க, பிதாமகன் அவ்வாறே பிரசாதித்துத் தன துலகு சார்ந்தனன்.

தாரகாக்ஷன் முதலாயினோர் அளவில்லாத அவுணர் சேனையையுடையவராய், மயன் என்னுந் தானவத்தச்சனை வருவித்துத் தங்கள் விருப்பின்படி பூமியி லிரும்பு மதிலும், அந்தரத்தில் வெள்ளி மதிலும், சுவர்க்கத்திற் பொன்மதிலுமாக, பல வளப்பமு நிறைந்து முப்புரம் நிருமிக்கச்செய்து, தமக்கு வேண்டிய தொன்றுமின்றி, சிவலிங்க பூசனை முதலியவற்றைக் குறைவறச்செய்து வாழ்ந்திருப்



20 திரிபுராந்தக மூர்த்தி.

பினும், தமது குலத்தியற்கைக்குக் குன்றுதவராய வைகுந்தமுதலிய தேவநகரங்களையும், உலகிலுள்ள பல பதிகளையும், திரிபுரத்தோடு சென்று சிதைத்துவருதலாற் சினந்த இந்திரன் கேள்வன், இந்திரன் முதலிய இமையவரை யுடன்கொண்டுபோ யெதிர்த்துத் துன்புற்றுச் சகியாமல், தேவர் குழுவுடன் திரும்பி மேருமலையின் வடபாலிற் பலகாலந் தவஞ்செய்ய, பரமபதி இடபாரூடராய்க் காட்சி தந்தனர். தேவர்கள் நமஸ்கரித்துத் திரிபுரத்தவர் தீமையை விண்ணப்பஞ்செய்ய, சிவபிரான் "அவர்கள் நமதடியராதலின், அவர்களைச் செகுத்தல் அடாது" என்றருளி அந்தர்த்தானமாயினர்.

விண்டு, தேவர்களே அஞ்சாதீர்களென்று புத்தவடிவு கொண்டு, நாரதமுநிவர் சீடராக வுடன்வரத் திரிபுரமடைந்து பிடகாகமம் பிரசங்கித்து, அவரைமருட்டிப் பவுத்தராக்கினர். அம்மாயையிலகப்படாதார் மூவரே யாதலின் திருமால் ஏனையோரைப் பார்த்து "நீங்கள் அம் மூவரையும் பாரார்தீர்கள். அவர்கள் இழிதொழில் பூண்டோர்" என்று கூறி, நாரதருடன் மேருமலை யடைந்து தேவகூட்டத்துடன் சிவபிரானைச் சிந்தித்துத் தவத்திருந்தனர். பெருமான் அஃதறிந்து அருள்வடிவாகிய திருநந்திதேவரை விளித்து "தேவர்கள்பாற் சென்று திரிபுரத்தவரைச் செயிக்க இரதமுதலிய யுத்தகருவிகளைச் சித்தஞ்செய்யக் கட்டளையிடுக" என, நந்தியெம்பெருமான் மேருமலை சேர்ந்து அவ்வாறே அமரர்கட்கு ஆஞ்ஞாபித்துச் செல்ல, தேவர்கள் களிகூர்ந்தனர்.

முக்தரகேசரி மலைகள் அச்சாகவும், சந்திர சூரியர் சக்கரமாகவும், இருதுக்கள் சந்தியாகவும், பதினான்கு லோகங்கள் பதினான்கு தட்டுகளாகவும், ஆகாயம் ஆதனமாகவும், உதயாஸ்த கிரிகள் கொடிஞ்சியாகவும், நதிகளும் நதங்களும் நாட்டுங் கொடியாகவும், நக்ஷத்திரங்கள் நல்ல விதானமாகவும், மோட்சலோகம் மேல்விரிவாகவும், மகங்கள் சட்டமாகவும், நாள் முதலிய காலத்திரயங்கள்

MAHAMAHOPADHYAYA
Dr. U.V. SWAMINATHA IYER LIBRARY

(கடுபபாகிய) எணணெயூறறும இடுகெகுமரமாகவும,அடடபாவதஙகள தூணுகவும, எடடுத திககஜஙகள இடையிற ருஙகவும, சததசமுத திரம திரைசசீலையாகவும, ஞானேநதிய கனமேநதியஙகள கலனகளா கவும, கலைகள முளையாகவும, புராணம - வேதாஙகம - சாஸதிரம - மநதககள மணியாகவும, மருததுககள படியாகவு மமைநத திவவிய மான ஓர தேரைச செயது, வேதஙகள நானகையும நானகு குதிரை களாயப பூடடி, பிரமனைத தேரசசாரதியாய நிறுததி, பிரணவமே குதிரைதூணடுங கோலாயக கொணடு, கஙகை அதிதி முதலிய தேவ நஙகையர நாறபுறமுஞ சாமரை யிரடடவும, துமபுரு நாரத ரிசைபா டவு மமைதது, அரமபை முதலிய கணிகையர நடிககவுஞ சமை தது, மேருமலையை விலலாகவும, வாசுகியை நாணுகவும நியமிதது, திருமால பாணமும, சரசுவதி விலலிறகடடிய மணியும், அககினி தேவன அமபின கூரவாயும, வாயு அமபிறகடடிய இறகாயு மேறபடு ததித திருககயிலாயகிரியை யடைநது திருநந்திதேவரைப் பணிநது “அமரர அமரககருவிகளை யமைததுககொண டடைநதனரொனறு அருளவளளல சநநிதியில அறிவிககவேணடுமெ” எனப பிரராததனை செயதனர.

அவர சென்று விணணப்பிகக, இறைவர தேவியாருடன இடபாரூடராய இரததை யடைந்து இமையவர எணணததின படி அதிற காலூனற அத னசசு முரிநதது. அச்சுதன் அககணமே விடை வடிவாகி எமபிரானை யேறறுத் தாஙகமாட்டாமல தனர மேல்விழ, சிவபெருமான திருவருளமேலிட்டாலிறஙகினர. பிரமன ஸ்ரீவிநாயகக்கடவுளைப்பூசிததனன.அவரருளால் அவவிரதம்முன போலாக அதனமேற பெருமான அமமையாருடன ஆரோகணித்த னர. மூததபிள்ளையார - இளையபிளளையார - திருமால - இந்திரன் முதலான தேவரகள தததம வாகனங்களிலேறிவரவும, முப்பதது முக்கோடி தேவரகளும எபபக்கத்திலுஞசூழ்நதுவரவும், சததருஷிக ளாசீர்வதிக்கவும், திருநந்திதேவர பொற்பிரம்புகொண்டு முன் செல்

லவும, பாநுகமபன-வாணன-சஙகுகனனன முதலிய சிவகணநாதர்கள வாசசியமிசைக்கவும சிவபெருமான இரதாரூடராயத் திரிபுரததைச சமீபிததனா.

அமராகள அபபொழுது ஐயனைப பணிநது "அணணலே! விலலைவளைததுக கணைவிடவேணடும" எனறு பிராாததிகக, சிவபெருமான தமதுதிருககரததேநதிய மேருமலையாகிய விலலையெடுதது வளைதது, வாசுகியாகிய நாணேறறினா. [அதில அமபுபூட்டித திரிபுரததை யழிபபின, அநதரா அநதமிலலாத அகநதையுறுவ ராதலின, அவவாறினறி] இடபபால வீறறிருககும இமயவலலியைக கடைக்கணிதது, பிறகு புனனகை செயயப புரமூனறுந தீபபறறிசசாம்பராயின. பெருநதவராயிருநது சிவனடியே சிநதிததுவநத மூவரும், யாதொருதீமையுமினறிப பெருமானபாலவநது டணிய, கணணுதல் அவாகளைத துவாரபாலகராக அருளி, தேவாகளை அவரவரிடததிற கனுபபித திருககைலைமலைககெழுநதருளினா அமராதுயா தீருமபடி முபபுரததைச சிரிததெரிததலின, சிவபிரான திரிபுரதகன மூாததியெனத திருநாம முறறனா.

யஜுஸ்ஸம்ஹிதை - ஶ்ருதி

தேஷாமஸுராணாந்தி ஸர:புர ஆஸநய ஸமையவ மாதரஜதாத ஹரிணீதாதேவாஜேதும நாஶகநுவநதா உபஸதைவாஜி கீஷனதஸ மாதா ஹராயஶசைவம வேதயஶசநோபஸதாவை மஹாபுரம ஜயநதீதிஸஇஷுகஸமஸகுாவதாகநி மநீககஸோமகஶலயம விஷ்ணும்தேயநநதேபருவங்க இமாமஶிஷயதீதி ருதரஇதயபருவந ருதரோவைக்ரூர:ஸோஸ்யதவிதி.

యజుస్సంహిత-శ్రుతి.

తేషామసురాణాంత్రిస్రఃపుర ఆసన్నయస్మైయవమాధర జతాధహారి ణీతాదివాజేతుంనా శక్నువన్తాఉపసద్భి వాజీగీషన్తస్మాదా హుర్య శ్చైవంవేదయ శ్చనోపసదాభై మహాపురంజయంతీతి సఇషుగ్ సమస్కుర్వ

తాగ్ని మనీకగ్ సోమగ్ శల్యంవిష్ణుంతేజనంతే బ్రువన్కఇమామ శిష్యతీ
రుద్రఇత్యబ్రువన్ । రుద్రోవైక్రూరఃసోస్యత్వితి.

### மஹிம்நஸ்துதி.

திதக்ஷோஸதேகாயமதரிபுரதருணமாடமபரவிதிரவிதேயை
கரீடமதயோநகலுபலதாநதரா பரபுதிய .

### మహిమ్నస్తుతి.

దిధక్షోస్తేకాయంత్రిపురత్రుణమాడంబరవిధిర్విధేయైః ।
క్రీడంతోన్యనఖలుఫలతంత్రాఃప్రభుధియః॥

### நரசிம்ஹபுராணம்

ரத க்ஷமாசகரயுகௌஸூாயசநதௌ துரஙகமா
வேதா ஸூதோவிரிஞசிஸசஜயாஸேஷோதநுரதரிராட
ஸிதாஸதரமிநதிராதீஸஇதயாடமபரபூாவகம
தருணவதஸமஹருதாநீஸபுராணிதரிணிலீலயா.

### నరసింహపురాణము.

రథఃక్షమాచక్రయుగౌసూర్యచంద్రౌతురంగమాః
వేదాఃసూతోవిరించిశ్చజ్యాశేషోధనురద్రిరాట్ ।
సీతాస్త్రమిందిరాదీశఇత్యాడంబరపూర్వకం
తృణవత్సంహృతాన్యీశపురాణిత్రీణిలీలయా॥

திரிபுரதகனஹூாததயோநம .

---



21. கல்யாணசுந்தர மூர்த்தி.

சிவமயம.

திருசசிறறமபலம.

# இருபத்தொன்றுவது
# கல்யாணசுந்தரமூர்த்தி.

திருககயிலாயகிரியிற சகல தேவாகளும நிறைநதிருககுமபடி நவரததின மணடபததிற **சிவபெருமான்** திருவோலககஙகொண டெழுநதருளியிருககையில, எமமனையாா சிஙகாதனததைவிடடெ தனுககுற றெழுநதிருநது இறைவரது இரு சாணாரவிநதஙகளைப் பணிநது கைகூபபிநினறு "தேவரீாைபபணியாத **தக்கன்** மகளெ னபதனுலாய **தாக்ஷயணி**யெனறு சாறறும பெயரை மாறறத தயை செயயவேணடும" எனப பிராாததிகக, அரவாபரணா "மாதே! **மலையரயன்** உனனை மகளாகப பெறறத தவஞ செயகினறுன அவனபாற குழநதை யாகுக உனனை யாம வநது மணபபோம." என, அமமையாா அவவாறே இமாசலததிலுள்ள தாமரைததடாகத தில மலாநதவிசினகண மூவாணடுளள மதலைவடிவெறறு நிறப' மலைமனனன கணடு மகிழநதெடுததுப போய,மனைவியாகிய **மேனை** கையிற கொடுபப, அவள பாலூட்டி வளாததனள. அமமையாா ஐநதுவயததடைநது அருளமேலீட்டால அததனுகிய பர்வதராஜனுக கறிவிதது அநுமதி பெறறு மலைசசாரலிற பானசாலைசெயவிததுச சிவபெருமானை நோககித தவஞசெயதுகொண்டிருநதனா.

அக்காலததிறசிவபிரான தமமிடஞசோநது மனமொடுங்கும வணணம விணவிய சநகன - சநநதனன - சநாதனன - சநறகுமா ரன என்னும நாலவருக்கும, **பதி பசு பாச** லக்ஷணஙகளைப போதி க்க, அவாகள "அடியேஙகள மனம விரிநதிருபபது அகனுமவகை யருளவேணடும்" என, "பொருள இவவாறிருப்பது" எனறு ஓனறு

முளையாது முனிவர்போல யோகத்தி லிருந்தனராதலின், உலகமுழுவதும் மாதர் முயக்கற்றுப் பிரமன் படைப்புத் தவறுற்றது கண்ட தேவர், அதனை விலக்குவான் கருதி மன்மதனை விடுத்து மலர்க்கணை செலுத்தி யோகினை யழிக்கச்செய்ய, நின்மலர் நெற்றிவிழியைத் திறப்ப, மதனன் சாம்பராயினன். அருகிருந்த இரதி பரமனைப் பார்த்துப் புலம்பி வேண்ட, பெருமான் "உமையை மணந்தபின் உன் கணவனை உதவுவோம்." என, இரதி இமாசலமுற்றிருந்தனள்.

சிவபெருமான் முனிவர்கட் கருளி, இமயமலையடைந்து எம்மனையாரது கடுந்தவத்தைக் கண்டுகளித்து வேதியவடிவுகொண்டு, "யாது கருதித் தவஞ்செய்கின்றாய்" என, உமையம்மை "சங்கரன் என்னை மணஞ்செய்யத் தவஞ்செய்கிறேன்" என, "பெண்ணே! என்னை மணஞ்செய்துகொள்" என, இறைவி கோபித்து "கொடியோனே! அகன்றுபோ" என்று கூற, விமலர் விடையேறிக் காட்சிதர, அம்பிகை அண்ணலைக்கண்டு அச்சத்துடன் கைகூப்பித் "தேவரீரை அறியாமற்கூறிய அபசாரத்தை மன்னிக்கவேண்டும்" என, ஐயர் "அவை மெய்ம்மைத் துதித்தனவாகக் கொண்டோம், தவமொழிக விரைவில் மணம்புரிதும்" என மறுமாற்றங்கூறி மறைந்தருளினர். பார்வதியார் நிகழ்ந்தது கூற, பர்வதராஜன் கேட்டுக் களிப்புற்றிருந்தான். சங்கரர் கயிலைசார்ந்து சத்தருஷிகளைவருவித்து "மலையரையன் மகளை மணம்பேசுக" என, மாதவர் இமோற்கிரியுற்று மணவினைக்கண்டு மகாதேவன் மணக்கருத்திசைப்ப, அவன் அங்கீகரிக்க, அதனை அரன்பாலுரைத்து அவரவரிடஞ் சேர்ந்தனர். இமோற்கிரிராஜன் விச்சுவகன்மனால் நகர்புனைவித்து விசேஷாலங்காரஞ் செய்து "பங்குனி யுத்திரத்தினம் உத்தமத்தினமாதலின், உமையை மணஞ்செய்க" என விண்ணப்பித்தனன். பெருமான் திருநந்திதேவரை விளித்து "தேவர்கள் முதலானோரைத் தருக" என, நந்திதேவர் சிந்தித்தவளவில், கோடிஉருத்திரர்கள்-நூற்றுவர் உருத்திரர்கள்-மேலண்டகடாகத்துள்ள காலாக்கினி யுருத்திரர்-கூர்மாண்டர்.

ஆடகேசரர்-திருமால்-பிரமன்-இந்திரன் முதலிய திக்குப்பாலகர்கள் நவக்கிரகங்கள் - நவசித்தர்கள் - அஷ்டவசுக்கள் - சத்தருஷிகள் - யக்ஷ கின்னர கருட காந்தருவர் முதலிய கணங்கள் - வேதாகமசாஸ்திரங்கள் - யுகாதி காலபேதங்கள் முதலிய யாவருங் குழுமிவந்து திருவாயிலடைந்து நந்தியெம்பெருமானைப் பணிந்தனர். பிரமன் பல ரத்னாபரணங்களை முன்வைத்து அணியும்படிவேண்ட, பெருமான் 'அணிந்தோம்' என்று அவற்றைப் பரிசித்து அராக்கலனே பொற்பணியாகத்தோற்றுவித்து இடபவாகனத்தி லாரோகணித்துத்தேவர்கள் மலர்மாரிபெய்யவும், ஸ்ரீ கணேசர் - ஸ்கந்தர் - வீரபத்திரர் வயிரவர் தத்தம்வாகனங்களில் வரவும், சத்தருஷிக ளாசீர்வதிக்கவும், பாணுகம்பன் ஆயிரம்வாய்களாற் சங்கத்தொனி செய்யவும், வாணாசுரன் சிவார்ச்சனைசெய்த ஆயிரங்கரங்களாற் குடமுழ வடிக்கவும், கணத்தலைவர்கள் பலவாத்தியங்களை முழக்கவும், திருநந்திதேவர்பொற்பிரம்போந்தி, தேவமுனிவர் கூட்டத்தை விலக்கிக்கொண்டு முன்செல்லவும், இந்திரன் களாஞ்சியேந்தவும், ஈசானன் அடைப்பை தாங்கவும், வாயு ஆலவட்டம் பணிமாறவும், அக்கினி தூபமேந்தவும், வருணன் பூரணகும்பமெடுக்கவும், நிருதிதர்ப்பணமேந்தவும், குபேரன் நவநிதிகள் சிந்தவும், யமன் கஞ்சுகத்தொழில் புரியவும், நாகராஜர்கள் மாணிக்கதீபமேந்தவும், வேதங்கள் திருவடியைச்சுமக்கவும், கங்கை காவிரிமுதலிய நதிக்கன்னியர் சாமரையிரட்டவும், குண்டோதரன் குடைபிடிக்கவும், பிரமவிஷ்ணுக்கள் இருபுறம் கைகுவித்துவரவும், ஸ்ரீசுந்தரேசப்பெருமான் திருவெண்ணீற்றுப் பெட்டகமுந் திருப்பள்ளித்தாமமு மெடுத்துக்காட்டவுமமைந்த சாலங்காரத்துடன் இமாசலமடைந்து, திருவீதியிற்கண்ட மாதர்கள் காதல்கொள்ளும்படி திருவுலாப்போந்து பர்வதராஜன் மனையையடைந்து திருமால் கைலாகுகொடுக்க, இடபவாகனத்தினின் றவரோகணித்தனர்.

பர்வதராஜன்பாரியாகிய மேனை அநேகமங்கல்யமாதர் புடைசூழ அவன்பால் சேர்ந்து ஐயனது திருவடித்தாமரையை விள

கவி நாணத்துடன் உட்சென்றனள். மன்றற் சடங்குகளை மலரோன் செய்தனன். சிவபெருமான் ஓர் இரத்னசிங்காதனத்தில் வீற்றிருந்தனர். அவரவர் தங்கட்குத் தக்க ஆதனத்திருந்தனர்.

[அப்பொழுது யாவரும் ஆண்டுக் கூடிநின்றதால், வடதிசை தாழ்ந்ததுகண்டு, அத்தன் அகத்தியமுனிவரை நோக்கி "நீர் ஒருவரே எமக்கொத்தவர், நீர் தென்றிசையிலிருப்பின் உலகஞ்சமனுயிருக்கும் உமக்குத் திருமணக்கோலங் காட்டுதும்" என, அகத்தியர் ஆணையைக்கடவாராய் இமாசலமகன்று வழியில் மாயைசெய்த கிரௌஞ்சனைச்சபித்து, வழிவிடாது நின்ற விந்தத்தையடக்கி வாதாவி வில்வலரை மாய்த்து, குற்றாலத்துள்ள திருமாலைப் பெருமான்வடிவாக்கிப் பொதியமலை சேர்ந்து சிவத்தியானத்திருந்து பின்னொருகாலத்தில் திருமணக்கோலத்தைத் திருவருளால் தரிசித்தனர். அகஸ்தியர் அகன்றபின் உலகு உயர்வு தாழ்வின்றியிருந்தது இதுநிற்க]

அம்மையார் பலவகையாகிய ஆடையாபரணங்களை யலங்கரிக்கப் பெற்றவராய் அநேகந் தோழியர் புடைசூழ, புராரியைவந்து பணிய, மாதேவன் "மாதே! பக்கலிலிரு" என, இருவரும் ஏகாசனத்திருந்தனர். மேனை யருகிருக்கப் பர்வதராஜன் பரமன் பாதத்தைப் பூசித்து, பார்ப்பதிகையைப் பரமேச்சுரன் திருக்கரத்திற் கொடுத்தனன். சிவபெருமான் திருமாங்கல்யந்தரித்து மணவினையை முடித்தனர் இரதி தன்கணவனைப் பெற அத்தனியிற் கண்ணுதலைப் பணிய, அண்ணல் தம்மெண்ணத்தில் காமனைக் கருத அவன்முன் தோன்றினன். முன்னோன் "உன்மனைவிக்குமட்டும் உருக்கொண்டு, அகிலத்திற்கெல்லாம் அநுபியாயிருத்தி" யென்றருளிச்செய்து அங்கிருந்து தேவியாருடன் திருக்கயிலாயகிரியை யடைந்து தேவர்களை விடைகொடுத்தனுப்பி வீற்றிருந்தனர். பார்ப்பதியாரை மணஞ்செய்ய வெழுந்தருளியதிருக்கோலமே கல்யாணசுந்தர மென்பப்படும்.

கல்யாணசுந்தராயநம:



22. அர்த்தநாரீச்சுவர மூர்த்தி.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

---

# இருபத்திரண்டாவது

# அர்த்தநாரீசுரமூர்த்தி.

திருக்கயிலாய கிரியிற் பக்தானுக்கிரஹ காரணமாகச் சிவபிரான் திருவோலக்கமுற்றிருந்தனர். திருமால்-பிரமன் - இந்திராதி திக்குப்பாலகர்- அஷ்டவசுக்கள் - சத்தருஷிகள்-நவசித்தர்கள் - கிந்நர கிம்புருஷ யக்ஷ வித்தியாதராதி அஷ்டாதசகணங்கள் - துவாதசாதித்தர் முதலிய கிரகங்கள் - இன்னுமுள்ள இமையவர் யாவரும் தரிசிக்கும்படி திருக்கயிலாயகிரியை யடைந்து, ஆங்கு முதற்பெருங் காவலாகவுள்ள திருநந்திதேவரைப்பணிந்து, அவர் திருவருள்பெற்றவராய் முறைமுறையே அவர்விடுப்ப மகாசந்நிதானத்தினுட் சென்று, இருகண்களார எம்பெருமானையும் இறைவியாரையுந் தரிசித்து அஷ்டாங்க பஞ்சாங்கமாகப் பணிந்து இருவரையும் பிரதக்ஷணஞ் செய்து தமது குறைகளைச்சொல்லி யாசித்து, அவ் விருவராலும் அநுக்கிரகித்த வரங்களைப் பெற்று வருகையில், ருஷிசிரேஷ்டர்களி லொருவராகிய ப்ருங்கிருஷி யானவர் பார்வதிதேவியாரைப் பணியாமற் சிவபெருமானை மாத்திரம் பணிந்து பலவகையாகப் பாடிப்புகழ்ந்து நிற்பது கண்ட இமையவல்லி, இம்முனிவன் யாவன்? எம்மைச் சிறிதும் மதித்திலன் என்று முனிந்து, சத்தியாகிய தனது கூறாகவுள்ள உதிரமாமசங்களை அவருடலிற் சிறிதுமின்றி ஆகிரோணித்துக்கொண்டனர். சிவகூறாக வுள்ள என்பையும் நரம்பையுமே உட்கொண்ட தோற்பதுமைபோலத் தள்ளாடி நின்று தம்மைப்பிரார்த்தித்தது கண்ட தாணு மனந்தரியாராகி ஓர்காலை யுதவ, ப்ருங்கிமுனி களித்து மூன்று காலுடன் முன்னின்று கூத்தாடிப் பலவகையாகப் பாடிச் சென்றனர்.

கௌரியம்மையார், மனவருத்தமுற்றுக் கங்கையெழுந்த கணவராகிய கண்ணுதலை நமஸ்கரித்து "எம்பெருமானே! எளியேன் தவஞ்செய்ய எண்ணினேன். ஏழையேற்கு இன்னருள்புரியவேண்டும்" என்று விண்ணப்பித்து விடைபெற்றுத் திருக்கயிலையை நீங்கி ஐங்கரக்கடவுள் ஆறுமுகக்கடவுள் சத்தமாதாமுதலானோர் தம்மைப்புடைசூழ்ந்து நிற்க, ஓர் மலைச்சாரலில், எழுந்தருளின் மேல்நின்று எண்ணற்கு மருந்தவத்தை எண்ணில்லாக்கால மியற்றினர்.

சிவபெருமான் உமாதேவியார் தவத்திற்கிரங்கித் திருவருள்புரியத் திருவுளங்கொண்டு இடபவாகனரூடராய், சமஸ்த தேவர்களுந் தம்மைப் புடைசூழ்ந்துவரவும், சர்வவாத்தியங்களு மொலிக்கவும், வேதங்கள் கோஷிக்கவும், மலைச்சாரலை யடைந்து எம்தன்னையாகிய ஈச்சுவரியார் தவஞ்செய்தலைக்கண்டு சந்தோஷித்துக் காட்சிதர, தேவியார் திருக்கண்களால் தரிசித்து விழியினின்று ஆனந்தபாஷ்பஞ் சிந்த அடியற்றமரம்போலச் சாஷ்டாங்கமாகத் தரைமேல் விழுந்து பணிந்தனர். மாதேவர் மனக்களிப்புமிக்கவராய் "மாதே! யாதுவரம் வேண்டும்" என வினவ, மலைமகள் மணவாளனை வணங்கி "வள்ளலே! தேவரீர்வேறும் அடியேன் வேறுமாக விருப்பதுவிரும்பப்பறேன். வாமபாகத்தில் அடியாள் கலந்திருக்கவேண்டும்" என, சிவபெருமான் அவ்வாறே தமது திருமேனியில் வாமபாகத்தை அம்மையாருக்கருள்செய்து இடபாரூடராகித் தேவியாருடன் திருக்கயிலாயகிரியையடைந்தனர். அர்த்தம்=பாதி, நாரி=ஈச்சுவரியைப் பொருந்திய, ஈச்சுரர்=பெருமான் எனவே பாதிசரீரம் வாமபாகத்திற் பார்ப்பதியாரும், பாதிசரீரம் வலப்பாகத்திற் சிவபெருமானுமாக வீற்றிருக்குந் திருக்கோலம் அர்த்தநாரீச்சுர மெனப்படும்.

அர்த்தநாரீஸ்வரஸ்தவம்:

மகாமகோபாத்யாய, டாக்டர்
உ. வே. சாமிநாதையர் நூல் நிலையம்
அடையாறு சென்னை-20



23. கஜயுத்த மூர்த்தி.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# இருபத்துமூன்றாவது

# கஜயுத்தமூர்த்தி.

காளமேகம்போன்ற கரிய சரீரத்தையுடைய கயாசுரனென்னும் யானைவடிவேற்ற அசுரன், மேருபர்வதத்தின்மேல், பிரமதேவனை நோக்கி அருமையாகிய பெருந்தவம் அநேககாலஞ்செய்தனன். கயாசுரன் செய்த கடுந்தவத்திறங்களின்கூடாந்த கமலயோனி அவன் கண்கட்குப் பிரத்தியட்சமாகி "அசுரேச! நீ வேண்டியவரம் யாது? அறைக" என, அசுரன் அருந்தவனீங்கி அடிமலர் பரவி "ஐயனே! இறப்பில்லாத தீர்க்காயுவும் வல்லமையும் வெற்றியும் அடையும்படி அடியேனுக்கு அநுக்கிரகிக்கவேண்டும்" என வேண்ட, பிரமன் சிறுநகை செய்து "விரும்பியவாறே வரமீந்தேனாயினும், அந்திவண்ணனை யெதிர்ப்பாயாகில் அப்பொழுதே நீ பெற்ற பேறழியும்" என்றருளி அந்தர்த்தானமாயினன்.

கயாசுரன் களிகொண்டு, சதுர்முகன் தனக்குத்தந்தவரத்தைச் சிந்தனைசெய்து, சிவன்பேரிற் செருச்செய்யச்செல்லாமல் மற்றைய வானவரை வஞ்சித்து வம்பிழுத்து வலிய போர்புரிந்து, உலகத்துள்ளாரை ஒழிப்போமென் றுறுதிகொண்டு உடனே துண்ணெனச் சென்று உம்பருலகுற்று, மகபதியை யெதிர்த்து யுத்தஞ்செய்து வருத்தினன். புலோமசை கணவன் போர்புரிய வாற்றாதுப் புறமுதுகிட்டோட, அவன் வாகனமாகிய ஐராவதத்தின் வாலைப்பற்றிப் பன்முறை சுழற்றி யெறிந்து, காமதேனு கற்பகவிருட்சம் சங்கநிதி பதுமநிதி முதலிய வளங்களையுடைய அமராவதி நகரை அழித்து, அக்கினி யமன் நிருதி முதலிய அட்டதிக்குப்பாலகரைச் செயித்து,

தனது குலத்தவர்களாயுள்ள தானவர்களையுஞ் சாடி, இராக்கதரை ஹிம்சித்து, மண்ணுலகெங்கும் வதிந்த மானவக்கூட்டங்களை மாய்த்து விஷம்போல விளங்கினன்.

அதுகண்ட அருந்தவர் சிலர் அம்பிகாபதியமர்ந்த அவிமுத்தமாகிய காசியை யடைந்தனர். கயாசுரன் கடுஞ்சினங் கொண்டு தொடர்ந்து பின்வர, சங்கரா சம்போ வென்னுஞ் சிவத்தியானத்துடன், மகாதேவனே யரணென்று மணிகன்னிகை யாகிய அருகிருக்கும் ஆலயத்து ளடைந்து அரன்முன்னின்று, "அருட்பெருங் கடலே! ஆபத்திற் புணையே! ஆநந்த வெள்ளமே! அடியேங்க ளடைக்கலம். யானை யுருவாக எய்தும் இராக்கத விறைவனால் இறவாவண்ணம் எங்களைக் காத்து இன்றருள் புரியவேண்டும்" என றிரந்தனர். தான் றுரத்திக்கொண்டுவந்த மானுடர் மணிகன்னிகைச் சந்நிதியில் வருந்தி வாய்விண்டு வழுத்துவது கேட்டு, கயாசுரன் ஆலயத்திருவாயிலை யடைந்து அவர்க ளஞ்சும்படி இடிபோற் காசித்துப் பயமுறுத்த, மாந்தர்கள் மணிகண்டனாரைத் தழுவிக்கொண்டனர். அரவாபரணர் "அஞ்சாதீர்கள்" என றபயங் கூறி, அண்டகடாக முட்டமே முடியுடன் ஆயிரங்கோடி யருக்கோதய மாயினாற்போல, அமரரு முனிவரு மஞ்சிக் கண்பொத்த உக்கிரப்பெருவடி வுற்றுக் கயாசுரன் முன்வர, கயன் தன்பால்வந்தவர் தாணுவென் றுணர்ந்தும் தனக்குள்ள விறுமாப்பாற் சதுமுகன் வரந்தருங்கையிற் சாற்றிய வசனத்தை மறந்து எதிருற்றுத் தலைப்பட்டனன்.

சங்கரன் வடவாமுகாக்கினியும் அஞ்சத்தக்க தீப்பொறியை விழி வழி சிதறி, திருவடியா லுதைத்துத் தள்ள, கயாசுரன் கவிழ்ந்து பதைத்துப் பார்மேல் விழ, திருவடி மற்றொன்றாற் சிரத்தை மிதித்துத் தொடையி லூன்றித் திருக்கைகளாற் பிளந்து நான்கு காலகளும் இருபக்கங்களிற்பொருந்தவும், உதிரஞ்சிந்தவும், ஓலமிட்டழவும், அசுராகுலத்துதித்த யானைவடிவாகிய கயாசுரன் தோலை உமையம்மையு மஞ்சும்படி உரித்திழுக்க, ஈசகரனது இணையிலாத

சோதியுருவைத் தரிசித்த சுரர் முதலானோர் கண்ணொளி மழுங்கித் துன்புற்றனர். கண்ணுதல் கருணைசெய்யும்படி களிற்றுரியை உடலின்மேல் உத்தரியமாகப் போர்த்தனர். அமரர் களித்து ஆர்த்துக் கூத்தாடி மலர்மாரி வருஷித்தனர். சிவபெருமான் மணிகர்ணிகை யடைந்தனர். கயாசுரனுக் கஞ்சிய பரிசனர் களித்துப் புறம்போந்தனர். காசிவாணர் முதலான காசினியோர் கடவுட் பூசை காலம் வழா தியற்றிக் களித்து வாழ்ந்தனர். கயாசுரனாகிய யானையைத் தேவ மானவர் துயர்தீர்த்தற்பொருட்டுப் போர்புரிந்து சங்கரித்தமையால், கருணாநிதிக்குக் கஜயுத்தமூர்த்தி யென்பதோர் பெயர் வழங்குகின்றது.

**கந்தபுராணம்-ததீசியுத்தரப்படலம்**

"மதித்துவேழமாந்தானவன்வருதலுமடலை
யதித்தவன்னியுமச்சுறவெரிவிழித்தொருதன்
கதித்ததாள்கொடுதள்ளவேகயாசுரன்கவிழ்ந்து
பதைத்துவீழ்தலுமிதித்தனன்சிரத்தையோர்பதத்தால்.

ஒருபதத்தினைக்கவானுறத்திருக்கரத்துகிரால்
வெரிநிடைபிளந்திருதாள்புடைமேவக்
குருதிக்கண்ணியேயோவிடவுணர்தங்குலத்துக்
கரியுரித்தனன்கண்டனருமையுங்கலங்க.

ஐயன்மிக்கதன்கதிர்விரிக்குந்திரோருத்த
மையல்யானைவன்றோலைமேற்கொண்டனன்மறைந்தான்
செய்யகோளொடுகரியகோளிருவருஞ்செறிந்து
வெய்யபானுவினைவேறக்கவர்ந்துமேவியபோல்."

கஜயுத்தமூர்த்தயோகம்:

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# இருபத்துநான்காவது
# ஜ்வராபக்நமூர்த்தி.

சிவப்பிரசாதம்பெற்ற மாவலிச் சக்கிரவர்த்தியின் மகனுகி
ஆயிரங் கைகளை யுடைய வாணுசுரன், சுப்பிரதீபிகை யென்பவ
மணந்து நருமதைநதிக்கரையிற் சிவலிங்கக்குறிகள் நாளொன்றி
காயிரமாக அருச்சனை செய்துவருகையில், ஒருநாள் சிவபெருமா
பிரத்தியக்ஷமாகி "என்னவரம்வேண்டும்" என்று வினவ, வாண
மகிழ்ந்து, "அடிகளே! அக்கினிமதிலும், அவனிமுழுவதும் அர
புரியும் ஆற்றலும், அழியாமையும், தேவரீரது அடித்தாமரையி
அன்பும் அவாவினேன்" என, அரவாபரணர்-அவ்வாறே அநுக்கி
ஹித்து அந்தர்த்தானமாயினர். வாணுசுரன் வையகமுழுதுங் கையக
படுத்தி, சோணிதபுரியில் அரசுசெய்து வாழ்ந்துவருகையில், ஒ
நாள் கருணாநிதியைத் தரிசிக்கக் கயிலாய மடைந்தனன். அதுச
யம் அருள்வள்ளல் நடிக்குந் தறுவாயிருத்தலின், தனது ஆ
ரங் கைகளாலுங் குடமுழவு வாசிக்க, மாதுபங்கன் களித்து "யா
வரம் வேண்டும் ஓதுக" என, அசுரன் 'அண்ணலே! அடியே
திருக்கயிலாயகிரியில் நீத்து திருநந்திதேவர் பிரம்படிபட்டுச் ச
யாமல், கஜமுக ஷண்முக பார்வதி சமேதராய்த் தேவரீர் அநந்தர
அடியேன் மாளிகையிற் காட்சி கொடுத்து வீற்றிருக்கவேண்டும்
எனக் கழற, பெருமான் "அவ்வாறேயாகுக" வென்று சோணிதபு
முற்று வாணன் மாளிகையில் வாழ்ந்திருந்தனர்.

இவர் இருக்கும்பொழுது வாணனை, இந்திரன்முதலிய வெ
டிசைக் கிறைவர்-திசைமுகன்-திருமால் முதலிய தேவர் குழுவுட



௨௪. ஜ்வராபக்ந மூர்த்தி.

எதிர்த்துப் போர்செய்ய, ஒருவரும் மாற்றாமல் ஓடிப்போனமையால் மமதை மிக்கவனாய மகாதேவனை நண்ணி "அண்ணலே! அடியேனுடன் அமர்செய்வோர் அகிலத்தில் இல்லாமையால், தோள்கள் தினவுற்றன. சிறிது செருச்செய்யத் திருவுள்ளங் கொள்ளவேண்டும்' என, சிவபிரான் புன்சிரிப்புக் கொண்டு, சிறிதும் அஞ்சாமல் இவ்வாறு கூறியதை யெண்ணி "கண்ணன் துவாரகையி லிருந்து வந்து உன் தோள்தினவு தீர்த்து அவற்றை விலாவிற் சங்கரிப்பான்" என, வாணன் "இருபத்தாம் எதிர்த்தோடிய இக் கிருஷ்ணனா என்னைச் செயிக்கவல்லவன்" என, உலகநாதன் "உனக்குத் தோற்றபின் உபமன்னியனிடம் தீக்ஷைபெற்று இடைவிடாது எம்மை யருச்சித்து உன்னைவிட மேலாகிய உஸாத்தற்கரிய வலிபெற்றுள்ளான்" என, "அச் சமர் எப்பொழுது வரும்" என, "உன் மகள்மேல் பழி வரும், உன் மயூரத்துவஜம் துணியும், அதுவே போரெய்துங் காலம்" என் றறைய, வாணன் மாளிகை சேர்ந்து வசித்திருந்தான்.

ஒருநாள் வாணன் மகள் உஷை யென்பவள் துயிலுகையில், கண்ணன்மகன் மகனாகிய அநிருத்தன் கலந்ததாகக் கனவுகண்டு கண்விழித்துக் காணாமல் மோகாக்ர சித்த முடையவளாய், சித்திரலேகை யென்னுந் தோழி எழுதிக் காட்டிய சித்திரப்படங்களால் அம் மன்னவனைக் குறிப்பித்து அத் தோழியால் துவாரகையிற் சயனித்திருந்த அநிருத்தனை மஞ்சத்துடன் வருவித்து நெஞ்சங்களித்து இன்பம் நுகர்ந்திருந்தாள். உஷை சிறிதுநாளிற் கருப்பங்கொண்டனள். தோழியாலஃதுணர்ந்த வாணன் அநிருத்தனைச் சிறையிட்டான். அதற்காக உஷை மனம் வருந்தினள். வாணன் மாளிகையிலுள்ள மயூரக்கொடி அன்று ஒடிந்தது. அவற்றை யெல்லாம் அறிந்த நாரதமுனிவர் துவாரகை சென்று கண்ணனுடன் கூறினார். மனவருத்தமுற்ற கண்ணன் எண்ணில்லாத சேனையை இமைப்பொழுதிற் கூட்டிக்கொண்டு போர்க்கோலமாய்ச் சோணிதபுரத்தை யடைந்தனன்.

முதல் வாயிலில் மூத்தபிள்ளையார் வீற்றிருக்கக்கண்டு கனிவர்க்கம் - பாலுணவு - பலகாரவகைகள் இவற்றை நிவேதித்து ஐங்கரக்குரிசிலை அகமகிழச்செய்து, இரண்டாம்வாயிலில் இளையபிள்ளையார் எழுந்தருளியிருக்கக்கண்டு பலவகையாகப் பூசித்து விடைபெற்று, மூன்றாவதில் வசித்திருக்கும் உமாதேவியாரைக் கண்டு பணிந்து உட்செல்லுகையில், சிவபெருமான் முன்னொருகாலத்தில் மைநாககிரியில் தவஞ்செய்துகொண்டிருந்த திருமாலுக்கு "யானே எதிர்த்தாலும் நீ ஜெயிக்கக்கடவாய்" என்று கொடுத்த வரத்தைப் பார்க்கும்படி தனது பிநாகமாகிய வில்லேந்தி நிற்கக்கண்டு சிவநாமங்களைப்பாடி "எளியேனைக் காத்தருளவேண்டும்" என்று வணங்க, நிமலர் "நீ யெம்மை வென்றன்றோ வாணனை யெதிர்க்கலாம்" என விநோதமாகக் கூறினர்.

சர்வாண்டங்களையும் க்ஷணத்திற் சாம்பலாக்கும் சங்கரா! புன்னகையாற் புரம்பொடித்த புண்ணியா! துரும்பொன்றால் தேவர் செருக்கைத் தொலைத்தோய்! கருப்புவில்லைக் கணமொன்றிற் காய்ந்த கண்ணுதலே! மறலியின் மமதை மாய்த்த மலரடியாய்! உந்திவந்தோன் சிரங்கொய்த உகிருடையாய்! மச்சம்-கூர்மம் வராகம்-நாரசிங்கம்-வாமனவடிவங்களாக வந்த எனது வலிமாய்த்து, கண் - ஓடு-கொம்பு-தோல் - என்பு இவற்றைக் கொண்ட இறைவா! தக்கனைத் தடிந்தோய்! சரணம் சரணம். உற்றுப் பார்த்தால் ஒழியும் எனக்கு ஓராயுதமும் ஏந்தவேண்டுமோ? அம்பும்-வாகனமும்-அடிமையும்-மனைவியுமாக வுள்ள என்னையும் எதிர்க்கலாகுமோ? என்று பலவகையாகத் தோத்திரஞ்செய்து பணிந்த பன்னகசயனனைப் பரமன் பார்த்து "விண்டுவே! எம்மைக் கண்டு எட்டுணையு மஞ்சவேண்டாம். உனது வருகையை வாணனுக்கு முன்னரே உரைத்துள்ளோம். அவனைச் செயித்து வெற்றிமாலை தரிக்கக்கடவாய். நீ யெம்மோ டெதிர்த்தால் முருகன் விளையாட்டைப்போல நினைப்பேம். தேவர்கள் வேடிக்கை பார்க்கும்படி யாமிருவருஞ் சிறிதுநேரம்

செருச்செய்வோம். பகைமையாக யுத்தஞ்செய்யேம்; பயப்படவேண்டாம்" என்று பலவகையாகத் தேற்றி, கண்ணுதல் கையிலேந்திய பிநாகம் என்னும் வில்லை வளைத்து நாணேற்ற, நாரணன் "நாதனே! நாயேனுக்காக" வென்று தனது சாரங்கம் என்னும் வில்லை நாணேற்றினன்.

பவளமலையுடன் நீலமலை யெதிர்த்தாற்போல நின்று, இருவருஞ் செய்த நாணொலி திரிலோகத்திலிருந்த தேவர் - மானவர் - நாகர்களைச் செவிடுபடுத்தியது. உலக நடுங்கியது. தாமோதரன் சங்கரனை மீண்டும் வணங்கி, சம்பு என்று தியானித்து அருச்சனையாக ஓர் கணையை விடுத்தனன். இருவருஞ் சமர்தொடங்கிச் சொரிந்த அஸ்திரவருஷங்களை அளவிட்டுச் சொல்ல ஆயிர நாவையுடைய ஆதிசேடனுக்கும் ஆகாதென்றால், யானோ அதை அளவுபடுத்திச் சொல்லவல்லவன். யுகாந்தகாலத்திற் சப்தமேகங்களும் ஒன்றுகூடி வருஷித்ததன்மையாயிருந்தது. இதுகண்ட இமையவர் எம்பெருமானது திருவுள்ளக்குறிப்பு இஃதென்றுணராமல், இறைவரோ எதிர்த்தனர். இனி யென்ன விபரீதங்க ளெய்துமோவென்றெண்ணித் திகைத்திருந்தனர். இத்தகைய கடும்போர் எண்ணில்காலஞ் செய்கையில், கண்ணன் கண்ணுதலைப் பணிந்து "அண்ணலே! அமர் புரிய இனி ஆற்றலிலேன்" என்றடிபணிய, அடியார்க் கனுகூலராகிய அம்பிகாபதி அச்சமரில் அச்சுதனுக்குச் செயமளித்து * அப்பாற்பட்டனர்.

திருமால் சிவபெருமானது கருணையை வியந்து நிற்கையில், வாணன் கடுங்கோபங்கொண்டு ஆரவாரித்து ஆயுதங்களைத் தாங்கிய அநேகமாகிய அவுணர் சேனையுடன் அமர்க்கோலங்கொண் டெதிர்க்க, இருதிறத்தவருக்கும் பெரும்போர் நிகழ்ந்தது. இச்சமரில் கிருஷ்ணமூர்த்திக்குச் சிவாநுக்கிரக மேலீட்டால் வலிமிகுந்திருத்தலின் வாணன் புயங்களை ஒவ்வொன்றாகக் கண்டிக்கையில், நம்பர் "நம்மை யர்ச்சித்த இருகரங்க ளிருக்க" என, யாதவசிரேஷ்டன் மாதுபாக

ளூல வாய்மலர்ந்தருளியவண்ணம் ஏனைய கரங்களை யிமைப்பிற் சங்கரித்தனன். பிறகு சிவபெருமான் "வாண! உன் தோளிலிருந்த தினவு நீங்கியதா?" என்று வினவ, வாணன் "அடியேன் அறியாமையா லுரைத்ததைப் பொறுத்தருளவேண்டும்" என வேண்டினன். சிவாக்கினைப்படி வாணன் தன்மகள் உஷையை அநிருத்தனுக்கு மணம் புணர்த்திக் கண்ணனோடு துவாரகாபுரிக் கனுப்பிவிட்டு, சிவப்பிரசாதத்தாற் பழையபடி ஆயிரம் அத்தங்களும் அமையப்பெற்றுத் திருக்கயிலாயகிரியிற் குடமுழா வெடுக்கும் பாக்கியம்பெற்றனன்.

சிவபிரானும் திருமாலும் வாணன் மாளிகையில் விநோதயுத்தஞ் செய்கையில் "படர் குறிப்பொடு வெம்பிணி படைத்தெதிர் விடுப்பார்" என்றபடி சிவபிரான்பேரிற் கண்ணன்பிரயோகித்த சீதளசுரத்தைத் தணிக்கும்படி "மூன்று சிரங்கர நாலு கொடுங்கனல் முதிர்விழி யொன்பதுடன் - மூன்றி யமெட்டை பூத பசாசுகள் சுற்றி யுறக்கடுவே - கான்று கொளும்புகை யோடனல் வீசிய காலுற வேயுலக - மீன்றவன் முன்னுலகெங்கு நடுங்க வெழுந்தது பாசுபதம்" என்றபடியே சிவபெருமான் ஏவிய உஷ்ணசுரமானது மூன்று சிரம் - நாலு கரம் - ஒன்பது விழி - மூன்று கால்களுடன் சென்று கண்ணன் விடுத்த சீதளசுரத்தைக் கணத்தில் மாய்த்தது. தீராச் சுரமுற்றோர் அத்திருவுருவத்தைப் பணியின், சூரியன்முன் பனிபோல விலகிச் சுகமுறுவர். விஷ்ணுவிடுத்த சுரத்தின் வீறுபோக்கினமையால் சிவபிரான் ஜ்வராபகரமூர்த்தியெனப் பெயருற்றனர்.

---

* அண்ணல் கண்ணனுடன் அமராகருணையில் அஞ்சினா போல அகன்றது அதிசயமன்று. "விஷவ்ருக்ஷோபி ஸம்வ்ருத்யஸ்வயம் சேத்துமஸாம்ப்ரதம்" என்றபடியே நச்சுமரமா யிருப்பினும் தன் கையால் வளர்த்தது தானே சங்கரித்தல் தகாதெனக் கருதி, "தோள்தினவு தீரவேண்டும்" என்ற வாணனுக்கும், மைநாகமலை யிற நவஞ்செய்த விண்வேகரும், திருவாய்மலர்ந்தருளியவற்றை

நிறைவேற்ற லீலாமாத்திரையாய் அடியார்பக்திக்கமைந்தும் அருள் வள்ளலாதலின், அச்சுதனை ஜெயமுற நடித்துக்காட்டியதன்றி உள்ளபடியே ஓடியதன்று.

அவ்வாறு நடிக்காவிடில் விண்டு தன்னைநோக்கித் தவஞ்செய்தபொழுது மகுடாபிஷேகஞ்செய்வித்துத் தானே யெதிர்ப்பினுஞ் செயிக்கும்படி கொடுத்தவரம் அவலமாகும். அன்றியும் சிவப்பிரசாதமாகிய தனது வல்லமையைத் தற்செயலாகக்கருதி இறுமாந்தவாணன் கண்ணனை யெதிர்க்க நேராது. அதனால் அவன்தோள்கள் சயிக்கப்படா. இதன்றிக,

அவதார கோலமல்லாத ஆதிவிஷ்ணுவே தன்னொடுசண்டைசெய்தற்கஞ்சி, பிருகுமுனிவன் மனைவிபால் அடைக்கலம் புக்க அவுணனைக்கொல்ல ஸ்திரீஹத்தி தேடிக்கொண்டு முனிவர் முனிந்து சபிக்கப் பத்துப் பிறவிகள் அடைந்ததையும், சிவகணத்தலைவருள் ஒருவனாகிய ஶங்குகர்ணனுக்குந் திருமாலுக்கும் நிகழ்ந்த யுத்தத்தில் "ஶங்குகர்ண கணேசோபி நஸதேகேஶஸம்ப." என்னும் ஸ்காந்தபுராணத்தின்படி, அவன்றன் சிகையையறுத்துவிடப்பட்டதையும், ததீசிமுனிவருடன் சண்டைசெய்கையிற் சக்கரத்தின் கூர்வாய்மழுங்கி அவருடலினின்று தோன்றிய அளவில்லா விஷ்ணுமூர்த்திகளைக் கண்டு மூர்ச்சித்தனனெனக்கூறும் பாத்ம ஸ்காந்த புராணங்களையும், அவர் மைந்தர்களிற் பிரமனைச் சிரங்கொய்கையிலும், மதனனைச் சாம்பராக்குகையிலும் என்னசெய்தனனென்பதையும், தக்ஷயாகத்திற் சங்கடப்பட்டதையும், இந்திரன் செல்லுருக்கொண்டு அவரோதிய வில்லின் நாணைக்கறிக்க விழுந்ததையும், எண்ணிப் பார்ப்போமாக. இத்தியாதி நியாயத்தால், பலவாறவமதிப்புண்ட திருமாலின் கரிய ரோமமாகிய கண்ணனுக்கஞ்சிச் சிவபிரான் ஓடினார் என்பதைப் பூர்வபக்ஷஞ் செய்து, [illegible] நடித்துக் காட்டினரென்று சித்தாந்தமாக்குக.

### பாகவதம் - தஶமஸ்கந்தம.

தோஸ்ஸஹஸ்ரமத்வயாத்தம வரமபாராயமேபவத,தாலோக்யமபரதியோத்தாரம நலேபேதவதருதேஸமம, கணடேயகிவருதாதோா பிராயுயுதஸஹாதிககஜாநஹம, அய்யயாருாணயாநாதர்ந பிதாஸதேவிபாதுதரூவு., தசசருதவாபகவாக்கருதத: கேதுஸதேபஜ்யதேயதா, தவததாபகோபவேநவூட ஸமயுசேமதஸமோநதே,இதயுக்த:குமதிாஹருஷட. ஸவகருஹமபராவிஶநருப—சிசசேதபகவாநபாஹருநஶாகாஇவவநஸபதே .

### விஷ்ணு புராணம்.

பாணோபிபாதிபதயாத மைதரோயாஹதரிலோசனம, தேவபாஹஸஹஸரோண கிாவிணோஸமயாஹவமவிநா, கஶசிகமமைஷோபாஹுநாம ஸாபலயஜநகாரண , பவிஷயதிவிநயுதம பாராயமமமபுஜை —, ஶஙகர.—மயூரதவ ஜபஙகஸதே யதாபாணபவிஷயதி, பிஶிதாஶிஜநாநதம பராபஸயஸேதவமததாரணம.

### உமாஸம்ஹிதை

ஸ்ரீதேவி—தவததோவிஸிஷடபாவஸது விஷணோஸமபரதிபதயதே,ததமேததயாஸிநதோ கருபயாவதஸஹவரத,ஶநுணுதேவிப்ரவக்ஷ்யாமி விஷணோராதிகயதாமபாதி, புராகதாசிததேவேஶிபரமாநக்தகாநகே, கரீடாஸகதேமயிபுரா விஶவமேததநாயகம, உபதருஷடம்ஸதாதுஷ்டைாவேஷுவாதபஹிஷகருதை, ஸவாஹாஸவதாவஷட்காராஹிதேகர்மவாஜிதே, ப்ரஹமணாஜநாதவருததாரத: காயஶோஷமசிந்தயத், சக்ரபாணிஸமாஹூய ரதகஸிமஹாஸேஶபே அபிஷேச்யவராததவா ப்ராணமமகரவமபிரியே,ஸருஷ்டிஸ்திதிவிநாஶாகாம் கர்தருதவமகுதோபயம, ஸாவஜ்ஞதாதிஸித்திஞ்ச தத்தவாஸ்மிவிஷ்ணவே, மததோதிகோபவாகராஜா பவவிஷணோமஹாப்ரபோ, இதிதத்தக:பூர்வம் வாரணஸ்யாம்ஹரிபுரா, இதிஜ்ஞாத்வாகவிப்ராஹ மேசிரோப்யதிகம்ஹரிம,

## భాగవతం.

శ్లో॥ దోస్సహస్రం త్వయాదత్తం పరంభారాయమేభవత్। త్రైలోక్యం ప్రతియోద్ధారం నలేభే త్వదృతే సమం। కండూత్యానిర్వృతైర్దోర్భిర్యుయుత్సుర్దిగ్గజానహం అభ్యయాంచూర్ణయన్నద్రీన్ భీతాస్తేపి ప్రదుద్రువుః తచ్ఛ్రుత్వా భగవాన్ క్రుద్ధః కేతుస్తే భజ్యతే యదా। త్వద్దర్పఘ్నం భవేన్మూఢసంయుగే మత్సమేన తే। ఇత్యుక్తః కుమతిర్హృష్టః స్వగృహం ప్రావిశన్నృప। తెపన తదాధ్యాయం॥ చిచ్ఛేదభగవాన్ బాహూన్ శాఖా ఇవ వనస్పతేః॥

## విష్ణుపురాణం.

శ్లో॥ బాణోపి ప్రణిపత్యాగ్రే మైత్రేయాహ త్రిలోచనం। దేవబాహు సహస్రేణ నిర్విణ్ణోస్మ్యాహవం వినా। కచ్చిన్మమైషాం బాహూనాం సాఫల్యజనకో రణః। భవిష్యతి వినాయుద్ధం భారాయ మమ కింభుజైః। శంకర.। మయూరధ్వజభంగస్తే యదా బాణ భవిష్యతి। పిశితాశిజనానందం ప్రాప్స్యసేత్వంత-ధారణం।

## ఉమాసంహిత.

శ్రీదేవీ। త్వత్తో విశిష్టభావస్తు విష్ణోః సంప్రతిపద్యతే। కథమేతద్దయాసింధో కృపయా వద సువ్రత। శ్రీనంది విప్రవక్ష్యామి విష్ణోరాధిక్యతాం ప్రతి। పురా కదాచిద్దేవేశి పరమానందకాననే। క్రీడాసక్తే మయి పురా విశ్వమేతదనాయకం। ఉపద్రుష్టం సదా దుష్టైర్వేదవాద బహిష్కృతైః। స్వాహాస్వధావషట్కారరహితే కర్మవర్జితే। బ్రహ్మా నాజ్ఞాతవృత్తాంతః కార్యశేషమచింతయత్। చక్రపాణిం సమాహూయ రత్నసింహాసనే శుభే। అభిషిచ్య వరం దత్వా ప్రణామం కరవం ప్రియే। సృష్టిస్థితివినాశానాం కర్తృత్వాద్యుతులోభయం। సర్వజ్ఞతాదిసిద్ధించ దత్తవానస్మి విష్ణవే। మత్తోధికో భవాన్రాజా భవ విష్ణో మహాప్రభో। ఇతిదత్తవరః పూర్వం వారణస్యాం హరిః పురా। ఇతిజ్ఞాత్వా శివప్రాహ మేని శెప్యధికం హరిం॥

ஜீவராசிக்ஷோத்தரயோகம:

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

# இருபத்தைந்தாவது.

# சார்த்தூலஹர மூர்த்தி.

சமஸ்தலோக காரணபூதராகிய பரமேசுரன் கட்டளைப்படி திருமால்மோகினியுரு வேற்றுத் தாருகவனமுனிவர் தவத்தையழித்ததும், பெருமானே பிக்ஷாடநத்திருவுருக்கொண்டு முனிவர் பத்தினிகள் கற்பையொழித்துத் தம் நகரிற் புறம்போந்தபோது, பெருமான் பக்கலிற் சேர்ந்த திருமால் பெண்ணுருநீங்கினர். அப்பொழுது அயன்முதலிய அமரர் ஆண்டடைந்து வணங்கினர். அவற்றையெல்லாம் உணர்ந்தாக ள்ள தாருவனமுனிவர் ஓர் வேள்விசெய்து அரனை யழிப்போமென்று அபிசாரஹோமம் இயற்ற, அவ்வக்கினியினின்றுந் தறுகுமரியவுருவும் இடிமுழக்கனைய வெடிப்பொலியும், பெரியவாயும், வளைவாகிய பற்களும், கூர்மைவாய்ந்த நகமும், தீப்பொறி சிந்துஞ் சிவந்தவிழியும் அஞ்சாமையுமுடைய புலியொன்று அதிகரித்த கோபத்துடன் தோன்றியது. முனிவர் அவ்வியத்தைநோக்கி முக்கட்பிரானை முடிக்கவென விடுக்க, அது விடையூர்தியைத் தேடி விரைந்துவருகையில், உலகினர் அச்சுறவோடிவரும் அப்புலியை உம்பர்பெருமான் எதிர்சென்றுபற்றிச் சங்கரித்துத் தமது அருமைத் திருமேனியில் அதன் சருமத்தை யாடையாக வணிந்தனர்.

வல்லியம் வலியிழந்து வஸ்திரமானபின், எவற்றையுமழிக்கும் இணையில்லாக் கணிச்சியொன்று, எரியிலிருந்து பிறக்க, அந்தணர் ஐயன்மேல்விடுப்ப அஃது எதிர்வர, சங்கரர், தமது செங்கையிற் பற்றி இஃதொரு படையாயிருக்கவென விசைத்தனர். மீண்டும் ஓர்



[illegible] 25 சார்த்தூலஹர மூர்த்தி.

மான் உற்பவித்தது. அதனை மகாதேவன்மேற் போக்க, அது சரா
சரமெல்லா மழியும்படி இரைச்சலிட்டு அக்ரமமாக்கமா யெழுந்து
வரக்கண்ட அரன் அதனொலியால் உயிர்கள் வருந்தாது கிருபைபுரி
ந்து இடக்கரத்தேற்று "ஈண்டிருந்திசைக்க" எனப் பணித்தனர்.
அதன்மேல் சர்ப்பங்கள் பிறந்தன; அவற்றைச்செலுத்த, சம்பு சரீ
ரத்திற் பணியாக அப்பணிகளை யணிந்தனர். பூதவெள்ளம் தோன்
றின. அதினாதன்மேல் ஏவினர் மாதுபாகர் வருகெனவிளித்து
"நமது சேனையாய் நாளுமிருத்திர்" என நன்கருளினர். ஒரு வெண்
டலை உலகழியச் சிரித்துத் தோன்றக்கண்டு சிவன்மேற் பிரயோகி
க்க, சிவபிரான் திருக்கரத்தாற்பற்றிச் சிரமீதணிந்தனர். இவற்றைக்
கண்ட முனிவர் முனிவுற்று, முன்னவன்மேல் மந்திரங்களைவிட அவை
துடியுருவேற்று இடியென முழங்கி யெதிர்வர, எம்பிரான் கரத்திற்
பற்றி "என் கரத்தில் முழங்குக" எனக் கட்டளையிட்டனர். தாரு
வனத்தோர் தரியாக்கோபத் தழலால் மீண்டுமே யாகஞ்செய்ய முய
லகன் பிறந்தான். முனிவர், முயலகனையும் ஹோமாக்கினியையும்
'உமைகேள்வனை யுயிர்செகுக்க" என வோதியனுப்பினர். கோ
பாக்கண்ட நின்மலர் நெருப்பைக் கையிற் றாங்கி, பிசாசரூபிய
முயலகனை நிலத்தில் வீழக் காலாற் றள்ளி முதுகின்மேல் தமது
முண்டகத்தாளூன்றி நின்றனர். வேறொன்றுஞ் செய்யமாட்டாத
வேதியர் பல சாபமிட அவை தாணுவினிடஞ் செல்லாமைகண்டு
மோதிநின்றனர். முயலகன் முதுகை யசைக்க முக்கணர் நடிக்க,
கண்ட நான்முகன் முதலானோர் "அரகர சங்கர சம்பு" எனத் தொ
ழுவாரும் துதிப்பாரும் களிப்பாரும் கைகுவிப்பாரும் பாவோரும்
பணிவாருமாயினர்.

சிவபெருமான் தம்மைப் பணியாத தாருவன முனிவருக்கு ஞான
த்தை யநுக்கிரகித்தனர். அதனால் அந்தணர் அறிவுடைந்து "ஐய
னே! அடியேங்க ளறியாமையாற் பலவகையாகத் தேவரீரை யவம
தித்தோம். அவற்றை மன்னிக்கவேண்டும் அருட்பெருங்கடலே"

என்று பல்முறை பணிந்து உடல் நடுங்க உளங் குழைந்து உரோமம் புள கிப்ப உள்ளம் உருக ஆநந்தவெள்ளம் பெருக வேண்டினர். சிவபெருமான் "முனிவரே! சைவ நெறியைக் கைக்கொண்டு நற்றவம்புரிந்து காணிலத்திருத்திர்" என்று விடுத்து, திருக்கைலையையடைந்து திருமால் பிரமன் முதலானோரைத் தத்தமிடஞ் செல்ல விடுத்தனர். இதன் முற்பட்ட சரித்திரத்தைப் பிக்ஷாடனமூர்த்தத்திற் காண்க

ஈண்டு தாருவனமுனிவர் செய்த அபிசாரவேள்வியில் தோன்றி அவர்கள் ஏவலின்படி வந்த புலியைச் சங்கரித்து உடையாகப்போர்த்த கோலமே சார்த்தூலஹரமூர்த்தமெனப்படும்.

## கந்தபுராணச் சுருக்கம்

"தீவினைமாதர்கள் கற்பழித்தவனைச் செகுத்திடுவோமென்று
மாதழற்கொண்மகம்புரிந்திடலும் வந்துவந்துபிறந்திடுவெ
காதுவெம்புலிபரசுநவிக்கடும்பணித்திரள்பூதர்கண
மோதுவெண்டலைதிண்டிறற்றுடிமுயலகன்றனையேவினர்
வேங்கைதன்னையுரித்துடுத்தனன்மிக்கசாரதர்தானையாயப்
பாங்குறும்படியோதினன்றொருபாதவண்கமலத்தினன்
வேங்குறும்படிமுயலகன்றனையீடிஞெமித்தனன்
வாங்கருங்கவினுற்றமேனியின்மற்றவையாவுமணிந்தனன் "

சார்த்தூலஹரமூர்த்தயோகம்:



26 பாசுபத மூர்த்தி.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# இருபத்தாறாவது

# பாசுபதமூர்த்தி.

சந்திரவம்சத்து மன்னரில், பாண்டு புத்திரர் பஞ்சவர்கட்கும், திருதராட்டிரன் மக்கள் நூற்றுவர்கட்கும் தொடர்ந்த பாரதப் போரில், பதின்மூன்றாந்தினப் போரில், பலலாயிரவரான சஞ்சத்தவர்களைப் பார்த்தன் கொன்று திரும்புமுன், அநேக அரசருடன் அமர்செய்து அவர்களை அபஜெயப்படுத்திவரும் அபிமந்நு வென்னும் அருச்சுனன் சுதனைச் சயத்திரதன் சங்கரித்தனன். அதனைப் பாடி வீட்டிற்கேட்டறிந்த பற்குனன் பதைத்துத் துடித்து வேர்த்துக் கனத்துக் கோபித்துப் பற்களைக் கடித்து மீசை துடிக்கத் தோளைப் புடைத்து "என்மகனைக் கொன்றவனை நாளைச் சமரில் நாசஞ்செய்யேனேல் நான் எரியில்வீழ்ந்திறப்பேன்" எனச் சபதஞ்செய்தனன்.

அப்பொழுது அவ் வருச்சுனனுக்குச் சாரதியாயும் அருத்[illegible]னையாயும் மைத்துனனுமுள்ள கண்ணன் அவனைப் புறத்தே கொ[illegible]ண்டுபோய்த் தேற்றி "கைலையிலிருக்குங் கம்பெருமானாக விருந்தவின் [illegible]னென்ன கனிகளையேனும் புசித்துக் கிரியாருக" என, அருச்ச[illegible]னன் "அடியேன் அரனை அருச்சித்தன்றி அருந்தேன்" என, திரு[illegible]ஷ்ணன் "என்னையே பெருமானாக எண்ணி யருச்சிக்க" என, இசை[illegible]ந்து, அவனைத்திலிருந்த அநேகமலர்களைக்கொண் டருச்சித்து, அவ[illegible]னுக்கிடைத்த பழவருக்கங்களைப் பசியையாற்றி, அன்றெல்லாம் அய[illegible]ர்த்திருந்தவ னாதலின் அவ் வரண்மனையிலேயே கண்டுயின்றனன். [illegible]ண்ணன் அவனுடலைப் பாதுகாக்க அமரர் சிலரை ஆண்டமைத்துப் [illegible]ந்திர சோகத்தாலே துயிலுஞ் சவ்வியசாசியின் கனவில் தோன்றி

னன். நான் நாரணனை நமஸ்கரித்தனன், மதுசூதனன் "மைத்துன! துரோணா முதலானோர் காப்பினும் நாளைப் போரிற் சிந்துமன்னனைச் சிரமழிக்கும்படி திருக்கயிலை சென்று சிவபிரானது திருவருள்பெற்றுத் தினகரன் உதிக்குமுன்னாகத் திரும்புதும்' என அருச்சுனனுங் கனவிலே சம்மதித் தெழுந்தனன்.

கண்ணன் அருச்சுனனென்னும் இரண்டு கருமலைகள், கயிலையாகிய வெண்மலையை நண்ணி, பார்வதி யாகிய பச்சைமலையைப் பாகமாகக்கொண்ட பரமேஸ்வரனென்னும் பவளமலையைக்கண்டு பணியும்படி அப் பருப்பத மடைந்து முதற்பெருங் காவலாகிய நந்தியெம்பெருமானது நன்னி சரணங்களை நமஸ்கரித்து அவரநுக்ஞை பெற்றுத் திருச்சந்நிதியினுட்சேர்ந்து தேவமுனி கணங்கட் கிடையே சிங்காதனத்திற் சைலராசபுத்திரியாருடன் வீற்றிருக்குஞ் சிவபெருமானைத் தரிசித்து, பன்முறை நிலமேற் பணிந்து கைகூப்பி நின்று,

"நித்தனே நிமலனே நிகழ்நினைமனே
அத்தனேயடியவர்க்கெளியவண்ணலே
பித்தனேயாதியந்தங்களபேசொணா
முத்தனேயுயிர்தொறுமுலாயமுனைவனே" — எனப் பல

வாறாகத் துதித்துக் கண்களில் ஆநந்தபாஷ்பஞ்சொரியும் நரநாரணரைக் கண்ணோக்கி, நம்பர் "இவ்விரவில் விரைவாக நீங்க ளடைந்த தென்ன காரணம்?" என வினவ, கிருஷ்ணார்ச்சுனர் "தேவதேவா! தேவரீர் முன்னிருவருள்செய்த பாசுபதத்தால் நிவாதகவசர் காலகேயர்களை வதைத்தோம். அதனை முஷ்டியிலே நிலைப்பட அநுக்கிரகிக்கவேண்டும்" என வேண்ட, அமலர் அவ்வாறே தடாகத்திலிருந்த பாசுபதத்தை இருவரா லெடுத்துவரச்செய்து, முஷ்டியிலே (கனவிலும் மறவாவண்ணம்) முற்றுப்பெற வுணர்த்தினர். அருச்சுனன் அன்றிரவிற் கண்ணனை அருச்சித்த கந்தமலர் யாவும் அண்ணல மேனியி லமர்ந்திடக் கண்டு ஆச்சரியபரவசமாய் வணங்கி நின்றனன். கண்ணன் என்னிலைக்குத் தெய்வ மிதுவென்று களித்துக் கைகூப்பி நின்றனன்.

கண்ணுதல் உளமகிழ்ச்சியுடன் "பாரதப்போரிற் செயமுண்டாகக்கடவது" என ஆசீர்வதித்து விடையளிக்க, விடையூர்தியின் திருவருள் பெற்ற இருவரும் இறைவரது திருவடியைப் பணிந்து அரிதிற்புறம்போந்து ஆலயத்தை வலம்வந்து திருக்கைலையை நீங்கித் தம் இருக்கை சார்ந்தனர். அருச்சுனன் இவ்வாறு சொப்பனங்கண்டு துணுக்கெனவிழித்து அம்பறாத்தூணியில் அஸ்திர மிருத்தலின் உண்மையெனத் தெளிந்துகொண்டனன். சுயோதனன் யுத்தியும், துரோணன் வல்லபமும் பலமன்னர் பராக்கிரமமும் மாயன் வஞ்சனையா லொழிந்தன. அருச்சுனன் தனக்குச் சிவபிரான் பிரசாதித்த பாசுபதக்கணையாற் சிந்துதேசாதிபதியாகிய செயத்திரதன் சிரசை நகொய்து சபதத்தை நிறைவேற்றினன். கிருஷ்ணமூர்த்தியும் அருச்சுனனும் அவாவியவண்ணம் அவர்கட்கு அஸ்திரமருளிய அவசரம் பாசுபதமூர்த்தமென்பம்மே.

பாசுபதமூர்த்தயோகம்.

---

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்

# இருபத்தேழாவது
# கங்காள மூர்த்தி.

ஒருநாள் சிவாலயத்துள்ள திருவிளக்கொன்று சுடர் மழுங்குகையில், சிவபெருமான் தேவியாரைப்பார்த்து "பெண்ணே! இத்திருவிளக்கின் திரியைத் தூண்டுவோர் திரிலோகமும் அரசுசெய்வர்" என்றனர். அப்பொழுது ஓரெலி அத்தீபத்திலிருந்த நெய்யைக் குடித்ததால் அஃதசைந்து திரி தூண்டப்பெற்றது. இறைவியார் எம்பெருமானை நோக்கி "இப்பொழுது இத்தனைத் தூண்டிய இவ்வெலிக்கு இன்னருள் புரியவேண்டும்" என, அண்ணல் "அவ்வாறே அளித்தனம்" என்றருளினர்.

அஃது மாவலியென்னும்பெயருடன் அசுரகுலத்திற்றோன்றி, அவனி முழுவதையும் அரசுபுரிந்து தானவர்குழாம் வலி மிகுதல் கண்டு வானவர்கோன் மனம்பொறாது எண்ணில்லாத சேனையுடனெதிர்த்துப் போர்செய்து புறமுதுகிட்டோடி, திருமாலபால் கூறினன். அது சமயத்தில் திதி யென்பவள் விண்ணவனை வேண்டி "என் மைந்தனாக வரவேண்டும்" என வரங் கேட்க, அரவணைத் துயில்வோன் அவளுக்கு "அவ்வாறே யாகுக" வென்று வரமளித்து, அயிராணி கேள்வனை நோக்கி "அமரர் பெரும! அஞ்சற்க. அவனை அடப்போம்" என்றருளிக் காசிபமுனிவருக்கும் திதிக்கும் மைந்தனாக வாமனவுருவதாரஞ் செய்தனர்.

மாவலி அசுரனாயிருப்பினும் யாகக்கருமங்களைச் செய்தும், அவரவர் விரும்பிய தானங்களை அபரிமிதமாக அளித்தும், நற்செயலிலேயிருந்தனன். வாமனவடிவங்கொண்ட மாயவன் மாவலி மாளிகையை



மஹேந்த்ரி,

...டைய திருத்திருப்பணி கண்டு, எதிர்சென்று அழைத்துச் சோடச உபசாரங்களுஞ் செய்து, தக்க ஆதனத்தமர்த்தி "வேதிய! யாது கருதி வந்தனை கூறுக" என, வாமனன் "மகவான் - மலரான் - மலர்த்தலையுலகத்து மன்னர் முதலானோர் மனங்களிக்க அளிக்கவல்ல வள்ளலாயொன்று உள்ளத்திற் கொண்டே யான் வந்தேன்" என, மாவலி "மறையோனே! இரதம் - கஜம் - துரகம் - பொன் - பொருள் - பொற்கிரீடம் முதலிய எதுவேண்டினும் இமைப்பிற் றருவேன் இயம்புக" என, அந்தணன் "அரச! அவற்றையெல்லாம் அவாவினேனல்லேன். என்றடியால் மூவடிமண் வேண்டினேன்" என, மாவலி "மூவடிமண் எற்றுக்குப் பயன்படும்" என, மாணி "தவஞ்செய்திருப்பன்" என்றனர்.

அப்பொழுது அருகிருந்த அசுரகுருவாகிய சுக்கிரன் "அரசே! இவனோ பாப்பனச் சிறுவனென்றெண்ணற்க திருமாலாதலின் இவ்வமை வினையும்" எனச் செப்பினன். மாவலி "மாலே யென்பாலரையவனாகி மூவடிமண் யாசித்தானென்று அரும்புகழ் திருக்குமாதலின் அதனால் வினையுஞ் சஞ்சலம் பெரிதன்று" என்று சுக்கிரன் சொல்லைக் கடந்து மும்முறை நீர் சொரிந்து தாரைவார்த்தனன். அதுபெற அச்சுதர் அக்கணமே திரிவிக்கிரமாவதாரங்கொண்டு அண்டமாக மூவுருவின்று ஓரடியால் பூலோகத்தையும் மற்றோரடியால் அவலோகத்தையும் அளந்து மூன்றாவது அடிக்கு இடமின்மையால் மாவலியின் சிரமேல் ஊன்றி அவனைப் பாதலலோகத் தமிழ்த்திதனால் அகந்தைகொண்டு ஆப்பரித்து அவனியாக்கலை அழிக்கவென்றனர்.

இதுகண்ட அமரர் அளாகக்கண்முகத் தாழ்த்து, அதிவிரைவாகச் சென்று, அம்பிகைபாகர் வீற்றிருக்கும் வெள்ளிமலையை யடைந்து, அதிபக்கவான் கவினபாதங்களைப் போற்றி உள்ளே செல்ல உத்தரவுபெற்று, சந்நிதானத்தைச் சார்ந்து சாஷ்டாங்கமாகப் பணிந்து கங்களைச் சிரமேற் குவித்து "சம்பு! சங்கரா! சச்சிதானந்தா!

ஜகதாக்ஷகா! சரணம்! சரணம்!!" என்று பேரிரைச்சலாயத்தோத்திரஞ்செய்ய, எல்லா மறிந்த எம்பெருமான் ஓர் விளையாட்டலாக ஒன்று மறியார்போன்று "உம்பர்களே! உங்களுக்கு குற்ற துயர் யாது? ஓதுமின்" என்று திருவாய்மலர்ந்தருளினார். வானவர் "மகாதேவா! மாவலிபால் மாயவன் வாமனவடிவாய்ச் சென்று மண்யாசித்து வானுற்றோங்கி மாவலியை மாய்த்து, மமதையால் வையகத்தை வதைக்கின்றனன். அவனை விரைவில் அடக்காவிடில் அமரர் அந்தணர் முதலானோர் அனைக்கணத்தில் அழிவது சரதம்' என முறையிட, அருள்வள்ளல் அகிலத்திலுள்ள அனைவர்க்கு முற்ற ஆபத்தை அகற்றும்படி அக்கணமே அவ்வாமனன் முன்னரடைந்து, மயக்க மொழிய வார்த்தைகள் சில வாய்மலர்ந்தருளியும் *பிருகுமுனிவன் சாபப்படி விண்டு கருப்பாசயமுற்ற பாசவிக்க முதிரச்சியால், கேளாமல், இறுமாந்திருப்பதுநோக்கி, இறைவர் இமைப்பிலாச் சினங்கொண்டு வச்சிரதண்டமொன்று திருக்கையி லேற்று வாமனன் மார்பிலமைத்தனர். வாயுவேகத்தாற் சாய்ந்த மேருமலைபோல் வாமனன் தரைமேற் சாய்ந்தனன். அப்பொழுது அவனது தோலையுரித்துக் கஞ்சுகமாகத் தரித்து, முதுகெலும்பைப் பிடுங்கித் தண்டாகக் கையிற்கொண்டு கடவுளர் துயரொழித்துக் கயிலையடைந்தனர்.

அச்சுதன் அகந்தையகன்று பண்டைய உணர்வெய்திப்பரமனைப் பரவி, தேவமுகிலர்க்கு வாமனபுராண மோதி வைகுந்தஞ் சேர்ந்தனர். மாவலி நற்கதி பெற்றனன். சிவபிரான் வாமனனது முதுகென்பைக் கொண்ட கோலமே கங்காளமூர்த்தமெனப்படும்.

[வாமனன் வானை யளந்தபொழுது மேலண்டகடாகம் பின்னுற்று, ஆகாயகங்கை பெருகி, அது மானவதேசவழியாய்ச் சமுத்திர சங்கமமாயிற்று. அதன் விருத்தாந்தத்தை யறியாரிலர். அக்கங்கை நீரைச் சிவபிரான் அளித்தனரெனக் கூறுவர். அஃதபத்தமென்க.]

---

*ஆதியில் அமரருக்கும் அசுரருக்கும் நிகழ்ந்த அமரில் அண்டர்கள் ஆற்றலில்லாராய் விண்ணவர் வேண்டியபடி கண்டு திருமால் செரு

க்களுக்கோத்து திகிரியைச் செலுத்தித் தீயோர் நாசஞ்செய்த
னர். போனவரொழிந்த தானவர் சிலர் தமதுயிர் தப்பிப் பிழைக்
கச் சமாதுறைத்தோடிப் பெருந்தவஞ்செய்யும் **பிருகுமுநிவர்** பன்ன
சாலை யடைந்து அவர் பன்னியாகிய கியாதியென்னு மாதினை
யடைக்கலம் புக, அவ் வம்மை “அஞ்சேல்” என றபயமளித்து
ஆச்சிரமத்தில் வைத்துக் காத்தனள். சீற்றமிகுந்து தீச்சொரி விழி
யொடு சக்கரப்படையைத் தாங்கிய கையொடுஞ்சீதரன் பாதசாரி
யாக வருதல் கண்ட கியாதி வணங்கி நிற்க, மாதவன் சினந்து மாதின்
சிரத்தைக் கொய்து தானவர் குழாத்தைச் சங்கரித் தொழிந்தனன்.

பிருகுமுநிவர் தன் பெண்சாதியைக் கொன்ற பின்னை கேசவனை
மேற் பெருங்கோபங்கொண்டு “கேசவா! ஈசனை யன்றி யெவரை
யும் பணியோம் சைவசமயமே தரணியிற் சிறந்ததென் றெண்ணி
யா மிருப்ப துண்மையாயின், இந்தப் பிறவிக ளீரைந்தெய்தி வரு
ந்தியழிக” வென வசைமொழி யிசைத்து “நின்னடியார்கள் நெறி
யில்லாவழி நீக்கைப் பெற்றுச் சிவநிந்தை செய்து நிரயமடைக” என
க்கோபமேலீட்டாற் கூறி, ககனரு வுயிர்த்தெழுந்த தோகையோடு
களித்து வாழ்ந்தனர். திருமால் தனக்குற்ற பிருகுவின் சாபம் பிரிய
வகை யாதெனப் பெரிது மாலோசித்துத் திரிபுரதகனன் சேவடிவ
ணங்கிப் பெருமுநி சபித்த பிறப்பொரு பத்தும் ஒழிப்ப வென்று
தன் னுள்ளத்தெண்ணிச் சிவலிங்கக் குறியொன்று பிரதிட்டைசெ
ய்து பாசுபத விரதம் பூண்டு உடலெங்கும் திருவெண்ணீறு சண்ணி
த்துத் திரிபுண்டரந் தரித்து உருத்திராக்கம்பூண்டு உருத்திரசமக
மகாமந்திரஞ் சபித்துக்கொண்டு, சருகு-நீர்-பழம்-காற்று முதலிய
வற்றைப் பக்ஷித்து ஒரே மனதாய உமாபதியை உள்ளத்திருத்தி, பஞ்
சாக்கினிமத்தியிற் பலகால நின்று தவஞ்செய்தனர். அவர் தவத்திற்
களித்த அடியவர் சகாயர் அம்பிகை சமேதராய் இடபவாகன மிவர்
ந்து தரிசனந்தர, கமலக் கேசவன் கண்கள் களிக்கக் கண்டு ‘அரகர’
வென்று சிரகமலங்களாற் றுதித்து அஷ்டாங்க பஞ்சாங்க நமஸ்கா

ரம் பலமுறை செய்து பணிந்து நிற்க, பரமன் களித்து "மாதவ!
யாது வேண்டினை" என்று திருவாய்மலர்ந்தருள, சாரங்கன் "சங்க
ர! பிருகுமுனிவன் சாபத்தை விலக்கியருளவேண்டும்" என்றிரப்பப்
பெருமான் "எமதடியவர் இசைத்த மொழிகள் என்றுந் தவறு
மாகிலாததுள்ள மண்டலத்தைக் குதவியாயப் பிறவி பத்தும் நீ பெறுத
லே திண்ணம். ஆயினும் நம்மடியருச்சனைப் பலனால் ஐந்தினி லருளு
மற்றைந்தினிற் றண்டமு மடைதி" என்றருளக் கேட்டுக் களித்து
"தேவரீரோ அடியேனைத் தண்டிக்கவும் காக்கவும் நாயேன் பெறுவாழ்
வுற்றதுங் கண்பாக்கியம்" என்று வணங்கச் சிவபெருமான் அந்தர்த்
தானமாயினார். அவற்றுள் முற்பட்ட ஐந்தில் தண்டமும், பிற்பட்ட
ஐந்திற் சிவார்ச்சனை செய்யும் பெரும்புண்ணியமும் பெருமான் திரு
வருளாற் பெற்றனனென்பது சிவபிரானே சர்வதேவர்கட்கும் சிரேஷ்
டர் என்றறிக.

## ஸ்ரீலிங்கபுராணம்.

விஷ்ணும்ப்ரஹ்மாணமிந்த்ரஞ்ச யமமந்யாஸ்ஸுராநபி
யதோநிக்ருஹ்யஸம்ஹர்த்தா இத்யுச்யதே புதை

## లైంగపురాణము.

విష్ణుంబ్రహ్మాణమింద్రంచ యమమన్యాస్సురానపి।
యతోనిగృహ్యసంహర్తా ఇత్యుచ్యతే బుధైః।

## ஸ்காந்தம் விஷ்ணுவாக்கியம்.

த்வம்விஸ்வகர்த்தா தவநாஸ்திகர்த்தா
த்வம்விஸ்வபர்த்தா தவநாஸ்திபர்த்தா
த்வம்விஸ்வஹர்த்தா தவநாஸ்திஹர்த்தா
த்வம்விஸ்வநாத தவநாஸ்திநாத.

త్వంవిశ్వకర్తా తవనాస్తికర్తా। త్వంవిశ్వభర్తా తవనాస్తిభర్తా।
త్వంవిశ్వహర్తా తవనాస్తిహర్తా। త్వంవిశ్వనాథ తవనాస్తినాథః॥ స్కాందం

## ஆதித்யபுராணம்

'கலபாந்தேஸமித்ரிவிக்ரமமஹாகங்காளபத்தஸ்புரச்
சேஷஸ்ஸூத்ரமதோந்ருஸிம்ஹநகரப்ரோதாதிகோலாமிஷம
விஶ்வைககாரணவஸம்விஹாரமுதிதௌயௌமதஸ்யகூர்மாவுபௌ
காஷத்தீவரதாங்கதோஸ்யதுஸதாம்மோஹம்மஹாபைரவம ''

ఆదిత్యపురాణం.

కల్పాంతే సమిత్రివిక్రమమహాకంకాళబద్ధస్ఫుర
చ్ఛేషస్సూత్రమథోనృసింహనఖరప్రోతాదికోలామిషం।
విశ్వైకార్ణవసంవిహారముదితౌయౌమత్స్యకూర్మావుభౌ
కర్షద్వీరతాంగతోస్తుసతాంమోహంమహాభైరవః॥

## உபதேசகாண்டம்.

' பற்றினனையிரத்தண்டமடங்கிரண்டமதிரவோசமிச
சுபறினனுருமுக்காலத்தெறித்தன்னறுளவுமாபி
னெற்றினனெற்றமேல் செமறிபமெசண்டவாயு
முற்றுறவிற்றுவீழமுரிசெகுளிரியிறசாயந்தான.
கருகிறக்கமெருதனமேக்காரதனரித்துவாங்கித
திருகிறத்தலையக்காளக்குக்கமென்னச்சோதி
வெரிதறப்பிகெருமென்புதன்னெடனவெடுத்துக்கொண்டான
மருமலாத்துளவமாயோனுணவமயக்கந்தீர்ந்தான். ''

## காஞ்சிபுராணம்

'' குறளாயஞாலமூவடிமண்கொண்டுநெடுமிழூவுலகூ
திறலானளந்தமாவலியைச்சிறையிறப்படுத்துவியந்தானை
பிறவெசட்டடிவெரிகெழுமடையெழிறக்கவாளப்படையென்ன
வுறவோரகமூத்தகளைக்கொண்டவயங்களுளனதிருவுருவம்.''

கங்காளமூர்த்தயேநம:

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# இருபத்தெட்டாவது
# கேசவார்த்த மூர்த்தி.

திருமால் முன்னொருகாலத்திற் சிவபிரானை நோக்கிக் கடுந்தவஞ்செய்தனர். அரவாபரணர் அச்சுதன் செய்யும் அருந்தவத்திற்கு அகமகிழ்ந்து அவருக்குப் பிரசன்னமாய் "விஷ்ணுவே! தேவாசுரர்களாலே தீர்த்தற்கரிய வல்லமையும், எத்தகையினராயிருப்பினும் அவர்களை யாவரையும் மயக்கத்தக்க மாயையும் உனக்குக் கடாக்ஷித்தோம். மாயன் என்றினியுன்பெயர் வழங்குக. நீயே எனது இடப்புறங்கொள்" எனத் திருவாய்மலர்ந்தருளி அந்தர்த்தானமாயினர்.

**திருநாவுக்கரசுசுவாமிகள்.**

"எரியலா லுருவமில்லை யேறலா லேறலில்லை
கரியலாற் போர்வையில்லை காண்டகு சோதியார்க்குப்
பிரிவிலா வமரர்கூடிப் பெருந்தகைப் பிரானென்றேத்தும்
அரியலாற் றேவியில்லை யையனை யாறனார்க்கே."—எனவும்,

**இரட்டைப்புலவர்.**

"வருக்கைத் தடம்பொழில் வாமாதை யையாக்கு மாசோண தில்லா
முருக்கொத்த மேனி யழியாதர்க் குருச்சார வத
திருக்கைக் கமல அரனுக்கு நீநந் தேவியன்றேல்
அரிக்குப் பொருளை வீசுமெவ்வா றமைதியின்மையே"— எனவும்,

**காசிகண்டம்.**

"ஆற்றலுடை யட்டதகை யவுணரா தகன்விசும்பு தனிபுரக்கு மமரராது, மாற்றரிதா வெவ்வுயிர்க்கு மயக்கஞ்செய்யு மாயை நோக்கி நீத்தனமெம் மிடப்பாலியே, யுற்றிருக்கு நாமமொரு முகுந்தவைத்தாரோ"



23 கேசவார்த்த மூர்த்தி

புனையிகழ்ந்தோ ரெமையிகழ்ந்தோ ரென்ன வோதி, யேற்றையிருங் கொடியுயர்த்த செக்கர் வேணி யிறைவனுயர் தடங்கையிலை யெய்தினனே.' —எனவும், வரும் பிரமாணங்களாற் சிவசத்திகளுளொன்று விஷ்ணுமூர்த்தியும் ஒன்றென்பது பெறப்பட்டது.

அத்தகையபேற்றினையடைந்த அச்சுதர் சிவபிரானாரது திருவுள்ளக் குறிப்பின்படி பராசத்தியேயாவர், பாரியாசத்தியிற் பார்வதியும் ஆணுருவாகையில் விஷ்ணுவும் குரோதமுற்றுற காளியும் யுத்த முனையிலே துர்க்கையுமாக விளங்குவர்.

అగమశాస్త్రి.

శైవశక్తిఃపరమేశ్వరస్య ప్రయోజనార్థాయచతుర్విధాభూత్ ।
భోగేభవానీపురుషేషువిష్ణుః క్రోధేచకాళీసమరేచదుర్గా ॥

ஆகமசாஸ்திரம்.

ஸைவஶக்தி பரமேஶ்வரஸ்ய ப்ரயோஜநார்த்தாய சதுர்விதாபூத்
போகேபவாநீ புருஷேஷுவிஷ்ணு க்ரோதேசகாளீஸமரேசதுர்கா.

ஒருகாலத்தில் உமையம்மையார் சிவபெருமானை நோக்கி விரதங்களுட் சிறந்த சோமவார விரதத்தை ஆசரித்து வசிஷ்டராதி முனிவர்கட்கு அனுக்கிரகிக்கையில், இறைவியார் தவஞ்செய்யலைக் கண்டுவிரும்பிய எம்பெருமான், விஷ்ணுமூர்த்தி பாரியாகப் பின்னர், தாம் விருத்தவேதிய வடிவேற்று எழுந்தருளி, விமலையின் விரதத்தைச் சோதித்து, பெருமான் தமது நிஜவடிவும், திருமால் முதலா பார்ப்பதி யுருவும் பின்னர் தனது நிஜவடிவுங்காட்டத் தரிசித்துக் களித்தனளெனவும் ஓர் சரிதமுளது.

சைவபுராணம்.

போகேபோகினீசத்ரதயே பத்யோஸாரதம்தவாஜிரம்
ப்ராப்தமக்காளிகமமாமலை விதிப்ராஹமணபுங்கவம். தி.

அதாலோக்யமஹாதேவம விஸமயோதபுலலலோசநா
கிமிதந்தேவிலஸிதம ஸேயமிதயாஹபாாவதி
அதேஹமிதஜஞோதைதயாரிா நாரீரூபமவிஹாயதத
ஸவரூபந்தாரயாமாஸ பாாவதயா ஸந்நிதௌஹரி:
நீலநீரதஸங்காஸ. புண்டரீகதளேக்ஷண.

తదుక్తంశైవపురాణే.

శ్లో॥ గిరీంద్రతనయా పశ్చాద్వ్యసాక్షణాంతవాజిరం।
ప్రాప్తవత్యర్ధనంమాంస్తై విద్ధిబ్రాహ్మణపుంగవం॥
అథాలోక్యమహాదేవం విస్మయోత్ఫుల్లలోచనా।
కిమిదంతేవిలసితం సేయమిత్యాహపార్వతీ।
అథేహమింగితజ్ఞో దైత్యారిర్నారీరూపంవిహాయతత్।
స్వరూపంధారయామాస పార్వత్యాఃసన్నిధౌహరిః।
నీలనీరదసంకాశః పుండరీకదళేక్షణః।

இப்பிகைபோன்ற அந்தநகைய அழகியவுருவை அச்சுதா ஏ
மாறடைந்தனனென்று பரியாலோசிக்குமபக்ஷத்தில, அகிலலோக,
திலுள்ள சிறந்த திரிபுரஸுந்தரி எனனுங் காரணப்பெயா வாய்ந்த எ
த்தாயாகிய கவுரியைக் கருதிக் காலம பல கடுந்தவஞ்செய்து கைக
ப்பிய பணிந்து ஈசுவரியானாபபோனற திவ்ய வடிவை அவ்வம்மை
யார் திருவருளினாலே யடைந்தனா எனக் கொள்க.

ஆநந்தலஹரி.

ஹரிஸ்த்வாமாராதயப்ரணதஜநஸௌபாக்யஜநநீம்
புராநாரீபூத்வாபுரரிபுமபிக்ஷோபமநயத-ஸ்மரோபித்வாம்நத்வா

ఆనందలహరి.

హరిస్త్వామారాధ్యప్రణతజనసౌభాగ్యజననీం।
పురానారీభూత్వాపురరిపుమపిక్షోభమనయత్। స్మరోపిత్వాంనత్వా

### ஸௌந்தர்யலஹரீ.

ஸமுத்பூதஸ்தூலஸ்தநபரமுரஶ்சாருஹஸிதம்
கடாக்ஷேகந்தர்பா: கதிசந கதம்பத்யுதிவபு:
ஹரஸ்யத்வத்ப்ராந்திம் மநஸிஜநயந்திஸ்ம விமலா:
பவத்யா யேபக்தா: பரிணதிரமீஷாமியமுமே.

### సౌందర్యలహరి.

సముద్భూతస్థూలస్తనభరమురశ్చారుహసితం ।
కటాక్షేకందర్పాఃకతిచనకదంబద్యుతివపుః ।
హరస్యత్వద్భ్రాంతింజననిజనయంతిస్మవిమలాః ।
భవత్యాయేభక్తాఃపరిణతిరమీషామియముమే ॥

என்றெடுத்துக்காட்டிய இவ்வகைய பலவேதுக்களால், திருமால் சிவசத்தியே யென்பது பெறப்பட்டது. புருஷபாகம் வலப்புறமெனவும் பெண்பாக மிடப்புறமெனவுங் கூறப்படுமே நியாயத்தால் சிவபிரானது வாமபாகத்தைத் திருமால் சிவார்ச்சனை செய்து பெற்றுக்கொண்டனர். அச்சிவ கேசவ ரிருவரும் ஒருவடிவாய் (அர்த்த நாரீசுரரைப்போல்) வலப்புறம் செக்கிறமாய் மழு அபயமும், இடப்புறம் பசுமையாய்ச் சக்கர வரதமுந் தாங்கி ஒரு திருமேனியுடன் ஏகபீடத்தில் சமானமாக எழுந்தருளியிருப்பர். அத் திருவுருவத்தைச் சங்கரநாராயணனெனச் சற்றும் பேதமின்றி ஒருமூர்த்தியாய உபாசனார்ச்சனைகள் புரிந்து நற்கதியுற்றோராகிய கண்ணுவராதி முனிவர்கட்கு எண்ணில்லை. இத்தகைய இலக்கணமாக, கேசவனைப் பாதியாக வுடைத்தாயிருத்தலின் பெருமான் கேசவார்த்தமூர்த்தியெனத் திருநாம மெய்தினர். இத் திருவுருவம் ஹரிஹரம் என்னும் க்ஷேத்திரத்தில் பிரசித்தமாக விளங்கும்.

### ந்ருஸிம்ஹோத்தர புராணம்.

ஹரிஶங்கரயோர்நாஸ்தி யுவயோர்பேதஶம்பவ:
யேபேதபுத்த்யாபஶ்யந்தி தேநராயுவயோர்த்விஷ:-இத்யாதி.

சிவாரித்துய மலராடியுடையோன் ஹரிஹரசுகரூபியென்ன
யுவாமேகாபருத்மபட்ட மய ஸர்வலோசனகோசரென
ஸதாதயமயமிராந்தஸா ஸேவகனைத்தவரமம
இதித்தனபகசபரா வாசாதுமதஸமயமோராதம
பராய ஸர்வஸ்வேயாராம தாவேகாகருதிமாபது
தஸமாதத்ரிவேடமே யதா மிதிதபாதிதமபுயி

నృసింహోత్తరపురాణము.

హరిశంకరయోర్నాస్తి యయోర్భేదమహేశ్వర ।
రమేశంబుద్ధ్యాపశ్యేత్ తే యాంతి యమయాతనాః । ఇత్యాది
నిరాకారౌ మహాదేవౌ హరిశంకరరూపిణౌ
యువామేకాకృతిం ప్రాప్య సర్వలోచనగోచరౌ ।
స్థానం వ్యపదేశాదత్తై శివాకైలాసవరం మమ ।
ఇతి తస్య వచః శ్రుత్వా కమలాంతస్య మనోరథం ।
పశ్యతాం సర్వదేవానాం తావేకాకృతిమాపతుః ।
తస్మాద్ధరిహరక్షేత్రమితి ప్రథితం భువి ।

பதினோராந்திருமுறை.

"இடமால் வலந்தா னிடப்பால் துழாய்வலப் பாலொண்கொன்றை
வடமா லிடந்துகில் தோல்வல மாழியிடம் மழுமா
னிடமால் கரிதால் வலஞ்சேயிட மெழுகெழில் வலஞ்சேர்
குடமால் இடம்வலங் கொக்கரையாமெங்கள் கூத்தனுக்கே."

கேசவார்த்தமூர்த்தபோதம்.



29 பிக்ஷாடன மூர்த்தி.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

---

# இருபத்தொன்பதாவது
# பிக்ஷாடனமூர்த்தி.

தேவதாருவன முனிவர் சிவபக்தியில்லாராகி, யாகமே முத்தி பயக்கவல்லதாகுமென்று சிந்தித்து விழைவுடன் எண்ணிலா வேள்வி புரிவாராயினர். பரந்த வுலகில் நிகழும் பலவற்றையு மறிந்த பரமபதி யிதனை யுணர்ந்து, திருமாலைத் தம்பாலவரத் திருவுளஞ் செய்ய, கமலக்கேள்வன் கண்ணுதல் கருத்தறிந்து கயிலையங்கிரியை யடைந்து, திருநந்திதேவர் விடைபெற்றுத் திருச்சந்நிதானத்தினுட் சென்று சிவபெருமானைப் பணிந்து நிற்க, விடையூர்தி விருப்புடன் விண்டுவைக் கைப்பற்றி யெழுந்து வெள்ளிமலையை விலகி வெளி வந்து "மாதவ! முன்னொருகால் நீ கொண்ட மோகினி யுருவை யின்றெடுத்துக" என, பன்னகசயனன் பணிமேற்கொண்டணியிழையா யப்பொழுதே யாயினன். மாலெனனும் பெயருக்கேற்பத் தமது திருவுருவைக்கண்டு மால்கொண்டபடி அம்பிகாபதியும் அவ்வுரிவைக் கேற்ற ஆடவசிரேஷ்டராயவடிவேற்று, கபாலமுஞ் சூலமுங் கையிற் பற்றித் திகம்பரராய பிக்ஷாடனத் திருக்கோலங்கொண்டு, முனிவர் வாசமாகிய தாருவனத்தை மோகினிப்பெண்ணுடனண்ணினர்.

அச்சமயத் தருக்குவத்திருந்த அந்தணர்குழாம் அரிவையைக் கண்டு நெறிவழுக்கித் தவநெறிதவறி அவநெறிகொண்டு காமவிருப்ப மேலிட்டோடிப் பின்றொடர்ந்து, விளக்கைக்கண்ட விட்டில் போலத் துன்புறுவாராயினர். இத்தகையமாயையியற்றும் வலிதக்க மாயனாகிய மோகினியை மகாதேவன்பிரிந்து, கையிற்கொண்ட பரிகலத்தி னையேற்பார்போல முனிவர் வீதியிற் சென்று பன்மனைதோறு

உள்ளாளத்தேம் பாட முனிபன்னியர் கேட்டு, அவ் வினிய வோசை
யுடன் பாடுவோனைக் காண விரும்பி வீதிவாயில்வந்து பெருமான
பிக்ஷாடனத் திருக்கோலத்தைத்தரிசித்துக் காமத்துயரிற் கட்டுண
வருந்தினா. அரிவையா சிலா ஐயனையணையும்படி பிராத்தித்தன
பெண்கள் சிலா பிசகையிட்டனா கன்னியாசிலா காமநோயா
கலையவிழ்ந்தனா. மாதாகள் சிலா வளைகழன்றனா. நங்கையா சில
நாணமழிந்தனா. எம்பெருமானது திருவிளையாடலால மாமாயாசா
வித்தைபோல் அம்மாதரிடம் நாற்பத்தெண்ணாயிரம் புதல்வா அ
காலத் துதித்தனா.

அப்பின்னைகள் பிக்ஷாடனமூாத்தியைப் பணிய, புராரி “ எ
மைநோக்கித் தவஞ்செய்க” எனவிடுத்து, நகரின் புறம்போந்தன
முனிவராமோகிக்கச்செய்த மோகினிமுதல்வனையடைய, பின்வந
பெருந்தவத்தினா தத்தம்பெண்டிரா யவாவிசசென்று கண்டு, ந
னைவிமாரும் இத்திகம்பரனுல காண வளை முதலியவற்றைக் கழிந
னா போதுமென்று கருதி “ நாமொரு பெண்ணாற் நலமழிந்து க
பாசத்திற் கட்டுண்டோம், நம்பன்னியா ஒருவன்மாயத்திற் கற்பிழ
தனா” ன்று பேசிக்கலேசித்து, தமது தவநிலையை மாயனுக்மாய
ததும், தம் பன்னியா கற்பை யழித்ததும் சங்கரனேயென்று தம
ஞானத்தாலுணர்ந்து “ பெருந்தவமழியினும் பிராயசசித்தஞ் செய
லாம்; கற்பழிந்ததே அம்பகாலமும் காசினியோா நிந்திப்பரே” என
கழறி, பிக்ஷாடனா பின்செல்லும் பெண்டிரைக் கூவி, “ யாவாபி
செல்கின்றீர்? கற்பழிந்தவர் கங்கைமூழ்கிக் காயத்தை பொ
த்தல் கடன்; அன்றேல் உமதூரையடைமின்” என்றனர்.
மார் கணவர்கூறிய மாற்றத்தைக் கருத்துட்கொண்டு கண்ணுநா
பிரியக் கலெழாது பின்தொடருகையில், கருணாமூர்த்தியின் தி
வருளால், உம்பர்பெருமா னுருவையுட்கொண்டு ஒருவாறு ம
திரும்பி ஊர்சேர்ந்தனர்.

சிவபெருமான் திருத்தெளிச்சேரி யென்னும் நகரினீங்கினர். முனிவர் பெருமானைக் கொல்லவேண்டுமென் றுட்கொண்டு ஆபிசார வேள்விசெய்து அதனிற்றோன்றிய புலி நாகம் முயலகன் முதலியவற்றைப் பிரயோகிக்க, அத்தன் அவற்றைச் சங்கரித்தும் உடைமுதலியவாகத் திருமேனியி லணிந்தும் துன்புறுத்து, திருமாலுடன் கயிலை சார்ந்து கமலேசேனவினை விடைகொடுத் தனுப்பி வீற்றிருந்தனர். அவர்கள் செய்த ஆபிசாரவேள்வியைப்பற்றிய விவரணங்களைச் சார்த்தூலஸம்ஹாரமூர்த்தத்திற் காண்க.

தாருகவனமுனிவர் தவத்தையும், அவர்மனைவியர் கற்பையுமழிக்கும்படி பெருமான் திகம்பரராய்ப் பிரமகபாலந் தாங்கிப் பலியேற்கச் சென்றகோலமே பிக்ஷாடனமூர்த்தமெனப் பெயர்பெறும்.

**தாருவன க்ரீடாவிலாசம்.**

வாஸிஷ்டலைங்கம்.

வஸிஷ்டனா ரோகஸி ஸூப்ரவாகஸியம்.

விஷ்ணுஸ்சமாயயாப்ரஹ்மந் பார்யாபூத்வாமனோஹரீ
தயாஸஹமஹாக்ரீடாங் க்ருத்வாவேகம் திகம்பரம்.

దారువనక్రీడావిలాసము.

వాసిష్ఠలైంగము.

విష్ణుశ్చమాయయాబ్రహ్మన్ భార్యాభూత్వాసుసుందరీ।
తయాసహమహాక్రీడాం కృత్వాశివందిగంబరం॥

**காஞ்சிபுராணம்.**

"அடியிற்றொடுத்த பாதுகையுமசைந்த நடையுமிசைமிடறும்
வடிவிற்சிறப்பப்படைத்தருளி மழுவேந்துமருங்கணைந்த
தொடியிற்பொலிதோ ணிருமகளிற் கரமங்கையணைமயல்பூட்டிப்
படியிற்றெழுதாப்பேரழகாற் பலிதேர்பகவன் திருவுருவம்."

பிக்ஷாடன மூர்த்தவேடம்:

---

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

---

முப்பத்தாவது

# ஸிம்ஹக்ந மூர்த்தி.

இரணியகசிபென்னும் பெயருடைய ஒருவன் அசுரகுலத்திற்றோன்றி, தம்முடைய குலகுருவாகிய வெள்ளியை விளித்து "ஆசிரியனே! யானெவ்வண்ணந் தவஞ்செய்தால் அடைதற்கரிய வரம்பெற்று, வரம்பிலாக்காலம் வலியிருந்து வாழலாம்" என, அதற்குச் சுக்கிரன் "அரவாபரணனையன்றி யத்தகைய வரத்தை யளிப்பவர் யாவர்?" என்று, அப்பரமனைப் பணியும் பல்முறையையும் பயிற்றித் தன்னுலகுசார, இரணியகசிபு சிவபிரானது திருவடிகளை இதயத்தி லிருத்தி எண்ணில்கால மியற்றிய தவத்திற் கிறைவர்மகிழ்ந்து "யாது வேண்டுவது" என, அசுரன் "அண்ணலே! பிருதிவிமுதலிய ஐம்பூதங்கள்-ஆயுதக்கருவிகள்-வானவர்-மானுடர்-பறவை-விலங்கு முதலிய பிராணிகள் இவையொன்றினாலும் இரவிலும் பகலிலும் இறவா வரம்வேண்டும்" என்றேற்ப, எம்பிரான் "அவ்வாறேயாகுக" என வரமருளினார்.

தான்பெற்ற வரத்தினாற் செருக்கெய்திய தானவன், நால்வகைச்சேனையையுங் கடல்போற்கூட்டிக் காசினிமுழுதினுக்குங் காவலனானான். தேவரம்பையர் சித்தமாதர் இயக்கஸ்திரீகள் முதலானோர் சாமரையிரட்டப்பணித்து, இந்திரன்முதலிய வெண்டிசைக் காவலர் வந்து நாடோறும் வணங்கிப் பணிப்பணிபுரிய வமைத்து, பிரமன்றன் பெயர்கேட்குந்தோறு நடுங்கும்படி, கருடர்-காந்தருவர்-சித்தர்-வித்தியாதரர் முதலானோர் சித்தந் திகைக்கச் செங்கோல்செலுத்தினான்.



30 சிம்ஹக்கின மூர்த்தி.

அக்காலத்தில் அவனுக்கினியானொருவன் (இரணியாயநம) வெனக் கூறிவணங்கவேண்டுமென்று சொல்லாத நியானிக்கப்படாது. இத னைப்பொறாத இரணியனாகிய பிறகு தலையைக்கண்டு விளம்ப, சார்பு கூறியதனை மொழிக் கூறாமை ... ப்பிரகலாதனுக்கு ரீபித்தான். அப்படியே ... பள்ளியில் வேறு படிப்பிக்க வந்த னிக்கையில், உபாத்தியாயர் ... (இரணியாயநம) என்று போதிக்க, பிறகு பிரகலாதர் (ஸ்ரீ நாராயணாயநம) என, ஐயா அரசனுக்குத் தெரிவிக்க, அசுரன் புதல்வனைத் தண்டித்துச் செய்ததும பகர்ந்தமையால் "நீ கூறுகின்ற பரம்பொருள் யாண்டுளது" என்க் கேட்ட பிதாவைநோக்கிப் பிரகலாதன் "இறைவனெங்குமுளன்" என்று சமீபத்திலிருந்த ஒருதம்பத்தைச்சுட்டி 'இத்தூணிலுமுளன்' எனக் கூறினன்.

பாகவதபுராணம்

"சாணிலுமுளனோர்தன்மை யணுவினைச் சதகூறிட்ட
கோணிலுமுளன் மாமேருக்குன்றிலுமுளனிந்நின்ற
தூணிலுமுளனீ சொன்ன சொல்லிலுமுளனித்தன்மை
காணுதிவிரைவினென்றானன்றெனக்கனகன் சொன்னான்."

கேட்ட இரணியகசிபு கோபங்கொள்கையில் நாராயணன் நரவடிவும் சிங்கவடிவுங்கூடிய நரசிங்கமாகத் தூணைப்பிளந்துகொண்டு வெளிவந்து, அத்தானவத்தலைவனைத் தன்மடியிலிருத்தி, நகங்களால் மார்பைப்பிளந்து குடலைப்பிடுங்கி அவனுடனுருப்போராமதி, இரவுக்கும் பகலுக்கும் இடையாகிய சாயுங்காலப்பொழுதில் வேவிட்டு, ஒருதுளியுதிரமும் கீழ்விழாமற் கையிலேற்றும் வாயில்வைத்தும் பருகி உயிர்மாய்த்தனர். (அவனைச் சங்கரித்தகாலத்தையே இரணியவேளையென்பர்) அசுர னுதிரமருந்திய வெறியால் அவனிமாக்களை வாரி வாயிற்பெய்து, செருக்குற்ற திருமகள்கொழுநன் செயல்கண்டஞ்சிய தேவர் ஒருங்கோடி யுலகமழியுமென வுடன்கோண்டோடிச் சென்று, திருக்கயிலையையடைந்து திருநந்திதேவராற் சிவபிரானுக்

ருளப்ப, பரமசிவன் "பயப்படாதீர்கள்" என்று பகர்ந்து, இருசிர மும் இணையில்லாச்சிறகும் கூரியநகமுமுடைய எட்டுக்கால்லும் கடுங் கோபமுங்கொண்ட சரபத்திருவுருவுடன் நாரசிங்கத்தைத்தண்ணிடி முழக்குபோலிரைந்து உதிரவெள்ளம் சூறமெறிந்து தோட்ச சிங்கச்சிர தலையும் கைகளையும் கழித்துத்தள்ளி மேலுடக்காந்து சிங்கத்தின் சருமத்தையுரித்துத் திருமேனிமேற்போர்வையாகக்கொண்டு வெள் ளிமலையையடைந்தனர். விண்டு பண்டையவுணர்வுதோன்றப் பரம னைப்பூசித்து வைகுந்தமுற்று வாழ்ந்திருந்தனர்.

நரசிங்கத்தின் சிரத்தையறுத்துத் தலைமாலையிலணிந்தது வும் சரிதமுள்ளது. இரணியகசிபனைச் சங்கரித்த நரசிங்கத்தின் இறு மாப்பைச் சரபரூபமேற்று நாசஞ்செய்தமையாற் சிவபெருமான் ஸிம்ஹக்நமூர்த்தியெனப்பெயருற்றனர்

அஹமமருணுஸராபாயருஷிபாதவே.— ருக்வேதப்
ஶ்ருதி| —தைத்திரீயகம்.

ஹரிகம்ஹாரகதமதுயகநிதேவா: விஶ்வஸ்யேஶாநப்ருஷபமமநீகாம

ஸ்கந்தபுராணம்.

ஹரிமஹாரகதஶரபம விஶ்வஸ்யேஶாகமீஶ்வரம
அநபாகநிஸஂஹாஸஸாவே நமோவாகஸ்யஸஸஹாதருதம.

காஶிகண்டம்.

புராஹிரண்யகஶிபுஹைத்யராஜமஹாபலம்
ஹதவாந்தருநிராபாக பரமத்தமயாசித ஸஂஹா .
ருத்ர ஶரபரூபேண ரக்ஷிமஹமபீடயத

ஶ்ரீந்ருஸிம்ஹோத்தரபுராணம்.

ததோக்ருஸிமஹமாலோக்யசங்கரமபகஸாஹஸ·
தக்ருஸிம்ஹஶிரோபாவக் கைலாசேத்துமஸமுதயத : ! இத்யாதி !
ஏவமஸ்ரூலசகொண்டேன மஹாரணஸமுத்தருதேன
விலோகயவிபுதாஸர்வே மஹாபயமுபாயயு : ! இத்யாதி !
க்ருஸிம்ஹஸ்யபேணதருஷ்ட்வா ததோப்ரஹ்மஸஂஹாஸ்ஸஹ
துஷ்டாவபரமயீத : ஸௌக்த்ராஜலிர்தத :

### ஸ்காந்தபுராணம்.

ஶூலாயுதாயஸுரபருகதகமௌளிமாயா
லீலாயமாநசரணுமபுஜபலலவாய
ஹேலாவலேபபரிபூதநருஸிமஹாமஹேண
லீலாபராயஶரபாகருதயேநமோஸ்து.

### ப்ரஹ்மாண்டபுராணம்.

ருஷய — கதமஶேவ ஸாவஜ்ஞகத ஸவஸ்திஸதிதயம் தகாரக: ஶரபா கயமமஹாகோரம விகருதமரூபமாஸதி ஸ்ருத:-ஶருணவநதருஷ யஸ்ஸாமே-இதயாதி ஏதாய தகதவாபகவாநஸவரீடமரகேஸரீ அபா ரமேககாலேண ஸமாபயாதயமதிகஹரி தத ஸாதயகதவாநவிஷ்ணு ஜீவிதயஸவாபராதத ததஉகதரம்தஸயகருததிருச ஹருதவாஶரபவி கரஹ அதேநதரியதயமகமதவீரபதர : க்ஷுண்ணுததத

అహంమృణాః శరభాయఋషిబ ధవే । ఋగ్వేదము.

### శ్రుతిః తైత్తిరీయకము.

హరిగ్ంహరంతమనుయంతి దేవాః విశ్వస్యేశానం ఋషభంమతీనాం।

### స్కాందపురాణముపబృంహణము.

హరింహరంతంశరభం విశ్వస్యేశానమీశ్వరం ।
అనుయాంతిసురాస్సర్వే నమోవాక్యైస్సహాద్భుతం ॥

### కాశీఖండే.

పురాహిరణ్యకశిపుం దైత్యరాజంమహాబలం ।
హత్వాతద్రుధిరాపాన ప్రమత్తంయాచితఃసురైః।
రుద్రఃశరభరూపేణ నరసింహమపీడయత్ ॥

### నృసింహోత్తరపురాణం.

తతోనృసింహమాలోక్యచంక్రమ్యఘనసాహసః ।
తన్నృసింహశిరోయావన్నఖైశ్ఛిత్త్వాంసముద్యతః ॥ ఇత్యాది।

ఏవంసశూలచక్రాత్తౌ మహారణసముద్ధతౌ ।
విలోక్యవిబుధాస్సర్వే మహాభయముపాయయుః ॥ ఇత్యాది
నృసింహాశ్శరభాద్ధ్వస్తా తతోబ్రహ్మసురైస్సహ ।
తుష్టావపరమప్రీతః కరాభ్యామంజలింతతః ।

స్కాందపురాణం.

శూలాయుధాయసురబృందకమౌళిమాయా ।
లీలాయమానచరణాంబుజపల్లవాయ ।
హేలావలేపపరిభూతనృసింహరంహా ।
లీలాపరాయశరభాకృతయేనమోస్తు ॥

బ్రహ్మాండపురాణము.

ఋషయః । కథందేవఃసర్వజగత్సృష్టిస్థిత్యంతకారకః ।
శరభాఖ్యంమహాఘోరంవికృతంరూపమాస్థితః ॥
సూతః ॥ శృణ్వంతుఋషయస్సర్వే । ఇత్యాది
ఏతావదుక్త్వాభగవాన్సక్రీడన్నరకేసరీ ।
అపారమేకకరజైః సమాహత్యాంతికంహరిః ।
తతఃసంత్యక్తవాన్విష్ణుర్జీవితంస్వాపరాధతః ।
తద్వ్యక్తంతస్యకృత్తించహృత్వాశరభవిగ్రహః ।
అతీంద్రియత్వమగమద్వీరభద్రః కృగాత్తతః ॥

காஞ்சிபுராணம்.

“நன்றுவிரண் டிதிருவடி புகளிகளைவாலுமுகமிரணமெ
கொன்றாமிறகுமுருதனிரமுவகொடிமபோராப்புமெனிரதோறநச
செகசேர்பருமிச்செருகருகரமடவகலாவிசெருகதுளிகொண
டொன்றாருவவகளமுழுதளித்தவுடையானசரபதிருவுருவம்.”
விமலக்கமூர்த்தயோகம்:



31 சண்டேசாநுக்ரஹ மூர்த்தி.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# முப்பத்தொன்றாவது

# சண்டேசாநுக்ரஹ மூர்த்தி.

சோழவளநாட்டிலே, பூர்வம் குமாரக்கடவுள் சூரபன்மனைச் சங்கரிக்கு நிமித்தந் தென்றிசைநோக்கிச் செல்லுகையில், பரமபதியாகிய சிவபெருமானை யருச்சித்த தலங்களு ளொன்றாயும், ஆசாரிய சுவாமிகளின் தேவாரத் திருப்பதிகம் பெற்றுள்ளதுமான திருச்சேய்ஞலூரில் வேதியர்குலத்திற் காசிபகோத்திரத்தில் ஜனித்த யஜ்ஞதத்தன் என்றொருவ னுள்ளான். அவன் மனைவி பெயர் பத்திரை. அவ்விருவருக்குஞ் சற்புத்திரராக விசாரசருமர் என்பார் திருவவதாரஞ் செய்தனர். அவர்க்கு ஜன்மாந்தர அறிவுத் தொடர்ச்சியால் வேத வேதாகமங்களை யாவர்பாலு மோதா துணரு மறிவு ஜனித்தது. அவருக்கு ஏழு வயதிலேயே, தாய் தந்தையர் உபநயனஞ் செய்வித்து, தக்க ஆசிரியரைக் கொண்டு வேத முதலிய கலைகளைக் கற்பிக்குமுன், தாமே யறியுந் திறமுடையோரா யிருத்தலைக் கண்டு வியப்புற்றனர்.

அவ்விசாரசருமர் அளவில்லாத வேதாகமங்களிற் கூறப்படும் உண்மைப் பொருளெல்லாம் சர்வலோக சரண்யராகிய சிவபெருமானது திருவடிகளே யென்றும், சிருட்டி-திதி-சங்காரம்-திரோபவம்-அநுக்கிரக மென்னும் பஞ்சகிருத்திய காரணமாக ஆநந்தத்தாண்டவம் புரியும் எம்பெருமானே நம்மை யாளாக வுடையா ரென்றும் உண்மையறிவு தோன்றுவதால், சர்வான்மாக்களிடத்தும் அன்பின் வழி யொழுகிவருங்காலத்தில், ஓர்நாள் அவர் தம்மோடு வேதாத்தியயனஞ் செய்யும் அந்தணச்சிறுவரோடு அவ்வூரார் பசுக்களுடன் கூடிச் செல்லுகையில், ஒரீற்றுப்பசு வொன்று அதனை மேய்

பப்பினைக் குத்தப்போக, அவ்வாயன் சிறிதும் அருச்சாமற் கோலினால் அதனைக் கன்றுயப் புடைத்தான். அதைக்கண்ட விசாரசருமர் சாஸ்திரங்களிற் கூறிய விஷயங்களை ஐயம்-திரிபு அறியாமை யாகிய முக்குற்றங்களும் நீங்கத் தெளிந்தோராதலின் மனம் பொறாராகி அவ்விடையன்பாற் சென்று, பசுக்கள் சமஸ்த தேவர்களும்-தீர்த்தங்களும் முனிவர்களும் - கணங்களும் பிரியாது சூழ்ந்திருக்கும் உறுப்புக்களையுடையனவென்றும், சிவபெருமானுக்குத் திருமஞ்சனத்திற்குரிய பஞ்சகௌவியங்களைக் கொடுப்பனவென்றும், சிவசாதனமாகிய திருவெண்ணீற்றுக்கு மூலம் அவற்றின் சாணமென்றுங் கூறி, அப்பசுக்களைத் தாமே மேய்க்க விரும்பி, அவ்வாயனை நோக்கி "நீயிப்பசுக்களை இனி மேய்க்கவேண்டாம், யானே மேய்ப்பேன்" என்றார். ஆயன் அஞ்சி விலகிச் செல்ல, விசாரசருமர் அவ்வப் பசுக்களின் உரியாரது சம்மதம் பெற்று, சமீபத்திலுள்ள மண்ணியாற்றங்கரையிலும் நிறைவாகிய புல்லுள்ள இடங்களிலும் மேய்த்து, நீரூட்டி, வெயில் வேளையில் நிழலிலிருக்கச் செய்து, அருணன் அஸ்தமயமாகுமுன் அவரவர் வீட்டிற்கனுப்பித் தமவீடுசேருவர். இதனால் பசுக்கள் அழகோடு பெருகி மிகுதியாகப் பால் பொழிந்தன. பசுக்கட் குரியார் முன்னினும் அதிகம் கறத்தல் கண்டு களித்தனர். அவை விசாரசருமரைச் சிறிதேனும் பிரியமாட்டாதனவாயும் அவரைக் கண்டவுடன் மடி சுரந்து பால் பொழிவனவுமா யிருந்தன.

அதன்பின்னர், சிவபெருமானுக்குத் திருமஞ்சனமாகுந் தகுதியுடைமையைக் கருதி, அப்பெரியார்க்குச் சிவார்ச்சனையில் அத்தியந்த ஆசை தலைப்பட்டது. உடனே மண்ணியாற்றங் கரையிலுள்ள ஓர் மணற்றிடையில் ஆத்திமரத்தின்கீழ் மணலினாலே ஒரு சிவலிங்கக்குவித்து, கோயில்-கோபுரம்-மதில் முதலியவை வகுத்து, பலவகைப் பத்திர புட்பங்களைக் கொய்து சிவார்ச்சனை செய்து, புதுக்குடங்கள் கொண்டுபோய்ப் பசுக்கள் மடியைத் தீண்ட அவை கனைத்துப் பால் பொழியும்; அதனை யபிஷேகஞ்செய்வார்; தனக்குக் கிடை

யாத பூஜாவுபகரணங்களை மானஸிகமாகச செயதுமுடிப்பா; இப் பூசையைப பெருமான அவவிலிங்கததினினறுபோ டங்கரிப பா, பசுக்கள இதனற குறையாமல முனபோலவே வீட்டுக்கும பால் கொடுதது வநதன இதனைபபோலவே விசாரசருமா கெடுநாள சிவா ாசசனை செயதுவருகையில ஒருவன பாாதது ஊாாருடன சொலல, அவாகள சபையாருககறிவிகக, சபையாா யஜ்ஞதததனை வருவிதது "உனபிளளை பாலைக கறநது வீணே மணலிற சொரிநது விளையாடு கின்றுனும" என, யஜ்ஞதததன "நான அறியேன, இனி அவ்வாறு நடநதால அககுறறம எனதே" என்று வீடுசென்று, மறுநாள உதய ததி லதைச சோதிகக வெணணி, விசாரசருமா பசுமேயக்கச செல் லுகையில, அவா அறியாமல பினதொடாநதுசென்று, அவா மணணி யாறறின மணறறிட்டிற போனது கணடு, அருகிருநத குராமரத்தி லேறி யொளிததிருநதான.

விசாரசருமா வழககமபோலஸநானஞ்செய்து,சிவலிங்கமுத லியன வகுதது, திருப்பளளிததாமஞ் சேகரிததுவைதது, பசுக்களி டங் குடங்கொணடுசெலல, அவைசொரிநதபாலைக் குடததோடு வை தது, சிவாாசசனை முடிதது, பாறகுடங்களை யபிடேகஞ்செயதனா. குராமரததி லிருநத யஜ்ஞதத்தன் அதுகண டிாங்கி விரைநதோடி வநது பல கொடுஞ் சொறகள கூறி, விசாரசருமா முதுகி லடிதத னன. அவா மனம சிவாாசசனையி லழுநதியிருநததால் அவருககுப புலபபடவிலலை யஜ்ஞதததன தான பலமுறை யடிததும அவருண ராமை சிவாாசசனையாலென றறியாஞகி, மிகக கோபிததுப பாற குடங்களைக காலா லிடறிச சிநத, உடனே விசாரசருமா அதுகணடு செய்தவன பிதா-குரு-பிராமணன எனப தறிநதும், அவன செயதது சிவாபராத மாதலின, அவன் காலைத துணிக்கக் கருதி அருகிருந்த ஓா கோலை யெடுகக, அது மழுவாக, அதனற காலகளை வெட்டிச் சிவ பூசையின் சேடததைப் முடிததனா. சிவபெருமான இடபாருட ராய் உமாதேவியுடன் தோன்றினா, விசாரசருமர் பேராகக்த முட

டதுப்பி இருவிழி வழித்தாரை ஆநந்தநீரருவி வார்தர மெய்ம்மறந்து பணிந்தனர். பெருமான் இருகரங்களாலெடுத்து "நம்பொருட்டுப் பிதாவை வெட்டினாய்! உலகத்தாமே பிதா" என்று திருவாய்மலர்ந்து அணைத்து உடல் தடவி, உச்சிமோந்து 'நம்முடைய தொண்டர்களுக்கெல்லாம் உன்னைத் தலைவனாக்கி நாம் ஏற்றுக்கொண்ட அமுதம் பரிவட்டமு[illegible]ம் உனக்கே தந்தோம்" என்று தமது சடையிலணிந்திருந்த கொன்றைமாலையை அவருக்குச் சூட்டிச் சண்டேசுரபதவி யருளினர். அவரால் தண்டிக்கப்பட்ட யஜ்ஞதத்தனும் [illegible] பெருமானை விசாரசருமருக்குச் சண்டேசுர பதவியை அருளியருளிய அவசரமே சண்டேசாநுக்ரகமூர்த்தமெனச் சாற்றப்படும்.

## திருத்தொண்டர்புராணம்

"தொ[illegible]ணி துழவி வீழ்ந்தவரை
பெரு[illegible]
[illegible] அணைத்துயிர்[illegible] அருள்செய் தணைத்தருளி
மடுத்த கருணையால் [illegible] உச்சிமோந்து மகிழ்ந்தருள.

அண்டர்பிரானுந் தொண்டர்தமக் கதிபனாக்கி யனைத்துநா
முண்டகலமு முடுப்பனவுஞ் சூடுவனவு முனக்காகச்
சண்டீசனுமாம் பதந்தந்தோமென் றங்கவர் பொற்றடமுடிக்குத்
துண்டமதிசேர் சடைக்கொன்றை மாலைவாங்கிச் சூட்டினார்."

சண்டேசாநுக்கிரகமூர்த்தியோகம்.



(கூ எ ரீ.)

32 தக்ஷிணாமூர்த்தி.

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்.

## முப்பத்திரண்டாவது

# தக்ஷிணாமூர்த்தி.

சிவபெருமான் ஸ்ரீ கயிலையங்கிரியிற் சகலதேவர்களும் நிறைந்து தங்கட்டங்கள் இஷ்டகாமியங்களை விரும்பியாங்குப் பெறும்படி திருவோலக்கங்கொண் டெழுந்தருளியிருக்கையில், இறைவியார் எழுந்து நாயகனையிணையடி பணிந்து "எம்பெருமானே! எனக்குற்ற தாக்ஷாயணி யென்னும் பெயரும், தேவரீரைப் பணியாத அத்தக்ஷனாற் போஷித்துவந்த வுடலும் மாறும்வண்ணம் வரமருளுக" என விண்ணப்பிக்க, மஹாதேவர் மகிழ்ச்சியுற்று "மாதே! மலைமன்னன் மகளாக நின்னைப் பெறக் கருதி நெடுநாளாய் விடாததவம் புரிகின்றான். அவன்பா லுற்று வளர்க யாம்வந்து மணஞ்செய்வோம்" என்றருளிச்செய்தனர்.

அம்மையார் அரவாபரணரது அடித்தாமரையைப் பணிந்து கட்டளையைச் சிரமேலேற்று, விடைபெற்று இமயமலையையடைந்து அவ்வூரிலே அருந்தவமாற்றும் அசலமன்னன் ஆசிரம ஓர்தடாகத்தில், தாமரைத்தவிசின்மேற் குழந்தைவடிவுகொண் டிருந்தனர். பர்வதராசன் பார்த்து மகிழ்ச்சியுற்றுத் தவப்பலனைக்கூடியதென்றுட் கொண்டு, அக்குழந்தையை யெடுத்துக்கொண்டு மனையையடைந்து மனைவியாகிய மேனையினிடத்துக் கொடுத்து வரலாற்றைக் கூற, மேனைபோஷித்துவந்தனள். அம்மையார் ஐந்துவயதுமுதல் தவஞ் செய்யவிருந்து சங்கரனை மணந்தனர். (விஸ்தாரம் கல்யாணசுந்தரத்திற் காண்க). இருக்க;

அ

எமதன்னையா ரிவ்வாறு தவத்திருக்கையில், பிரமபுத்திரர்களாகிய சநகன் - சநந்தனன் - சநாதனன் - சநற்குமாரன் என்னும் முனிவர் நால்வரும் வேதவாராய்ச்சிசெய்து முடித்து, பலவகைத்தவங்களையாற்றி, மீண்டும் வெள்ளிமலையை யணுகி ஆண்டு முதற்பெருங்காவலாகவுள்ள திருநந்திதேவரைப்பணிந்து விடைபெற்றுத் திருச்சந்நிதியுட்சென்று, கண்களாரக் கண்ணுதலைத் தரிசித்து, சாஷ்டாங்கமாகத் தண்டஞ்செய்து, கரமிரண்டையுஞ் சிரமேற்சேர்த்து, "அருட்கடலே! அநந்தவகையாகிய ஆரணப்பொருளை ஆராய்ச்சி செய்தும் அடியேங்கள் அகமலைந்துகொண்டிருக்கின்றனம், அவையடங்கி யாங்கள் கடைத்தேறும்படி அவ்வேதத்தின் உட்கிடையாக வுள்ள பொருளை உபதேசித்தருளவேண்டும்" எனப் பிரார்த்தித்தனர். அவ்வார்த்தையைக்கேட்ட சங்கரர் "இங்கிருத்திர்" என்றியம்ப, அவர்கள் அண்ணலார்து பங்கயப்பதத்தினையேத்தித் தங்கியிருந்தனர்.

அப்பொழுது அரவாபரணர் நந்திபகவானைவிளித்து "எம்மைத்தரிசிக்க எத்தகைய தேவர்முதலானோர் வரினும், சந்நிதானத்துள் விடவேண்டாம். மதனன் வரில் வரவிடுக" என வாய்மலர்ந்து வாயில்விற்செல்ல விடையளித்தனுப்பி, விடையூர்தி முனிவர் விருப்பின்படி சிவாகமங்களிற் கூறப்பட்ட திரிபதார்த்தங்களாகிய பதி - பசு-பாசலட்சணங்களைவிளக்கி வெளியிட்டனர். சநகனாதியர் "சங்கரா! எங்கள்மனம் விரிந்திருப்பதால்அவையொருங்கும் அடைவாக ஞானோபதேசஞ்செய்யவேண்டும்" என விண்ணப்பித்தனர். திரிபுரங்களை எரிபடப்பொடித்த பரசிவன் குறுநகைகோட்டிக் கூறுவதொன்றுமிலராய் "அப்பொருள் இவ்வாறிருக்கும்" என்று, சடாடவிதாங்கிய முனிவர்கட்குச் சாற்றவேண்டி, திருக்கரமொன்றைத் திருமார்பிற்சேர்த்துச் சின்முத்திரை காட்டி முனிவர்போல ஓர் க்ஷணப்பொழுது மௌனங்கூடி நின்றனர். அதனால் அவர்கள் நால்வரும் மனமொழிமெய் ஞானநிலையுணர்ந்து, பேரின்பப்பெருக்கிலழுந்தி, தம்

கள் செயலொன்று மில்லாதிருந்தனர். (அந்தகாலையில் அமரர் மன்ம தனையனுப்ப அவன் ஐயன்மேல் மலர்க்கணை தூய்ச் சாம்பராய் மாய்ந்தனன். விஸ்தாரம் காமதகனத்திற்காண்க.)

சிவபெருமான் யோகுநீக்கி "முனிவர்காள்! நீங்கள் முன்னிய வகையே நிஷ்டை யனுஷ்டித்து நீடூழிவாழுதிர்" என்று தம் இச்சைப் படி யேகிவிட்டனர். இறைவர் தக்ஷிண திசையைநோக்கிச் சநகாதி நான்கு மஹாருஷிகட்கு உபதேசித்த அவசரம் தக்ஷிணாமூர்த்த மென்ப் பெயர்பெறும்.

**கந்தபுராணம்.**

"இருவருமுணராவண்ணலேனவெள்ளெயிறியாமை
பிரநிலையந்தகோட்டினைத்திமூரத்திறசிகொள்ள
கரதலமொன்றுசோதிமோனமுத்திரையைக்காட்டி
யொருகணஞ்செயலொன்றின்றியோகுசெய்வாரினுற்றான்.

இனையதோர்தன்மைகாட்டியெம்பிரானுணர்த்தக்கண்டு
சனகனேமுதலாவுள்ளோர்தவலருஞானபோதம்
பனுவலினளவன்றென்னும்பான்மையைத்தெரிந்துமுக்கட்
புனிதனதருளாற்றத்தம்புந்தியினேகம்பெற்றார்.

தற்பரனினையவாற்றாற்றம்பதங்குறுகுந்தன்மை
யற்புதஞானபோதமளித்திடுங்கணமதொன்றின்
முற்படுகமலப்புத்தேண்முதலியவமரர்க்கெல்லாம்
பற்பலயுகங்களசென்றபிறகினிப்பகர்வதென்னே."

**தக்ஷிணாமூர்த்தயோகம்:**

---

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

## முப்பத்துமூன்றாவது

# யோகதக்ஷிணாமூர்த்தி.

சிவபெருமான் தக்ஷிணாமூர்த்தமாகச் சநகன்-சநந்தனன்-சநாதனன் சநற்குமாரனென்னும் மகருஷிகள் நால்வர்க்கும், பதி-பசு-பாசலக்ஷணங்களை யுபதேசித்தருளினர், அம்முனிவர் "அடிகளே! அடியேங்கள் அகமனத்திருத்தலினவை பொருந்தும்வண்ணம் அருளபுரியவேண்டும்" என்று விண்ணப்பிக்க, அருளாளர் "அந்தணரே! உடல்முதலியயாவும் அழிபொருளெனவும் ஆன்மா ஒன்றே அழியாப் பொருளெனவும் அறிந்து, ஞானத்தைக் கிடைக்கவேண்டியோர் மோட்ச சாதனமாகிய சாஸ்திரங்களைக் கேட்டலும், சிந்தித்தலும், அவ்விஷயங்களைத் தெளிதலும், அஷ்டாங்கயோகங்களைச் செய்தலும் வேண்டும். சிலர் யோகமாவது ஞானேந்திரியகன்மேந்திரியங்கள் ஒன்றோடொன்று கலத்தலெனவும், மற்றுஞ் சிலர் ஆன்மாவுடன் கூடுதலெனவும், வேறு சிலர் பிராணவாயுவும் அபானவாயுவுஞ் சேருதலெனவுஞ் செப்புவர். சண்டெடுத்து விவகரித்த இவையெல்லாம் முடிவில்லாத யோகசாதனமாகக் காட்டா, ஆனால் சீவான்மாவும் பரமான்மாவும் இரண்டறக்கலத்தலே யோகம் அஃதெவ்வாறெனில், புறக்கரணங்களை அந்தக்கரணங்களிலொடுக்கி மனத்தை ஆன்மாவிலொடுக்கி உத்தமமாகிய ஆன்மாவைப் பரத்திற்சேர்ப்பிப்பது. யோகப்பயிற்சியிற் பழகினாலன்றிப் பரம்பொருளைக் காணமுடியாது. தசவாயுக்களைப் பந்தித்தாலன்றி மனம் ஒருவழிநில்லாது. சடங்க யோகசாதனத்தாலன்றிச் சத்தியத்தை யுணர்தலருமை. ஆதலின் அத்தகைய யோகத்தைச் சாற்றுவோம் கேட்பீராக;—



33. யோகதக்ஷிணாமூர்த்தி.

இயமம் - நியமம் - ஆதனம் - பிராணாயாமம் - பிரத்தியாகாரம் - தாரணை - தியானம் - சமாதி என அஃதெண்வகைத்து. அவற்றுள்,

இயமம்—கொல்லாமை - சத்தியவசனம் - கள்ளாமை - பிறர் பொருளிச்சியாமை - பஞ்சேந்திரியமடக்கல்.

நியமம்—தவம் - பரிசுத்தம் - தத்துவநூலாராய்ச்சி - மனமுவந்திருத்தல் - கடவுள்வழிபாடு.

ஆதனம் எண்வகைத்து. அவையாவன:—தொடைக்கும் முழங்காலுக்கும் நடுவே யிரண்டுள்ளங்காலையுஞ் சேர்த்து இறுமாந்திருத்தலாகிய சுவத்திகம் - சக்கப்பக்கத்தி லிருகாற்பாட்டையு மாற்றி வைத்து அவ்விருகாற் பெருவிரலையுங் கைப்பிடித்திருத்தலாகிய கோமுகம் - இருதொடைமேலும் இரண்டுள்ளங்காலையும் மாற்றித் தோன்ற வைத்தலாகிய பதுமம் - வலத்தொடையில் இடக்காற் பாட்டைச் சேர்த்தி யிறுமாப்புற விருத்தலாகிய வீரம் - பீசத்தின்கீழ்ச் சிவனிடத்திற் பாட்டைவைத்திட்ட முழங்கையை முழந்தாளில்வைத்து அவ்விருபத்தத்தையு மிருகையால் இறுகப்பிடித்து அசையாதிருத்தலாகிய பத்திரம் - இடக்காற்பாட்டாற் சிவனியையழுத்தி வலக்காற் பரடு அப்பரட்டின் கீழூன்ற விருத்தலாகிய முத்தம் - முழங்கைகளிரணமே உந்திப் புறத்திலழுந்த, புவியிற் கையூன்றிக் காலை நீட்டித் தலைநிமிர்ந்திருத்தலாகிய மயூரம் - சுகமும் இடனும் எவ்வாறிருக்கின் எய்துமோ அவ்வாறிருத்தலாகிய சுகம் என்பனவாம்.

பிராணாயாமம்— பிராண வாயுவை இரேசக பூரக கும்பகஞ் செய்தல்.

பிரத்தியாகாரம்— உபாதியைநீக்கி உணர்வொடுக்குவது.

தாரணை— கண்டம் - இதயம் - நெற்றி - கபாலம் - நாபி இவற்றி லொன்றிற் சித்தஞ் சிக்கெனவைப்பது.

தியானம்—ஐம்புலன்களை யடக்கி யோகஞ்செய்வது.

**சமாதி,—** மேற்கூறிய இமய நியமாதிகளைப் பொருந்தி, சுழுமுனை முதலாகிய நாடிகட்குக் காரணமாகிய நாபிக்குக் கீழுள்ளதாய், கிழங்கின் நடுவிலிருக்கும் எழுபத்தீராயிரம் நரம்புகளில், வலமும் இடமும் பிரிந்த இரண்டாகிய இடைகலை பிங்கலைகளைச் சுழுமுனையில் அடக்கி, அச் சுழுமுனையைக் கீழிருந்து தேகமத்தியமாகிய கந்தஸ்தானம் வரையில் இரு கலையாகவும், அதற்குமேல் பிரமரந்திரம் வரையில் ஒரு கலையாகவும், மூலாதாரம் - சுவாதிட்டானம் மணிபூரகம் - அநாகதம் விசுத்தி - ஆஞ்ஞையாகிய ஆறாதார சக்கிரங்களையும், அதற்குமேல் நாலுசக்கிரங்களையும் வியாபிக்கச்செய்து, பிரமரந்திரம் வரையில் ஆதாரதேவதைகளைச் சகளமாகவும், அப்பால் துவாதசாந்தத்தில் அசலராகியும் அமேயராகியும் அதுலராகியும் கூடஸ்தராகியும் மஹானுமாகியும் ஞானக்கிரியாசத்தி சரீரியாகியும் வியாபகராகியும் சத்திமானுமாகியும் மலரஹிதராகியுமுள்ள பரசிவமூர்த்தியை நிஷ்களமாகவும் தியானித்தலே சிவயோக மென்னுஞ் சமாதியாம்" என்றிவ்வகையாகத் திருவாய்மலர்ந்தருளி, இறைவர் அம்முனிசிரேஷ்டர்கள் அறிந்துகொள்ளும்படி திருவுள்ளங்கொண்டு தாமே சிறிதுபொழுது அத்தகைய நிலையினின்றுணர்த்துவித்தனர்.

அதனால் உள்ளம் விரிவொழிந்து ஒடுக்கப்பெற்ற சனகன்-சநந்தனன்-சநாதனன் - சநற்குமாரனென்னும் முனிவர் நால்வரும் முன்னே நின்று முண்டகப்பதத்தை வணங்கி விடைபெற்றுத் தமவிருப்பின்படி சென்றனர். சிவபெருமான், பிரமபுத்திரர்களாகிய இருடியர் நால்வரும் எளிதிலுணரும் வகையாக யோகமுறையைப் பயிற்றினமையால், யோகதக்ஷிணாமூர்த்தியென்பதோர் திருநாமமெய்தினர்.

## யோகதக்ஷிணாமூர்த்தபேதம்:

—



34. வினைகளிறைப்பாடு

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# முப்பத்து நான்காவது

# வீணாதக்ஷிணாமூர்த்தி.

சிவபெருமான் பக்தாநுக்கிரக காரணமாகத் திருக்கயிலாயகிரியில், தக்ஷிணாமூர்த்தமாகக்கொண்டெழுந்தருளியிருக்கையில், தும்புருநாரதர் முதலிய ருஷிசிரேஷ்டர்கள் இசைஞானத்தை நன்குணரவும், சாமவேதத்தை வீணையிலேற்றுப்பாடவும், தங்கட்கு அருள்புரியவேண்டுமென்று கருத்துட் கொண்டோராய், கயிலைமலையையடைந்து கருணாமூர்த்தியைப்பணிந்து கைகூப்பிக் "கடவுளே! அடியேங்கட்கு வீணாகானத்தை விளக்கியருளவேண்டும்" என்று விண்ணப்பித்தனர்.

அம்பிகாபதி "அந்தணரே! அவ்வாறே யாகுக இருத்திர்," எனப்பின்வருமாறு அருளிச்செய்யத் தொடங்கினர்.

"சீரிலே சிறந்த வழுருதல் வேத னிலமயக்கும்
பாரிலே சிறந்த வடிவீழ்ந்த ஞெயமரப் பாற்படலகோ
ணேரிலே செம்பகை யாப்பொடு கூட மதிரவுசிற்றல்
சேரினோர் பண்க ணிறைமயக் கப்படு சிறந்திடவே' —

என்றபடியே மேற்கூறிய விலக்கத்தக்க மரங்கள் வீணாதண்டத்திற் காகா. அவற்றைக்கொண்டால் நால்வகை இசைக்குற்றத்தை யுண்டு செய்யும். நால்வகைக் குற்றமாவன.—

"செம்பகையார்ப்புக்கூடமதிர்வு.

அவற்றுள்,

செம்பகை யென்பது பண்ணோரா
வியைபிலோசை யென்மனார்புலவர்.

தூர்ப்பேனப் படுவ தளவிறந்திசைகரும.
கூட மெனபது குறிவுறவிளமபின
வாயவதினவாராது மழுஙகியிசைபப தூவே.
அதிர் வேனப்படுவதிழுமெனலினறிச
சிதறியுளாகருரு ருசசரிபபிசையே "—எனபவ[illegible]ம.

பஞ்சபாரதீயம்.

" இனனிசைவழியதனறியிசைததலசெமபகையதாகும
சொனனமாததிளாயிஞேநகவிசைததிடுஞசுருதியாாபபே
மனனியவிசைவராதுமழுஙகுதலகூடமாகும
நனனுதாலசிதறவுநதலதிரவெனநாடடிஞரே. "—

ஆதலின மேறகூறிய குறறஙகளேப பயககவலலவாகிய விலக மரங்களே நீக்கி உததமமாகிய விதிககப்பட்ட மரஙகளால வீணைதல டஞசெய்யவேணடும.

" சொல்லிய கொனறை கருங்காலி மெனமுருக்கு
நலல குமிழுந தணககுடனே—மெல்லியலா
யுததம மான மரஙக ளிவையெனறா
விததக யாழோா விதி. "

" தளமாய்ச சமஙிலததுத தன்காற்று நான்கு
முளதா யொருஙகூன மினறி—பளவு
முதிரா திளகாது மூன்றுஙகூ றாய
வதுவாகில வீணைதண் டாம். "

" பதுமங்கழலருடநதாடியொடேள்ளிபண்பூண்டுகினற
விதியமாதணடுகுடையேருமியெயககோட்டுறபின
மதியமாபோதிகைபுடடினமுகஞசுவாமனனெருததம
விதியமாபததாக்குறப்பெனறுமைததனாயினனிடையே. "-

என்றபடியே நலமுடைய மரஙகளேக கொண்டு, நல்ல விலககல சம்பந்தமாகவே நாலவகைய யாழையுஞ் செய்யவேணடும், நா

வகை யாழாவன — பேரியாழ் - மகரயாழ் - சகோடயாழ் செங்கோட்டியாழ் என்பனவாம்.

"பேரியாழ் பின்னு மகரஞ் சகோடமுடன்
சீர்பொலியுஞ் செங்கோடு செப்பினார்—தார்பொலிந்து
மன்னுந் திருமார்ப வண்கூடற் கோமானே
பின்னு முளவே பிற" என்றபடியே நால்வகையாழுஞ் செய்கையில், பேரியாழுக்கு நரம்பு இருபத்தொன்றும், மகரயாழுக்கு நரம்பு பதினேழும், சகோடயாழுக்கு நரம்பு பதினாறும், செங்கோட்டியாழுக்கு நரம்பேழுந் தொடுக்கவேண்டும்.

"ஒன்று மிருபது மோரேழுமேற் பத்துடனே
நின்றபதி னாறேழு நேடுங்கால்—குன்றாத
நால்வகை யாழிற்கு நன்னரம்பு சொன்முறையே
மேல்வகை நூலோர் விதி." என்னு மிலக்கணத்தின்படி யாழிற்கு நரம்பெண்ணித் தொடுக்கையில், "கோட்டுப்புரி மயிர்த்துய்ம்முறுக்கிவை நான்கு நடுங்கா மரபிற்பகையென மொழிப" என்கூறியகுற்றம் நீங்கி, நரம்புகளைத் தொடுத்து, பண்ணல் பரிவட்டணை - ஆராய்தல் - தைவரல் - செலவு-விளையாட்டு கையூழ் -குறும்போக்கு ஆகிய கலைத்தொழி லெண் வகையா லிசை யெழுப்பவேண்டும். அவையாவன :—பண்ணல் - பாடநினைத்த பண்ணுக்கு இணை கிளை பகை நட்பான நரம்புகள் பெயருந்தன்மை மாத்திரையறிந்து வீக்குதல், பரிவட்டணை - அவ்வீக்கின நரம்பை அகவிரலாலும் புறவிரலாலுங் கரணஞ்செய்து தடவிப்பார்த்தல், ஆராய்தல் - ஆரோகண அவரோகணவகையால் இசையைத்தெரிதல், தைவரல் - அநுசுருதியேற்றுதல், செலவு - ஆளத்தியேகிரமப்பப்பாடுதல், விளையாட்டு-பாடநினைத்த வண்ணத்திற் சந்தத்தை விடுதல், கையூழ் - வண்ணத்திற் செய்த பாட்டெல்லாம் இன்பமாகப்பாடுதல், குறும்போக்கு-குடகச்செலவுந் துள்ளற்செலவும் பாடுதல் என்பன.

MAHAMAHOPADHYAYA
DR. U.V. SWAMINATHA IYER LIBRARY.

மேற்கூறிய எண்வகைத்தாகியகலைத்தொழிலால் இசையெழுப்பி, வார்தல் - வடித்தல் - உந்தல் - உழற்றல் - உருட்டல் - தெருட்டல் - அள்ளல் - பட்டடையெனனும் எண்வகைப்பட்ட இசைக்கரணத்துடன் உடற்குற்ற முதலியவை நீக்கப் பண்பாடவேண்டும். உடற்குற்றமாவன :—

" கண்ணிமையார் கண்டர் துடியார் கொடிறசையார்
பண்ணளவும் வாய்தோன்றாப் பற்றெரியார்—வெண்ணிலவை
கள்ளார் நரம்தெரியற் கைதவனே காந்தருவர்
உள்ளாளப் பாடலுணர் "என்றகுற்றநீங்கிய வகையாகப் பாடவேண்டும் அவற்றின் உட்பிரிவுகளோடு நன்கு விளங்கத் திருவாய் மலர்ந்தருளி, யாழ்வாசிக்கும்முறையிலக்கணங்களை உபதேசித்தமைக்கேற்ப, இலக்கியமாகத் தாமே தமது திருக்கரத்தில் யாழேந்தி, திருத்தோளிலணைத்து நின்று இசையெழுப்பி வாசித்துக்காட்டினர். அது கேட்டமுனிவர் உள்ளங்களி கூர்ந்தனர். தேவர் - மனிதர் - விலங்கு புள்முதலிய பிராணிகளெல்லாம் இன்பமிக்கு வாழ்ந்தன. முனிவர் முன்னேனை வீணைகானத்தாற் சாமகீதம்பாடித் துதித்தனர்.

சிவபெருமான் வீணையினிலக்கணத்தை யுணர்த்தித் தமதுதிருக்கரத்து வீணையேந்தி வாசித்துக்காட்டிய திருவுருவமே வீணாதக்ஷிணாமூர்த்த மெனப்படும்.

வீணாதக்ஷிணாமூர்த்தயே நம :



35 காலாந்தகமூர்த்தி.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

## முப்பத்தைந்தாவது

# காலாந்தக மூர்த்தி.

மிருகண்டுமுனிவர் என்பவர் முற்கலமுனிவர் தவப்புதல்வரா கிய மருத்துவதி யென்னுங் கன்னியை மணந்து, நெடுங்காலம் புத்திரரின்மையாற் காசிக்ஷேத்திரத்தை யடைந்து மணிகர்ணிகையில் ஸ்நானஞ்செய்து சிவபெருமானை நோக்கிப் புத்திரப்பேற்றினை யவாவித் தவஞ்செய்ய, பெருமான் பிரத்தியட்சமாகி, "முனிவனே! தீக்குணம் - ஊமை - செவிடு - குருடு - மூடம் - தீராப்பிணி - அறிவின்மையாகிய இவற்றோடுகூடிய நூறுவயதுயிர்வாழும் புதல்வன் வேண்டுமோ? அல்லது அழகு - நல்வடிவு - நோயின்மை - எமதன்பு முதலியவற்றைப்பெற்றுப் பதினாறுவயது ஜீவித்திருக்கும் மைந்தன் வேண்டுமோ? சொல்" என, முனிவன் "வயதுகுறைந்து வாழ்வானாயினுஞ் சற்புத்திரனே விரும்புகிறேன்" என்று விண்ணப்பிக்க, அவ்வாறே வரமளித்து அந்தர்த்தானமாயினர். பிறகு சிறிதுநாளில் அம்முனிவன் மனைவி கருப்பமுற்று நல்லசுபமுகூர்த்தத்தில் லோகமைந்தனைத் தந்தனள். தேவர் புஷ்பமாரி பொழிந்தனர். தேவதுந்துபிமுதலியன முழங்கின. பிரமதேவன் அச்சிறுவனுக்கு மார்க்கண்டனென நாமகரணஞ்செய்தனன். உபநிட்டானம் - சந்திமிதித்தல் - அன்னப்பிராசன முதலியவற்றை முறைப்படிசெய்து ஒருவருடத்திற் றலமயிர்களைந்து இரண்டாம்வருடங் காதுவேதனமியற்றி, ஐந்து வயதில் உபநயனம்நடத்தி வித்தியாப்பியாசஞ் செய்வித்தனர். மார்க்கண்டேயர் வேதாகமமுதலிய நூல்களிற்றோய்ந்து சிவபெருமானே உண்மைப்பொருளென் றுணர்ந்து சிவபக்தியுஞ் சிவனடியாரிடத் தன்பு

மதிகரித்தனர். அவ்வாறிருக்கையில் வயதுபதினாறாகவே தாயதந்தை யர் இவரைப்பற்றி யெப்போதுந் துன்புற்றிருந்தனர். அதனை யுணர்ந் தென்னென்னக்கேட்க, உண்மையுரையாராகிக் கடைசியிற் சிவபெரு மான் தனக்களித்தவரத்தைத் தந்தைசொல்ல " எந்தையே! யான் சிவார்ச்சனைசெய்து பெருமானது பேரருளால் இயமனைவென்றுவரு கிறேன் அஞ்சவேண்டாம்." என்றுகூறி விடைகொண்டு, காசிக்ஷே த்திரத்திலமணிகன்னிகைக்கருகே சிவலிங்கப் பிரதிட்டைசெய்துபூ சைபண்ணி எம்பெருமானால் " இயமபயம் நீங்குக" என்னும் வரம் பெற்று, மீண்டும் பூசாகாலந்தவறாது பூசித்துவருகையில் மரணகா லங்குறுகவே, இயமன் தூகட்டளைப்படி ஓர் தூதனவந்து அவர்துபூசா பலத்தினற் சமீபிக்கக்கூடாதவனாய்ச் சயமினிநகரஞ்சேர்ந்து தன் தலைவனுக்குச் சாற்ற, அவன்கோபித்துத் தன்கணிகராகிய சித்திர குத்திரனை வரவழைத்து அவர் கணக்கைவிசாரித்தறிந்து தனமந் திரியாகிய காலனையனுப்ப, காலன்போய்ப் பார்த்துத் தன்னாலொன் றுஞ் சாயாதவனாய்த் திரும்பிவிட, இயமன் ஆலகாலம்போற் கொ தித்துத் தன் மகிஷவாகனத்தை யழைப்பித்துத் தானே அதின்மீ தேறி மழு - தண்டம் - பாசம் - சூலம் இவற்றையேற்று, குடையுங் கொடியுந் தூதர்தாங்கிவர, மார்க்கண்டேயரைக் கிட்டியழைக்க, அவர் வராமையால் வெகுண்டு, நெருப்பெழச்சிரித்துப் புறக்கைகடி த்துச்சிரத்தையசைத்து,"பிரமாதிதேவர்களும் யானுமே ஒருகாலத் திறப்போமானல் நீயோ வரமாட்டாதவன்" என்று கோபத்துடன் நீலமலைபோல நின்று கழுத்திற்பாசத்தைவீசி யிழுக்க எத்தனிக்கை யில்,மார்க்கண்டேயர் பயந்து சிவலிங்கக்குறியைத் தழுவிநின்றனர். அதுபொழுதில் ஆபத்சகாயராகிய சிவபெருமான் " அஞ்சாதிரு" என்றருளிச்செய்து அச்சிவலிங்கமூர்த்தத்தி னின்றுந் தோன்றித் தமது இடதுகாலாலுதைக்க இமைப்பொழுதில் இயமன் உயிர்நீங்கி னன். பின்னர்ப் பூமியில் மரணவத்தையின்மையாற்பூதேவி சுமை யாற்றளாய்க் குறையிரப்ப, அருட்பெருங்கடல் மீண்டும் அவனை

யெழுபபினா. மிருகணடு புததிரராகிய மாாக்கணடேயரைச சிரஞசீவியாககிக காலனை யடககியகோலமே காலாநதகமூாததமெனப பெயாபெறும.

## கட்டளைக் கலித்துறை.

“ பூமனசிரஙகணடியநதகனகோவலபுரமதிகை
மாமனபறியலசலநதரனிறகுடிமாபபழூா
காமனகொறுககையமனகடவூரிநதககாசினியிற
றேமனனுகொனறையுநதிஙகளுஞசூடிதனசேவகமே. ”

பிரஹமசிரசசேதம திருககணடியூரிலும, அநத காசுரவதம் திருககோவலூரிலும, திரிபுரதகனம திருவதிகையிலும, தக்ஷசமஹாரம் திருப்பறியலூரிலும, ஜலநதரவதம திருவிறகுடியிலும, கஜாசுரசமஹாரம திருபபழூவூரிலும, காமதகனம திருககொறுககையூரிலும, காலசமஹாரம திருககடவூரிலும நிகழநதனவெனக கூறபபட்டிருபபதால, இயமனையுதைததது திருககடவூரெனக்கூறுநரு முளா.

## கந்தபுராணம்.

“ மததத்தானமிககானமறறிவன மைநதனுயிாவவவப
பதைததா'னெனனுவுனனிவெருணடானபுதிழூனறுஞ
சிதைததானவாமசசேவடிதனனுறசிறிதுநதி
யுதைததானகூறறனவிணமுகிலபோனமண்ணுறவீழநதான. ”

காலாநதகமூாததயோம·

---

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

## முப்பத்தாறாவது

# காமதகன மூர்த்தி.

சீர்வாண்டங்களையும் பெற்ற தாயாகிய உமாபிராட்டியார் பர்வதராஜன் புத்திரியாகத் திருக்கோலங்கொண்டு இமோற்கிரியில் தவஞ்செய்துகொண்டிருக்கையில், சிவபெருமான் சநகனுதிமுனிவர்கட்காகக் கணப்பொழுது யோகத்திருந்தனர். அப்பொழுது அவனிமாக்கட்கும் அமரருக்கும் அநேகயுகங்களாயின. 'அரசனெவ்வழி யவ்வழியகுடி' என்றறபோலும் 'அவனசைந்திடி லுலகசைந்திடுமே' என்றறபோலும், எம்பெருமான் யோகத்திருந்ததலால் எவ்வகைய ஜீவான்மாக்களும் ஞானத்திறகூடி நின்றன. அதுகண்ட அமரர்கள் 'அரவாபரணன் அன்னையோடு கூடாது யோகத்துற்று முனிவர் போன்றிருத்தலின், எவரும் ஏந்திழையார் இணக்கமின்றி இறைவர்போலவே யிருக்கின்றனர். பிரமன் சிருட்டியும் பிறழ்ந்தது. அதுவுமன்றிச் சூரபன்மனால் துன்புற்றுச் சுவர்க்கலோகத்தைத் துறந்தோம்; என்செய்வோம்' என்று, திருக்கயிலையடைந்து எம்பெருமானைத் தரிசிக்கச் சமயமில்லை என்று திருநந்திதேவர் பணித்தமையாற் சிவத்தியானஞ்செய்து தவத்திருந்தனர். சிவபெருமான் இந்திரன் கனவிற்றோன்றி "வாசவ! வருந்தாதே; விரைவில் பார்ப்பதியை மணந்து புத்திரனொருவனால் உங்கள் துயரையொழிப்போம்" என்று திருவாய்மலர்ந்து மறைந்தருளினர்.

சிவபெருமான் கெடுகோள்யோகத்திருந்தமையால்வாசவன்பல தேவருடன்போய்ப் பதுமனுக்குக்கூற, பிரமன் யாவரையுங்கூட்டிக்



கொண்டு விண்டலைக்கண்டு விளம்ப, திருமால் "இறைவர் யோகம் நீங்கி இமாசலமன்னன் புதல்வியாகவந்த இறைவியை மணந்து ஒரு மகனைப்பெறும்படி மன்மதனைவிடுக" என மறுமாற்றங்கூற, மல ரோன் மதனனை மனத்தில்நினைக்க, கருப்புவில்லவி கணத்தில்வந்து கமலயோனியின் கழலவணங்கி "என்னைச் சிந்தித்ததென்" என, "கண்ணுதல் யோகு நீங்கிக் கவுரியை மணம்புரியும்படி மலர்க்கணை விடுக" எனக்கேட்ட மதனன் "சிவசிவசிவசிவ" என்று செவியைக் கரத்தாற்பொத்திக்கொண்டு, எண்கண்ணை நோக்கி "இசையேன்" என மறுக்க, சதுர்முகன் "தடுத்தாற்சபிப்பேன்" எனச்சாற்ற, அங்க சன் செங்கைகுவித்துத் திசைநோக்கி "உன்சாபத்தாலுயிரிழந்தொ ழிதலினும், பரமன்மேற் பாணப்பிரயோகஞ் செய்திறப்பது நலம்" எனக்கூறித் தன் ஆலயஞ்சார்ந்து, தன்மனைவியாகிய இரதிதேக்க, அவ் வேந்திழையைத் தேற்றி, அம்பறாத்தூணிகட்டி, சுப்பிரயோகம் - விப்பிரயோகம்-சோகம்- மோகம் மரணமாகிய பஞ்சாவஸ்தைகளையு முறையே உண்டுசெய்யும் தாமரை-மா-அசோகு-முல்லை - நீலமெ னும் ஐந்துமலர்க்கணைகளும், கருப்புநாண்பூட்டிய கருப்புவில்லும் மாந்தளிராகிய வாளும், எக்காளமாகிய குயிலும், முரசமாகிய கடலொ லியும், மீனமாகிய கொடியும், சந்திரனாகிய குடையுங்கொண்டு கிளிக ளாகிய குதிரைகள்பூட்டிய தென்றலாகிய தேரின்பேரில் இரதியுட னேறி, எண்ணில்லா மாதர்சேனை புடைசூழத் திருக்கயிலாயகிரியை யடைந்து பணிந்து, பரிசனங்களை நிறுத்தித் தேரினின்று இரதியுட னிறங்கிமலையின்மேலேறி விலங்குபுள்முதலியவை மோகங்கொள்ள த்தக்கவெவ்விய பாணங்களைவிட, திருநந்திதேவர் சிறத்தால் அவை அந்தரத்திலேயேவெந்தகன்றன. காமன் நந்தியெம்பிரான் கழல்பணி ந்து "சந்நிதானத்தினுட்செல்ல விடைதரவேண்டும்" எனச்சாற்ற, எம்பிரான் தமக்குமுன்கட்டளைசெய்தவகையே "மேற்புறவாயிலாற் செல்க" என்ற மேலோனைப்பணிந்து, கொம்பனையுடன்குடவாயிலாற் பிரவேசித்துக் குழகன் யோகிருத்தல்கண்டு கண்கூசி நடுநடுங்கி மூர்

சகிதது வீழ்ந்தனன. மாதுஉபசரிததலால மூாசசைதெளிநதெழுநத மதனன மாய மனாநதுணிநது, கருபபுவிலலைவளைததுச சுருப்பு நாண ஏறிடடுப பஞசபாணஙகளையும பரமனபேரிறபிரயோகிததனன.

அமமலாககணை அமலரது அருமைத திருமேனியிறபட, ஐயா நெறறிததிருவிழியைத திறபப, மதனன நீறுயினன.

இரதி பலவகையாகபபுலமபி பெருமானைத துதிகக, உமபாகா தா "உமையை மணநதபினனா உனகணவனைததருவோம" எனப அவள வணஙகி இமயமலையிலிருநதனள. தாறு சஙகரியின தவத தைச சோதிததுச சததருஷிகளால மணமபேசித தேவியை மணந தனா. அபபொழுது இரதி அரனைவேணட ஐயா உளததிலெணணி யவுடன பணடையவடிவுகொணடு காமன பணிநதுநிறக,எமபெருமா ன "இரதிககுமடடுமஉருவமாகவும, ஏனைய தேவமாநடாககு அருவ மாகவுமிருநது உனதுதொழிலைசசெயயக கடவாய" எனத திருவாய மலாநதருளினா. கநதாபபனை யெரிததமையாற காமதகனமூாததி யெனக கடவுளுககுப பெயராது.

**இராமாயணம்,**

அஶரீா கருத காம கரோதாதேவேஶவரேணவா
அநஙகஇதிவிகயாதஸததாபரபருதிராகவ

అశరీరఃకృతఃకామః క్రోధాదేవేశ్వరేణహ।
అనంగఇతివిఖ్యాత స్తదాప్రభృతిరాఘవ. ॥ రామాయణము.

**கந்தபுராணம்.**

"எரிபுனைநமதுநோககாலிறநதகினனுடலநீறுய்
விளாவொடுபோயிறறனறேவேணடினளிரதியனறுட
குருவமாயிருததியேனையும்பரோடிம்பாககெலலா
மருவினையாகியுனறனாசியல்புரிதியெனறுண"

காமதகனமூாததயேநம.



37. லகுளீஸ்வரமூர்த்தி.

உ

சிவமயம.

திருசசிறறமபலம.

## முபபத்தேழாவது

# லகுளேசுவரமூர்த்தி.

இலகுளேசுவரா வரலாறறினை விளககுவதறகுமுனனா அவ ரெழுநதருளியிருககும புவனததைக்கூறுதல இனறியமையாத தாத லின, அவவுலகவளவைச சிறிது கூறுகினறேன அணு எடடுககொ ணடது திரிசரேணு, அது எடடுககொணடது இலீகை, அது எடடுக கொணடது யூகை, அது எடடுககொணடது யவை; அநத யவவ குறுககாக எடடுககொணடது மானுஙகுலம. அது இருபததுநானகு கொணடது முழம, அது நானகுகொணடது வில; அது இரணடு கொணடது தணடம, அது இரணடாயிரஙகொணடது குரோசம; அது இரணடுகொணடது கெவியூதி, அககுரோசம நானகுகொண் டது யோசனை, அநத யோசனை நூறுகோடி கொண்டது பிரிதிவி ததது வததிலுளள வோரணடததின விரிவு. உயரமும் அவவளவின தேயாகும்.

பிரிதிவிதத்துவததில் ஆயிரகோடிஅண்டங்களுண்டு. இதைக் கடந்த அப்புதததுவம பதின்மடஙகு விரிவுமுயர்ச்சியு மேற்றஙகொ ணடிருக்கும. அப்புதததுவததைப்பற்ற, தேயுமுதற் பிரகிருதியீறுக அண்டங்கள பதினமடஙகுவிரிவு முயாச்சியு மிகுந்திருக்கும. முன் னைய பிரகிருதியைபபறற, இராகம் நூறுபாகம விரிவுமுயாசசியு மே ற்றங்கொண்டிருககும.அவவிராகத்தைப்பற்ற, வித்யாதததுவம நூறு மடங்குவிரிவுமுயாசசியுஙகொணடிருக்கும். அவவித்தையைப் பற்ற நியதிதத்துவம நூறுமடஙகு விரிவுமுயர்ச்சியுங் கொண்டிருக்கும்.

அங்கியதியைப்பற்ற, காலதத்துவம் நூறுமடங்கு விரிவுமுயர்ச்சியுங் கொண்டிருக்கும் முன்கூறிய காலத்தைப்பற்ற, கலாதத்துவம் நூற்றொரு பதினாயிரம் விரிவுமுயர்ச்சியுங் கூடும் அதன்மேல் மாயை - சுத்தவித்தை - ஈசுரம் - சாதாக்கியமுதலிய தத்துவங்கள் ஒன்றற்கொன்று முறையே கோடி - கோடியே பதினாயிரம் - இலக்ஷம்-இரண்டிலக்ஷம் - மூன்றிலக்ஷமுதலிய பாகங்கள் அதிகப்பட்டு நிற்கும்.

இங்ஙனமிருக்கு மண்டவிரிவில்,பிரிதிவிதத்துவமாகிய நிவர்த்திகலையின் ஒருதட்டில்,தேங்காய் விளங்காய் பரப்பினதுபோல ஆயிரகோடி யண்டமுண்டு அவை பொன்மயமாய அருக்கர் பதினாயிரர் உதயமானாற்போல, குக்குடாண்டம்போலிருக்கிற அண்டகடாகப் புறம்பே இந்திரதிக்குமுதலிய பத்துத்திக்கினுமுள்ள நூறுபுவனத்தினும் நூறுஉருத்திரரும், அவர்கள் புவனத்திற்குமேல், காலாக்கினியுருத்திரர் முதலியோர் புவனமாறும், அவற்றின்மே லிரண்டொக, அக்கலையில் நூற்றெட்டு புவனங்களுண்டு அவை —பத்திரகாளி - வீரபத்திர - திரிலோசன - விபஸ்ரூப - விவாஹ - ஸம்வாஹ-திரிதசேச - திரியக்ஷ - கனுத்யக்ஷ - விபு சம்பு-தமஷ்டரீ - வஜ்ர - பணீந்திர - உதும்பரேச - இரஸன - மாருதாசன - குரோதன - அநந்த-விருஷத்ர - விருஷ - பலிப்பிரிய - பூதபால - ஜியேஷ்ட - சாவகரேச - வேதபாரக - ஞானபுக - சர்வஞ்ஞ - ஈச - வித்யாதிப - பிரமத்த - பிரசாதக - சிரீதருக்கு - நந்தருக்கு- லக்ஷ்மீதருக்கு ஜடாதர - ஸௌம்யதேஹ - தன்னிய - ரூபவான - திரிச - மேகவாஹநகபாதி - பஞ்சசிக - பஞ்சாந்தக - க்ஷயாந்தக - தீக்ஷண - சூக்ஷ்ம-வாயுவேக - லகு - சீக்கிர - ஸுநாத - மேகநாத - ஜலாந்தக - தீர்க்கபாகு - ஜயபத்திர - ப்ஃவேத - மஹாபல - பாசஹஸ்த-அதிபல-பல - தமஷ்டரீ-லோஹித - தூம்ரக - விரூபாக்ஷ - ஊர்த்துவகேசப - பயாந்தக - க்ரூரதருஷ்டி - விக்ச - ஹர்த்ரு - மாரண - நிருதி - தாமபதி - தர்ம - வியோக்தரு - ஸம்யோக்தரு - காதரு - விதாதரு - தாத்ரு - ஹாம-மிருதயு - யாமிய - க்ஷயாந்தக - பஸ்மாந்தக - பப்ரு - தஹன-

ஜ்வலன - ஹாடகக - பிங்கள - ஸத்தாசன - அக்நிருத்ர - திரித
சாதிப - பிநாகி - சாஸ்தரு - அவ்யய - விபூதி - பிரமாதந - வஜ்ர
தேக புத்த-அஜ - கபாலீச - ரௌத்திர - வைஷ்ணவ - பிராஹ்ம-
ஹாடக - கூஷ்மாண்ட - காலாக்கினிமுதலிய மேற்கூறிய புவனங்
கள் நூற்றெட்டனுள் முதலிற்கூறிய இரண்டுபுவனங்களும் பிரமாண்
டத்தின்மேலிருக்கும் அவையொழிந்த பத்துப்புவனங்கள் பூமியின்
மேலுயரவிருக்கும். அவையொழிந்த பத்துப்புவனங்கள் பூமியின்
அதோமுகத்திருக்கும் அவையொழிந்த பத்துப்புவனங்கள் பூமியின்
ஈசானத்திலிருக்கும் மற்றவை பூமியின்வடக்கிலும், வாயுமூலையிலும்
மேற்கிலும், நிருதிதிக்கிலும், தெற்கிலும், அக்கினிதிக்கிலும், கிழக்கி
லும் முறையே பப்பத்துப்புவனங்களும், ஒழிந்த ஆறுபுவனமும் கா
லாக்கினி தத்துவத்தினு மிருக்கும். இவை முறையே நிவாத்திகலையி
லிருப்பனவாம்.

இதன்மேற் பிரதிஷ்டாகலையில், ஸ்ரீகண்ட-ஔம-கௌமார-
வைஷ்ணவ - பிராஹ்ம - பைரவ - கிருத - சகிருத - வென்கிற பிர
கிருதியினுங் குணத்தத்துவத்தினுமிருக்கும் எட்டுப் புவனங்களுக்கும்,
பிராஹ்ம - பிராஜேச - சௌம்ய - ஐந்திர - காந்தர்வ - யக்ஷ - ரா
க்ஷச - பைசாசமுதலிய புத்தித்தத்துவத்தி லிருக்கும் எட்டுபுவனங்
களுக்கும், அகங்காரத்தத்துவத்திலிருக்கும் ஸ்தூலேஸ்வரபுவனத்திற்
கும், மனஸ்தத்துவத்திலிருக்கும் ஸ்தலேஸ்வரபுவனத்திற்கும், ஞா
னேந்திரியத்திலிருக்கும் ஸங்குகர்ணபுவனத்திற்கும், கன்மேந்திரியத்
திலிருக்கும் காளஞ்சரபுவனத்திற்கும், மண்டலேஸ்வர-மாகோட -
துவிரண்ட - சகலாண்டமுதலிய பூதத்தன்மாத்திரையிலிருக்கும் எட்
டுப் புவனங்களுக்கும், ஸ்வாணுக்ஷ - பத்திரகர்ண - கோகர்ண- மகா
லய - அவிமுக்த - ருத்திரகோடி-வஸ்திரபாதமுதலிய ஆகாயதத்து
வத்திலிருக்கும் எட்டுப்புவனங்களுக்கும், பீமேஸ்வர-மகேந்த்ர-அட்
டஹாஸ - விமலேஸ்வர - நகலாய - நாகலாய - குருக்ஷேத்ர - கயமு

தலிய வாயுததது வததிலிருககும எடடெ புவனஙகடகும, பைரவ-கேதார - மஹாகாள-மததியமேச ஆமராதக - ஜலபேச- ஸ்ரீசைல-ஹரிசசந்திர முதலிய தேஜஸதத துவத திலிருககும எடடெபுவனஙகடகும், இடையில அபபுததது வததில பாரபூத-டிணடி முணடி-ஆஷாட-புஷகர-நைமிச பிரபாச அமரேசுவரபுவனஙகளினமததகததில இலகுளேசுவரபுவனம் ஜோதிமயமுறறதாயபபிரகாசிததுககொணடிருககும. அதில அவரெழுநதருளியிருககும ஆலயததின யோசனை அநேககோடி-அவா திருமேனியின பிரகாச யோசனை அநேக கோடி சிஙகாதனததின யோசனை அநேககோடி-அவா வலபபுறம மழு-சூலமும, இடபபுறம் கலசமும எடுதத திருக்கரமுநதாஙகி அபபுவனததிலுளள ஆனமாககடகுப பாசநீககததினபொருடடு ஆணவாதி மும்மலஙகளைபபோககி, நறகதி அநுககிரஹிகக ஆசாரியமூாததியாய வீறறிருபபா. இததகைய பெருமைகொணடு ஒவவொரு புவனததும ஒவவொரு மூாததியாயெழுநதருளியிருநது ஆஙகுளள ஆனமாககளின பரிபாகததிறகுத தககபடி யநுககிரஹிபபதுபோ லீணடு எழுநதருளியிருக்குஞ சிவபேதமே இலகுளேசுவரமூாததமெனப பெயருறும

## காஞ்சிப் புராணம்.

"அடுத்தஙகுடனுமபரமபொருளையனறேவிரவவொட்டாமல
தடுததுழக்கூறறுயிருணாவைத்தகையுமவிசசைமுழுதிரிய
மடுததகருணைததிருநோககினமாணுககருக்குப்பொருளுணாப்ப
எடுத்தகராததானவீறறிருககுமிலகுளேசனறிருவுருவம்."

இல்குளேஸ்வரமூாத்தயேகம :



38. பைரவமூர்த்தி.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

---

## முப்பத்தெட்டாவது.

# பைரவமூர்த்தி.

அமரர்கள் அஞ்சத்தக்க அந்தகன்போன்ற அந்தகன் என்னும் அசுரன் கரியமேகம்போன்ற பெரிய உடலும், சுருண்டு நெரிந்து செந்நிறம் வாய்ந்த தலைமயிரும், யானைத் துதிக்கை யனைய கரங்களும், தீயைச்சொரியுஞ் செவ்விய கண்களும், பிறைச்சந்திரன்போன்ற வக்கிர தந்தங்களும், கண்டோர் துக்கங்கூசத்தக்க காட்சியுமுள்ளவன். அவன் சிவபெருமானைத் தியானித்து, பஞ்சாக்கினிமத்தியிற் பலகாலங் கடுந்தவஞ் செய்தனன். அவனது அன்பின் முதிர்ச்சிக்கு அகமகிழ்ந்த அம்பிகைபாகர் இடபாரூடராய் இறைவியாருடன் காட்சியளித்து "யாது வரம்வேண்டும், ஓதுக" எனத் திருவாய்மலர்ந்தருள, அசுரன் "அருள்வள்ளலே! அரி அயன்முதலிய அமரர்களால் ஆவிசோரா மையும், அகற்றவொண்ணாத ஆற்றலும், அடியேனுக்கு அருளவேண்டும்" என வரம்வேண்ட, பத்திவலையிற்படுவோராகிய பரம்பதி "அவ்வாறேயாகுக" என அவனுக்குப்பிரசாதித்து அந்தர்த்தானமாயினர்.

இத்தரங்கறுத்தகண்ணுதலளித்த இந்நலவரத்தால்எவரையு மதியாது, அந்தமில்லாத அகந்தைபெற்ற அந்தகாசுரன், அம்புயத்தவனையும், ஐம்படைக் கிறையையும், மகபதி முதலிய வானவர் குழுவையும், அநந்தரம் அல்லல்படுத்தி அமர்செய்யத் துணைபுறுதிவந்தான். அத்தீயோனைச் செருச்செய்து செயித்தோர் தேவாசுரரி லொருவருமிலர். இவ்வசுரனால் இடையுறுது எய்தும் இடருக்கு என்செய்வோமென்றேங்கி மனமிளைத்தவானவர் மானமற்று மாலை முன் செல்ல

விடுதது, தாம யாவருஙகுழுமிப் பினசென று அநதகனையணுகி, ''அரசே! உனனையனறி உமபரைபபுரபபோா உலகததிலொருவருளரோ? இனி நீ பணிததகடடளையைச சிரமேறகொணடு நீ அறைநதவணணமே தொழிலாற றுவோம, எஙகளைக காககவேணடுமெ'' எனககூறினா. அதுகேடட அநதகாசுரன தனது தலையயசைதது, தடமபுயததை நோககி, புனமுறுவல பூதது, கணணிணையாற பணணவாகளைப பாாதது, ''ஆகாயவாசிகளே! ஆாபபரிககினற போாசசெயலில ஆணசிஙகததை யனையவன யானொருவனே, ஆதலின நீஙகள இதுமுதல நேரிழையாா நிகரவடிவுறறிருஙகள. கணகளில மைதீடடி, சேடியாபோலச சேலைதரிதது, மாதாகடகுரிய மணிபணி யணிநது, வாழநாள கழிக்கக்கடவீா, அவவாறன்றி உஙகளில யாவராயினும ஆடவ வடிவாய என கணமுன அகபபடின அனறே யழிநது பெயரொழிவீா; அதிதூரதேசததிற ககலுமின'' எனசசொலல, அநதரா அநதனபால அததகைய உததிரவுபெறறதே சாலுமெனறு அகமகிழ்ந்து நாணறறு நஙகைய ருருவேறறனா.

வானவா வனிதையாவடிவமேற்றபின, மானமற்றவொனமதித்து மவாகளை, அலலறபடுதேதும அநதகனசெயலுககு ஆறறவில்லாது ஸ்ரீமந்தரமலையை யடைநது, மஹாதேவனாப பணிநது மால-மலரோன - மகபதிமுதலிய யாவரும மாதாவடிவுடன் வநதையணிநததகையால் மலாகொணடு சிவலிஙகாாசசனை யியற்றினா. அவவந்தரததோரது அனபின மிகுதிககு அஙகளி துளுமபிய அரவாபரணா அறவிடையூாநது அனனையாருடன காட்சிதநதருளினா. அதுகணட அசசுதன - அலரோன - அயிராணிகேளவனுதி யமராகள உள்ளததிலாணர்த வெளளமுதிதது, '' பரமபதியே! பாவியாகிய அநதகன படுத்திய பாடடிறகுபபதறிப்புரதவித்திருநதோம்! பினனொருதினத்தில் அன்னவற்பணிய, பணணவரே பாவையர்வடிவா யாவருமிருப்பின், இன்னல் செய்யிலேனென்றனன்; அன்னது மேற்கொண் டரிவைய

ருருவமாகியும், அந்தரம் அல்லல் புரிகின்றனன்; ஆதலின் அடியேங்களுயிர்களிரங்கி அவனது உயிரையொழித்து, எங்கள் முதுகிலெய்திய புண்ணைப் போக்கியருளவேண்டும். அவ்வாறு தேவரீர் திருவுள்ளமிரங்காவிடின் யாங்கள் துன்பக்கடலினின்று கரையேறுதலில்லையாகும்" என்று பலவகையாகப் பணிந்து துதித்தனர்.

சிவபெருமான் தம்மையாசித்த தேவர்கட்குத் திருவருள்புரியத் திருவுள்ளங்கொண்டு, "இமையவரே! இனி நீங்கள் நண்ணிய பெண்ணுருவுடனே இமயவல்லியின் தோழியர்களாகிய கணங்களோடு வாழ்ந்திருங்கள். உங்களை எதிர்ப்பானுக்கில் ஓரிமைப்பொழுதில் அவனுற்றலைப் பாற்றுதும், அஞ்சன்மின்" என்றருளிச்செய்து அவர்கட்கருளுந் தனியிலிருந்தனர். அதனை யறியா அந்தகன் அவ் வானவரைப் பண்டுபோற் போர்செய்தொறுக்கும்படி வெள்ளமாகிய சேனையுடன் மேவித் துணைபுறத்தினன் அவன்றன் பிறகுச்சகியாத சேஷசயனன் முதலிய தேவர்கள் இமைப்பொழுதில் மந்தரமலையை யகன்று திருக்கயிலாயகிரியையடைந்து, திருச்சந்நிதானத்தின் திருவாயிலுட்பிரவேசித்துச் சிவத்தியானஞ்செய்து முறையிட்டனர். அருட்பெருங்கடலாகிய அண்ணல் தம்முன் னின்ற பைரவக்கடவுளுக்குத் தேவர் துயர்நீக்கும்படி அவ்வந்தகனது வலிமையும், அவனை யுயிர்போக்கும் வழியையும், திருவாய்மலர்ந்தருளினர். இறைவ ரிசைத்தவற்றைச் செவிசாத்திய வடு பைரவப்பெருமான் கோபாக்கிர சித்தமுடையவராய் வாள்போலும் பற்களையுடைய அந்தகாசுரனது ஆவியை யருந்துமபடி, நெருப்புப் பொறிகளைச்சொரிந்து சுழல்கின்ற கண்களையுடைய கணங்களோடு கணமொன்றில் யுத்தசன்னத்தராய்ப் புறம் போந்தனர்.

தேவாசுரர்கட்குக் காலன்போன்றகடியோன், அண்ணல் வருவதுகண்டு, அளவில்லாச் சினங்கொண்டு, கண்ணில் நெருப்புவிண்டு, கையிலெடுத்த தண்டுடன் வல [illegible]

MAHAMAHOPADHYAYA

வாசேனையுஞ் செருவேற்றன. அமரரும் அசுரரும் அநந்தவகையாகப் போர்செய்தனர். அதில் அந்தகன் சேனைமுறிபட்டது. தண்டு - சக்கிரம் - பிண்டி - பாலம் - வாள் - பல்லயம் - தோமரம் - ஈட்டிமுதலிய எண்ணில்லா ஆயுதங்கள் பொடிபட்டன. மண்படு தூளி விண்ணிடையுலவித் தினகரன் தேரிற்பூட்டிய எழுபுரவிகண்களை மறைத்தன. கடலெனச் சோரிநீர்பரவியது. திசைகள் மயங்கின. நக்ஷத்திரங்களுதிர்ந்தன. உலகமதிர்ந்தது. அண்டகடாகம்பிளந்தது. இவ்வாறு வைரவக்கடவுளும் அந்தகனும் போர்புரிகையில், அசுரகுருவாகிய வெள்ளி செபித்த அமுதசஞ்சீவினி மந்திரத்தால் அசுரசேனை ஆருயிர்பெற்று மீண்டும் கெருளிகொண்டு சமர்செய்யத்தலையெடுத்தது. அஃதுணர்ந்த சிவபெருமான் அவ்வெள்ளியை விழுங்கினர். கண்ணுதல் விடுத்த வயிரவப்பெருமானது கணங்கள் கணமொன்றில் அந்தகன் சேனையை யழித்தன.

உலகி லுள்ள உயிர்களெல்லாம் நடுங்க, ஊழிக்காலத்தி லுதித்த சத்தசாகரம்போல இரைந்துவந்து, வடவாமுகாக்கினியைச் சிந்தும் வலியோனாகிய அந்தகாசுரனை ஐயன் தமது அருமைத் திருக்கரத்தேந்திய முத்தலைவேலின் முனையிற்குத்தி, மேலெடுத்தெடுத்தனர். பத்தாயிரகோடி வருடமளவும் இரத்தவெள்ள மொழுகியது. பிறகு வைரவக்கடவுள் அந்தகனைக் கழுவேற்றியதுபோலச் சூலத்துடன் திருக்கரத்திறுாங்கி, கருணாமூர்த்தியின் திருச்சந்நிதியடைந்தனர். அந்தகன் அகந்தை நீங்கி, அநந்தவகையாகத் துதி புரிந்தனன்.

சோமசூரியாக்கினிகளையே திரிநேத்திரங்களாகவுடைய சுயஞ்சோதி "யாது வேண்டும்" என அந்தகனை வினவ, அந்தகன் "பூத கணங்கட்கு நாதனாகவேண்டும்" என வேண்டினன். கருணாமூர்த்தியாதலின் பெருமான் அவனுக்கும் மனமிரங்கி, வயிரவக்கடவுளது சூலப்படையினின் றிறக்கியருளி, பூதகணங்கட்கோர் தலைவனாக நியமித்தருளினர். பரமன் கயிற்றி லகப்பட்ட பார்க்கவன்

சுக்கிலத்துடன் தரணிமேற்றோன்றிச் சுக்கிரன் எனப் பெயரெய்தினன். தேவர்கள் தங்கட்குற்ற துயர்தொலைந்து சேயிழைவடிவையொழிந்து தமது புத்திரமித்திரருடன் சகலசுகமும்பெற்று விழைந்தவைகயே சிவார்ச்சனை முதலியன செய்து தத்தம்பதவியில் குறைவின்றி வாழ்ந்திருந்தனர்.

இரணியாக்ஷன் குமாரனாகிய அந்தகாசுரனைச் சங்கரித்துத் தேவர் துன்பகற்ற எழுந்தருளிய அவசரம் பைரவமூர்த்தமெனப் பகரப்படும்.

## உபதேசகாண்டம்.

“ பத்தாயிரகோடியெனும்பருவங்கட்கு
முத்தாளாயிறப்படைகொண்டனன்மொய்த்தசோரி
நெய்த்தாயுணங்கியொழுக்குற்றினைநீதி
பொய்த்தானையுணக்கினன்பூதநாதன்.

முதலிக்கணைநெற்றிவிழிக்கனன்மூட்டிவென்ற
குதலைக்கொடிபங்கனிட்டத்தெதிர்கொண்டுசென்றான்
விதலைப்படுவெந்திறலந்தகவெய்யனைக்கார்க்
கதலிக்கொடியாமெனமுன்னரிற்காட்டினனால்.

கைக்காவிடைதூங்குறவீங்குகட்டற்கடுங்கார்
மைக்காணமணிகண்டனையந்தகன்வாய்வழுத்தச்
செய்க்காணெடுமுச்சிகைச்சூற்படைநீக்கிநோக்கி
யுய்க்காரணம்வேணவெயாகொளுளாத்தியென்றான்.

மாதுக்கொருபங்கனையங்ஙனவணக்கியைய
பூதர்க்கொருநாயகனாகுதல்போற்றினனே
ணீதக்கதெனப்பணியென்றுநிகழ்த்தினனைப்
போதத்தலையன்னவற்காதுபுரிந்துநின்றான்.”

பைரவமூர்த்தயேநம:

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

முப்பத்தொன்பதாவது

# ஆபதோத்தாரண மூர்த்தி.

சர்வமங்கள தேஜோமயமாகிய சிவபெருமானே சகலஜீவான்மாக்களுக்கும் ஆங்காங்கு நேர்ந்த இடுக்கண்களைக் களைவாரன்றி வேறொருவர் துணையாதற் குரியரல்லர்.

பராசரபுராணம்.

ராஜாதிராஜஸ்ஸர்வேஷாம் த்ரியம்பகஸ்த்ரிபுராந்தக:
தஸ்யைவாமசராஸ்ஸர்வே ப்ரஹ்மவிஷ்ணவாதயஸ்ஸுரா:.

పరాశరపురాణము,

రాజాధిరాజస్సర్వేషాం త్రియంబకస్త్రిపురాంతకః ।
తస్యైవామచరాస్సర్వే బ్రహ్మవిష్ణ్వాదయస్సురాః ॥

அத்தகைய அருள்வடிவாகிய அண்ணல் அநந்தரம் அளவில்லாத அமரர்கள் தம்மை நாற்புறமும் புடைசூழ்ந்து நிற்கவும், அமரர்-சித்தர்-அசுரர்-தைத்தியர்-கருடர்-கிந்நரர் - நிருதர்-கிம்புருடர் - கந்தருவர்-யக்ஷர்-விஞ்சையர் -பூதர்-பைசாசர் - அந்தரர் - முனிவர் - உரகர்-ஆகாயவாசிகள் - போகபூமியர் என்னும் பதினெண்கணங்களும், பரஞானம் அபரஞானமாகிய இருவகை மதங்களையும் அருவியாறுபோற் சொரியும் ஐந்து திருக்கரங்களையும் யானைமுகத்தையு முடைய விநாயகமூர்த்தியும், அசுரர்பயமொழித்து அயிற்படையேந்திய அமரர் சேனாபதியாகிய ஆறுமுகப்பெருமானும், அபிராமி - மாயேச்வரி- கௌமாரி-நாராயணி - வாராகி - இந்திராணி-காளியென்னும்



39. அபதோக்கரண[illegible]

திருநாமங்களையுடைய சத்தமாதர்களும், சங்கு-சக்கிரம்-கதை - கட்கம் - கோதண்டமாகிய பஞ்சாயுதங்களைத் தாங்கிய பத்மநாபனும், கமலாசனத்திருந்து ஜீவான்மாக்களையெல்லாஞ் சிருட்டிசெய்யும் பிரமதேவனும், எண்ணில்லாத தெய்வங்கைகயார்குழாமும், சூரியன் - சந்திரன்-அங்காரகன்-புதன்- பிருஹஸ்பதி-சுக்கிரன்-சனி - இராகு-கேதுவென்னும் நவக்கிரகங்களும், முப்பான் மூன்றுகோடி தேவர்களும், அகஸ்தியர்-ஆங்கீரசர்-கௌதமர்-காசிபர்-புலத்தியர் - மார்க்கண்டேயர் - வசிட்டராகிய சத்தருஷிகளும், நாற்பத்தெண்ணாயிரவரான முனிவர்களும், பக்கங்களிற் கும்பல் கும்பலாகக் கூடிப் பணிந்து, தங்களுக்கு இடையூறு சம்பவித்தகாலத்தில், திருவருட்சகாயம் பெறக் கருதித் துதித்து நிற்கவும், நவரத்தினங்க ளிழைத்த பொற் சிங்காதனத்திற் சர்வாடம்பர சம்பந்நராய் வீற்றிருந்தருளி, அமரர்க ளாற் கூறக்கேட்ட குறைகளைக் களைவர்.

அவர்கள் விரும்பியவண்ணம் துயர்தொலைக்கத் திருவுளங்கொண்டு மானுடச்சட்டை சாத்தி இரண்டு திருக்கரங்களோடு தண்டமுங் கபாலமுமேற்று வீற்றிருப்பினும், அவ்வச் சமயங்கட் கேற்ப காணுவகையாகிய திருவுருவங்கள் கொண்டு அவரவர்கள் அவாவிய அடைவே இக்கணக்கினந்து இஷ்டசித்திகளைப் பெறும்படி அநுக்கிரகஞ் செய்யாநிற்பர். அவரது பலவகைத் திருவுருவங்களையும் விளக்குதற்கு முடியா.

### திருநாவுக்கரசுசுவாமிகள் தேவாரம்.

"மைப்படிந்தகண்ணாளுந்தானுங்கச்சி
மயானத்தான்வார்சடையான்மாசொன்றில்லா
னொப்புடையனல்லனொருவனல்ல
னோரூரனல்லனோருவமனில்லி
அப்படியுமந்நிறமுமவ்வண்ணமு
மவனருளேகண்ணாகக்காணினல்லா
லிப்படியனிந்நிறத்தனிவ்வண்ணத்த
னிவனிறைவனென்றெழுதிக்காட்டொணாதே."—

அம்முனிவர்முதலானோர் ஆபததுககாலததில், தமது துயாகூறி யாசிகக, அவாகள் துனபததைத தொலைததுச சகாயஞ்செயயுமபடி எழுநதருளியுளள திருககோலமே ஆபதோததாரணமூாதத மெனக் கூறப்பமே.

**காஞ்சிப்புராணம்.**

"கணஙகளகலுழிமதககடவுளகதிாவேறகுரிசிலெழுமாதா
விணஙகொடிகிரிபபடையோநதனிலவெணடோடமெலாபபுததே
ளணஙகுநவகோணமுனிவராசூழநதனுககராகபபொலிநதவிசி
னிணஙகுமாவறசகாயனெனுமிறைமைபபெருமானறிருவுருவம."

ஆபதோததாரணமூாததயோகம.



40. வடுகமூர்த்தி.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

---

## நாற்பதாவது

# வடுகமூர்த்தி.

சிவார்ச்சனைப் பலனாற் பெருவலியமைந்த துந்துபியென்போன் மைந்தனாகிய முண்டாசுரன் இளமைப்பருவத்திலேயே எம்பெருமானை நோக்கி, மழைநாளிலும் பனிநாளிலும் நீரிலிருந்தும், கோடைகாலத்திற் பஞ்சாக்கினி மத்தியினின்றும், பஞ்சேந்திரியங்களையொடுக்கி, பசிதாக நித்திரையொழிந்து, பரமபதியைக்கருதிப் பலகாலம் அருந்தவஞ்செய்தனன். முண்டாசுரன்கண் டானந்திக்கும்படி முக்கண் பொருந்திய முழுமுதற்கடவுள், அரிபிரமாதியர் இருபுறம் வரவும், தும்புருநாரதர் இசைபாடவும், பார்ப்பதிசமேதராய்க் காளகண்ட சதுர்ப்புஜ திரிநேத்திரங்களுடன் இடபவாகனரூடராய்க் காட்சிதந்தருளினர். அசுரன் அதுகண்டு, அளவில்லா மகிழ்ச்சிகொண்டு, தனது தவத்தை நிறுத்தி, சங்கரனைத் தேவியோடுதரிசித்து, சாஷ்டாங்கமாக நிலமிசைப் பலமுறை பணிந்து பண்ணிசையாற் பாடி, பரவசனாய்க் கூத்தாடிக் கைகட்டி நின்று "கருணாநிதியே! கடையேனையும் ஒரு பொருளாகக் கருதி, காட்சிதந்தருளினீர்" என்று மெய்யன்போடு துதித்தனன்.

அன்பார் துதிக்கு அகமகிழும் ஐயன் "வேண்டியவரம் யாது" என வினாவ, "அத்தனே! அடியேன் தேவாசுரரிலொருவராலும் தோல்வியடையாமலும், தேவரீரலன்றி ஒருவராலும் உயிரொழியாமலும், இருக்கத்தக்க வலியுதவவேண்டும்" என வேண்டினன். பெருமான் அவ்வாறே அநுக்கிரகஞ்செய்து அந்தர்த்தானமாயினர்.

முண்டாசுரன் அதிக வலியுற்றோனாய், முதலில் அசுரர்களைச் செயித்து அவர்களைத் தனது சேனையாகக் கொண்டனன். அதன்பின்னர் அமராவதிநகரமடைந்து, ஆண்டு வசிக்கும் அந்தரத்தவர்களைச் சிறைப்படுத்தி, இந்திரனோடெதிர்த்துச் செருச்செய்து, ஐராவதம் - அரம்பையர் - சங்கநிதி-பதுமநிதி-காமதேனு - கற்பகத்தரு முதலிய கணக்கில்லாத வளங்களைக் கைப்பற்றி, தோல்வியடைந்த அயிராணி கேள்வனைச் சிறைசெய்ய எத்தனித்தனன். அஃதறிந்த ஆகண்டலன் அம்முண்டனுக்குத் தப்பித்துக்கொண்டு க்ஷணமொன்றிற் சத்தியலோகஞ் சார்ந்து சதுர்முகக்கடவுளைச் சரணடைந்து அபயம்பெற்றனன்.

முண்டாசுரன் கோபமூண்டு, "முண்டகத்தவன் என்னினும் வலியனோ? அவனை இப்பொழுதே அடக்குவேன்" என்று அநேகஞ் சேனையுடன் அமர்க்கோலங்கொண்டு வருகையில், ஆரணன் அன்னவாகனமேறி ஆண்டெதிரடையக்கண்டு, அவனை வாகனத்துடன் மாய்ப்பேனென்று மாயை செய்துவருவதை நோக்கிய மலரோன் மனம்வருந்தி யெதிர்த்தனன். இசைத்தற்கரிய யுத்தம் எண்ணில் காலம் இருவருக்குமிகழ்ந்தது. வேதா யாதுவகையினும் முண்டனைச் சண்டையிற் சங்கரிக்க வலியற்றவனாய் மஹாதேவரை மனத்திலிருத்தி வருத்தத்துடன் "மங்கை பாகனே! கங்கைவேணியாய! எங்கணாயகா! சங்கரா சிவா!" என ஓலமிட்டழுதனன்.

உம்பர்கூடத்திடையே உமாதேவியாருடன் திருவோலக்கங்கொண்டெழுந்தருளியிருக்குஞ்சிவபெருமான்திசைமுகன்முறையிடுதலைத் திருச்செவியிலேற்று வடுகமூர்த்தியைப் பார்த்து "நீமுண்டகத்தவிசோனது துயரொழிய முண்டாசுரனுயிரை முடித்து வருதி" என ஆஞ்ஞாபித்தனர். வடுகநாதர் வள்ளல் கட்டளைப்படி வாயுவேகமாகச் சென்று மலரோனுக்குச் சேவைதந்து, "வருந்தாதே" என்று தேற்றி மனத்துயர் போக்கி, முண்டாசுரன் சேனை

யை மாத்திரையானறில் மாயத்தனா முண்டன் கண்டு தனியாக் கோபங்கொண்டு சண்டைசெய்ய எதிர்க்க, சிறிதுபொழுது அவன தாறறலறியப பொருதனா இருவருக்கும் இணையிலலாச சமரொயதி யதால இமையவா இடுக்கணெய்தி இறைவனைத துதித்தனா. வடுக நாதப்பெருமான ஒருமாத்திரைப்பொழுதில முண்டனை நெடுகோளாய ப பசியுற்றோனுக்குப பெருவிருந்திட்டாற்போல இயமன்வயிராறப புசித்துத தேகங்கெடுக்கும்படி அவனுயிரைச * சயமினி நகருக்கு யாத்திரை யனுப்பினா. பிரமன் துயரொழிந்து வடுகமூர்த்தியை வணங்கினன. தேவாகள புஷ்பமாரி பொழிந்தனா வடுகா மனக்களிப்புடன இந்திரனை அமராவதிக்கேக விடையளித்து, திருக்கயிலையையடைந்து விடையூாதிபால விணணப்பித்தனா.

பிரமன தன்னைத துன்புறுத்திய முண்டாசுரனுக்கு அஞ்சி முறையிட்டபொழுது, அவ வலலோனது கேணடுகோளுக இரங்கி விடையூாதி அவவிடுக்கண்டீாப்பானகருதி விடுத்த மூாத்தமே வடுக மூாத்தமெனப படும

வடுகமூாத்தயோகம:.

---

* சயமினி அல்லது சையமினி—இது யமனுலகத்தில் அவனாற் கொதுக்கொண்டிருக்கப்பட்ட இராஜதானிநகரம்,

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

## நாற்பத்தொன்றாவது

# க்ஷேத்திரபாலகமூர்த்தி.

ஆதிமத்தியாந்தரகிதராகிய சிவபெருமானே பலகோடி ஆன்மாக்களையும் பதுமனாகிப் படைத்தும், திருமாலாகிக் காத்தும், உருத்திரனாகிச் சங்கரித்தும், மகேசுரனாகி மறைத்தும், சதாசிவனாகி அநுக்கிரகித்தும், பஞ்சகிருத்தியங்களையும் இயற்றுகின்றார். அத்தகைய அமலரது ஆணைவழித்தாய அகிலாண்டங்களும் விளங்கும். அவ்வண்டங்கட்கிடையிற் சத்தசமுத்திரங்களையுஞ் சிறுதிவலைபோல எறிகின்ற மூலமகாசமுத்திரமாகிய பெரும்புறக்கடலும், உலகத்தின் மத்தியில் மேருமலையும் விளங்கும்

தனித்தனி இலட்சம்யோசனைவிஸ்தீரணமான நாவலந்தீவும் உவர்க்கடலும், அதனிரட்டிப்பு விரிவாகிய இறலித்தீவும் கருப்பஞ்சாற்றுக்கடலும், அதற்கிரட்டிப்பு விஸ்தாரமாகிய இலவுத்தீவும் மதுக்கடலும், அதற்கிரட்டிப்புப்பரப்பாகிய குசைத்தீவும்நெய்க்கடலும், அதற்கிரட்டிப்பு விசாலமாகிய கிரவுஞ்சத்தீவும் தயிர்க்கடலும், அதற்கிரட்டிப்பு அகலமாகிய சாகத்தீவும் பாற்கடலும், அதற்கிரட்டிப்பளவாகிய புட்கரத்தீவும் சுத்தநீர்க்கடலும், பத்துக்கோடி விஸ்தீரணமான பொன்மயமாகிய போகபூமியும், பதினாயிரங்கோடி யோசனை விஸ்தீரணமான சக்ரவாளகிரியும், கோடியே யிருபத்தேழிலட்சம் யோசனை விஸ்தீரணமான பெரும்புறக்கடலும், கோடியோசனைவிரிவுள்ள இருளுலகமும், நாற்பத்தொன்பதிலட்சம் யோசனை விஸ்தீரணமும் கோடியோசனை கனமுமான அண்டச்சுவரும் உடையது ஓரண்டம்.



௪௧. க்ஷேத்ரபாலக மூர்த்தி.

மேருமலையினடுவிலிருந்து அண்டச்சுவர்வரையில் யோசனைகள் ஐம்பதுகோடியாகக் கீழ்க்கிசையெல்லை விரித்துக் கூறினேம். ஏனைய மூன்று திசைகளும் இவ்வாறே விஸ்தீரண முடையன. அகலமும் நீளமும் உயரமும் தனித்தனி நூறுகோடியோசனை விசாலமுள்ள இவ்வுலகிய அண்டத்தினை ஒருழிகாலத்தில், மலையைப்போல அலைகள் தோன்றி, அண்டகடாகத்தை மூட்டி, அண்டஅடுக்குகளை நிலைகுலையச்செய்து, வெள்ளச்சுழியால் அட்டபர்வதங்களையும் அட்டதிக்கஜங்களையுஞ் சாய்த்து, பெரிய சக்ரவாளகிரியையும் மேருமலையையும் மறையச்செய்து, ஈரேழு பதினான்கு உலகங்களிலுள்ள பர்வதங்களெல்லாம் பாழ்படுத்தத்தக்க ஓர் பெருவெள்ளந்தோன்றியது. அதனால், நெடுங்காலத்தை ஆயுளாகக்கொண்ட அட்டமாநாகங்களும் நவக்கிரகங்களும் தேவர்களும் இந்திரன்முதலியவெண்டிசைக்கிறைவரும் கற்பகவிருக்ஷமும் சூரியசோமாக்கினியென்னும் முச்சுடரும் ஊர்வனநீர்வாழ்வன பறப்பன நாற்கால் தாவரம் மானுடராகிய எழுவகைத்தோற்றமு மொழிந்து, சொல்லப்பட்ட பல பொருள்களு மழிந்து, எல்லாவுயிர்களும் முறையே மாயையி லொடுங்கி, அண்ட முழுவதும் அந்தகாரமயமாயிற்று அநேககாலம் இவ்வா றகன்றது

சூத்திரிகன் பதுமையைச் சிறிதுகாலமிறுத்தி மீட்டுமே அதனை யாட்டுவிக்க வெடுப்பான்போல, அருள்வள்ளல் அகிலத்தை அடைவே சிருட்டிசெய்யத் திருவுள்ளஞ்செய்து, சர்ப்பாபரணமும் புலியதளும் மழுமானேந்திய திருக்கரங்களும் கடுக்கைத்தொடையும் காளகண்டமும் கனல்விழியும் கரந்து, கௌரியம்மையாருடன் கலைக்கொட்டட்டையுங்கலைகளாய்த்தாங்கி, பிரணவமே தோணிவடிவாக நிற்க அதன்மீ தாரோகணித்தனர் நீங்கா நிலையாய நிறைந்த பேரருள் எம்பெருமானது திருவிருப்பின்படிநீங்கியது அறமொன்றுதவிர அனைத்து மழியுமென்று கூறும் ஆன்றோர் கருத்தின்வண்ணம் எஞ்சிநின்ற வந்நான் மகாதேவனைத் தோணிமேல் துணைவியாருடன் வீற்றிருக்கக்கண்டு திருவடிகளைச் சேவித்துத் துதித்து, பலமு

ததுமுதலியவறறு னருசசிதது நிறக, அமலா அவவருணனுககு அருளசுரநது அநுககிரகிதது, அவனளவிலிருகக ஆஞஞாபிதது, திசைககாவலரைநிறுவி,வெளளபபெருககைத தமது நுதலவிழியால நொடிபபொழுதில விலககி, பணடுபோற பலரையும படைதது, அவரவா பதவியிலமாததி,அகிலலோகஙகளையும ஆதரிதது அமமையாருடன திருததோணியில வீறறிருநதனா.

க்ஷேததிரம=பூமி, பாலகா=காபபவா,—எனவேக்ஷேததிரமாகிய உலகததுககு ஊழிகாலததில உறறதுனபததைததீாதது ரகஷிததருளினமையால உமைகேளவனுககு க்ஷேததிரபாலகமூாததி யெனபதோா திருநாமம வழஙகிவருகினறது.

### சீகாழித்தலபுராணம்.

“ விரிதிசைபுரபபானெடடுவியனகணததலைவாகவேலிக
கிரிபுரைதணடமேநதிகேத்திரபாலனாகி
புரிசடைமுதலவனசூழநதுபுறநதருநதோணிமேறகொண
டரிபபடாதுலகஙகாககுமனனையோடிருநதானெனதை.
கமலநாரணனெனுஙகுஙகடையினுமுதலவனுவா
னிமலனேயனறிவேறுநிலையுநாயாரோயாககுந
தமரசாகரநீாமோததமுயிாசாமபினுலா
யமரனொனறுளைபபாரனனோபெறறியையறியாரனறே.”

க்ஷேததிரபாலகமூாததயேநம:



42 வீரபத்ரமூர்த்தி.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

## நாற்பத்திரண்டாவது

# வீரபத்திர மூர்த்தி.

காசிபப்பிரமாவின் மனைவியராகிய திதி அதிதி யென்னுஞ் சேயிழையார் பெற்றதேவர்களும் அசுரர்களும், தீராப்பகையாற் செருச்செய்தல் வழக்கமாதலின், முன்னொருகாலத்தில் அவ்வாறடைந்த அமரில், அமரர் வலியுற்றவர்களாய் அயிராணிகேள்வனைத் துணைகொண்டு, அவுணர் சேனையை ஹதஞ்செய்ய, அவர்களில் வலியோர்களும் ஆற்றாது புறமுதுகு காட்டியோடினர் அகப்பட்டோர் கரம் சிரம் முதலிய உறுப்புகள் அறுபட்டு அவதியடைந்தனர். வருந்தி வலியிழந்த தானவர், வானவரைச்செயிக்க வகையேதென்று மனங்குழம்பி தமது குலகுருவாகிய சுக்கிரபகவானை யடைந்து, அவனது துணைமலரடியைப்பணிந்து, தமக்குற்ற துன்பத்தைச்சொல்லி, "எமது குடிமுழுவதும் அடிமைகொண்ட குருநாதா! இமையவர் எங்களை யிறைப் போரிலலைத்தனர், அவர்களை வெல்லவல்ல வல்லமையுண்டாம் வகையை உபதேசித்தருளவேண்டும்" என்று பணிந்துவேண்ட, பார்க்கவன் பச்சாத்தாபமுற்று "பண்ணவரைப் பதைக்கப்பண்ணுவேன்; பதறவேண்டாம்" எனக்கூறித்தம்முன்னின்றிருந்தோரைத்தேற்றினன்

சால்கட்டங்கடர் சங்கடத்தைச் சாலவுஞ்சிந்தித்தவெள்ளி வீ மார்த்தாண்டன் என்னும் நாமமுடைய ஒருவனே உம்பரைத் துன்புறுத்தத் தக்கவன் என்றுள்ளத்தி லுன்னி, அன்னோனையழைத்து "அம்புயத்தவனை அகத்திலிருத்தி அருந்தவமாற்றி, அதிகவல்லமையடைந்து அமரரையலைத்தி" என்று, தவஞ்செய்யவேண்டிய முறை

மையையுஞ் சாற்றிவிடுத்தனன் முனிவன்று பதமுண்டகங்களைப்ப
ணிந்துவிடைபெற்ற வீரமார்த்தாண்டன் மலைச்சாரலையடைந்து ஓரி
ருப்பூசிமேற்பெருவிரலூன்றி நின்று பஞ்சாக்கினிமத்தியிற்பலகாலம்
பதுமனை நோக்கித் தவஞ்செய்தனன். தவாக்கினி தேவருலகஞ்செ
ன்று ஆண்டுள்ள அந்தரத்தவரைத் தகித்ததால், துன்புற்ற சுரர் இர
ணியகருப்பனைத்தரிசித்து "வீரமார்த்தாண்டன் தேவரீரைநோக்கிக்
கடுந்தவம் புரிதலின், அத்தக்கினிச் சுவாலையாய் அடியேங்களைத் துன்
புறுத்துகின்றது அதனை விலக்கியருளவேண்டும்" எனப் பிரார்த்தித்
துக்கொண்டனர்.

பிரமதேவன் "அவ்வாறேயாகுக" எனத்தேவர்கட்குத் திரு
வாய்மலர்ந்து விடைதந்து, வீரமார்த்தாண்டன் தவச்சாலைக்கு அம்
சவாஹனத் திவர்ந்துசேர்ந்து, அவன் தவஞ்செயலாலிளைத்து என்
புருவாயிருத்தலைக்கண்டு, இரக்கங்கொண்டு, கமண்டலநீரை மொண்டு,
அவன்மேற்புரோக்ஷிக்க, அதனால் அசுரன் பண்டுபோலாயினன். வே
தன் "வீரமார்த்தாண்ட! நின் தவத்திற்கு வியந்தேன், இறப்புநிகழ
வெதிரெனு முக்காலத்தும் உன்னைப்போன்று தவமுஞற்றுவாரொ
ருவருளரோ? விழைந்தனகூறின் விரைவிற்றருவேன்" என, அசுரன்
"அண்ணலே! திரிலோகத்திலும் என்னைச்செயிப்போரொருவரின்றி
அரசாற்ற அவாவினேன், அவ்வகைய வரம் வழங்கவேண்டும்" என
யாசிக்க, கமலயோனி அவ்வாறே கடாக்ஷித்து அந்தர்த்தானமாயி
னன். அவ்வீரமார்த்தாண்டன் அலரோனளித்தவரத்தால் அகந்தை
யுற்று, அளவிலாத அசுரசேனையைக்கூட்டிக்கொண்டு அமரர்க்கோ
லமாய அமராவதிநகரஞ்சார்ந்தனன். அஃதறிந்த அயிராணிகேள்வன்
ஐராவதத்திலேறி எதிர்க்க, இருவருக்கும் இடையறாப்போர் பலகா
லம் நிகழ்ந்தது; கடைசியில் ஆகண்டலன் தோற்க, அவனை நகர்கட
கத்துரத்தி இந்திரபட்டணத்திலேயே அரசுசெய்திருந்தனன், அவ்
வெற்றியால் மனந்திருப்தியடையாமல் அடிக்கடி அக்கினி முதலிய
திக்குப்பாலகரைத் துன்புறுத்தியும், தேவமாதரைச் சிறைசெய்தும்,

பசுமாதைகளைககொனறும, ருஷிசிரேஷ்டாகள செய்யும் யாக கரு மஙகளைச சிதைததும, எணணிட டொைததறகரிய இடுககண புரிநது வநதனன

சகலவுலகையிலுந தஙகளைச சஙகடபபடுததிய வீரமாாததாண டனைச சஙகரிதது அவனுலாகிய பாதைமொழிநது உயிாபிழைக்க, உமபாகள ஒருஙகுகூடி, ஆலோசிததுககொண டிருநதவறறை நார தமுநிவராற கேளவியுறற வீரமாாததாணடன சினமிககொணடு தேவாகளையெலலாஞ செருசசெயது, பெருநதுயா விளைததனன. அது பொழுது அமராகளஞசியோட, வீரமாாததாணடன துரததிக் கொணடுபினவர, தேவாகள திருககயிலாயகிரியை யடைநது திரு நநதிதேவா விடைபெறறுத திருசசநநிதானததினுட பிரவேசிதது சிவபெருமானைத தரிசிதது, அஷடாஙகபஞசாஙகமாக நமஸகரிதது, தமககுறறதுனபததை முறையிடடனா வானவா வழஙகியமாறறத தை, மனததுடகொணட மஹாதேவா "அவனை யழிபபோம, அஞ சலிா" என்று அநுககிரகிதது, வீரபததிரரை விளிதது "அவனைய ழிததி" என ஆஞஞாபிகக, ஆணடவா அநுமதிபபடி அவ வீரபத்தி ரக்கடவுள் சிறிது சேனையை யுடனவரககொணடு, தானவததானை யைச சடுதியிறசஙகரிதது, வீரமாாததாணடனுடன எதிாததனா. அவனபலவகை மாயைபுரிய, வளளல அதனை மாததிரைபபொழுதில மாறறி, அவனோடருமபோா புரிநது கடைசியில வீரமாாததாணட னைச சஙகரிதது, தேவா துயரைததீாதது, இநதிராதிதேவாகளை அவ ரவா பதவியில விடுதது, உலகததிலுளள உயிாகடகுச சுகவாழவளி தது, வெளளிமலை யடைநது தமது வெறறிசசெயலைச சிவபிரான பால விணணபபிததனா.

தேவா துயா தீாதது, அவாகடகுச சுகவாழ்வளிக்கவும, வீரமா ாத்தாணடனைச சஙகரிககவும, சிவபிராஞல் அனுபபியகோலமே வீர பததிரமூாதத மெனவிளமபபபடும்.

வீரபததிர மூாததயேநம :

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

## நாற்பத்துமூன்றாவது

# அகோராஸ்த்ரமூர்த்தி.

சிவப்பிரசாதத்தாற் பல போகபாக்கியங்களையும் பெற்று, தனக்கொருவரு நிகரில்லாத்தருக்குற்ற சத்ததந்து என்போன் செல்வச் செருக்கால், தான் அத்தகையபேற்றினை யடைந்ததற்குக் காரணம் சிவார்ச்சனையென்பதை மறந்து மதிமயங்கி (தக்ஷப்பிரசாபதியைப் போலவே) தானோர் வேள்விசெய்ய வேட்கையுற்றவனாய், வானவர் இருடியர் முதலானோர் வரவேண்டுமென விளித்து, மேருமலைச்சாரலில் ஓர் யாகஞ்செய்ய எத்தனித்து, பிரமதேவனைப்பார்த்து "நீ யாகஞ் செய்விக்க" என்றனன். அருகிருந்த திருமால்வெருண்டு "முக்கண்ணன் சேவடியில் விழிமுளரி பெய்தன்றோ-சக்கரமு மலர்த்திருவுந் தண்பருஞ்செல் வமுமடைந்தேன் - அக்கடவு ளருள்சிறிதுமடையாரேற் றம்பத்தி - லெக்கடவு ளேவென்றுங் கேமாப்புற் றிருக்குமால்" என்றும், பிரமதேவன் "யாகபுருஷனாகிய சிவபெருமான் எழுந்தருளியிராத யாகம் இடையூறுபடுமேயன்றி நிறைவேறாது" என்றும், இந்திரன்முதலிய இமையவர் குழாமும் எஞ்சிய முனிவர்களும் "இது தகாது; ஈசனையன்றி யாகஞ்செய்தல் நிஷ்பலம்" எனவுங் கூறித் தடைசெய்தனர்.

அவ்வாறு அமரரும் முனிவரும் சாற்றக்கேட்ட சத்ததந்து சாலவுங் கோபங்கொண்டு, பற்களைக்கடித்து மீசைதுடிக்க, கண்களில் நெருப்புப்பொறிகளைக் கக்கினன். கமலாசனன் இனி இவனால் யாது தீங்கெய்துமோவென்று மனத்தினெண்ணி, ஒன்றுங் கூறமாட்டாமல் உடன்பட்டு, சங்கரனைநீங்கிய சகலதேவர்களையும் பல முனிவரையும்



(கூ உ ச.)

43 அகோராஸ்த்ர மூர்த்தி.

உடன்கொண்டு யாககாரியந் தொடங்கினன். இஃதிவ்வாறிருக்கையில், திரிலோக சஞ்சாரியாகிய நாரதமுனிவர் சத்ததந்து செய்யும் யாகச்செயலை யறிந்து விரைந்து நடந்து வெள்ளியங்கிரியை யடைந்து, திருநந்திதேவரது விடைபெற்றுத் திருச்சந்நிதானமுற்று, சிவபிரானைப் பலமுறை பணிந்து கைகூப்பி, தனது மகதியாழை யெடுத்து, தயாநிதி களிக்கும்படி சாமகீதம்பாடினர். சிவபிரான் "நாரத முனிவரே! யாதுவிஷயம்" என ஒன்று மறியார்போன்று வினவ, நாரதர் "சர்வஜ்ஞகத்த சுதந்தரமுற்ற சம்பு! தேவரீரையின்றிச் சத்ததந்து செய்கின்ற யாகத்தை யழித்தல்வேண்டும்" என்று விண்ணப்பித்து, சிவாநுக்ஞை பெற்றுத் தமது விருப்பின்படி சென்றனர்.

சிவபெருமான் மண்டலத்தைத் தேராகவும், உலகத்தைச் சக்கரமாகவும், அக்கினிபகவானை வில்லாகவும், சந்திரனை நாணாகவும், வருணனைப் பாணமாகவும் வைத்து, குமாரக்கடவுளைத் தேர்ச் சாரதியாக நியமித்து, யுத்தக்கருவிகளைச் சித்தஞ்செய்து, அருகிருந்த **வீரபத்திரரை** நோக்கி "நீ அக்கொடியோனையும் அவன் யாகத்தையும் அழித்து வருக" என்று ஆஞ்ஞைசெய்ய, வீரபத்திரர் அகோர ரூபமுற்று அளவில்லாப் பூதசேனைகள் புடைசூழ்ந்து வர இரதாரூடராய முருகப்பெருமான் தேரைச் செலுத்த மேருமலைச் சாரலை யடைந்தனர், அது சங்கதி யறிந்த இந்திரன்-பதுமன்-பஞ்சாயுதன் முதலானோர் பதைபதைத்து நாற்பக்கத்திலும் ஓடத்தலைப்பட்டனர். பெருமான் கணங்கள் கணக்கில்லாத தேவர் முனிவர் முதலானோரை முடித்து, இந்திரன் பிரமன் முதலிய இமையவர்களையுஞ் சந்திர சூரியரையும் பற்றிக் கொணர்ந்து முன்னிறுத்த, அவர்களைத் தமது திருவுள்ளத்திற் கியைந்தவண்ணந் தண்டஞ்செய்து, கையிலேந்திய வருணாஸ்திரத்தைப் பிரயோகித்து அந்த யாகத்தை யழித்தனர். சத்தந்து சாலவுஞ் சினந்து சமர்க்கோலமுற்றெதிர்வர, அவனை அகோராஸ்திர மொன்றினால் ஹதஞ் செய்தனர். முனிவர் வெருண்டோடினர். இறந்த இமையவர் மனைவிமார் "எம்பிரானே சரணம்;

எங்கட்கு மாங்கல்யப் பிச்சை யருள்க" என்று பிரார்த்தித்தனர். பெருமான் கருணைகூர்ந்து திருவுள்ள மிரங்கினர். அதனால், அவர்கள் அவ்வாறே உயிர்ப்பெய்திச் சாஷ்டாங்கமாகப் பணிந்து தத்தம் பதவி சார்ந்து வாழ்ந்தனர். ஏனைய தேவர்களையும் செல்லவிடுத்து, தமது சேனாவெள்ளத்துடன் திருக்கயிலையை யடைந்து சிவபிரானிடம் விண்ணப்பித்து வீற்றிருந்தனர்.

அகோராஸ்திரமொன்றினால் சத்ததந்துவைச் சங்கரித்து அவ்வனமகத்தையு மாய்த்தமையால், பெருமான் அகோராஸ்திரமூர்த்தி யென்ப் பெயரடைந்தனர்.

"தக்கனைப்போ லோர்வேள்வி தான்செய்யத் தேவரொல்லா
மிக்கவவி யுண்ணவந்த வேலையினக்கண் — அக்கணமே
விண்டலமே தேராக மேதினியே வண்டிலெனக்
கொண்டிழுக்கும் வாயு குரகதமாய் — மண்டுமே
அனலே சிலையாக வம்புலியே நாணாப்
புனலே யடுசரமாப் பூட்டி — சினவடிவேல்
சேனாபதி தானே தேர்க்கடவிச் செல்லவெதிர்
வானோர்கள் கண்டு மருண்டோட — வானாத
இந்திரனை மாலயனை யீராறு சூரியரைச்
சந்திரனை மாதவரைத் தாக்கியே — வெந்திறல்சேர்
அந்த மகமு மடர்ந்து வருனாச்சத்த
தந்துவையு மாய்த்த தகைபோற்றி" — என்றார் பிறரும்.

அகோராஸ்த்ரமூர்த்தயே நம.



44 தக்ஷயக்ஞஹத மூர்த்தி.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

## நாற்பத்துநான்காவது

# தக்ஷயஜ்ஞஹதமூர்த்தி.

சகலலோகங்களையும் பெற்ற தாயாகிய சங்கரியார் ஓர் லீலா மாத்திரையாய் தக்கன் புதல்வியாகத் திருவவதாரஞ்செய்தனர். சிவபெருமான் தேவியாரை மணந்து மறைந்தருள, அன்னையார் பண்டு போலத் தவச்செயலிலிருந்து இறைவரால் வெள்ளியங்கிரியுற்று வீற்றிருந்தனர். *அதனை அவ்வம்மையாரது தோழியர்சிலர் சொல்லக் கேட்ட தக்கன் மிக்க கோபமுற்று விடையூர்தியை மதியாதிருந்தனன். அமரர் அஃதறிந்து "நக்கனைமதியாத தக்கன் தனது தலையை யிழத்தல் சரதம்; அவன் பணித்த வகையி லொழுகும் பண்ணவராகிய யாமும் அவனுடனழியவரும்" என்று ஒருங்குகூடித் தக்கமாபுரியைச் சார்ந்து, அவனுக்குத் தக்க புத்திமதிகளை யறைய, அவன் "ஆனால் அதற்கென் செய்வது?" என, தேவர்கள் "திருக்கயிலையை யடைந்து சிவபிரானையுந் தேவியாரையுஞ் சேவித்துவருக" என, அவ னதற் கிணங்கி, அவ் வந்தரத்தவரை அங்கேயே நிறுத்திவிட்டு வெள்ளிமலையையடைந்து முன்வாயிற்புகக்கண்டகணநாதர் சிலர் "கண்ணுதலை மதியாத கடையோனே! உள் செல்லற் றொழி" என்று கடிந்து தடுத்தனர். தக்ஷன் அதனால் வருந்தித் தக்ஷணம் திரும்பித் தனது நகரமடைந்து தன்னைச் சங்கரன்பா லனுப்பிய உம்பருக்கு ஆங்குற்ற விசேஷத்தையுரைத்து, "இமையவரோ! இன்றைய முதல் ஈசனை மதியாதிருங்கள்" என, எல்லோரு மியைய, அந்தரத் தவரைத் தமது விருப்பின்படி யேக விடையளித்து விடுத்தனன்.

* விஸ்தாரம் கௌரீலீலாசமர்த்தத்தினிற் கண்டுகொள்க.

பிரமன் ஓர் வேள்விசெய்ய வுத்தேசித்துத் தன் ஏவல்செய்யுந் தனயனை நோக்கி, திருமால் முதலிய தேவர்களை அழைத்துக் கொண்டுவரும்படி யனுப்பி, தக்கன் முன் சாற்றியது சிந்தித்துத் தானிறக்கினு மிறக்கவென்று திடங்கொண்டு, திருக்கயிலையங்கிரியை யடைந்து, திருநந்திதேவர் விடைபெற்றுத் திருச்சந்நிதானத்தினுட் சென்று சிவபெருமானைத் தரிசித்துப் பணிந்து இருகரமுங் குவித்து "எம்பெருமானே! யான் செய்யும் யாகத்திற்குத் தேவரீர் எழுந்தருளவேண்டும்" என்று விண்ணப்பிக்க, நம்பர் "நம் முருவான நந்தியை விடுப்போம்" என்றருள, பதுமன் பணிந்து சென்று, தக்கனுக்குஞ் சொல்லித் தனது மனோவதிநகரமடைந்து, யாகஞ்செய்யத் தொடங்கினன். திருமால் முதலிய தேவர்கள் தக்கனுடன் யாகசாலை சார்ந்தனர். திருநந்திதேவர் சிவாஜ்ஞையின்படி நூறுகோடி பூதர்கள் புடைசூழ யாகசாலையை யெய்தினர். பிரமன் பார்த்தெழுந்து நமஸ்கரித்து ஆதனத்தமர்த்தினன். தக்கன் அதுகண்டு யாவ ரழைத்தனையென்று கூறி அம்சவாகனனை நோக்கி "நீ யாகஞ்செய்வதைச் சிவனுக்குச் செப்பினை, அவனு லனுப்பிய நந்தியைப் பணிந்து நம்முன்னிருத்தினை, பிதாவாதலின் உன்னை வெட்டாது விடுத்தேன்; பித்தனாகிய சிவன் அவிர்ப்பாகங் கொள்ளுதற்குரியனோ? இதுகாறும் அறியார்கள் செய்துவந்த வழக்கத்தை விலக்குக. விஷ்ணுவே உயர்ந்தவர். அவருக்கு அவியை முன்னே அளித்து, பிறகு ஏனையோருக் குதவுக" எனக் கூறினன். திருநந்திதேவர் சீற்றங்கொண்டு தக்கன் முகத்தைப் பார்த்து "மூடா! பரமபதியை நிந்தித்தாய்; ஈசனையன்றி யாகஞ்செய்வோர் தலையறுக" என்றும், "எம்மிறைவனை யிகழ்ந்த உனது தலையொழிக, சிவநிந்தைசெய்யும் நின்னோடு சேர்ந்த தேவர்கள் தீயோனாகிய சூரபன்மனால் துன்புறுக" என்றும், சாபமிட்டு, அவ்விடம்விட்டுப் பூதகணங்களுடன், மாதுபாகனாகிய ஆதிநாதனிடம் வெள்ளிமலை சென்று விண்ணப்பித்து வீற்றிருந்தனர். நந்தியெம்பெருமான் கூறின சாபத்திற் கஞ்சி யாவரும் யாகஞ்செய்யா தொழிந்தனர்.

அவ்வாறிருக்கையில், தக்கன் ஓர் யாகஞ்செய்ய நினைத்து விச்சுவகன்மனால், கங்கைக்கரையில் ஆயிரங்கோடியோசனை யகலமும் மிக வுந்நதமுமான ஓர் யாகசாலை நிருமிக்கச்செய்து, சில தூதர்களை நோக்கி "சிவபிரானை நீங்கிய தேவர்களையெல்லாம் அழைத்துவாருங்கள்" என அனுப்ப, அவர்கள் கூற, அமரர்கள் யாவரும் ஆண்டடைந்தனர். திருமால் - திசைமுகன் - தேவேந்திரன் முதலிய யாவரும் அங்கிருக்கையில், சாரங்கனைச்செயித்துள்ள ததீசிமுனிவர் வந்தனர். அவரது வருகையைக் கண்ட தக்கன் தனக்கஞ்சி வந்தனனென்க் கருதி, "மாதவரோ! வருக" என்று ஓர் ஆதனமளித்த தமாதரித்தனன். முனிவர் "என்னை யழைத்ததென்ன காரணம்?" என, தாக்ஷாயணியைச் சங்கரன் வதுவைசெய்தபின் நிகழ்ந்தன கூறி, "என்னை இகழ்ந்த ஈசனுக்கு அளிக்கும் அவிர்ப்பாகத்தை மாற்ற ஓர் யாகம் ஆற்றவேண்டுமாதலின், உம்மை யழைத்தோம்" என உரைப்ப, ததீசிமுனிவர் "சங்கரனே ஜகதீசன் அவ்வெம்பெருமானை விரோதித்து யாகஞ்செய்யேல்" என, தக்கன் பலவகையாக வினவி ஆக்ஷேபிக்க, * முனிவர் அவ்வினாக்கட்கேற்ப விடைகூறினர். அரிவைக்கு அர்த்தசரீரமளித்த அரனே அனைவர்க்கு முயர்ந்த கடவுளாயிருக்கினு மிருக்க. அவனுக்கு யான் அவிர்ப்பாகங் கொடேன், ஒன்று முரையாமற் போக." என, ததீசிமுனிவர் கடுங்கோபங் கொண்டு "இறைவனையின்றி யியற்றும் யாகம் இமைப்பி லொழியக்கடவது. உன் தலையறக்கடவது. உன்னோடிருக்கும் உம்பர் உயிரொழியக்கடவர்" என்று சபித்து, "முனிவர்களே! உங்கள் குலத்தினியற்கையிலகி, அரனையும் அடியாரையும் விபூதி உருத்திராக்கத்தையும் ஒழிந்து மோட்சமடையாமற்பிறந்துபிறந்திறக்கக்கடவீர்" என்று சாபமிட்டு, பல முனிவர் புடைசூழ்ந்துவரத் தம திருக்கை சார்ந்து சிவத்தியானத்திருந்தனர். அதன்பிறகு, தக்கன் அந்தணருக் கன்னமிட்டு ஆடை

* இதன் விபரம் விரிவு கருதி விடுத்தனம். ...ராணம் ததீசியுத்தரப்படலத்திற் கண்டுகொ...

MAHAMAHOPADHYAYA ... U. V. SWAMINATHA IYER LIBRARY, ... MADRAS-41.

பொன் முதலியன அபரிமிதமாக வளித்து யாகத்தை ஆரம்பித்தனன்.

அதனையறிந்த **நாரதமுநிவர்** திருக்கயிலைமலையை யடைந்து சிவபிரானைப் பணிந்து நிற்க, பரமன் "உலகத்தி லென்ன விசேடம் பகாக" என, முநிவர் "சங்கரா! தக்கன் பல தேவருடன் யாகஞ் செய்கின்றனன்" என விண்ணப்பித்தனர். **உமாதேவியார்** உடனே எழுந்து உமைபாகனைப் பணிந்து "எம்பெருமானே! எந்தை யியற்றும் வேள்வியைக் காண வேட்கையுற்றேன்" என, விமலர் விடை யளித் தனுப்ப, ஓர் விமானமேறிச் சிலசேடியருடன் பிதாவினபாற் செல்ல, தக்கன்கண்டு சற்றும் உபசாரஞ் செய்யாமல் இகழ்ந்து "இப்போதே போக" என்று ஈசனையும் நிந்தித்தனன். கௌரி கடுங்கோபங்கொண்டு கயிலையங்கிரியை யடைந்து கருணாமூர்த்தியைப் பணிந்து "தக்கன் யாகத்தை யழித்தருளல்வேண்டும்" என்று விளம்பினர். முன்னோன் அதனை முடிக்கமுன்னியவளவில், நிமலரது நெற்றி விழியினின்றும் ஆயிரந்திருமுகங்களும் இரண்டாயிரந் திருக்கரங்களுங் கொண்டு **வீரபத்திரர்** திருவவதாரஞ்செய்தனர். அப்பொழுது அம்மையாரது அளவில்லாச் சினத்தால் ஓராயிரஞ் சிரமும், ஈராயிரங் கரமுங் கொண்டு உக்கிரமாகாளியுதித்து வீரபத்திரர்பக்கலிற் றேவியாய் வீற்றிருந்தனள்.

வீரபத்திரர் விரைவுடன் சிவபிரானையுந்தேவியையும்பணிந்து "அடியேனுக்கு யாது கட்டளை" என்றறைய, நம்பர் "நம்மை மதியாத தக்கன் யாகசாலைக்குப்போய் அவிப்பாகங் கேள், கொடாதே தாற் பெற்று வா; தடுத்தால் அவன் தலையை யறுத்து ஆண்டுள்ளோர் ஆவியை யகற்றி அவ் யாகத்தை யழித்துவிடு, யாமும் வருவோம்" என ஆஜ்ஞாபிக்க, வீரபத்திரர் விடைபெற்று, தமது திருமேனியில்தோன்றிய **பூதப்படையும் காளியும்** உடன்வர, உலகமதிரவும், சுவாசத்தாற் கடல்கள் நிலைகலங்கவும், பேரிரைச்சலால் திக்குகள் செவிபடவும், சுமையாற்றாது ஆதிசேடன் முடி குலுங்கவும்,

நடையா லெழுந்த தூளி சத்தசமுத்திரங்களையுந் தூர்த்துச் சூரிய வொளியை மறைக்கவும், தக்கன் யாகசாலையை யடைந்து பூதசேனையை அதன் வாயிலிலும் மதிற்புறத்திலும் காவலர்க ணிறுவி, காளியுடன் யாகசாலையுட் பிரவேசித்து, யாகஞ்செய்வது கண்டு, நெருப்புப்பொறி பறக்க விழித்து, இடிபோற் கர்ச்சித்து, வெற்றிபொருந்திய ஊதுகொம்பினை நாதஞ்செய்தனர் அவ் வோசையால் ஆண்டுள்ளோர் செவிடுற்று, அவரது சொரூபக்காட்சியாற் கண்கலக்கங்கொண்டு மூர்ச்சித்து விழுந்தனர்

தக்கன் வீரபத்திரக்கடவுளைப்பார்த்து "இங்கு வந்த காரணமென்ன?" என, வீரபத்திரர் 'சங்கரனனுப்ப இங்ஙனம் வந்தனன், அன்னோன் அவிப்பாகத்தை யென்முன் னளிக்க" என, அவிவழங்க நிற்கும் தக்கன் "அவிவழங்கேன்" என்றனன். அதுகேட்ட அண்ணல் ஆண்டுள்ள அமரரை நோக்கி "உம்பர்காள்! உங்கள் சம்மதம் யாது?" என வினவ, அவர்கள் ஊமைகள்போல ஒன்றுமுரையாதிருந்தனர். உடனே உக்கிரமூர்த்தி உலகம் நடுங்க நகைத்துத் தண்டாயுதத்தாற் சாரங்களை யடித்தனர். மாதவன் அதனால் மரணாவஸ்தைக்குச் சமானமாக மதிமயங்கி வீழ்ந்தனன். பிரமனைத் தலை குலுங்கும்படி குட்டினர் அவனும் அவனிமேல் அவசமாயினன். சந்திரன் கண்டு ஐயோவென் றெழுந்தோட அவனுடல் தேயும்படி காலினாலே தேய்த்தனர். தேவர்கள் பலரையுந் துன்புறுத்தினர்.

வீரபத்திரரேவலால் வெளியே நின்ற பூதகணங்கள் அவ்வெம்பிரானது கட்டளை யேற்று, மதிலையிடித்துக்கொண்டு, போரெனப் புகலக் களிப்புற்று, சூரியவொளியும் பின்னிடச் சிரித்து, யாகசாலையிற்றீமூட்டி, யூபஸ்தம்பங்களை யொடித்து, சிலதேவர்களைத் தின்று, சில முனிவர்களை மென்று, அமரர் சிலரை அண்டமுகடு சேரப் பந்தடித்து, அட்டதிசைகளிற் செல்ல அநேகரை வீசி, சத்தமேகங்களையும் பிழிந்து தாகந் தணித்து, தம்பங்களிற் கட்டிய யாகப்பசுக்களைக் கட்டவிழ்த்துவிட்டு, இயக்கர் - கின்னரர் முதலானோர் நா மூக்கு-விழி

கரம-சிரம - முழநதாள முதலியவறறைச சேதிததுப பல கொடு தொழில புரிநதனா. இதுகணட யஜ்ஞன் இனியாவதிலலை யெனறு கலையுருககொணடு காலாற காலபோற படரககணட வீரபததிரா அக கலையின கொமபைப முரிதது அமபொனறினுல ஆருயிாமாயதத னா. பூதா "நாத! அசசுதன ஒருவனே எமைததடுககினறனன" என, சிஙகவேறுபோனற வீரபததிரா "எஙகுளான, எஙகுளான" எனறு செனறு, மஙகுலபோல வடிவமைநத மாயனைக கணடு, "கொ டியோய! கொடியோய! கொனறைவேணியன குரைகழலமீது ஆயிரஙகமலததால அருசசனை புரிகையில, அனனதி லொனறினை ஐயன மறைபப, அமபக மிடநதபபி அனனவனருளாற சுதரிசனம் பெறறதை எதனுல மறநதனை? யாகபுருஷனுகிய நீ தககனைக காத் துச செருசசெயவையோ? உயி ரிழபபையோ? உரைகக' என, தாமோதரன "தக்கனைக காபபேன சமாசெயக" எனறு கருடன் பேரி லேறினன. அழறகண வநத அணணல அதுகணடு அணடகோ ளகையும அபபாலுள்ள அணடமும மேருமலையும சகரவாளகிரியும் வெடிபடவும, எணடிசையுஞ செவிடுபடவும, மேகவணணனுககு ஓ ரிடிபோல தோனறவும, கையிலிருநத வெறறிசசஙகததை வாயவைத துதிப் போா தொடஙகினா. இருவரும பெருஞசமாசெயதனா. கடைசியிற கருடன சிறகுகளை வெடடி, கையிற பிடிதத விலலை முரித்து, ஏனைய ஆயுதஙகளையும இமைபபிற சஙகரிதது, மாயனை மூாசசைபபடுததிப பூமியில விழசசெயதனா மூாசசை தெளிந்தெ ழுந்த முகுநதன கையி லிருநத சககிரததைச செலுத்த, ஐயன அதனைப்பற்றி அயினறனன. விணடு வாளகொணடு முனவா, உககி ரமூாததி உஙகாரஞ செயதனா. திருமால சிததஙகலஙகிச சிததிரம் போற செயவ தொனறு மிலலாது நிலமிசை வீழ்நது கிடந்தனர். [அவா இச சமரில் ஏனைய தேவர்கள் தண்டிக்கபபடடாற போல, தனது உயிரையும போக்கினதாக வடநூற் பிரமாணங்களால் விள க்குகின்றது. அவறறுட் சிலவற்றை யீண டுதகரிததிருக்கின்றேன.]

அதுபொழுது அமரரில் அநேகர் மரிந்தோரும் மதிமயங்கினோருமாய் மகச்சாலையில் வீழ்ந்துகிடந்தனர். தக்கன் வெருண்டு தண்டாயுதந் தாங்கிவர, வீரபத்திரர் அவன் தலையை யரிந்து யாககுண்டத்திலிட்டு ஓமாக்கினிக்கூட்டினர்; பலதேவர்களையுங் கண்டு அவர்களில், இந்திரனைத் தண்டாலெறிந்து மூர்ச்சையாக்கி, அக்கினியின் அஸ்தத்தை யறுத்து, அண்டமுகட்டு திருமபடி வீராட்டகாசஞ்செய்து இயமனை இருகரங்களாற்பற்றிப் பிழிந்து அவனது வெற்றுடலை நாற்றிசையிலும் வீசி, அவனது மேதியின் கொம்பை முறித்து வீழ்த்தி, நிருதியின் தோளை யரிந்து, வருணன் உந்தியை வாளினாற்றுண்டி, வாயுவை உச்சுவாசத்தால் வருத்திப் பறத்தி, கோபத்துடன் குபேரன் தோளைக் கச்சினாற் கட்டி, பூடா வென்னும் பரிதியைப் போடாவென்று பல்லுதிர்த்து, பகன் என்னும் பகலோனது அம்பக மகழ்ந்து, அரியமா வென்னும் ஆதவன் றோளை யரிந்து, சமீபித்த தக்ஷபுத்திரர் பதின்மரை வாளாற் சேதித்து, வசுக்க ளெண்மரையும் மருத்துவரையும் வாய்வழி சோரி வழியப் புடைத்து, பல நூல்களைக் கற்றும் பரமசிவனே பரம்பொருளென்றுணராது அப்பொருள்மால் என்று மால்கொண்டுள்ள வானோர் பலரையும் வதைத்தனர்.

தக்கன் தலையிழந்ததுகேட்ட அவன் பிரதானபத்தினி வேதவல்லி பாங்கியர் சிலருடன் ஆங்கடைந்தனள். அவள் வருவதுகண்ட காளியம்மை அவளது காதினை யறுத்துத் தரையிற்போட்டு, தக்கனது மற்ற மனைவிமார் தலைகளை யறுத்துப் பந்தாடி, நாமகள் திருமகள் நாசியை யரிந்து, இந்திராணியின் இணைமுலை களைந்து, அதிதியினது அதரத்தை அரிந்தெறிந்து, அக்கினிதேவன் மனைவியாகிய சுவாகாதேவியின் வலமூக்கும் இடத்தனமும் நகத்தாற்கிள்ளி, ஏனைய மாதரது செவி-நா-மூக்கு-முலை-முதலியவற்றைக் கொய்து துன்புறுத்தினள்.

வீரபத்திரர் வெகுளிமீக்கொள ஆகாயத்தில் அசரீரி "கோபந் தணிக" எனக் கூறக் கேட்ட உக்கிரர் சிறிது சினங்குறைந்தனர்.

சிவபெருமான் உமாதேவியாருடன் இடபாரூடராய் ஆண்டு காட்சியளித்தனர். வீரபத்திரமூர்த்தியும் காளிகாதேவியும் அவ்விருவர் முன்சென்று பணிந்தனர். உலகமாதாவாகிய உமாபிராட்டியார் அவ்யாகசாலை முற்றும் தேவர்-அரம்பையர்-முனிவர்-முனிமாதர் - தக்ஷவம்சத்தார்முதலானோர்து பிரேதங்கள்வீழ்ந்துகிடக்கக்கண்டு மனம்பொருது" எம்பெருமானே! இவர்கள் யாவரும் இவ் வேழைமையின் பொருட்டிறந்தோ ராதலின், இவர்களை யெழுப்பியருளவேண்டும்" என்ப் பிரார்த்திக்க, கருணைமூர்த்தி களிகூர்ந்தவராய் வீரபத்திரராலேயே அவர்களை யெழுப்பி உயிர்ந்தருளினர். இமைப்பி லுயிர்பெற்ற இந்திரர்களேவன்-எண்கண்ணன்-இமையவர்-இருடியர்-யாவரும் இமயவலவியாருடன் இடபாரூடராய் ஆகாயத்திற் சேவைதந்த ஜகதீசனது திருவடிகளை நிலமிசைப் பலமுறை வீழ்ந்து பணிந்து பரவிப்பயந்து நிற்க, பரமகாருண்யமூர்த்தி "அஞ்சாதீர்கள்" என்று திருவாய்மலர்ந்தருளித் தேற்றினர். பதுமன் தன் தனயனாகிய தக்கனைக் காணாது பதைத்து, பகவானைப் பணிந்து "கொடியோனாகிய தக்ஷனையும் எழுப்பிக் கொடுக்கவேண்டும்" என்றிரப்ப, சிவ கடாக்ஷத்தினால் வீரபத்திரர் தக்கன் சரீரத்தின்மேல் ஆட்டுத் தலையை யமைத்து "எழுக" என, அவனும் எழுந்து உளம் நாணி அச்சமுற்று விமலனை நமஸ்கரிக்க "வெருவேல்" என்று அருள்செய்து, விடையூர்தி வீரபத்திரருடன் வெள்ளிமலையடைந்து அவருக்கோருலகளித்து விடுத்தனர். பிறகு தக்ஷன் பிரமன் சாற்றிய புத்திமதியைக் கேட்டுச் சிவார்ச்சனைசெய்து சிவகணங்கட்குத் தலைவனாயினன்.

சிவபிரானைப் பகைத்துச் செய்த தக்ஷயாகத்தைச் சங்கரிக்க எழுந்தருளிய மூர்த்தமாதலின் தக்ஷயஜ்ஞஹரமூர்த்தமெனப்படும்.

ஏதத்தேவஸம்யோகாத்ரு காஹலவாஸஞாயவாய இதயாதித்தூராத க்கி: - விஷ்வேஸ்வரத்யோவிஷ்ணோ. ஶிர பாதுப்பிந்தயது-தத்துமப்பாத-யஜ்ஞோமுகஸ்தஸமைஸ்சசிரோ யசபாமகய - வாஜஸ்நேயந்தூராக்கி:ப்ரக்ருதயாமநத்தி-விஷ்ணோ:ஶிரப்ரதிஷ்டிதம்.—ஸ்ருதிகள்.

## லிங்க புராணம்.

*பபாதசததாபூமௌவிஸஂஜஞ புருஷோததம - புநருததாய தஂஹஂதுஂசகாரமுதயமயஸபரபு - வயஷடஂபததீநாதமாகரொணெ வஸதணஂசிசு - உதிஷடடெஜஜஂகிதஸதேநபாஷாணஇவநிஸசல. - தரிபிஶசகாஷிதஸதேநதவிதாபூதவைபரபோாதநு - ஸாாஙகேகோ டிபரஸஂகாசசசிசசெதஸஶிர பரபு - ததகஷணுதபததபூமயாஂஶிரஸ் தஸயதராதலெ - வாயுநாபரிதஂ சைவகராணஜெநபிநாகிநா - பர விவேஶகஷணுதேவததாஹயாஹவநீயகெ - ஶாாஙகேகோடிபரஸஂகா சசகேஶவஸயமஹாதமந - ஶிரஶிசசெதயாமாஸவீரபதரோமஹா பலஃ —யஜஞஸயஶிரஸஶசேததாபூஷணுதஂதவிநாஶக.*

*ஜடாதரஂஹரிதருஷடவாகரோதாதாரககலோசனம-தஸ்மாத தெஶாதபகாமயஞுபஜெஜாதாஂதாஹிதஸஜித* . **வாமநபுராணம்.**

## ஶாந்திபர்வம்.

*நசைவாகலபயதபாகமதகேஷாருதாஸயபாரத - ததஸ்ஸதேவீ வசநாததக்ஷயஜஞமபாதரவத - ஸஸாஜஂஶலஂகரொதெநபரஜவலந் தமமுஹஂமுஹு - தசசூலமபஸமஸாதகருதவாதக்ஷயஜஞஂஸவிஸ் தரம ஆவயோாஸஸஹஸஙகசசநபதாயாஶரமமஂதிகாத-வேகநமஹதா பாாதாபதநாராயணுபிச - ததஸததேஜஸாபஜுஷடா:கேஶாநா ராயணஸச - பபூவுாமுஂஜவாஞஸதுததோஹஂமுஂஜகேஶவாந - அ தயபரப்ருதிஸ்ரீவதஸ ஶஂலாஂகோமேபவதயயம.*

*சரோஞாதெஂதுவகதரோண ஸவிராடபரபூருஷம - மருகஞபே ணதாவஂதஂவிஶிரஸகஂததாகரோத.*—**வாயுஸம்ஹிதை.**

ఏతదేవ సంయోగాద్రుగాహవాసూర్యస్యేత్యాదిధనురార్త్నిః । వి ష్వరద్యోవిష్ణో శిరః ప్రతిభిందత్యతు । తతుమంపపాత । యజ్ఞోమఖస్తస్మైస భిన్నాయత్ప్రవర్గ్యః । వాజసనేయంధనురార్త్నిః ప్రకృత్యామనంతి । విష్ణోః శిరః ప్రతిషిందితం॥—శ్రుతి॥

లింగపురాణము.

పపాతచతథాభూమావిసంజ్ఞః పురుషోత్తమః। పునరుత్థాయతంవా। తుంచక్రముద్యమ్యసప్రభుః। వ్యష్టంభయదదీనాత్మాకరేణైవస్తనంశిశుః। ఉరిత్త్రైఘ్యంకితస్తేనపాషాణఇవనిశ్చలః। త్రిభిశ్చభుషితాతస్తే నద్విధాభూద్వైపభోర్ధనుః। శార్ఙ్గకోటిపరిసంగాచ్ఛ చిచ్ఛేదసశిరఃప్రభుః। తత్తుణాదపతద్భూమ్యాంశిరస్తస్యధరాతలే। వాయునాప్రేరితంచైవఘ్రాణజేనపినాకినా। ప్రవివేశత్వరాదేవతదాహ్యాహవనీయకే। శాఙ్గకోటిప్రసంగాచ్ఛకేశవస్యమహాత్మనః। శిరశ్ఛేదయామాస వీరభద్రోమహాబలః। యజ్ఞస్యశిరసశ్ఛేత్తాపూష్ణోదంతవినాశకః॥

జటాధరంహరిర్దృష్ట్వాక్రోధాదారక్తలోచనం। తస్మాద్దేశాదపక్రమ్యకుబ్జాధాంతహితస్థితః॥ వామనపురాణం॥


శాంతిపర్వము.

నచైవాకల్పయద్భాగందక్షోరుద్రస్యభారత। తతస్సదేవీవచనాద్దక్షయజ్ఞమపాద్రవత్। ససర్జశూలంక్రోధేనప్రజ్వలంతంముహుర్ముహుః। తచ్ఛూలంభస్మసాత్కృత్వాదక్షయజ్ఞంసవిస్తరం। అవయోస్సహసాంగచ్ఛబదర్యాశ్రమమంతికాత్। వేగనమహతాపార్థాపతన్నారాయణోరసి। తతస్తత్తేజసావిష్టాఃకేశానారాయణస్యచ। బభూవుర్ముంజవర్ణాస్తతోహంముంజకేశవాన్। అద్యప్రభృతిశ్రీవత్సఃశూలాంకోమేభవత్వయం॥

శరేణార్ధేందువక్త్రేణసవిరాట్పురపూరుషం। మృగరూపేణధావంతం విశిరస్కంతథాకరోత్॥ వాయవీయసంహిత॥

பல தேவர்களுக்கெய்திய தண்டனைகட்கு மேற்கோள வேண்டுவோர் கூர்மபுராணம் - ஸ்காந்தபுராணம் - இலிங்கபுராணம் - வாயு சங்கிதை - காசிகண்ட முதலிய நூல்களிற் கண்டுகொள்க. விரிப்பிற் பெருகும். தக்ஷயஜ்ஞபங்கமூர்த்தயேநம:

---



45 கிராத மூர்த்தி.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

---

## நாற்பத்தைந்தாவது.

# கிராதமூர்த்தி.

துவாபரயுகத்திலே பாண்டுபுத்திரர் சகுனியின் மாயச்சூதி
ராச்சியங்களைத் தமது ஞாதியாகிய துர்யோதனனுக்குத் தோற்
வியுடன்வனமடைந்து வாழ்ந்திருந்தனர். பிதாமகனுகியவே
ாசமுநிவர் அங்கெழுந்தருளக்கண்டு பஞ்சவரும் பாஞ்சாலியும்
அவரது பாததாமரையைப் பணிந்து தாம் படும்பாட்டினைக் குறைகூ
றினர். முநிவர் அவர்கட்கு அநேக அரசநீதிகளையும், நளன் முதலிய
ரசர்களுங் காலவித்தியாசத்தினால் கஷ்டப்பட்டனரெனப் பல
ராவசரிதங்களையுங்கூறி, அவர்கள் மனத்தைத்தேற்றி, சிவபெ
ருமானை நோக்கித் திருக்கயிலாயகிரிச்சாரலிற் பெருந்தவஞ்செய்து
வரது அநுக்கிரகத்தை யடையுங்கள்" எனறருளிச்செய்து, தவ
மேற்றுதற்கு முகூர்த்தமுங்கூறித் தமதிச்சையின்படி சென்றனர்.

அம்முனிபுங்கவர் ஆஜ்ஞாபித்தவண்ணம் அருச்சுனன் சடை
முடியும் மரவுரியுந் தரித்து, அம்பறாத்தூணியும் வில்லுந் தோளிற்
பூட்டி, வெள்ளிமலையின் மேற்புறமடைந்து, அது பர்வதராஜபுத்தி
யாராக உமையம்மையார் திருவவதாரஞ்செய்த புண்ணியக்ஷேத்தி
மென்று பணிந்தெழுந்து, முத்தழல வளர்க்கும் முனிவரர்பாதங்களை
முடிமேற் கொண்டு, இயக்கர் விச்சாதரர் சாரணர் முதலானோரைக்
கண்டு, சிங்கம்-புலி-யானை-கரடி முதலிய மிருகங்கள் சஞ்சரிக்கும்
ஆரண்யத்தை யகன்று, எம்பெருமான் வீற்றிருக்கும் புண்ணியவடி
வாகிய மலையை யண்ணி, இதயதாமரையில் இறைவனை யிருத்தி,
சிவாகமங்களிற் கூறியவண்ணமே திருவெண்ணீற்றினைத் தேக

முழுவதுஞ் சன்னித்து, அக்கமாலை யணிந்து தவக்கோலங்கொண் டொருகாலி னின்று, மற்றொரு காலை மடித்து நின்ற காலின் தொடையி லூன்றி, இருகரத்தையுஞ் சிரத்தின்மேற் சேர்த்துக் குவி, இருவிழியிலும் இடையறாது நீர்த்தாரை பொழிய, மனத்தைப் புறஞ்செல்லா தொடுக்கி மஹாதேவனைச் சிந்தித்து அருந்தவத் தமர்ந் தனன்.

அவனது தவமேம்பாடறிய இந்திரன் தனதுடன் தன்னுருச்சயனை செய்யுந் தவத்தைச் சோதிக்கும்படி அரம்பை யூர்வசி முதலிய தேவதாசிகளையேவினன். அவர்கள் அத்தகிருஷ்ண விருப்பின ஞனமொன்றில் ஆடல்பாடல்களிலிருந்தவாகி, பரிமளமிகுந்த மலர் சூடி, பறகுணந் தவழுமெய்யம் பணைசாலையுமாடி, பல விதம் தமதுருப்பருவமுடையா ரோடி, பாகசாதனனை, தேடி, நடத்த விருத்தங்கள் பயன்பெறவில்லையென றுவைபாடி, தமது பதிப்பிறகுடினா மகபதி தனதுமைந்தனது சிந்தையின் வன் மைக்குக்களித்து, சந்நிதிற் சென்று சயவிபசாரியைக் கண்டு சந் தோஷித்து, சத்துருக்களின்று மனவிருப்ப மறிந்து "பங்கையாக ருவாா, வரங்கள் பல தருவார்" என்று கைக்குமுண்டாக்கித் தன் னகரிற்குச் சென்றனன்.

இங்ஙனமிருக்க, சில சேடியரால் அருச்சுனன் செய்யு மருந்தவத்தை யறிந்த அம்பிகை அரனிட மணுகி "அண்ணலே அருந்தவமியற்றும் அருச்சுனனுக்கருள்புரியவேண்டும்" எனக் கூற, அரன் "தவமியற்று மிவனைக் கொல்லும்படி இவனுலாதி கூயோ னென் தனதுருவை முகாசுரனையேவினன், அவனும் பன்றிவடிவா யிலைச்சலமடைந்து சமயம் பார்த்துக்கொண்டிருக்கின்றனன்; ஆ யின் அவன் மீடிவைக்கொடிக் கொடியுமுன, அத்தானவனை சங்கரிக்கவேண்டும்" என்று திருவாய்மலர்ந்தருளி, திருக்கண்டு னை விளித்து "நாம் பன்றிவேட்டையாடவேண்டுதலின், கண ஞம் நீயும் கணமொன்றில் அதற்கேற்ற உருக்கொள்க" என

நாபித்து, தாமும் வேடுவ வடிவு தாங்கினார். உமாதேவியாரும் அத
ற்கேற்ப ஓர் வேடுவச்சிறுமியாகி, குமாரக்கடவுளைக் குழந்தையாகக்
கைக்கொண்டு பெருமான் பின்வந்தனர். வேதங்கள் நான்கும் வேட்
டைநாய்களாயின. கணங்கள் வேடுவராயின.

ஈசன் இடையாகயாவரையுங் கூட்டிக்கொண்டு விலலவ
னாதது விளர்த்து செலலுகையில், மூகாசுரன் பெருமுழக்கத்துடன் அ
ச்சனனை எதிர்த்தோடினன். அகோர தவத்திருந்த சருகுபக்ஷணன்
செய்யுந் தவேதவர்களை ஆரப்பரித்துவரும் பன்றியைப்பார்த்து,
ருமேல தவநிலை யழியுமென் றருசி, விலலையிர்த்து நாணேற்றி
கிரமொன்றை அதன் முகத்தில் இலக்குவைத்து விடுத்தான்.
வேடுவுருக்கொண்டு சேனைவீரருடன் வராகத்தைத் துரத்திவந்த
பிமலா விலலோசை காட்டி அம்பொன்றை அதன் பின்புறம் எய்த
னர். அவ்விரண்டம்புகளும் பாய்ந்தன. மூகாசுரனுகிய ஏனம் நிலத
தின்மேல விழுந்து மூர்ச்சையாய் இறந்தது. வேடுவடிவுகொண்ட
வேகணங்கள் தவஞ்செய்யுந் தனஞ்சயனைச் சமீபித்து "தவசியே!
ருவனெய்த மிருகத்தைப் பிறனெருவ னெய்யலாமோ" எனப்
பார்கொண்டனர்.

வேடுவுருக்கொண்ட சிவபிரானும், தவசியாயிருந்த தனஞ்
யனும், பல நியாயங்களைப்பேசி ஒருவரோடொருவர் சபதஞ்செய்து
கொண்டு பெருஞ்சமர் செய்தனர். கடவுள் தனஞ்சயனது காண்டீ
த்தின் நாணையறுத்தனர். அதனால் அருச்சுனன் கோபமடைந்து
வேடனாகிய தலைவன் தலைமேல் நாணறுந்த வில்லாலடித்தான். அவர்
சர்வவியாபியாதலின் அவ்வடி சுவர்க்க மத்திய பாதலமென்னுந் திரி
லோகத்திலுள்ள தேவர் மாந்தர் முதலிய வெல்லாருக்கும்பட்டது.

" விண்ணிலுறைவானவரெலாரடிபட்டதவர்
விரிஞ்சனரிபேமுதலினோர்
மண்ணிலுறைமானவரெலாரடிபட்டதவர்
மனுக்கண்முதலோர்களதலக்

கண்ணிருணைநாகர்களிலாரடிபடாதவர்கள
டசெவிமபெணமுதலோ
ரெணணில்பலயோனியிலுமயாவடிபடாதன
விருகதழியிருகதழியரோ.

வேதமடியுணடனவிரிகதபலவாகம
விதவகளடியுணடனவொணம
பூதமடியுணடனவிகாழிகைமுதறபுகலசெய
பொழுதொடுசெவிபபிலபொருளின
பேதமடியுணடனபிறபபிலியிறபபிலி
பிறவகலாசனறனமகனாா
நாதனமலனசமரவேடவடிவஙகொடு
நரனகையடியுணடபொழுதே."

அருச்சுனனடித்த அடியால வேடாபதி வெருவிகொணடாா போலச சிறிதுநேரம மல்யுத்தஞ் செயது மகவான மைந்தனது வணமையை யறிநதனா அவன அலலறபவேதை யகறறுமபடி தேவாகளும இந்திரனும தோத்திரஞ் செயதனா. கருணமூாததியாகிய கண்ணுதல் உமாபிராட்டியாருடன சகலதேவாகளும புடைசூழக காட்சி யளிததருளினா. பற்குனன பலவகையாகப பரமபதியைத துதித்தனன. சிவபிரான அவனைததேறறி "மூகாசுரனுல் உனனுயிா போகாவணணம வேடவெருக வேடமுறறு வந்தேன. வேணடிய வரம யாது" என வினவ, சவ்வியசாசி "சஙகரா! தேவரீா பெயாகொணட அஸ்திரமொனறு திருவருள் செயயவேணடும"என விணணபபிகக, இறைவா அவவாறே பாசுபதாஸதிர மநதகரிசித்து "பாரதபபோரிற் செயமுறுக" என ஆசிரவதிதது அந்தாத்தான மாயினா.

அருச்சுனன தவஞ்செயகையில், அவனைக் கொல்லும்படி துரியோதனனுல் விடுதத மூகாசுரனைச சஙகரிகக வேடவ வடிவேற்றுச் சென்றமையால், சிவபிரான கிராதமூாததியெனப் பெயரெயதினா.

கிராதமூாததபேதம:



46 குரு மூர்த்தி.

உ
சிவமயம்.
திருச்சிற்றம்பலம்.

---

## நாற்பத்தாறாவது
# குருமூர்த்தி.

ஆளுடையவடிகளென்னும் சிறப்புப்பெயருற்ற மணிவாசகர் பாண்டி நாட்டில் நீர்வள நிலவளமிருக்கும் திருவாதவூரில் அமாத்திய வேதியர்குலத்தில், திருவவதாரஞ்செய்து தந்தையாரால் திருவாதவூரர் என்னும் பிள்ளைத்திருநாமம் பெற்று வேதாகமமுதலிய கலைகளிற் றேர்ச்சியடைந்திருக்கையில், மதுரையில் அரசுபுரிந்துவரும் அரிமர்த்தனபாண்டியன் இவரது பிரதாபத்தைக் கேள்வியுற்றுத் தம்பால் வருவித்து ஆதரவோங்கி அமைச்சுரிமையுந் தென்னவன் பிரமராயன் என்னும் பட்டமுங் கொடுத்துச் சிறப்போடு வைத்திருந்தனன். அமைச்சர்பெருமான் இருமனப்பெண்டிர்போலும் அரசகாரியத்துத் தொழிலும் ஆளுடையார் திருவடிகளையே அறிவுமாக வொழுகிவருகையில், கீழ்கடற்றுறையிற் குதிரை கொள்ளும்படி அரசனேவ, அளவற்ற பொருளோடுஞ் சென்றனர்.

பரிபக்குவமுற்ற ஆன்மாக்கட்குத் திருவருள்புரியுமாளுடையார் இவரது சத்திநிபாதத்து உத்தமத்தலைமையிலே நோக்கி மானுடத் திருவுருவேற்றுத் திருக்கதி முக்கணையகன் மாணாக்கராய்ச் சூழ்தவர், திருப்பெருந்துறையிற் குருமூர்த்தங்கொண் டெழுந்தருளி வாதவூரரை வரவுநோக்கியிருந்தனர். இவர்சென்று அத்திருப்பதி யெல்லை மிதிக்க, அன்பும் ஆர்வமும் தலைமீதூர, எனையுடையான் இருக்கின்றனரோ என்னுங் கருத்தோடு சென்று, ஆசிரிய பெருந்தகையைக் கருவிகளெல்லாங் களிக்குங் கண்டு கைதொழுது உளமுருக உடல் கசியப் பரவினர்; பாடினர்; ஆனந்தக்கூத்தா

டினார்; பரவசராய் அசைவற்றுச் சிறிதுபொழுது கைமேற்றிருந்து "எம்பெருமானே! இவ்வுடல் பொருள் ஆவி மூன்றினையுந் திருவுள மம்பற்றுக" என்று குறையிரந்த குணக்குன்றனையவரை, எம்பெருமான் திருவருணோக்க களித்து, அஸ்த மஸ்தக் சையோகஞ் செய்து, அமையத் தடவித் திருவடிசூட்டி அனுபூட்டி அறிவின் மயமாகவி ஐந்தெழுத்துண்மை யசைவற உபதேசித்தருளினார்; அதனால் அமைச்சர்பெருமானும் அமுதராயினார். ஆசிரியநாயகத் தருட்சந்நிதியில் அன்புருவப்பெருந்தகையார் அளவளாவி, அடியார்கூட்டத்திலாக்கத் தக்கடலின் மூழ்கி அழுதழு தலங்காரத் தமிழ்கூட, பத்திப்பிசைகளோ ணமைப் பரம்பதி பவளவாய் திறந்து, தமது அருமைத் திருவாக்கால் 'மாணிக்கவாசக! இங்கிருக்க' என்றனுக்கிரகித்துத் தம்மாணுக்கர் சூழ்ந்துடன் அந்தர்த்தானமாயினார்.

சிவநேயமுற்ற மாணுக்கர்திலகராகிய மணிவாசகர் மனமுருகி வருந்திப் பிரிவாற்றாதவராய் உயிர்நீங்கக்கருதி, அஃதெம்பெருமான் தென்ன றருளிக் கட்டளை கடவாது, அங்கேயேயிருந்துகொண்டு, அவருடன் வந்த பரிசனங்களை நோக்கி "ஆடித்திங்களிற் புரவிகள் வருமென்று புரவலற்குக் கூறுக" எனப் பணித்தனுப்பி, தாம் கொண்டு வந்த அரிமர்த்தன னரும்பொருள் முழுதும் ஆண்டவருக்கும் அடியவருக்கு மமைந்த ஆலய முதலிய திருப்பணியில் விநியோகஞ் செய்திருந்தனர். பரிசனர் சொல்லைக்கேட்ட அரசன் அவ்வாறு ஆடித் திங்க ளென்றும் அசுவங்கள் வராமையால் அமைச்சர் வாழ்வுக் கோலையிப்ப, அவரும் உடையார் சந்நிதியிற் சென்று அரசோலை யறிவித்து நிற்க "ஆவணிமூலத்திற் பரிதிரள் வருமென்று ஓலை விடுக்க" எனப் பெருமான் அசரீரியாய்க் கூறினார். ஸ்ரீமன்றுடையார் கட்டளைப்படி அவ்வாறே ஓர் திருமுகம் வரைந்தனுப்பினர். மணிவாசகர் துயில்கையில் எம்பெருமான் தோன்றி "புரவிகள் பின் வரும்; நீ முன்செல்க" எனப் பணித்தமையின், அமைச்சர் பெருமான் ஆளுடையார் சந்நிதியிற்பணிந்து விடைகொண்டு மதுரையை

யடைந்து ஆலவாயுடையாரை வணங்கி, அரச னவைக்களத் துற்று அகமலரச்செய்து, சோமசுந்தரரைப் பணிந்து இருக்கை யடைந்து திருவருளோங்கியிருந்தனர்.

பரிபக்குவமுற்றிருந்த மாணிக்கவாசகருக்கு ஞானோபதேசஞ் செய்தவர் சிவபிரானாதலால் அப்பெருமானுக்குக் குருமூர்த்தியென்பதோர் பெயர் வழங்குகின்றது.

**கவனிப்பு**—குருமூர்த்தம்-அசுவாரூடம் என்னும் இரண்டு சரித்திரங்களும், மாணிக்கவாசகர் சரிதமேயாதலாலும், அவை முறையே ஒன்றன்பின் னொன்றாக அடுத்து வருவதாலும், அவர் பிரபாவத்தை ஈண்டு முடித்திலேன். எஞ்சிய சரிதையை அடுத்துள்ள அசுவாரூடத்தினிற்கொள்க. இவ்வாறே அசுவாரூடத்தின் முற்பட்ட சரித்திரத்தை இக்குருமூர்த்தமெனவுங் கொள்க.

குருமூர்த்தயோகம்

---

மகாமகோபாத்தியாய, டாக்டர்
உ. வே. சாமிநாதையர் நூல் நிலையம்
அடையாறு, சென்னை-20.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

## நாற்பத்தேழாவது

# அசுவாரூட மூர்த்தி.

மாணிக்கவாசக மணிவாசகருக்குப் பந்துவாக்கமும், கட்டுமா விளுர் காணு வகையாக மதிகூறக் கருதி, அரசகாரியத்திற் சிறந்தன்ராயிருத்தலின், மன்னனுக்குக் குறிப்பும் உறவினருக்கு உண்டாகோஜமாக விருத்திலீரென்று தமக்குத் தோன்றியவழியெல்லாஞ் சொல்லக்கேட்டு "எமக்கு யாதுவரினும்வருக. எம்பெருமானை மறவேன். ஊழாகிய தீவினை விளைந்தால் விலக்கற்பாலா ருளரோ?" எனக்கேட்டகன்றனர். அரசன் அமைச்சர் நாயகரை வருவித்து "குதிரைகள் வந்திலவே" என, "இன்னும் மூன்று தினத்தில் இவ்விடம் வரும்" எனப் புகல, அப்போதும் குதிரைக்கூட்டம் வாராமை கண்டு கொற்றவன் சினந்து தண்டலாளரால் பலவகையாகத் துன்புறுத்திச் சிறையிருத்தினன். மணிவாசகர் தம் துட்டுயிர்கட்டு குரியராகிய சாமபதியைப் பலவகைப் பாமாலைகளாற் றுதிசெய்ய, அடியார்பாடலுக்கக மகிழும் அருட்கடலாகிய ஆலவாயுடையார் அவ் வீரிகேணைகளையத் திருவுள்ளங்கொண்டு, திருநந்திதேவர் முதலிய சிவகணத்தவர்களை விளித்து "பாண்டியனுக்குப் பரிமா செலுத்தவேண்டுதலின் வனத்திலுள்ள நரிகளைப் பற்றிவந்து பரிகளாக்கி அவற்றைநடத்துஞ்சேவகராக நீவிர் உருக்கொள்ள வேண்டும்" என்று கட்டளையிட, அவர்கள் அவ்வாறே சித்தப்படுத்திப் பலவகையாகிய ஆடைமுதலியவற்றில் வேறுபாடுற்ற சிறந்த வடிவெய்தினர்.

தொண்டர்களது துன்பம் விலகுஞ்சோதி யுருவியாகிய சிவபிரான் தரு மார்த்த காயவேடமென்னும் சுற்புருஷார்த்தம்



25- கங்காதரமூர்த்தி



47 அஸ்வாரூட மூர்த்தி.

களே நான்கு கால்கள் - ஞானகாண்ட கருமகாண்டங்களே இரு செவிகள் - பர அபர வுணர்ச்சியே விழிகள் - விதிமுகம்-நிஷேதவால்-தந்திரங்கள் புறவணி-சப்தகோடி மந்திரங்கள் சதங்கைமாலை-சூரிய சந்திரர் பாதம் வைக்குமிடங்கள்-தாரகப்பிரமமந்திரமே கடிவாளமாக்கக்கொண்டு இத்தன்மைய போன்ற பிற அங்கங்களு மமைந்த ஓர் சிறந்த புரவிமே லேறித் தாமே அவற்றிற் கிறைவராய் எழுந்தருளி வர, பாண்டிமன்னன் பரிமா வரவறிந்து அவற்றின் சிறப்பையும் தலைவனது சிறப்பையும் அன்போடு கண்டு களித்து, பரிசு பல செய்தனுப்பிப் பழய மந்துறையிற் கட்டப் பணித்தனன் அப்பரிகளும் பாதிரிரவில் பண்டைய நரியுரு வேற்றுப் பல குதிரைகளை யூறு செய்து, வனத்திற் சேக, பூழியன் கேள்வியுற்று மனம் புழுங்கி ஆமாத்தியரை யழைத்துத் தண்டலாளர்வசம் ஒப்புவித்து "அப்பண்டாரப் பொருள்முழுதும் கொண்டுவருக" என, அவர்கள் ஐயனைச் சிறைப்படுத்தி வைகையாற்றிற் கடுங்கோடையில் வருத்தஞ்செய்ய, வஞ்சமில்லார், வள்ளலார் திருவடியில் மனஞ்செலுத்த, அருட்பெருந்தகை அவ்வைகையைப் பெருக்கச்செய்ய, மதுரைமுற்றும் வெள்ளமாக அரசனாணையால் மண்ணடைப்பாராயினர். மந்திரியார் ஆளையுஞ்சேர்ந்தனர்.

அச்சமயத்து வந்தி யென்னும் மூதாட்டி தனக்கு விதித்ததை அடைப்பின்றி வருந்த, பெருமான் கூலியாளாய் வந்து பிட்டுண்டு, கட்டுண்ட அயற்கரை யிடிய நீர்விடுத்துத் துயிலப்புரிவார்போலிருக்கக்கண்ட பாண்டியன் பிரம்பா லோச்ச *அஃது யாவர்மேலும் பட்டச்செய்து அடைப்பாரின்றி யுடைகரையாக்கி மறைந்து ஆகாய வாணியால் "அமைச்சரைத் தேற்றி" எனக் கூறுவித்தருளினர். வேந்தன் வெருண்டோடி ஐயரைக்கண்டு "வாதவூரர்சேனைபிழை பொறுத்து இத்திருவையெல்லாம் வேண்டியவாறு செய்தருள்க"

---

* சிவபெருமான் சர்வவியாபி யாதலின் அவரை அடித்தனன் பிரம்பா லடித்தபொழுது அவ்வடி யாவர்க்கும் பட்டது.

னை, ஐயா "வழுதியர் கோவே! திருவருள்வழி சிறக்க" என்று சிறந்திப் புறப்பட்டுத் திருப்பெருந்துறை யடைந்து பதிகமோதித் துதித்து, பல திருப்பதிகளையுஞ் சென்று பணிந்து, தில்லையைச்சேர்ந்து, ஈழத்தினின்று வந்த புத்தரைத் தில்லைவாழந்தணர் விருப்பின்படி வாதில் வென்று அவர்கட்குச் சிவஞானமளித்து, ஊமைமகளை வாய்திறப்பித்து, திருவாசகமும் திருக்கோவையாரும் மன்றுடையாரே யெழுதிக் கைச்சாத்திட் டருளும்படி மணிவாய் மலர்ந்தருளினர். ஆமாத்தியகுலதீபத்தை அவ்வேதியர் நோக்கி "திருவாசகத்தில் திருவுள்ளக்கிடை திருவருள் செய்யவேண்டும்" என்றிரப்ப, அடிகள் முறுவல்செய்து அவ்வந்தணரொடு பொன்னம்பலஞ்சேர்ந்து "இவ்வாசகப்பொருளானவர் இவரே" என்று திருவாய்மலர்ந்து திருச்சிற்றம்பல முடையாரைக் குறியாது குறிப்பித்து, எம்பெருமானிடத் திரண்டறக்கலந்தனர்.

### திருவிளையாடற்புராணம்.

"பாண்டியன் முதுகின்மேற் பட்டது செழியன்
பன்னிய ருடம்பின்மேற் பட்ட
தாண்டகை யமைச்சர் மேனிமேற் பட்ட
தாரிளங் குமரர்மேற் பட்ட
நீண்டிய கழற்கால் வீரர்மேற் பட்ட
திவுளிமேற் பட்டது பருமம்
பூண்டவெங் கரிமேற் பட்டதெவ் வுயிர்க்கும்
போதன்மேற் பட்டவத் தழும்பு.

பசித்திடு மதியும் பாம்புமைக் கோளும்
பணித்திடப் படைத்தவன் மீது
விருத்தம் புனைந்தவ வெசிகளே களைவா
னென்றுமைப் பூதமுங் காருங்

சுருதியு மாறு சமயவா னவருஞ்
சுராசுரரு முனிவருந் தொண்டினர்
மருவிய முனிவர் கணங்களும் பட்ட
மதுரைநா யகனடித் தழும்பு
மானவர் மன்னர் நாகர்புள் விலங்கு
மாகஞர் சித்தரெலா மபாதி
யானபல்சரமு மீன்மரங் கொடிபுல்
லாதியா மசரமும் பட்ட
ஊனுடைக் கருவும் பட்டன தழும்பீர்
றொடுத்தன வுயிரிலோ வியமும்
ஏணடி பட்ட சராசர சடங்க
டமக்குயி ராயினுனை றழும்பு

துணைவனை மாயோன் விழித்தனன் கமலச்
சோதியு மாதென வியந்தான்—"

சிவபெருமான், அரிமாத்தனனது அளவில்லாப பொருளைச் சிவபணிவிடையிற் செலவுசெய்த மணிவாசகர் நிமித்தமாய நரிகளைப் பரிகளாக்கித் தாமே பரித்தலைவராய்ச் சென்று புரவிகளை ஒப்புவித்தமையால் அசுவாரூடமூர்த்தியென்பதோர் திருநாமமெய்தினர்.

அச்வாரூடமூர்த்தயோகம்.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

---

## நாற்பத்தெட்டாவது

# கஜாந்திகமூர்த்தி.

சொல்லுதற்கரிய வலியமைந்த சூரபன்மனது தொந்தரவைச் சகியாத இந்திரன் தன்மனைவியுடன் மறைந்து சீகாழிப்பதியிற் சிவார்ச்சனை செய்து காலங்கழித்திருந்தனன். அக்காலத்தில், அமரர் சிலர் ஆங்கணடைந்து அவனைக் கண்டு "அரசே! அசுரர் துயரம் ஆற்றகில்லோம்" எனக் கூற, வச்சிராயுதன் "வானவர்களே! மகாதேவனை வழுத்தி அத்துயர் தீர வெள்ளிமலை யடைவோம்" என்று இந்திராணியை அரிகரபுத்திரர் காவலில் விடுத்து, தேவர் குழுவுடன் திருக்கயிலை யடைந்து திருச்சந்நிதானத்தினுட் செல்ல, திருநந்திதேவரை உத்தரமுதவும்படி பிரார்த்தனர். அதுசமயம் ஞானகுருவாகிய சங்கரர் குருபதேசஞ் செய்துகொண்டிருந்தலின், நந்தியெம்பெருமான் காரணர் கட்டளைப்படி தடுக்க, அத் திருவாயிலிலேயே அநேக காலம் அமர்ந்திருந்தனர்.

அக்காலத்திற் கொடுங்கோல்செய்து வந்த சூரபன்மன் தங்கையும், வாலிபரை வலியிற் புணர்பவளுமாகிய அசமுகி யென்பவள் துன்முகியுடன் சீகாழித்தலத்தைச் சேர்ந்து, அரும்பு பொற்கொடி போல விளங்கும் புலோமசையைக் கண்டு தன் முன்னோனைச் சேர்ந்து வாழும்படி யழைக்க, சசி தடுக்க, வன்மையுடன் கையாற்பற்றி அவளலறும்படி இழுத்துக்கொண்டு சென்றனள். ஐயனார் ஏவலாளராகிய வீரமாகாளர் விரைந்துசென்று "செல்லாதே" என்று தடுக்க, அசமுகி ஓர் சூலத்தைச் சுழற்றி விட்டனள். அதனை வீரமகாளர் வாளால் வெட்டி மாய்த்தனர், அசமுகி துன்னொன்று துன்முகி



48 கஜாந்திக மூர்த்தி

கையிலிருந்த சூலத்தை வாங்கிக்கொண்டு, அவள் கையில் அயிராணி யையளித்து வீரமாகாளர்மேல் அச் சூலத்தை விட, அவர் அதையு மழித்தனர். அரக்கி மலையொன்றைப் பலங்கொண் டெறிந்தாள். அவர் அதனையும் வாள்கொண்டு மோய்த்தனர். மேஷ முகமுள்ளவள் மேலொன்றுஞ் செய்யமாட்டாதவளாய், துன்முகி கையிலிருந்த இந்திராணியைத் தனக்குறத் தூக்கிக்கொண்டு விண்வழி வேகமாய்ச் செல்ல, வீரமாகாளர் வெகுண்டு அவள் அளகத்தைப் பிடித்துக் கொண்டு உடைவாளையுருவி ஒரு கையை வெட்டி இந்திராணியை விடுவித்து, தாக்குணங்க ளமைந்த " துன்முகியை நோக்கி "நீயுந் தொட்டவளன்றோ?" என்று, அவளையு மோர் அத்த மரிந்தனர். வருந்தி யழுது புரண்டு சோகமாகி யெழுந்த அசமுகி அகம் நாணித் துன்முகியுடன் மகேந்திரபுரிக்குச் சென்று தன் தமையனோடு நிகழ்ந் தன கூறித் துக்கித்தனள். சூரன் உலக நடுங்கச் சிரித்து உங்காரஞ் செய்து கோபித்தான். அதுகண்ட அவன் ஜேஷ்டகுமாரன் பாநு கோபன் "என்னை விடுத்தால், இந்திரன் இந்திராணி இமையவர் யாவரையும் இமைப்பிற் சிறைசெய்து வருவேன்" எனக் கேட்டு, நன்றென இயைந்து ஏக விடுத்தனன். அவன் தன் வீடுசென்றான். சூரன் பிரமனைக் கொண்டு அவ்விருவ ரத்தத்தையும் பண்டுபோற் படைப்பித்து, வாயு-திசைக்காவலர் முதலிய தேவரையும், சிலமன்ன ரையுந் தண்டித்துப் பிரமன் வேண்டுகோளின்படி விடுத்தனன்.

பானுகோபன் பலவகைப்படையும் புடைசூழ இரதாரூடனா ய், துன்முகி வழிகாட்டப் புகலிடகிறப்புகுந்து இந்திராணியை யெவ் ருந் தேடிக் காணாது, அமராபுரியாகிய அமராவதி யடைந்தனன். அதனை யறிந்த அந்தரர் சயந்தனுடன் சாற்ற, சயந்தன் "தந்தை-தாய்-ஆசிரியன் என்னு மிவர்களில் யாரும் ஈண்டிலர், இனி யென் செய்வது? விதியை விலக்க முடியுமோ? வந்தது வருக" என்று ஐராவதத்தினமேல் ஏறி, ஆகாயவாசிகள் புடைசூழ, அசுரச்சேனைக் கெதிரில் அருஞ்சம ராற்றக் கருதி முன் சென்றனன். வானவரும்

தானவரும் போர்புரிய ஆரம்பித்தனர். அவ்வாறு செய்த செருவில் தேவர்கள் தோற்றோட, அவுணர் அவர்களைத் தொடர்ந்து பற்றி, தோளிற் கயிற்றாற் கட்டி யிழுத்துக்கொண்டுபோயினர். சயந்தன் சாலவும் வெகுண்டு தன் வில்லினைத்துப் பலவகைப் பாணங்களைப் பூட்டித் தானவத்தலைவரைப் புறமுதுகுகாட்டி யோடச்செய்து வெற்றிகொண்டனன். பானுகோபன் அதனை யறிந்து பலதேவாஸ்திரங்களைச் சாய்கினன். இந்திரகுமாரனும் வெண்ணிலவார் அம்புகளை எதிர் விடுத்தனன். இவ்வாறு ஒருவர் விட்ட அஸ்திரத்தை மற்றொருவ ரழித்துக்கொண்டு இருவரும் போர்ச்சமர் புரிந்தனர். சயந்தன் பானுகோபனது வில்லைக் கணையா லறுத்தனன். பானுகோபன் வேறோர் காண்டீபம் எடுக்குமுன், சயந்தன் மாரிபோல அஸ்திரமாரி வருஷித்தனன். சயந்தன் சகலாஸ்திரங்களால் அவனது தேரையும் குதிரைகளையும் நூறுகினன். அவன் வேறோர் தேரேறிக் கணக்கில்லாத கணைகளை ஆகாய முழுவதும் ஆக்குதற்பொருட்டு ஏவித்து அவனை யானைமேலேயே மூர்ச்சையாக்கினன்.

சயந்தன் அசதியானது கண்ட அவுணர் பதியாகிய நின்ற ஜராவதம் பகைவன் பெரிய பலமுடன் பாய்ந்து, அதனுறுப்புக்களைச் சிதைத்து, அவன் மார்பிற் கொற்றவ புரியுங் கொடிகள் காணகாதும் கன்றியப் புடைக்க, அதன் கொம்புக் குன்றுகள் சடசடவென்னும் ஒலியுடன் முறிந்தன. வெய்யோன் வெள்ளையானையின் கவுளில் குருதியோ டிடுக்க அது வருந்தி அலறி வீழ்ந்தது. அவுணன் ஞகமிளையால், தைத்தியர் அநேகர் சயந்தனைச் சூழ்ந்து தோளிற்றாம்பு பூட்டிப் பிணித்து, சிறைப்பட்ட தேவருடன் சேர்த்தனர். அசுரர் அமரரது தோளிற்பூட்டிய கயிற்றைக் கைப்பற்றிக்கொண்டோடிச் சென்று, அப்பொன்னுலகத்தைத் தீமூட்டினர். பாவியாகிய பானுகோபன் மனமகிழ்ச்சியுடன் இலங்கை கடந்து மகேந்திரபுரியிலே தந்தைமுன் சென்று பணிந்து "எந்தையே! இந்திராணியையும் இந்திரனையும் காணேன். தேவர்களையும், தேவமாதரையும், அவர்கள்

னைவரசும் இந்திரன் மைந்தனுமான சயந்தனையுஞ் சிறைசெய்து கொண்டுசென்றனன். அமரருலகை இனி அமராவதியாதலன்றி அக்கினிக் கூட்டிடுவேனென்ன, சூரபன்மன் பணங்களித்து, மகேந்திரத்து விக்கொலைசெய்து, தேவர்களை விலங்கு பூட்டிச் சிறையிலிட்டனன். தேவ மாதரை அசுர மாதருக்குப் பணிப்பெண்களாகப் பணித்தனன். சிறையிலகப்பட்ட தேவர்களும், அடிமைசெய்யும் அரம்பா ஸ்திரீகளும், எப்பொழுதுமித்துயர் தீருமென்று ஞானேசச் சிவபிரானது திருவருளைச் சிந்தித்துக்கொண்டிருந்தனர். இதுநிற்க.

பாற்கோட்டுருவின் பேறு செய்துகொண்டிருந்த நாற்கோட்டு ஐராவதம், தனது துயர் நாடோறும் வளர்ந்து, மெய்த்தியானத்துடன் விண்ணுலகு நீங்கி மண்ணுலகடைந்து, ஸ்வேதாரண்யம் என்னும் திருவெண்காடு சென்று, அங்கு முன்னொருகாலத்தில் இந்திரனாற் பூசிக்கப்பெற்ற பிரமவித்தியா நாயகியாரை இடப்புறமுடைய ஸ்ரீ ஸ்வேதாரண்யேசுரரது துதித்தற்கரிய திருவடியைமனத்திற்பதித்து, சூரியதீர்த்தம் சோமதீர்த்தம்-அக்கினிதீர்த்தம் என்னும் முத்தீர்த்தத்திலும் முறையே காலை-உச்சி-மாலையென்னும் முப்பொழுதும் மூழ்கி, திருப்பள்ளித்தாமங் கொய்து, சங்கமாகிய குடங்களால் திருமஞ்சனமாட்டி அருச்சித்து, ஓமனதாய உமாபதியை உள்ளத்திற்கொண்டேத்தது. அரவாபரணர் அதனின் பத்திக்குச் சித்தங்களித்து, திருவருள்செய்யச் சேவைதந்து ஐராவதத்தின் சிரமேற் றிருக்கரஞ் சூட்டி அதை நோக்கி "உனக்கென்னவரம்வேண்டும்" என, "தேவநாயகா! தேவரீரை இவ்வகையே அருச்சித்துக்கொண்டிருக்கவேண்டுகிறேன்" என விண்ணப்பிக்க, விடையூர்தி "நீ க்ஷீராப்தியடைகையில், தோன்றியபொழுதே உன்னை இந்திரனுக்கு வாகனமாக விதித்ததாதலின், நீ அவ்வாறே அமரர் துயரொழிந்தபின் அமராவதியை யடைந்து வாழுக. எம் மடியனாகிய இந்திரனை நீயே வாகனமாகித் தாங்குதல் எமக்குச் சம்மதம். நின்கொம்புகள் பண்டுபோலாக" எனத் திருவாய்மலர்ந்தருளி அந்தர்த்தானமாயினர். ஐராவ

தம் ஆணையை நிராகரித்தவனைக் கொம்புகள் வளரப்பெற, ஆண்டு அன்போடு சிவலிங்கார்ச்சனை செய்துகொண்டிருந்து, சுப்பிரமணியக்கடவுள் சூரபன்மனாதிய அசுரர் துயர் தொலைத்து அம் சிறைவிடுத்தபின்னர் இந்திரனுக்கு வாகனமாய்ப் பண்டுபோல ஐராவதமாய் வாழ்ந்திருந்தது.

ஐராவதமாகிய யானையின்மேல் கொண்டுகோளுக்கிரக அதனை சமீபித்து அநுக்கிரகஞ்செய்தமையால், கடவுளைக் கஜாந்திக மூர்த்தியெனக் கூறலாயிற்று.

## திருஞானசம்பந்தமூர்த்திசுவாமிகள் தேவாரம்

"சக்கரமாற்கீந்தானுஞ் சலந்தரனைப் பிளந்தானு
மக்கரைமேலசைத்தானு மடைந்தயிராவதம்பணிய
மிக்கதனுக்கருள்சுரக்கும் வெண்காடும் வினைதுரக்கு
முக்குளநன் குடையானு முக்கண்ணுடையிறையவனே

கள்ளார்செங்கமலத்தான் கடல்கிடந்தானெனவிவர்க
ளொள்ளாண்மைகொளற்கோடி யுயர்ந்தாழ்ந்துமுணர்வரியான
வெள்ளானைதவஞ்செய்யும் மேதகுவெண்காட்டானென்
றுள்ளாடியுருகாதா ருணர்வுடைமையுணரோமே.'

"மற்ற வண்டனை மணியணி மார்பிடைச்
செற்ற மாலகரி சென்றுமுற்றுக்கவும்
பொற்றை யின்கட புழைத்திடக் குசியி
னிற்ற வாலத னீரிரு தந்தமும்.

வாலிய வொளிகெழு வனத்தி லேகியே
மூலம தாகிய முக்கண் மூர்த்தியை
மேலுன தாணுவின் மேவச் செய்தபின்
சீலமோ டருச்சனை செய்து வைகிறதே.

அறிவுள மாலகரி யமலனுக் கிர
முறையது நாடியே முதிரு மன்பினுள்
மறையுற வழிபடு வகைகு மேவலிற்
குறையறு வரம்பெறு நேசம் வந்ததே." கந்தபுராணம்.

கஜாந்திகமூர்த்திபேதம்:



49. சலந்தரவத மூர்த்தி.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

---

## நாற்பத்தொன்பதாவது
# ஜலந்தரவதமூர்த்தி.

தேவேந்திரன் ஒருகாலத்தில் திருக்கயிலாயகிரியை யடைய சிவபெருமான் வடிவு மாறி வழியில் நிற்கக் கண்டு, "நீ யாவன்? யாது தொழில் செய்வோன்?" என, ஒன்றுங் கூறாதிருப்பக் கோபித்துத் தன் கைவச்சிரத்தைத் தோளிற் புகுக்க, அது பொடியாக விழுந்தது. உடனே பெருமானுக்குக் கோபமுதித்து, ஓர் ருத்திரவடிவேறக, இந்திரன் வெருக்கொண்டு, உள்ளங் குழம்பி உடலசையக் கைகட்டி வாய் பொத்திப் பலவகையாகத் துதிபுரிய, இறைவர் மனம் பொறுத்துத் தன் கோபத்தா லுண்டாகிய வியாளை நீர் வழித் தெறிய, அது மேற்றிசைக்கடலில் வீழ்ந்து ஓர் புத்திரவடிவாயது. அதனைச் சமுத்திரராசன் மகவென்றுகொண்டு வளர்த்துவந்தனன். அச்சிறுவன் பிரமனால் சலந்தரனென்று நாமமிடப் பெற்று, காளைப்பருவமுற்று, அவுணருடன் கூடி ஆற்றல் மிகுந்தவனாய்த் தானவத்தச்சனாகிய மயன் என்பவனால் ஓர் அழகிய நகரஞ் செய்வித்து, காலநேமியின் புத்திரி விருந்தையை மணந்து சிறிதுகாலம் வசித்திருந்து, மேருமலையிலிருந்த தேவர்களோடு போர்புரியக் கருதிப் போகையில், தேவர்கள் விஷ்ணுவை வேண்ட அவர் கருடாரூடராய் இருபதினாயிரவருடங் கடும்போர் புரிந்து அவனை வெல்லுந் திறவில்லாராய்ப் புகழ்ந்து சென்றனர். அதுகண்ட இந்திரன் அவ்வசுரனால் யாது நிகழ்வதுமோ வென்றலக்கணுற்றுத் திருக்கைலாயகிரியை யடைந்திருந்தனன்.

இந்திரனது செய்தியைச் சிலதூதுவர் சொல்ல வுணர்ந்த சலந்தரன் அங்குச் சென்று அவனையெதிர்ப்பான் கருதிப் புறப்படுகையில்

விசேடித்த கற்பினையுடைய விருந்தை யென்னும் மனைவி வேண்டாமென்று தப்பவும் மனம் மயங்காமல், சேனாசமுத்திரத்துடன் திருக்கைலையைச் சமீபித்தலைச் சதக்கிருது கண்டு சஞ்சலங்கொண்டு சந்நிதானத்துட்சென்று சங்கரர்முன்னே நின்று தனக்குற்றசங்கடத்தைச்சாற்ற, தயாநிதி "வச்சிரபாணி! வருந்தாதே" என வனுக்கிரகித்துத் தேற்றித் தன்பின் வடிவுமாறிவரக் கட்டளையிட்டு, நரைத்த திருவுருவமும் ஊன்றிய தடியும், தொங்கிய கமண்டலமுந் தளர்ந்த நடையு முடைய ஓர் விருத்தமுனிவடி வேற்று, இந்திராதி யிமையவர் மறைந்து பின்றொடரச்சென்று, சலந்தரனைக்கண்டு "நீயார்? யாதுகருதிச்செல்கின்றனை?" என வினவ, "யான்சமுத்திரராசன் தனயன். சலந்தரனென்னுநாமமுற்றோன் சிவனுடன் செருச்செய்யச் செல்கின்றேன்" எனச்செப்ப, நம்பெருமான் "நன்றுகூறினை" என்று நகை கோட்டி, "கண்ணுதலைப் பொருதக் கருதின் கணத்தி லுயிர் கழிவாய்; உயிர்ப்பிச்சைவேண்டின் திரும்பியோடிப்போ" என, சலந்தரன் "இமைப்பொழு திங்கிருந்து என் ஆற்றலைக் காணுதி" என, ஈசன் "யான்சிவபிரானுக் கிளைஞனாவது. உன் வல்லமையைக் காண வந்தேன்" என்று திருவடியால் ஓர் சக்கரம்போற்கீறி "இவ்வலயத்தைச் சிரமேலேற்றுத் தாங்கவல்லையா" என்றவுடனே, சலந்தரன் இறுமாப்புமிகுந்து "இதுதானோ பெரிது" என்று இருகையாலுமெடுத்து மார்பிலும் புயத்திலுந்தாங்கிச் சிரத்தின்மேல் வைத்துக்கொள்ள, அச்சக்கரம் அவனை அக்கணமே இருபிளவாகப்பிளந்து சிவபெருமான் திருக்கரத்தெய்தியது. அவனுடன்வந்த அசுரர்கூட்டமுற்றும் பெருமானது விழித்தீயின்று சாம்பராயின. பின்னர் பெருமான் தமது நிஜவடிவு காட்ட இந்திரன்முதலாயினோர் வாழ்த்திப் பூமழை பொழிந்து ஆனந்தக் கூத்தாடிப் போற்றித் தத்தம் பதியடைந்து வாழ்ந்திருந்தனர்.

அமரரைத் தீராத்துயர்விளைத்துவந்த சலந்தராசுரனைச் சக்கரமொன்று தாளாற்கீறித் தலைமேலெடுக்கச்செய்து சங்கரித்தமை

யால், சிவபிரானுக்குச் சலந்தரவதமூர்த்தி யென்வோர் திருநாமஞ் சாற்றப்பட்டது.

### கந்தபுராணம்.

"புகைவாயாரையும்புரங்கண்டேனவரு
கங்கையையடைத்தனன்காகொள்வேலயி
லங்கியையவித்தனனரியையென்றன
னிங்கிதுதாங்குவதரியதோவென.

புரத்தழல்கொளுவியோன்பொறித்தநேமியைக
கரத்திடையெடுத்தனன்கண்கொண்டெயதலி
னுரத்திடைப்புயத்திடையுயிர்த்துத்தாங்கியே
சிரத்திடைவைத்தனன்றேவராகவே.

செழுஞ்சுடர்ப்பரிதியைச்சென்னிகோடலா
லொழிந்திடுசலந்தரனுச்சியேமுதற
விழிந்ததுமுழுதுடலிளாந்துசோரிநீ
ரிழிந்ததுபுவிதனில்விழுமென்றோசையால்.

### காஞ்சிப்புராணம்.

' இருகூறுகச்சலந்தரனையிறத்துமாட்டியவ்வடிவ
ருகேதோன்றச்சுதரிசனமங்கைத்தலத்தினமிசையேந்தி
றருகாரகேக்கைத்தண்ணறும்பூந்தொடையல்வாகைமுடிவிளங்கத்
ிருவார்காட்சியளித்தருளுந்தேவர்கோமானிருவுருவம்."

ஜலந்தரவதமூர்த்தயேகம் :

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

---

## ஐம்பதாவது.

# ஏகபாத த்ரிமூர்த்தி.

ஆதிமத்தியாந்தரகிதராய் அமலராய்ப் பரிபூரணராய்ச் சூக்ஷுமராய் ஏகராகிய பரமசிவம் உலகங்களை ஆக்குதல்காரணமாய்ச் சுத்தமாயையின் அதோபாகமான அசுத்தமாயையினிடத்து அவ்யக்தமாகிற மஹானையுண்டாக்கி, விஞ்ஞானகலர் - பிரளயாகலர் - சகலரென்னும் மூவருக்கும், தநுகரணபுவனபோகங்களுக்கு உபகரணமாய், பிரம விஷ்ணு உருத்திரர்கள் மூலமாய்ப் பிரபஞ்சங்களை யெல்லாம் படைத்தல்-காத்தல்-அழித்தலாகிய முத்தொழில்களையுஞ் செய்வித்து மலற்றிறமேறாதவராய்ச் சுத்தமா யெழுந்தருளுவர். இங்ஙனம் நிர்மலமாயிருப்பினும் அவர்கொண்ட திருவுருவம் அஜகேசவாதி ஆன்மாக்களின் அநுக்கிரககாரணமேயன்றி வேறன்று. அவரது திருவுருவமும் அநுக்கிரகமேயாகும்.

### ததுக்தம் வாதுளே.

அங்க்ப்ரத்யங்கஸாங்கஞ்சோ பாங்கஞ்சசதுரோபவேத்-ஶிரோ வக்த்ரஞ்சஹ்ருதய மங்கஞ்சேதிப்ரகீர்த்திதம் - வக்ஷ:கண்டஸ்தனௌ பாஹு நாபிகுஹ்யோதரந்ததா - நேத்ரம நாஸாஸ்யகர்ணௌச பாணிபாதம் ததாங்குலி:-ஊருசஜாநுஜங்கஞ்ச ப்ரத்யங்கஞ்சேதிகத்யதே - மூர்த்திகாரணரூபந்து ஸாங்கம்சேதிப்ரகீர்த்திதம் - குணசிங்கமிதிஜ்ஞேயம் தத்குணம்தஸ்தாபவேத - ஸூக்ஷ்மஸத்யம்பரந்தாபஞ்ச தாபேத்யாநுக்ரஹஸ்ததா- சுத்திமாயாவிவர்ணஞ்ச காதம்ஸைம்ஹ்ருதிரேவச - ஏதேதஸ்யகுணா:ப்ரோக்தா: தேஷாம்லக்ஷணமுச்யதே - தரிகுணம்ஸமுஹமித்யுக்தம் ஸத்வம்பரஸ்வரிஷ்புதே - தட்கமீஸபீரதா



50. ஏகபாத திரிமூர்த்தி.

போயம தாபேதயமவஜாமிஷ்யதே - சூலஸ்யாநுக்ரஹஞ்சைவ அப யஞ்சப்ரகாஸ்யதே - புத்திஸ்ஸ்யாந்நாகரூபந்து பாஸம்மாயாஸ்வரூப கம் - விவர்ணமங்குஸஞ்சைவ கண்டம்நாதாத்மகம்விது - ஸம்ஹார மக்நிரூபம்ஸ்யாத் பாஸாநாம்பஸ்மஸாத்க்ருதி - ஏதேவைகுணரூபா ஸ்ச ஸாங்கஞ்சேதிப்ரகீர்த்திதா - வஸ்த்ரோபவீதமாலாஸ்ச கந்தமா பரணந்ததா - ஆஸநாசரணஞ்சைவ உபாங்கஞ்சேதிகீர்த்திதம்" — என்று கூறியதினுனே இவர் திருமேனி காருண்யதிருமேனியென ப்படுபெற்றது.

తదుక్తంవాతులే.

అఙ్గప్రత్యఙ్గసాఙ్గంచో పాఙ్గంచచతురోభవేత్ । శిరోవక్త్రంచ హృదయ మఙ్గంచేతిప్రకీర్తితమ్ । వక్షఃకణ్ఠస్తనౌబాహూ నాభిగుహ్యో దరంతథా । నేత్రంనాసాస్యకర్ణౌచ పాణిపాదంతథాఙ్గులిః। ఊరూచ జానుజఙ్ఘంచ ప్రత్యఙ్గంచేతికథ్యతే । మూర్తీనాంగుణరూపంతు సాఙ్గంచేతిప్రకీర్తితమ్ । గుణచ్ఛిన్నమితిజ్ఞేయం తద్గుణందశధాభవేత్। గుణః సత్యం ప్రతాపంచ మర్భేద్యానుగ్రహంతథా । బుద్ధిమాయావివర్ణంచ నాదం సంహృతిరేవచ । ఏతేదశగుణాఃప్రోక్తాః తేషాంలక్షణముచ్యతే । త్రిగుణం శూలమిత్యుక్తం సత్యంపరశురిష్యతే । ఖడ్గమీశప్రతాపోయంమర్భేద్యంవజ్రమిష్యతే । ఈశస్యానుగ్రహంచైవ అభయంచప్రశస్యతే।బుద్ధిస్స్యాన్నాగరూపంతు పాశంమాయాస్వరూపకమ్ । వివర్ణమఙ్కుశంచైవ కణ్ఠంనాదాత్మకంవిదుః । సంహారమగ్నిరూపంస్యాత్ పాశానాంభస్మసాత్కృతిః । ఏతేవైగుణరూపాశ్చ సాఙ్గంచేతిప్రకీర్తితాః । వస్త్రోపవీతమాలాశ్చ గంధమాభరణంతథా । ఆసనాచరణంచైవ ఉపాఙ్గంచేతికీర్తితమ్ ॥

இவர் திருமேனியில ஹ்ருதயத்தினின்றும் சஹஸ்ராம்ஸமாக உருத்திரதேவர் தோன்றுவர். கோடியம்ஸமாக வாமதக்ஷிணபாரசன்

களினின்றும் பிரம விஷ்ணுக்கள் பிறப்பார்கள். தக்ஷிணவாமலலாடநேத்திரங்களிலிருந்து சூரிய சோமாக்கினிதேவர் தோன்றுவர். பிராணனிலிருந்து வாயுதோன்றுவன். கண்டத்தினின்று கணேசர் ஜனிப்பர். ஹிருதயத்தில் ஸ்கந்தர் உதிப்பர். நாபியினின்று இந்திர யமவருண குபேரருதிப்பார்கள். பிரத்யங்கத்தினின்றும் பஞ்சாசத் கோடி தேவர்கள் பிறப்பர். உரோமகூபங்களிற் பலகோடி ருஷிகளும் மற்றுமுள்ள பல தேவர்களுஞ் சனிப்பார்களென்று வேதசிவாகமங்களிற் படிக்கப்பட்டுள்ளன.

## வாதுளாகமம்.

காமேசஸ்யஸஹஸ்ராம்சாந் மஹேசாஸ்யஸமுத்பவ - மஹேசஸ்யஸஹஸ்ராம்சாத் ருத்ரதேவஸமுத்பவ: - ஏதம்மஹேசகோடயம்சாத் ப்ரஹ்மவிஷ்ணுஸமுத்பவ - தக்ஷிணாங்கபவோப்ரஹ்மா ஹரிவாமாங்கஸம்பவ - ஹ்ருதயாந்நீலருத்ரஸ்து சிவஸ்யசிவஸஂஜ்ஞக: - நேத்ரோஷ்ணஸவ்யவாமோத்தவே ஸூர்யஸோமாக்நிஸம்பவ: - ப்ராணவாயுஸமுத்பந்ந ச்ரோத்ரோகிலாதிஸம்பவ - ஆஸ்யேஜ்ஞாநம் ஸமுத்பந்நம் கணேசஸ்துகண்டோத்பவ: ஷண்முகே ஹ்ருதயேஜாதோ நாபௌதேவாஸ்ஸமுத்பவா: - பஞ்சாசத்கோடிதேவாச்ச மஹேசாங்கஸமுத்பவா: - ருஷயஸ்சததாகோடயோ ரோமகூபாத் ஸமுத்பவா - மநோந்மந்யாஸ்ஸஹஸ்ராம்சாத் கௌரீஜாதம் இதிஸமருத்தம - ஸ்ரீஸஸாஸரஸ்வதீ தாதா உமாசைவபராபாத்தா - சசிஜயேஷ்டாசலக்ஷ்மீச தத்தைவாந்யாச்சஸக்தய: - ஏதாவை கோடிசக்திச்ச கௌரீதேஹஸமுத்பவா.

## அதர்வசிகோபநிஷத்து

ப்ரஹ்மவிஷ்ணுருத்ரேந்த்ரா ஸ்ஸம்ப்ரஸூயந்தே - நகாரணம் காரணம் துத்யேய - ஸர்வைச்வர்யஸம்பந்ந. சம்புராகாசமத்யே

బ్రహ్మవిష్ణురుద్రేంద్రా స్సంప్రసూయంతే । న కారణం కారణం తు ధ్యేయః । సర్వైశ్వర్యసంపన్నః శంభురాకాశమధ్యే ॥ అథర్వశిఖోపనిషత్తు.

### கூர்மபுராணம்.

ராஜஸீமாமகீஶக்தி கரோதிஸகலஞ்ஜகத் - ஆஸ்தாயப்ரஹ்மணோ ரூபம் மந்மாயாஸம்ப்ரவர்த்திதா - அந்யாசஶக்திஸ்ஸத்வாட்யா ஸம்ஸ்தாபயதிமேஜகத் - பூத்வாநாராயணோநந்தோ ஜகந்நாதோஜகந்மய:- த்ருதீயாமஹதீஶக்தி ர்நிஹந்த்ரீஸகலஞ்ஜகத் - தாமஸீமேஸமாக்யா தா கோபாத்ருத்ராக்யரூபிணீ.

### కూర్మపురాణం.

రాజసీమామకీశక్తిః కరోతిసకలంజగత్ । ఆస్థాయబ్రహ్మణోరూపం మన్మాయాసంప్రవర్తితా। అన్యాచశక్తిస్సత్త్వాఢ్యాసంస్థాపయతిమేజగత్ । భూత్వానారాయణోనంతో జగన్నాథోజగన్మయః । తృతీయామహతీశక్తిర్నిహంత్రీసకలంజగత్ । తామసీమేసమాఖ్యాతా కోపాద్రుద్రాఖ్యరూపిణీ ॥

### லிங்கபுராணம்.

தமஸாகாலருத்ராக்யம் ரஜஸாகநகாண்டஜம் - ஸத்வேநஸர்வகம்விஷ்ணும் நிர்குணத்வேமஹேஶ்வரம்,

తమసాకాలరుద్రాఖ్యం రజసాకనకాండజం। సత్త్వేనసర్వగంవిష్ణుం నిర్గుణత్వేమహేశ్వరం ॥ లింగపురాణం.

### ஆதித்யபுராணம்.

ஸதஸ்மாததிகம்ஶம்பும் தத்வந்தத்விதிஶங்கரம் - தஸ்யைவமூர்த்தயஸ்திஸ்ரோ ப்ரஹ்மவிஷ்ணுஹராபிதா.

సతస్మాదధికంశంభుం తత్త్వంతద్విధిశాంకరం। తస్యైవమూర్తయస్తిస్రోబ్రహ్మవిష్ణుహరాభిదాః ॥ ఆదిత్యపురాణం.

### அநுஶாஸநிகபர்வம்

ஸவிஷ்ணுபகவாந்ருத்ர: ஸாவதத்வாதிரவ்யய: - யோஸ்ருஜத்தக்ஷிணாதங்காத் ப்ரஹ்மணம்லோகஸம்பவம் - வாமபார்ஶ்வாத் ததாவிஷ்

ஞும் லோகரக்ஷார்த்தமீச்வர: - ஹ்ருதயாத்காலருத்ராக்யம் ஸர்வஸம்ஹாரகாரகம்.

అనుశాసనీకపర్వము.

సఏవభగవాన్రుద్రః సర్వతత్త్వాదిరవ్యయః।సోఽసృజద్దక్షిణాదంగా ద్బ్రహ్మాణం లోకసంభవం । వామపార్శ్వాత్తథావిష్ణుం లోకరక్షార్థమీశ్వరః । హృదయాత్కాలరుద్రాఖ్యం సర్వసంహారకారకం ॥

மதங்கஸ்வேதஸம்பூதௌ ப்ரஹ்மநாராயணாவிமௌ - ஸ்காந்தம் தக்ஷிணாங்கபவோப்ரஹ்மா வாமதஶ்சஜநார்த்தந லிங்கபுராணம் ஜாதோஹமஸ்யவாமாங்கே ப்ரஹ்மசைவாஸ்யதக்ஷிணே - காளிகாகண்டம் விஷ்ணுவாக்யம்.

మదంగస్వేదసంభూతౌ బ్రహ్మనారాయణావిమౌ ॥ స్కాందము॥
దక్షిణాంగభవోబ్రహ్మా వామతశ్చజనార్దనః ॥ లైంగము ॥
జాతోఽహమస్యవామాంగే బ్రహ్మాచైవాస్యదక్షిణే॥ కాళికాఖండము॥

**ஆதித்யபுராணம்.**

யதாஜ்ஞயாஜகத்ஸ்ரஷ்டா விரிஞ்சி பாலகோஹரி
ஸம்ஹர்த்தாகாலருத்ராக்யோ நமஸ்தஸ்மைபிநாகிநே

ఆదిత్యపురాణం.

యదాజ్ఞయాజగత్ స్రష్టావిరించిఃపాలకోహరిః ।
సంహర్తాకాలరుద్రాఖ్యో నమస్తస్మైపినాకినే ॥

இத்தியாதி பிரமாணங்களாற் கற்பங்கடோறும், சிவபெருமான் அநேககோடி பிரமவிஷ்ணுருத்திரர்களை அவரவர்களின் பாசவீக்கத் தினை நீக்குதற்பொருட்டு அணுத்தன்மைநீங்கிச்சிவமாந்தன்மையருளுதற்பொருட்டுந் திருஅங்கத்தினிடத்துச் சிருட்டித்து,மீண்டுந்தம்மிடத்தில் ஒடுக்கிக்கொள்வர். "யாதேருத்ரபிதர்மருதாம் ஸும்நமேது," என்

னும் சுருதி பிரமாணத்தின்படி, அத்தேவர்களைக் கற்பங்கள்தோறும் சிருட்டித்தும், மீண்டு தம்மிடத் தொடுக்கியும், தாம்பிறப்பிலராய், மும்மூர்த்திமுதலாகிய தேவர்களுக்கும் பிறப்பிடமாயத்தனித்துநிற்ப ராதலின், சிவபிரானை ஏகபாதத்திரிமூர்த்தியெனப் பெயரெய்தினர்

## காஞ்சிப்புராணம்

" அடுப்பார்க்கருளுமொருதாளுமம்பொற்கமலவிழிமூன்றும்
படப்பாம்பணிந்தபுயநான்குஞ்சூலப்படையுமெழிலங்க
விடப்பாலரியைவலத்தயனையெழுநாற்கோடியுருத்திரரை
நடப்பாற்கேற்றறியையத்துவடிவமுடனுநலம்பிறங்கி

புகன்றவிடப்பாற்பகுதியினைப்புரந்தித்தலத்திற்புரந்தினை
யகங்காரத்தினுற்றன்மாத்திரையிற்பொறியினவ்வவற்றைத்
தருந்தாள்குயமூர்த்திகளைத்தலையிற்பாரீரனலவளிவான
மிருஞ்சீரவிழியினிடத்திரவிவெண்கேழ்மதியைப்படைத்தருளி.

அடியினடங்குங்கீழுலகமனைத்துமடியினுற்றதோற்றி
முடியினடங்குமேலுலகமுழுதுமுடிப்பாலளித்தருளிப்
படியில்கருணைப்பிழம்பாகிப்பரசுமடியார்கவிழ்க்காயக்
கொடியமலநோயரட்டொழித்தருட்கோணப்பெருமானிருவுருவம்"

ஏகபாதத்ரிமூர்த்தயோகம்:

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

---

## ஐம்பத்தொன்றாவது
# த்ரிபாத த்ரிமூர்த்தி.

திவ்விய மங்கள ஸ்வரூப ராகிய சிவபெருமான் மகேசுரராகி நின்று, தம்மிடத்திருந்து அகில புவனங்களையும், அப்புவனத்திபா களையும் முறையே தோற்றுவித்து, அத்தோற்றிய அடைவே தம் மிடத்தி லொடுக்கிக்கொள்வர். அவ்வொடுக்கம் நித்தியம் நைமித்தியம் பிராகிருதம் ஆத்தியந்திகம் என நான்கு வகைப்படும். அவற்றுள் முதலிற்கூறிய நித்தியம் என்பது ஆன்மாக்கள் அவர்கட் குறுதியிட்ட ஆயுளி னிறுதியில், தத்தங்காரணத் தொடுங்குவதாம். இரண்டாவதாகிய நைமித்திகம் என்பது பிரமாவினது பகல்கழிய, உலகு சலத்தால்மறைதலாம். மூன்றாவதாகிய பிராகிருதம் என்பது பிரமதேவனது காலவளவை யொழிய உலகமெல்லாம் மடிந்து பிரகிருதியில் ஒடுக்கமுறுதலாம். நான்காவதுங் கடைப்பட்டதுமான ஆத்தியந்திகம் என்பது ஆன்மாக்கள் விரிந்த ஞானத்தினால் முத்தியடைதலாம்.

அவற்றுள் முதற் கூறிய நித்திய மென்பது வெளிப்படை. இரண்டாவதாகிய நைமித்திகப் பிரளயத்தின் முடிவில், சூரியன் நூறுதேவவருடமட்டும், சுவர்க்க மத்திய பாதல லோக மனைத்தும் முதலற, ஏழுற்கதிர்பரப்பி, கடலாற் சூழப்பட்ட பூமியும், அதைச் சூழ்ந்த பெரும்புறக்கடலும் வறண்டு பொரிந்து போகும்படி தீப் பொறிகளைச்சிந்தி அக்கினி தேவனுடன், கொல்லுந் தொழில்செய்யும் யமனைப்போலக் காலத்தோடு கலந்து, பூலோகம் புவர்லோகம் சுவர் லோகம் மகலோகம் பாதலலோகம் முடிவுவரையிலுள்ள சராசரமெல் லாவற்றையு மெரிப்பன். இங்ஙனம் செய்தபின்னர் நூறுவருஷம்



51. ஏகபாத திரிமூர்த்தி.

மேகககூட்டஙகளகுழுமி யானைத துதிககையினினறுமநீரசொரிதல போல நீரததாரைபொழிநது மினனி இடிததுச சூரியனடீஷணமுதலி யவறறைத தமமிடத தொடுககிககொணடு பெருமழை சொரியும. இவவகைய நைமிததிகபபிரளயகாலததில பிரமன யோகநிததிரை செயவன. இபபிரளயததோடு கூடிய கறபததை வராககறப மென வுங கூறுவா

பிராகிருதபபிரளயததைச சிறிதுவிரிபபாம. பரமாணுஇரண டுகொணடது அணு. அது மூனறுகொணடது திரிசரேணு அது மூன றுகொணடது துடி. அது மூனறுகொணடது வேதை. அது மூனறு கொணடது லவம் அது மூனறுகொணடது நிமிஷம. அது மூனறு கொணடது கணம, அது ஐநதுகொணடதுகாடடை. அது பதினைந துகொணடது லகு அது பதினைநதுகொணடத் கனனல அலலது கடிகை. அது இரணடுகொணடது முகூாததம. அது பதினைநதுகொ ணடது பொழுது அது இரண்டுகொணடது நாள. அது பதினைநது கொணடது படசம. அது இரணடுகொணடது திஙகள. அது இரண டுகொணடது. இருது, அது மூனறுகொணடது அயநம. அதுஇரண டுகொணடது ஆணடு எனறு சொலலபபடும. ஆணடு அலலது வரு டம நூறுகொணடது மாநுடாஆயுளகாலம.மேறகூறிய மாநுஷநாள முபபதுகொணடது தெனபுலததோாக்கு ஒருநாள. அவவகைத திங கள பனனிரணடுகொணடது தேவாகளுககு ஒருநாள. அவவகைய நாளகளகூடிய ஆணடு பனனீராயிரங கழிநதால, தேவாகளுக்கோா ரூழியாம காலவகையூழி யாயிரஞசெனறால, பிரமனுககொருபகல். இதறகுள சுவாயமபு - சுவாரோசிஷன-உததமன-தாமசன - இரைவ தன - சாககுஷன- வைவசுதன - சூரியசாவாணி - தகஷசாவர்ணி - பிரமசாவாணி - தருமசாவணி - உருததிரசாவாணி- ரௌசசியன - பௌ[illegible]னெனனும் பதினைகு மநுக்களும், விபசிதது-சுசாந்தி- சிவி [illegible]-மனோசவன் - புரநதரன -மாவலி - அறபுதன - சாநதி - விருடன - இருதாமன் - திவஸ்பதி - [illegible]என்னும் பதினைகு இந்தி

ராகளும நீங்குவா. அப்பொழுது பிரமன சிருடடி நீஙகித துஞசுவன. இதையேபிராகிருதபபிரளயமெனபா. இததகைய பிரமாஒருகோடிய ரிறபபின திருமாலுககு ஒருபகலாம. இவவகை விஷணுவினகாலவ ளவை கழியின விஷணுவு மிறபபா.

இவவாறிறநத பிரமவிஷணுககளும உருததிரரும தாமதோன றிய அடைவே மகேசசுரனிடததில லயமாவா அமமகேசசுவரரோ அநேக கோடி சூரியபபிரகாசமாயபபிரமாணடஙகளையெலலாம செ றறிக கணணுலெரிதது, அவவாறு எரியுணட புவனபதிகளின அங கஙகளைக கருணையாலே, தமமிடத தொகுகதத கொளவா பிரமா - விணடு - உருததிரனென்னு மிவமூவரும ஒடுஙகும சமயதது மகே சுவரரொழுநதருளிய அவசரம தரிபாத தரிமூாததமெனபபடும. அதா வது மூனறு பாதமாகினற மும்மூரததிகளும மகேஸவரரிடததில லயமாதலாகிய அவசரம என வுணாக.

எலலாபபொருளகளும, தததம பிறபபிடததிலேயே லயபப டும எனபதறகுப பிரமாணம.

"யாதோவா இமாநிபூதாநிஜாயநதேயே, நஜாதாநி ஜீவநதியத ப்ரயநதயபிஸம விஸநதிதத விஜிஜஞா ஸஸவததபரஹம"—சுருதி.

## சிவஞானபோதம்.

முதறசூததிரம - உதாரணம.

"இல்யிதத தனனின் லயிததததா மலததா
லிலயிதத வாறுளதா வேணடு - மிலயிதத
ததநிதியி லெனனி னழியா துவையழிவ
ததநிதிபு மாதியுமா மாஙகு."

தரிபாத தரிமூாததயேகம



[illegible] மூர்த்தி

சிவமயம்.
திருச்சிற்றம்பலம்.

UD
TIRUVA

## ஐம்பத்திரண்டாவது

# ஏகபாதமூர்த்தி.

கலைமுதலிய உறுப்புகளின்றி, கருத்தினுக்கெட்டாதாகி வண்ணமுங் குணமுமின்றி மாறலாப்பொருளாய ஆதிமத்தியாந்தரகித்[ரா]ய்ச் சுயஞ்சோதியாய்ச் சர்வான்மாக்களுந் தோ[...]ஷயிக்குமிட[மா]ள்ள சாக்ஷாத்சிவபெருமான் ஆன்மாக்கள் ஆணவகேவலத்தில் மூழ்கித் தம்மையறியாது கிடப்பதை யறிந்துச் சத்தியை க்ஷோபித்து ஞானத்தை யுதிப்பித்து அவ்வான்மாக்களை ஆணவாதிமலபந்தங்க[ளை] நீக்கித் திருவடியை யடையத் திருவுள்ளங்கொண்டு சிருட்டியாதியைக் கருதி, மீண்டும் படைத்தும், அவற்றைக்காத்தும், சங்கரித்தும், திரோபவித்தும், அநுக்கிரகித்தும் வருகிறார்

சர்வசம்ஹாரகாலத்திற் சத்தியில் அனைத்துயிரும் ஒடுங்க, அக்காருண்யசத்தியார் தம்மிடத்தொடுங்க, சிவபிரான் ஒருவரே அழியாதிருந்தருளுவர், எனவே சிவாகமாதிபுராணங்கள் பிரதிபாதிக்கும். இவரே சர்வகாருண்யராகிய பகவான், அணிமாதி அஷ்டசித்திகளும் முற்றகாரணர், பிரணவவாச்சியர்; பாக்யபகவத் சப்தவாச்சியர்; இவரே தனிப்பொருளாய் நிற்பவர். இவற்றைப்பின்வரும் உபநிடதாதி மஹாவாக்கியங்கள் வெளிப்படுத்தும்.

### ஶ்ருதி வாக்கியங்கள்.

ஈஶாநஸ்ஸவ ஏகோருத்ர: | ஶிவ ஏவ கேவல: | ஏக ஏவ ருத்ரோ ந த்விதீயாய தஸ்தே | த்யாவாபூமி ஜநயந் தேவ ஏக: | ஸ ஶிவ ஏகோ தேவ: | தமேகம் புருஷம் ருத்ரம் | ய ஏகோ ருத்ர உச்யதே | ஏகமேவாத்

விதியமப்ரஹ்ம | ஸாவோவைருத்ர | விஶ்வாதிகோருத்ரோமஹரு ஷி | ய.பரஸ்ஸமஹேஶ்வர:

ఈశానస్సఏకోరుద్ర:॥శివఏవకేవల:॥ఏకఏవరుద్రోనద్వితీయాయ తస్థే।ద్యావాభూమీజనయన్దేవఏక: ॥ సశివఏకోదేవ:॥ తమేకంపురుషంరు ద్రం।యఏకొరుద్రఉచ్యతే॥ ఏకమేవాద్వితీయ్యంబ్రహ్మ॥సర్వోవైరుద్ర: ॥ వి శ్వాధికోరుద్రోమహర్షి:॥ య:పరస్సమహేశ్వర:॥ శ్రుతయ:॥

இதயாதிப பிரமாணஙகளால, பகவானுக வுளள சிவஜாததி ய தனிததுசிறபவ ரொனவும, ஒருசிய இமையவாகடகு முதலவ னவுமபெறபபட்டது. இனி பகவத சபதவாசசிய ரொனபதறகுப பிரமாணங கூறுவாம. பகவா னெனபது அறுகுணசசெலவனெனப பொருளாகும.

அவையாவன,

"ஐஶ்வர்யஸ்யஸமக்ரஸ்ய வீர்யஸ்யயஶஸ:ஶ்ரிய - ஜ்ஞாநவைராக்ய யோஶ்சைவஷண்ணாமபக இதீரித"- இததகைய அறுகுணஙகளும சிவபெருமானுககுளளவை. எவவாறெனின, ஶ்வேதாஶ்வதரோபநி ஷதது. "தமீஶ்வராணாம பரமமமஹேஶ்வரம" எனறும, "ஸர்வஸ யபரபுமீஶாநம" எனறும, தைததிரீயகம "ய:பரஸ்ஸமஹேஶ்வர. எனறும், அதாவஶிரஸு "ஸர்வைஶ்வர்யஸம்பந்ந:ஶர்வ." எனறும, ஸௌபதிகபாவததில, கணணனவாககியம் ' நமஸ்தேவமதேவா நாய ஈஶ்வரஸேவரமவ்யயம." எனறும, சிவநாமஙகளில, "ஈஶாந: ஈஶ: ஈஶ்வர. மஹேஶ்வர:" என்றும போநத பிரமாணஙகளால, எல லாமுடைமைக் குணமுடையான சிவபிரானென்பதும,இபபகவானை யுபாசிததே மறறதேவாகள ஐசுவரியாதி சமபததுகளைப் பெற்ற ாகளெனபதும விளஙகுகினறது.

இனி வீரயன் என்பதறகு, ஶ்ருதி "மருகக்கபீமமுபஹந்துமு க்ரம்" என்று கூறிய உக்ரசப்ததால் வீரயனெனப் பெறப்பட்டது.

பாகவதம சதுர்த்தஸ்கந்தம பிர[illegible]ாகஇயம "நாஹம்நயஜ்ஞாநசய ஸயயூயம-யேதேஜோவாஜாமு[illegible]வம-விது பரமாணமபல வீாயயோரவா-தஸயாதமதமதா[illegible]தபிதிதஸேத" என றும,ஶ்ருதி "நஸந்நசாஸந்ஶிவ[illegible]கேவலு" என றும, காட்டிய பிரமாணங்க ளால யஸோகுண முடைமை நிரூபிக்கபபட்டது. "அதவாசேஷுகல் யாண குணைகக னாஈஶவர. ஶிவஇதயுசயதேஸதபி: ஶிவததவாாதவே திபி என றும, இராமாயணம "ஶரீமத:ஶிதிகண டஸயகீாதிஹிதுரதி கரமா" என றும, ருக்வேதம "ஶ்ரேஷ்டஜாதஸயருத்ரஸ்ய ஶரியாஸி தபஸத மஸதபநாம வஜரபாஹோ" என றும,விளக்கிய பிரமாணங்க ளால ஐசுவாயமுடைமையும யசோகுண முடைமையும், அநந்த கல யாணகுண முடைமையுமநாட்டபபட்டது ஶவேதாஶவதரோபநிஷத்து "ஏநாவருதம ஸதயமிதம ஸாவஜ்ஞ: காலகாலோகுணீஸாவவித யய" எனபதாற செலவமுடைமையும ஞானவைராக்கியமுடைமை யும சாறறபபட்டது பினனும கூர்மபுராணம "யஸதயோகம்ததா மோக்ஷ மிசசேதஜஞாநமுததமம ஸோாதயேதவை விரூபாக்ஷம" என றும, ஸமிருதி "ஈஶவராாதஜ்ஞாநமீப்ஸேத" என றும ஈர்மா ரிசபதம வைராகயகுணததைககூறிறறு பாகவதம்அஷ்டமஸகந்தம் "விரக்தஸதவதருதேபுமாந" என றும இவவாறு ஷாட்குணயஸம் பததியும் சிவபிரானிடத்தே அநந்யசாதாரணமா யுளளன.

அனறியும மநத்ரோபநிஷத்து "தாமாவஹமபாபநாம்பதே ஶம" என றும, வேறோ மநதரம் "ஸாவாநநஶிரோக்ரீவ: ஸாவபூத குஹாஶய: ஸாவவயாபீஸபகவாந் தஸமாதஸாவகத:ஶிவ:" என றும் பகவதஸப்தவாசசியம நிாததேசிக்கப்பட்டது. இனிச சிவபிரானே பிரணவாசசியனெனபதைவிளக்குவாம்.ஶ்ருதி "யோவேதாதௌஸ்வ ர:ப்ரோக்த:" என று பிரணவசப்தவாச்சியத்துவம் மஹேஶ்வரனாக கிஷ்டமாய்த தெரிவிததது. பினனும் ஶ்ருதி "ப்ரஹ்மாஶிவோமே அஸ்துஸதாஶிவோம்" என்றும், லிஙக புராணம் "ப்ரணவோ வாசகஸ்தஸ்ய ஶிவஸ்யபரமாதமந:" என்றும், ஆதித்யபுராணம்

"வாசக ப்ரணவோயஸ்ய ஜ்ஞா[illegible]தத்தேருமாபதே" என்றும், கட வல்லீமாண்டூக்யாதாவ்[illegible]ப்ரஸ்நோபநிஷத் முதலியவற்றுளும், பிரணவம் சிவ[illegible]ாகவே பிரதிபாதிக்கப்பட்டது.

இனி வேதங்களாற் கூறப்படும் பிரக்காதிசப்தப் பொருளாவார் சங்கரரென்பதற்கு ஆதித்யபுராணம் "பாகோவிஶ்வஸ்ய பரத்விஶ்வயோநிருமாபதி: தஸ்ய ஞாநமயீஶக்திபாராயாசக்திரீஜாஶிவா" என்றுகூறிய ஏதுக்களால், சிவபெருமானொருவரே மற்றத்தேவர்களுக்கு அருள்புரிந்து முதலிலும் கடையிலும் தனித்துநிற்பர் என்பது பெறப்பட்டது.

இத்யாதிப்பிரமாணங்களாற்போந்த பரமபதியாகிய சிவபெருமான் சர்வைஸ்வர்யத்தினால், யாவரும் வியமடைய எல்லாவுலகும் தமது திருவடியிற்பொருந்தநிற்பதால் ஏகபாதமூர்த்தியென்று சுருதியாதிகளாற் பிரதிபாதிக்கப்பட்டனர்.

ఐశ్వర్యస్యసమగ్రస్య వీర్యస్యయశసఃశ్రియః । జ్ఞానవైరాగ్యయోశ్చైవ షణ్ణాంభగఇతీరితః ॥ శ్వేతాశ్వతరోపనిషత్తు । తమీశ్వరాణాంపరమం మహేశ్వరం ॥ సర్వస్యప్రభుమీశానం॥ తైత్తిరియ్యం ॥ యఃపరస్సమహేశ్వరః ॥ అథర్వశిరస్సు ॥ సర్వైశ్వర్యసంపన్నఃశంభుః॥ సాత్త్వికపర్వం॥ నూనంసదేవందేవానాం ఈశ్వరేశ్వరమవ్యయం॥ నిఘంటు॥ ఈశానఃఈశః ఈశ్వరః మహేశ్వరః ॥ శ్రుతి ॥ మృగన్నభీమ ముపహత్నుముగ్రం ॥ భాగవతం ॥ నాహంనయజ్ఞానచయస్యయూయం । యేదేవోవాజామున యశ్చసత్వం । విదుఃప్రమాణంబలవీర్యయోర్వా। తస్యాత్మతంత్రశ్చనఉద్భిధిత్సేత్ ॥ శ్రుతి॥ నసన్నచాసన్ శివఏవకేవలః॥ అథవాశేషకల్యాణగుణైకఘనఈశ్వరః । శివఇత్యుచ్యతేసద్భిఃశివతత్త్వార్థవేదిభిః॥ రామాయణం ॥ శ్రీమతః శితికంఠస్యకీర్తి[illegible]దురతిక్రమా॥ ఋగ్వేదం॥ శ్రేష్ఠజాతస్యరుద్రస్యశ్రియా

సితపస్తమస్తపనాంగవజ్రబాహూ ॥ శ్వేతాశ్వతరోపనిషత్తు ॥ ఏనావృతంస త్వమిదంసర్వజ్ఞః కాలకాలోగుణీసర్వవిద్యః ॥ కూర్మపురాణం ॥ యస్త్రయో గంతథామోక్ష మిచ్ఛేతజ్ఞానముత్తమం 'సాధకోయోద్వైవిరూపాక్షం ॥ స్మృతి ॥ ఈశ్వరాదాద్జ్ఞానమీప్సేత్ ॥ భాగవతం ॥ విరక్తస్త్వద్భుతెపుమాన్ ॥ మంత్రోపనిషత్తు। దర్మావహంపాపనరంభగేశం॥ సర్వాననశిరోగ్రీవఃసర్వ భూతగుహాశయః। సర్వవ్యాపీసభగవాన్ తస్మాత్సర్వగతఃశివః ॥ శృతి। యోవేదాదౌస్వరఃప్రోక్తః ॥ బ్రహ్మశివోమెఅస్తుసదాశివోం॥ లింగపురాణం। ప్రణవోవాచకస్తస్యశివస్య పరమాత్మనః । ఆదిత్యపురాణం। వాచకఃప్రణవోయస్యజ్ఞానమూర్తెరుమాంపతేః ॥

இலிங்கபுராணம்.

“வெயயதிரிசூலமவிழைவோடிணி திணேநதலை
கைககொளொருநானகுமலாககணகளொருமூனறுஞ
செயயமலாவெணறவொருதாளுமுறுதேவை
யொயயெணவமைததவாகளமுததியுறுவாரே.

ஏகபாதமூாததயேநம:.

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

---

## ஐம்பத்துமூன்றாவது
# கௌரீவரப்ரதமூர்த்தி.

மந்தரபர்வதமானது மஹாதேவனைநோக்கிப் பலகாலந் தவ
ஞ்செய்து, அப்பரம்பதி தன்னிடம் வாழும்படி வரம்பெற்றமையால்
சிவபெருமான் தேவியாருடன் அதில் சிறிதுகாலம் வீற்றிருந்தனர்.
அவ்வாறிருக்கையில் அம்சவாகனனாகிய அலரோனை நோக்கி அநேக
நாள் அருந்தவ மாற்றிய அசுரனொருவன் உமையம்மையார் உடலி
னின் றுதித்த ஒரு பெண்ணால் உயிரொழிந்தாலன்றி, வேறொரு
வராலும் இறவாதிருக்க வரமேற்று இமயவரை யலைத்து வந்தனன்.
அந்த அவதியை யகற்ற வழியாதென்று வருந்திக் கருதியமலரோன்
மந்தர மடைந்து எம் பிரானைப்பணிந்து "இறைவரோ! இமய
வல்லியாகிய எமதன்னையிடம் ஓர் கன்னியைத் தோற்றுவித்து அவ்
வசுரனை யழிக்கவேண்டும்" என விண்ணப்பிக்க, இறைவர் அவ்வா
றே யாகுக" என்று விடையளித் தனுப்பினர்.

பின்னர் கானகண்டராகிய கண்ணுதல் லீலாமாத்திரையாய்த்
தேவியாரைத் திருநோக்கஞ்செய்து "ஏ காளிவருக" என, இறைவி
"கருப்புவில்லியாகிய காமனைக்காய்ந்து கலலாடையுஞ் சடைமுடியுந்
தரித்த கடவுளையா! தேவரீர் இவ்வாறு திருவாய்மலர்ந்தது யாதுகா
ரணம்? விருப்பில்லாமனைவி மகளிருட்படதடியாவ ளாதலின், இக்கா
ருமேனிக் கவுரியாம் வண்ணம் கருணைபூத் தருள்க" என்று, கண்ணி
ணையில் முத்துக்கள்போல் நீர்த்துளிகள் சிந்தினள். கருணாமூர்த்தி
பெண்ணே! சர்வான்மாக்களையும் காத்தலே நமது கடனாதலின் ஓர்



53. கௌரிலாப மூர்த்தி

கருமப்பொருட்டாய் இவ்வாறுகூறினேம். மனங்கலங்கற்க. அதனைப் பின்னரறிவாய்" எனத்திருவாய் மலர்ந்தருள, அம்பிகை அண்ணலை வலம்வந்து பணிந்து விடைபெற்று, இமயமலைச்சாரலை யடைந்து, ஆங்கோர் சிவலிங்கப்பிரதிட்டைசெய்து, ஆகமவிதிவழாது பூசித்து அருந்தவத்திருந்தனள்.

அவரா செய்யுந்நிலைமையில் அவதிப்படும் அந்தரத்தவர், சதுமுகனை முதலாகக்கொண்டு, சாம்பவிபால் வந்து சாஷ்டாங்கமாகப் பணிந்து "தாயே! தமது திருமேனியினின்றோர் சத்தியை யுதிப்பித்து, தானவர் குழாத்தைச் சங்கரித்து, வானவருக் கருள்வழங்கவேண்டும்" எனப் பிரார்த்தித்துக் காத்திருந்தனர். மலையரசபுத்திரியார் ஆகியவிமலை, மஹாதேவரது திருவருளாற் கௌரநிறமாங்காலஞ் சமீபித்தது. அப்பொழுது அன்னையார் தமது காளநிறத்தை விலக்க, அதுவே துர்க்கையென்னுஞ் சத்தியாய்ப் பிரமனாற்கொடுக்கப்பட்ட சிங்கவாகனமேறி உமையம்மையார் கட்டளைப்படி நிருதரைக்கொன்று விந்தகிரியில் வீற்றிருக்கின்றனள். பரமேசுவரியார் புராரியின் திருவருளாற் பொன்னிறமுற்றுக் கௌரியென்னும் பெயர்பெற்று, மந்தரமலையை யடைந்தனர். திருநந்திதேவர் முதலிய சிவகணநாதர்கள் திருவடிபரவத் திருச்சந்நிதானத்தினுட்சென்று சிவபிரானைச் சேவித்துத் திருக்கரங் கூப்பினின்றனர். மங்கையைத் தமது செங்கையா லெடுத்துச் சங்கரர் தமது திருத்தொடைமீதி லிருத்தினர்.

சிவபெருமானைநோக்கி உமையம்மையார் தமது கருமைநிறத்தாலெய்திய காளியென்னும் பெயர்நீங்கிப், பொன்னிறமாகிய திருமேனியும் கௌரியென்னுங் காரணத் திருநாமமுமெய்தக் கையேற்றுச் சந்நிதியில் வரங்கொண்ட மூர்த்தமே கௌரிவரப்த மூர்த்தமெனப்படும்.

### கௌரீவரப்த மூர்த்தபேதம் :

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

## ஐம்பத்துநான்காவது.

# சக்ராதாநஸ்வரூப மூர்த்தி

உலகமுழுவதும் ஓர் செங்கோலின் அரசுபுரிந்துவந்த துபன் என்னும் மன்னன் காரணமாகத் திருமால், ததீசிமுனிவரை யெதிர்த்துச் சமர்புரிந்து சகிக்கமுடியாராய்த் தமது சக்ராயுதத்தை அம்முனி புங்கவன்மேல் பிரயோகிக்க, அது அம்முனி சிரேஷ்டரது வச்சிர யாக்கையிற்றாக்கி வாய்மடிந்து மீண்டது. அதுகண்ட அச்சுதன் அச்சமுற்று, மாயாரூபமொன்று தன் போலுண்டு செய்தனன். முனிவர் முனிந்து தமது காற்பெருவிரலை யசைக்கக் கணக்கில்லாத விண்டு மூர்த்திகள் வெளியே தோன்றினர். அதனால் அவர் தவவலி மிகுந்தவரென்றும், அவரை வெல்லத்தக்கவல்லமை தன்னிடத்திலில்லையென்றும் சார்ங்கன் தெரிந்து, அம்முனிவரைச் சரண்செய்து மீண்டு தன்னுடன் போந்தவானவரை நோக்கி, "யான் தீயரைச்செகுத்து உலகைப்புரக்குந் திதிக்கடவுளாதலின், எனக் கித்தகைய சக்கரம் இன்றியமையாது, இதுபோல வேறொன்று யான் பெறுவேன்" என்றிசைத்துவருந்த, இமையவர் "சலந்தரனென்னுந் தானவத் தலைவனைச் சங்கரன் சங்கரிக்குமாறு திருவடியாற்கீறி நிருமித்த சுதரிசன மென்னுஞ் சக்கரப்படை அம்மகாதேவன் பாலுள்ளது" என மறுமாற்றங் கூறினர்.

அதுகேட்ட திருமால் சிந்தை களித்துச் சிவார்ச்சனையா லதனையடைவேனென்றுன்னத்தமைந்து, ஓர் சிவலிங்கக்குறியை ஸ்தாபித்துப் பாசுபத விரதம்பூண்டு சற்கற்பஞ்செய்து திருவெண்ணீறு தரித்து அக்கமாலைசூடி, தேவர்கள் பூசைக்குரிய உபகரணங்களைச்



௫௪. சுகாசனஸ்வரூப மூர்த்தி.

சித்தஞ் செய்துகொடுக்கப் பரமபதியைப் பதுமமலர் ஆயிரத்தால் நாடோறும் பவன் முதலிய திருநாமங்களோதி அருச்சிக்கத் தொடங்கினர். அவ்வாறு நிகழ்ந்துவருங்கையிற் பத்திவலையிற் படுவோராகிய பரமேச்சுரன் அவரதன்பின் முதிர்ச்சியை ஆகலிற் சூழ்ந்த அவணிமாகக் கட்க் கரிவிக்க ஆயிரங் கமலத்தில் ஒரு சலசத்தை மறைவாக்கினர். விண்டு வுணராராகிப் பண்டுபோல் பவன்முதலிய சகஸ்திரத் திருநாமங்களையோதி ஒவ்வொரு கஞ்சமாகவெடுத்துப் பூசித்துவந்து கடைசியில் ஓர் திருநாமத்திற்கு மலர் காணாராய் "இந்தெனையாளாகவுடையார் திருவிளையாட்டு" என்றெண்ணி, தமது பூசை முட்டுப்படாவண்ணம் விழியொன்றைப் பிடுங்கி மலராகப் பாவனைசெய்து அருச்சித்து முடித்து ஆனந்தக்கடலுள் ளழுந்தினர்.

உடனே பிறைசூடியபெருந்தகையார் கண்கூர்ந்தவராகிச்சோதிமயமான பேருருவுடன் தெரிசனந்தர, திருமால் அட்டாங்கபஞ்சாங்கமாகப் பலமுறை பணிந்து வேதவாக்கியங்களாற் றுதித்துக்கை பேற்றுநிற்க, கருணைவள்ளல் "கமலக்கேள்வ! உனது பூசைக்கு மனங்களித்தோம் உனது கண்ணையளித்தோம் **கமலக்கண்ணன்** என நாமமடையக்கடவாய்" என்று திருவாய்மலர்ந்து தமது திருக்கரத்திலிருந்த **சுதரிசனம்** என்னுஞ் சக்கராயுதத்தைப் பிரசாதஞ்செய்து எத்தகைய வலியினராயினும் நின்னை வெல்லாததோரா இஃது இமையவரிற் கொல்லும் ஆற்றலுடைய தென்றருக இரகித்தனர். திருமால் இவ்வரங்களையும் சுதரிசனத்தையும் பெற்றுப் பலமுறை பணிந்து அருவியாறுபோற் கண்களில் ஆனந்தபாஷ்பஞ்சிந்தப் பலவகையாகப் பாடி ஆனந்தக்கூத்தாடி எம்பெருமானது திருவடியை முடியிற்சூடி வைகுந்தத்தைநாடி இடையறாச் சிவபக்தியுடன் வீற்றிருந்தனர்.

## ஸ்காந்தபுராணம்

ததீசிராஜிதஸ்தலமம்புகராமேஸம்ருத்கண:-கண்யேமாஸ்ப்ருஹி கதமத்தவிஸம்ருதமத்வயா - சக்ரமவிகாரமஸாஹாயயம்சக்ரபாணேத்வப்ரியம்-குதஃகருதம்தேகயச்சத்வ யாத்தபிவிஸம்ருதம்.

దధీచినానిర్జితస్త్వం సంగ్రామే సమరుద్గణః। కండూయమానశ్శృగసి కథం తద్విస్మృతం త్వయా। చక్రం విక్రమసాహాయ్యం చక్రపాణేస్తవ ప్రియం। కుతః కృతం తేనయచ్చత్వయా తదపి విస్మృతం ॥

## ஆதித்ய புராணம்.

*ஸுதர்ஸநாக்யம்யச்சக்ரம்லப்தவாம்ஸ்தத்கதம்ஹரி ! மஹாதேவாத்பகவதஸ்ஸூததத்வக்துமர்ஹஸி! இத்யாதி! ஹிமவத்பர்வதம்கத்வா பூஜயாமாஸஸங்கரம் லிங்கம்தத்ரப்ரதிஷ்டாப்யஸ்நாப்யகந்தோதகை ஸ்ஸுபை : ஹ்ருதபுஷ்போஹரிஸ்தத்ரகிமிதந்த்விதிசிந்தயந் ஜ்ஞாத்வாஸ்வநேத்ரமுத்த்ருத்ய ஸர்வதந்த்ராவலம்பநம் பூஜயாமாஸதே வேஸம் ! இத்யாதி ! ஏவமுக்த்வாததௌசக்ரம்ஸூர்யாயுதஸமப்ரபம் நேத்ரஞ்சபத்மஸத்ருஸம்விஷ்ணவேப்ரபவிஷ்ணவே லோகேது புண்டரீகாக்ஷஇதிக்யாதிங்கதோஹரி ! இத்யாதி ! மயிபக்திர்த்ருடா விஷ்ணோபவிஷ்யதிதவாநக அஜேயஸ்த்ரிஷுலோகேஷுமத்ப்ரஸா தாத்பவிஷ்யஸி.*

## ఆదిత్యపురాణం.

సుదర్శనాఖ్యం యచ్చక్రం లబ్ధవాంస్తత్కథం హరిః । మహాదేవాద్భగవతస్సూత తద్వక్తుమర్హసి । ఇత్యాది। హిమవత్పర్వతం గత్వా పూజయామాస శంకరం । లింగం తత్ర ప్రతిష్ఠాప్య స్నాప్య గంధోదకైశ్శుభైః । హృతపుష్పో హరిస్తత్ర కిమిదం త్వితి చింతయన్ । జ్ఞాత్వా స్వనేత్రముద్ధృత్య సర్వతంత్రావలంబనం । పూజయామాస దేవేశం । ఇత్యాది । ఏవముక్త్వా దదౌ చక్రం సూర్యాయుతసమప్రభం । నేత్రంచ పద్మసదృశం విష్ణవే ప్రభవిష్ణవే। లోకేతు పుండరీకాక్ష ఇతి ఖ్యాతిం గతో హరిః । ఇత్యాది । మయి భక్తిర్దృఢా విష్ణో భవిష్యతి తవానఘ। అజేయస్త్రిషు లోకేషు మత్ప్రసాదాద్భవిష్యసి॥

## வாமந புராணம்.

*அதாப்யேதத்யஜ்ஞக்ஷேத்ரமஹேஸ்வரஹீரணம்விபும்-ஆராதயாமாஸ ஹரி : ஸ்வயமாத்மாநமாத்மநா-ஸாங்க்யயோகஸமாஸ்ரித்ய பாதாங்குஷ்*

டேத்தஸ்திவாச்-தத: ப்ரீதோஹர: ப்ராதாத்விஷ்ணவே துவரம்பரம்-ப்ரத்யக்ஷம் தைஜஸம் ஸ்ரீமத்திவ்யசக்ரம் ஸுதர்சநம் ! ப்ரதேயாந்தரம! அமோகவேஷோமரராஜபூஜிதோ-ஹ்ருதோமயா நேத்ரகதஸ்தபோ பலாத்.

వామనపురాణం.

ఆధాభ్యర్చ్యజగన్నాథం సహస్రశిరసంవిభుం । ఆరాధయామాసహరిఃస్వయమాత్మానమాత్మనా । సాంగవర్షసహస్రంతుపాదాంగుష్ఠేనతిష్ఠవాన్ । తతఃప్రీతోహరఃప్రాదాద్విష్ణవేతువరంపరం । ప్రత్యక్షంతైజసం శ్రీమద్దివ్యచక్రంసుదర్శనం । ప్రదేయాంతరం । అమోఘఃషోమరరాజ పూజితోహృతోమయానేత్రగతస్తపోబలాత్ ॥

ஹரதத்தர் வாக்கியம்.

காயத்ரீவல்லபத்வாத் த்ரயம்பகஸ்தாபிதாராதிதத்வாச் சௌனா: கைலாஸயாத்ராவரத்முதிதயாபீஷ்டஸந்தா நதாநாந்நேத்ரே ணஸ்வேநஸாகந்தஸதகமலோ விஷ்ணுநாபூஜிதத்வாத்தஸ்மைசக்ர ப்ரதாநாதபிசபக பதிஸ்ஸாவதேவபாகருஷ்ட :

గాయత్రీవల్లభత్వాద్ధ శరధతనయస్థాపితా రాధితత్వాచ్ఛౌరైః కైలాసయాత్రావిరతముదిత తయాభీష్టసంతానదానాన్నేత్రేణస్వేనసా కందశశతకమలై ర్విష్ణునాపూజితత్వాత్తస్మై చక్రిప్రదాన దపిచపశుపతిస్స ర్వదేవప్రకృష్టః ॥

அவதாரகோலத்திலே தத்சொரூபவர் மகிமையை அறியாமை யால் அவாபேரில திருமால் பிரயோகித்த சக்ரம் கூர மழுங்கித் திரு ம்பிய தாதலின், அதற்குப் பிறியாகச் சிவபிரானை யருச்சித்துப் பெ ருவலியமைந்த ஸுதர்சநத்தைப் பெற்றனரெனபதற்கு ஈண்டுச்சில ப்ரமாணங் காட்டினோம். ஆனல் விஷ்ணு இராமகிருஷ்ணாதி அவதார ங்களிலே மட்டும் சிவார்ச்சனை இயற்றினரா அல்லது அவதாரகோல

மல்லாத ஆதி காலத்தும் சிவபூசை செய்துள்ளாரா எனப் பரியாலோசிக்கும்பக்ஷத்தில், சிவபிரான் பூஜிதனென்றும் வரதனென்றும், திருமாலே பூஜகரும் சிவவரலப்த மஹானென்றும் தெரியவேண்டும். அவற்றிற்குச் சில நியாயங் காட்டுவோம்

### ருக்வேதம்.

த்வச்ரியேமருதோ த்ராஜயந்தேருத்ரயத்தேஜநிமசாருசித்ரம்
பதம்யத்விஷ்ணோருபமந்யதாயிதேந.

### ఋగ్వేదం.

తవశ్రియేమరుతో మర్జయంతరుద్రయత్తేజనిమచారుచిత్రం। పదం
యద్విష్ణోరుపమన్యధాయితేన ॥

### பராசரபுராணம் ஷோடசாத்யாயம்.

ரௌத்ரலிங்கம்மஹாவிஷ்ணுர்பக்த்யாசாருசிலாமயம் - சாருசித்ரம்ஸம்பூஜ்யசாலப்தவாநபரமம்பதம் - ஸாசலக்ஷ்மீஸ்ஸமாக்யாதா மஹாவிஷ்ணோஸ்துவல்லபா - யஸ்யலிங்கம்ஸம்பூஜ்யாச ஸபூஜ்ய: ஸர்வசேதநை.—என்ப பிரதிபாதிக்கும் வேதபுராண வாக்கியங்களில் ஆதிவிஷ்ணுவென்றும் மஹாலக்ஷ்மியென்றுங் கூறப்பட்டதாகையால் அவதாரங்களில் மட்டுமல்லாமல், அநந்தரம் அச்சுதன் அரனடியரேயாவர். பாரதம் துரோணபர்வத்தில் வியாஸாச்வத்தாமஸம்வாதத்திலும் வராஹபுராணத்திலும் இன்னும் பல இடங்களிலும் பிரமாணங்கள் விளங்கக் கிடக்கின்றன. விஸ்தாரபயத்திற்கு வெருவி விடுத்தாம்.

### పరాశరపురాణం.

రౌద్రలింగం మహావిష్ణుర్భక్త్యాచారుశిలామయం। చారుచిత్రంస
మభ్యర్చ్యాలబ్ధవాన్పరమంపదం। సాచలక్ష్మీస్సమాఖ్యాతా మహావిష్ణోస్తు
వల్లభా। యస్యలింగంసమభ్యర్చ్యసపూజ్యస్సర్వచేతనైః ॥

இனி அவர் ததீசிமுனிவர் மேற்பிரயோகித்த சக்ராயுதம் பண்டைக்காலத்தில் பத்மநாமனுக்கு எவ்வாறு கிடைத்தது என்பதைப் பற்றியுஞ் சிறிது ஈண்டுக்கூற வேண்டியதாயிற்று.

அசுரர் தொந்தரவைச் சகியாத தேவர் வேண்டுகோளுக்கிரங்கி அவர்களைச் சங்கரிக்கத்தக்க ஓர் ஆயுதந் தனக்கு வேண்டுமென்று கருதிய திருமால் இமயமலைச்சாரலில் ஓர் சிவலிங்கப் பிரதிஷ்டை செய்து நாளொன்றுக்கு ஆயிரந்தாமரை மலர்களால் அநேக காலம் சிவார்ச்சனை செய்துவந்தனர். ஓர்நாள் உமாபதி அவர் பக்திமுதிர்ச்சியைப் பரிசோதிக்கும்படி பத்மமொன்று மறைக்க, மாதவன் தன் கண்ணொன்றைக் கமலமாகப் பாவித்து அருச்சித்தனர். அப்பொழுது அருள்வள்ளல் இடபாரூடராய்த் தரிசனந்தந்து ஓர் சக்கராயுத முதவியிதனால் அசுரரை யழித்தி என்றருளி, கண்ணையும் முன்போற் கடாக்ஷித்துச் செந்தாமரைக் கண்ணனென்பெயருங் கொடுத்தனுப்பினரென ஆதித்தபுராணத்திற் படிக்கப்பட்டுளது.

முன்னோர் ஆத்தியந்திகப் பிரளயமகன்ற சிறிதுகாலத்தில் பரமேஸ்வரர் மீண்டும் பிரபஞ்ச நிர்மாணத்தில் திருவுள்ளங்கொண்டு அப்ராக்ருத ப்ராக்ருதஸ்ருஷ்டிகள் சிறிது செய்து பிரமவிஷ்ணுக்களைப் பிறப்பித்து, "நீங்களிருவரும் கிரமமாகச் சிருட்டி ஸ்திதிகர்த்தாக்களாயிருங்கள்" எனத் திருவாய்மலர்ந்தருளினர். அப்பொழுது விஷ்ணு விமலனைப் பணிந்து "சுயம்பிரகாசா! துஷ்ட நிவாரணத்தின் பொருட்டுத் தகுதியான ஆயுதமொன்றைத் தயவுசெய்தருளவேண்டும்" என விண்ணப்பித்துக் கொண்டனர். சிவபிரான் அவ்வாறே தமது நேத்ர த்ரயத்தால் ஸூர்ய ஸோமாக்னிகளின் தேஜஸ்ஸு பொருந்திய சக்ரமொன்று நிருமித்து அதனாலேயே கதையொன்று பிறப்பித்துக் கொடுத்தனர். அப்பொழுது பக்கத்திலிருந்த பராசக்தியாகிய உமாபிராட்டியார் தமது திருமுகத்தினால் ஓர் சங்கும் திருநேத்திரத்தினால் ஓர் பத்மமும் பிறப்பித்து, அவற்றைத் தாங்குதற்கு முன்னிருந்த இ

ருகரத்துடன் நூதனமாக இரண்டத்தங்களையுமுண்டுசெய்து பிரசா சித்தனா. இச்சரித்திரம் ஸ்கந்தருக்கும் அகஸ்திய முனிவருக்கும் நடந்த ஸம்பாஷணையிற் சாற்றப்பட்டுள்ளது.

## ஸ்காந்தபுராணம் ஈஶாநஸம்ஹிதை.

இத்யுக்தோ பகவாந் ஶர்வோ ஹரிணா விஶ்வமூர்த்திநா | த்வமாஹமே க்நாதேநஸாவேண ஹரமீஶ்வர: | ஆயுதம் சாஸ்ய தாஸ்யாமி தபோவிக்காபதத்தயே! தேவாரீணாஞ்ச ஸம்ஹத்யை ரக்ஷாயை ஜகதாமிஹ | இத்யுக்தவா பகவாந் விஷ்ணுப்தேவதேவ உமாபதி! ஏகாக்ரமநஸா த்யாநமகமத பரமேஶ்வர: | த்யாயதஸ்தஸ்ய தேவஸ்ய பராத்ராஸீத்ததோமஹத்ம ஶாருகேத்ராத்ரயாதஸ்ய ஸஹஸ்ராதித்யஸந்நிபம் | அக்நேஸ்துயா ச ஸோமாச்ச நயாலலோசநத்ரயாத | தத்தேஜோமயமத்யுக்ரமஜ்ஞாநாஸ்த்ரமவஜ்ரபஞ்ஜரம | நாபௌ ஸோமாமருத்மயோஹயரோஷூ பகவாநரவி | பராபதேஷு பகவாந்கஶ்ச சக்ரஸ்யஸ்யாச்சிவாத்மக:—ஸச்க்ரமத்விமாபூத்வா ஶங்கரோமீத்யபாஷத | க்ருதாஞ்ஜலிகரஸ்தஸ்தௌ பஹுபாஹுஸ்த்ரிலோசந. | தஞ்சக்ரம்பாணிநாலம்ப்யவிஷ்ணவே ப்ராதத்தௌ ஶிவ. | விஷ்ணோர்வைதக்ஷிணம்பாஹுமபஜத்ஸோபிஹர்ஷித: | ததோதேவஸ்ய வை ஶம்போ காதாக்ராதவிநிஸ்ஸ்ருதா | தைத்யதாபஹராகோராஸாவரத்நவிசித்ரிதா | ஷட்சாஸ்த்ரரூபிணீ திவ்யாஷ்டதாராஸ்த்ரீஸ்வரூபிணீ | ஆஜ்ஞப்தாஶம்புநாசாபிவிஷ்ணுமேவஸமாஶ்ரிதா | வாமமாஶ்ரித்யவைபாஹும்விஷ்ணோஸ்தஸ்யஸ்திதாபவத | ததோதேவீஜகத்தாத்ரீபவாநீஸாபராத்பரா ஶிவாவகஸ்ஸம்ஸ்திதாதத்யௌ விஷ்ணோராபேஶம்ஸபஜ்ஞயா! தஸ்யாவக்த்ராத்ஸமுத்பந்ந: ஶங்கராஜ்யஶ்ச ஶுப்ரப: | ஸாவதேவமய:ஶாந்த:ஸாவஸத்ருநிபர்ஹண: | ஸோப்யாஜ்ஞப்தஸ்தயாதேவ்யா விஷ்ணோ:பார்ஶ்வமதாகமத | தேவ்யாகேத்ராத்ஸமுத்பந்நம்புஷ்ஸ்பராம் ஶுபம் | ரமாலயமநோஹாரி ஸர்வலோகவிபூஷணம் | தஞ்சவிஷ்ணும்மஹாத்மாமோஜ்ஞயாபத்மமுத்தமம் | ஸமாப்யதத்ததோவிஷ்ணுர்விஸ்மயம்பரமம்யயௌ | பூர்வம்தத்விபுஜோவிஷ்

ஜுாகதா0சக்ரஞசஹர்ஷித: | ததாரஸம்புநாஜ்ஞப்த : ஸதுசிக்தாம வாபஹ | தவிபுஜோஹ0கதமதவதய ஆயுதாநாமசதுஷடயம் | தரி ஷயாமயமபயாததாவுபெளஸகாமபுஜாவபி | ஏவஞ்சிநததஸ்தஸ் யவிஷ்ணோ தேவயா.பரஸாதத . — பராதுராஸ்தாம கௌளபீகௌ தாபயாக்தெளசாபயதாரயத | ததோவிஷ்ணு : பரஸநாதமாஸங்க சக்ரகதாதர. | நமஸகருதயஸிவ0ஸாநதம கருதாாதோஸ்மி தயபாஷத ! ததோஜலதகமபீரகோஷேணபகவாநசிவ : ! விஷ்ணுமாஹம ஹாதமாந0கருதாாதோ ஸிதிகேஸவ இதயுக்தவாமதாததேதேவ : பரமாதமாஸதாஸிவ. ||

స్కాందపురాణం.

ఇత్యుక్తో భగవాఞ్ఛర్వోహరిణా విశ్వమూర్తినా । తమాహమేఘనాదేన సర్వేణహరిమీశ్వరః । ఆయుధంచాస్యదాస్యామి తపోవిఘ్నాపనుత్తయే । దేవారీణాంచసంహర్త్రే రక్షాయై జగతామిహ । ఇత్యుక్త్వా భగవాన్విష్ణుం దేవదేవ ఉమాపతిః । ఏకాగ్రమనసాధ్యానమగమత్పరమేశ్వరః । ధ్యాయతస్తస్యదేవస్య ప్రాదురాసీత్తమోనుదం । చారునేత్రత్రయాదస్య సహస్రాదిత్యసన్నిభం । అగ్నేఃసూర్యాచ్చసోమాచ్చతన్మయాల్లోచనత్రయాత్ । త్రితేజోమయమత్యుగ్రం జ్ఞానాస్త్రంవజ్రపంజరం । సాభాసో దూమృతమయో వ్యాకేషుభగవాఞ్ఛరవిః । ప్రాంతేషుభగవానగ్నిశ్చ క్రస్యసాచ్ఛివాత్మనః । సచక్రంమతిమాఞ్ఛూత్వా కింకరోమీత్యభాషత । కృతాంజలికరస్తస్థౌ బహుబాహు స్త్రిలోచనః । తంచక్రంపాణినాలంబ్య విష్ణవెప్రదదౌశివః । విష్ణౌర్వ్యదక్షిణంబాహు మభజల్లోసితిహాఽకిశః । తతోదేవస్యవైశంభోర్గదాగక్రాద్వినిస్సృతా । దైత్యదర్పహరాఘోరా సర్వరత్నవిచిత్రితా । షట్కాస్త్రరూపిణీదివ్యా షడ్ధారాస్త్రీస్వరూపిణీ । లక్ష్మ ప్రాశంభునాచాపి విష్ణుమేవసమాశ్రితా । వామమాశ్రిత్య వైబాహుం విష్ణో స్తస్యస్థితాభవత్ । తతోదేవీజగద్ధాత్రీ భవానీసాపరాత్పరా । శివాంకసంస్థితాదధ్యౌ విష్ణోర్ధరేశసంజ్ఞయా । తస్యావక్త్రాత్సముత్పన్నః

శంఖరాజశ్శశిప్రభః । సర్వదేవమయఃశాంతః సర్వశత్రునిబర్హణః ।సో ప్యాజ్ఞప్తస్తయా దేవ్యావిష్ణోఃపార్శ్వేసమథాగమత్ । దేవ్యానేత్రాత్సముత్పన్నమంబుజంసుప్రభంశుభం।రమాలయమనోహారి సర్వలోకవిభూషణం। తంచవిష్ణుంమహాత్మానమాజ్ఞయాపద్మముత్తమం । సమాశ్రయత్తతోవిష్ణుర్విస్మయంపరమంయయౌ । పూర్వంతుద్విభుజోవిష్ణుర్గదాంచక్రంచహర్షితః।దధారశంభునాజ్ఞప్తః సతుచింతామవాపహ। ద్విభుజోహంకథంత్వద్య ఆయుధానాంచతుష్టయం । ధరిష్యామ్యంబయాదత్తా వృథాశంఖాంబుజావపి।ఏవంచింతయతస్తస్యవిష్ణోఃదేవ్యాఃప్రసాదతః। ప్రాదురాస్తాంకరావీనౌతాభ్యాంతౌచాభ్యధారయత్ ।తతోవిష్ణుఃప్రసన్నాత్మాశంఖచక్రగదాధరః । నమస్కృత్యశివంశాంతం కృతార్థోస్మీత్యభాషత । తతోజలదగంభీరఘోషేణభగవాన్ఛివః ।విష్ణుమాహమహాత్మానంకృతార్థోసితికేశవః। ఇత్యుక్త్వాంతర్దధేదేవః పరమాత్మాసదాశివః ॥

ஈண்டெடுத்துக்காட்டிய பிரபல பிரமாணத்தானே திருமால் ஆதிகாலத்திலேயே சிவானுக்கிரகத்தால், சக்கராயுதம் தண்டாயுதங்களும், சாம்பவியின் கிருபையினால், சங்கமும் முன்னிருந்ததுடன் இரண்டு கரங்களும் பெற்றனனென்பது புலப்படும். அவ்வாறு சிவ கடாக்ஷத்தாற் சக்கரம்பெற்றதை மறந்து விஷ்ணு ஒருகாலத்தில் இறுமாப்புற, அஃது மறைந்துவிட்டது; அச்சமத்திலும் அதைப்பெறும்படி சிவார்ச்சனை செய்து மறுபடியும் பெற்றனனென வேறோர் உபாசனையும், ஷை ஸ்காந்தபுராணம் ஈஶ்வரஸம்ஹிதை விளக்குகின்றது. [விரிதல் கருதி இதுவனையும் நிறுத்தப்பட்டது.] இத்தியாதி நியாயங்களால் நான்குமுறையில் நாராயணன் சக்ராயுதநிமித்தமாய்ச் சங்கரோபாசனை செய்தவற்றை விலகாட்டப்பட்டது.

“சலமுடையசலந்தரன்றனுடல்தடிந்தநல்லாழி
நலமுடையநாரணற்கன்றருளியவாறென்னேடீ
நலமுடையநாரணன்றனயனமிடந்தரனடிக்கீழ்
அலராகஇடவாழியருளினன்காண்சாழலோ.” திருவாசகம்.

## கூர்மபுராணம்.

மாயோன நேமிபெற்றஅத்தியாயம்.

" லைமபொதிந்தசெங்களிவாயமாயோனனபுகருணமகிழவுற
றையனகையாறபுறநீவியடியப்பூனோந்தமலாககண்ணு
மெயதரவிதகெசுதரிசனமென்னுஞ்சுடராழியுமீந்து
செயயகமலககண்ணனென்னுமபெயருஞ்சிறபபிறுமெளித்தான "

## உபதேசகாண்டம்.

" என்னபபோற்றிமுடிமதொடடிழுகப்பணிந்தானெழுஞ்சுகி
மின்னுசசடையோனதிருவருளகூரந்தருகாநின்றானவிழுககமலக
கனனிகளைறைவனகருத்துணரந்துகதிராயிரமபோனறொளிபரபபும
பொன்னந்திகிரிபுரிந்துபினனுமெந்துவேணடுவதுபுகலெனறான

கினபாலுருகினதடிககீழ்நெடுங்கணசாதந்தீலயுலக
மனபாலறிவானெனகனுங்கணமபோறகததினருளகெனறு
மினபாலுககதோனறெருளிவேணடவேணடுமெவரங்கொடுத்தான்
பொனபானமருமததிகிரியினுடைந்தானமராபுடைபோறற."

## காஞ்சிப்புராணம்.

' ஆஙகவனையெதிரநோககிநினபூஜைக்ககமகிழ்ந்தே
 முனக்கிஞ்ஞானறு
தேஙகமலவிழியளித்தோமபதுமாக்கனெனுமபெயரீற
 றிகழவாயிவஞா
பாஙகுபெறுதிருமாறபேறெனபபொலிகவெனறருளிப்
 பானுகோடி
தாங்குகதிசசுதரிசனபபெயராழிததனிப்படையு
 முதவியெஙகோன."

திருமால் வீரபத்திராபேரில தக்ஷயாகததில் சக்ரத்தை விடு பப, அவர தலைமாலையி லொன்று அதனை விழுஙகியது. பின்னர் விக டககூத்தாடி அதைச சிரிக்கசசெய்தனர்; அதனுல சக்கரம் கழுவி வாயினினறுவிழ, ஸ்ரீவிநாயகக்கடவுள மீண்டும் அங்கடங்காணவிரு ம்பி எடுத்து மறைத்துவிட்டமையால் அவர மகிழும்படி அவ்வாறே

கூத்தாடி அவர் திருவருளாற் பெற்றனரென்க காஞ்சிப்புராணங் கூறும்.

"போராழியந்தனவாயிற்கழிந்துபுவிமிசைவீழ்ப்
 பொருக்கென்றங்கை
பேரானைமுகக்கடவுள்துகவர்ந்தங்கரியானபோன்
 திருப்பநோக்கிப்
பேராண்மைப்படைத்தலைவனிச்செயலென்னென்றழுங்கிப்
 பேதுற்றந்தச்
சீராளன்றிருமுன்புங்கைக்கண்டவிகடக்கூத்து
 செய்துவேண்ட,

எக்கறவானவரியற்றுமவிகடக்கூத்தெம்பெருமான்
 பெருமானுக்கி
மாகக்கருணைசுரந்தருளியாழியவனுக்களித்தான்—"

சிவபெருமான் தம்மிடத்தி லிடையறாத அன்புகொண்டு அருச்சித்த திருமாலுக்குச் சக்ராயுத முதவினமையால், அப்பெருமானுக்குச் சக்ரதானஸ்வரூப மூர்த்தியென ஓர் திருநாமம் வேதாகமபுராணங்களில் விளம்பப்பட்டது.

சக்ரதானஸ்வரூபமூர்த்தயேநம:



55. கௌரீவிலாசமகேஸ்வர மூர்த்தி

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்

## ஐம்பத்தைந்தாவது

# கௌரிலீலாசமந்வித மூர்த்தி.

திருக்கைலாயகிரியிற் சிங்காதனத் தெழுந்தருளியிருந்த சிவ பெருமானது திருவடிகளைத் தேவியா ரெழுந்து பணிந்து நின்று 'இறைவரே! எங்கும் நிறைந்த தேவரீரது உண்மைநிலையை யுபதேசித்தருளவேண்டும்" என விண்ணப்பிக்க, சுயம்பு "உமையே! செயல் குண வுருவங்களைப் பொருந்தோம், சர்வவியாபகமாக விளங்குவோம், உருவம் அருவம் உருவருவங்களைப் பொருந்துவோம்" என்று திருவாய்மலர்ந்தருளினர். உமாதேவியார் "உருவமுடையே மல்ல மென்றும், பல வுருவமுடையேமென்றும் உரைக்குந் தன்மை யாது?" என வோத, ஐயன் "அவை நம தருள்வடிவம்" என்றறைய, அன்னையார் "ஆயின், அவை யென்வடிவங்களே" என்றிசைத்தனர். நம்பர் "நம்மெதிரில் உன்னை வியந்து கூறினை, உன்னிடத்திலும் ஏனையோரிடத்திலும் யாமே நின்று தொழிற்படுத்துகின்றேம், அவ்வாறு தொழிற்படுத்துதல் நீங்கினால் அகிலசராசரங்களும் அறிவு முழுவதும் ஒழிந்து சடமாயிருக்கும்; அதனை யறிக" என்று மறுமாற்ற மருளி, திருமால் திசைமுகன் முதலிய தேவரது உள்ளத்திற் பொருந்தி அறிவினை யளிக்குஞ் செயலை நீங்கிக் கணப்பொழுதிருக்க, அகிலான்மாக்களும் அறிவிழந்தவர்களாய்த் தம்முறை தவறிச் சடமாயிருப்பதைக் கௌரி கண்டு, கங்காதரனது கழல்பணிந்து "எம்பெருமானே! எளியே னிசைத்ததை யெண்ணுமல்லவ்வாயு மெழுப்பியருளவேண்டும்" என்றிரப்ப, இறைவர் கருணை பூத்து யாவரையுமெழுப்பினர்.

விண்டு முதலானோர் பண்டைய வுணர்வுற்றுத் துயில்நீங்கினோர் போலத் துண்ணென்றெழுந்து அண்ணலைப் பணிந்து "எளியேங்கள் எண்ணில்காலம் அறிவடங்கிச் சடமாய்ச் செயற்கடன் மறந்தோமாதலின், அப்பாவம் அகலும் வகையை அருள்செய்யவேண்டும்" என விண்ணப்பிக்க, உத்தமன் "உம்பர்காள்! அப்பாவம் உம்மிடத்ததன்றி, உங்களிடத்ததல்ல" என்றேதியகற்றி, சாமப்பவியை நோக்கி "நீ * தக்கன்மகளாய்த் தரணிமேற் றோன்றுதி, யாம் வந்து மணஞ்செய்வோம்" என ஆஞ்ஞாபிக்க, விமலை விடையூர்தியைப் பணிந்து விடைகொண்டு, காளிந்திநதியிற் கமலமலரின்மேல் வலம்புரி வடிவாய்ச் சிவநாமங்களை யுச்சரித்துக்கொண்டு, சிறிதுநாளிருந்தனள். மாசிமாதத்தில் மகநக்ஷத்திரத்தில் தக்கன் தன்மனைவி வேதவல்லியுடன் ஸ்நானஞ்செய்து திரும்புகையில், இறைவியாரது வலம்புரிச்சங்கவடிவைக்கண்டு கைக்களிறஞுங்க, குழந்தைவடிவேற்றமையாற் களித்து மனைவி கையிலளித்து, உடன்கொண்டு மனையடைந்தனன். வேதவல்லி மாதேவியை வளர்த்து வந்தனள்.

அம்மையார் ஐந்துவயதடைந்து "சிவபிரான் தன்னை மணஞ்செய்யும்படி தவஞ்செய்வேன்" எனத் தந்தைபாற்கூற, தக்கன் தன் மகளாகிய தாக்ஷாயணி சாற்றியதற்குச் சாலவுங் களித்து அந்நகர்ப்புறத்தே ஓர் கன்னிமாடஞ் செய்வித்துச் சில கன்னியரோடும் அதில்விடுப்ப, அவர் அரனை நோக்கிப் பன்னீராண்டடையு மெல்லையுந் தவத்திருந்தனள். அவ்வாறிருக்கையில், சிவபெருமான் தக்கமாபுரியில், தாக்ஷாயணியின் தவச்செயல்காண விரும்பி, விருத்தவேதியராய் எழுந்தருள, எம் மன்னையார் கண்டு, இவர் பெரியோன் றுட்கொண்டு, எதிர்சென்று பாதம் பணிந்து நிற்க, மாதேவர் "மாதே! உன்பாலொரு வேட்கையால் வந்தேம்; கொடுப்பதாகிற் கூறுதும்" என, அம்பிகை "அஃது இசையுமாகிற் றருதும், அறைக" என, ஐயர் "உன்னை வதுவைசெய்ய உள்ளங்கொண்டு வந்தேம்; இசைக"

* இவ்வரலாற்றை இச்சரித்திரத்தி னிறுதியிற் காண்க.

என, இறைவியார் "இருகரங்களாலுஞ் செவித்தொளையைப் பொத்தி 'புராரியை மணக்கத் தவம் புரிவேனுக்கு இவ்வாறு புகன்றனை; போ! போ!" என்று அங்கிருந்து விலகிச் செல்ல, பரமர் அருகிருந்த பாங்கிய ரறியாது தமது திருவடியைப் பார்ப்பதிக்குக் காட்ட, அம்மை அளவிலா மகிழ்ச்சிகொண்டு, ஐயனைப் புகழ, அதுகண்ட **சேடியர்** சிலர் "இவன் மாயம் வல்லவன்" என்று மனத்துட்கொண்டு விரைந்துசென்று தக்கனிடஞ் சொல்லினர். அவன் தன் தறிவால் அரனென்றறிந்து அக்கணமே மாடமடைந்து, கடவுளுயகரத்துக் கழல்பணிந்து "தேவரீர் மணம் நகரிற்செய்ய வேண்டுமே" என்று தாக்ஷாயணியுடன் சங்கரரைத் தனது தக்கமாபுரிக்குக் கொடுபோந்து, முதற்பெருங்கடவுளை ஓர் முழுமணித் தவிசிலிருத்தினன். **வேதவல்லி** தன்மகளைப் புலவி, நன்னீராட்டி, பொன்னணி பூட்டி, மலர் சூட்டி, எம்பிரானருகில்விட, இறைவியார் ஈசனிடத்திலிருந்தனர்.

சமஸ்ததேவர்களும் அது சமயத்தில் அங்கடைந்துன்றனர். **தக்கன்** தாக்ஷாயணியின் திருக்கரத்தைச் சங்கரர் திருக்கையி லளித்து வேதவல்லி கையிற்றாங்கிய கரகநீரைப் புரோக்ஷித்து "என்றனையும், தவப்புதல்வியுமாகிய தாக்ஷாயணியைத் தேவரீருக்குக் கொடுத்தேன்" எனக் கூறினன். சிவபெருமான் சகலதேவருடன் உடனே மறைந்துவிட்டனர். தேவியார் மனம்வருந்திப் பண்டு போல், தவச்சாலையிலிருந்து பின்னொருபகலிற் பெருமான் காட்சியளித்து இடபாரூடராய் அழைத்துக்கொண்டுபோக, வெள்ளிமலையடைந்து விமலருடன் வீற்றிருந்தனர்.

**சிவபிரான் திருமணஞ்செய்த தேவியாரை நீக்கி மறைந்ததற்காகவும், தன்னை மதியாமைக்காகவும், தக்கன் மிக்க கோபமுற்று அதுமுதல் சிவபிரானை மதியாம லிறுமாந்திருந்தனன். இச்சரித்திரத்தின் மற்றவிஷயங்களை முன்சென்ற தக்ஷயஜ்ஞஹதமூர்த்தத்திற் கண்டுகொள்க.**

கௌரியாகிய உமாதேவியாருடன் லீலாமாத்திரையாகச் சிவ பிரான் விளையாடியருளியதுவே கௌரிலீலாசமாவிருத்த மெனப் படும்.

---

* பண்டொரு பகலிற் பதுமன் தன்றுசத்தியவுலகத்தி லிருக்கையில், அவன் தும்மாந்தப்பதியா பதின்மரில், தக்கன் தாதையை நோக்கி "எந்தையே! பெருஞ்சேவரூபுகள் தயங்குருக்கவும், எல்லாவுயிர்கட்கும் உயிருமா யுள்ளவன் யாவன்" என்றுவினவ, சதுர்முகன் "தனய! சங்கரனே நீ வினவிய முதல்வன்" என்று மொழிந்தனன், தக்கன் "சிருட்டியாதி மூவகைத் தொழிற்குச் சங்காரமென்னும் வினையியற்றுஞ் சங்கரன் ஏனைய இருதொழில் புரியுந் தங்கட் கிறைவனாத லெங்ஙனம்?" என, அயன் "சர்வசங்காரகாலத்தில் எல்லாவற்றையுந் தன்னிடத் தொடுக்கி மீட்டும் படைப்போனாதலாலும், எம்முள் அந்தர்யாமியா யிருந்து சிருட்டியாதிகளைச் செய்விப்பவனாதலாலும், இறைவனாயினான்" என்று தேற்றினன். அதுகேட்டு மனத் தடுமாற்றம் நீங்கி மாநததீர்த்தக்கரையில் ஆயிரவருடந் தவஞ்செய்த தக்கனுக்குச் சிவபெருமான் காட்சிதந்தருளி, "உன் மனத்தில் விரும்பியதென்" என, தக்கன் பணிந்து "திரிலோகங்களும் என் கட்டளையில் நிற்கவும், தேவர்களெல்லாம் பணிவோரென்னைப் பணியவும், உமாதேவியார் என் புதல்வியா யுதிக்கவும், தேவரீர் வேதியவடிவாய் வந்து மணம்புரியவும், வரமருளவேண்டும்" என வேண்டினன். சிவபிரான் அவ்வாறே யருள்செய்து அந்தர்த்தானமாயினர்.

தக்ஷன் சிவப்பிரசாதத்தாற் பிரமனைக் கொண்டு தக்கமாபுரி யென்னோர் நகர மியற்றி, அங்குக் கொலுவீற்றிருந்து இந்திராதி தேவர் பரவ அரசுசெய்துவருகையில், வேதவல்லியை விவாகஞ் செய்து, ஆயிரம்புதல்வரை யீன்று, அவர்கட்கு உபநயனமியற்றி, வேத முணர்த்தி, "நீங்கள் சிவபிரானை நோக்கி மாநததீர்த்தக்கரையில் தவஞ்செய்து, "சிருட்டிசெய்ய வரம்பெற்று வருதிர்" என விடுத்த னன். அவர்கள் அவ்வாறே தவத்திருக்கையில், நாரதமுனிவர் அவர்

கலை விளைவி ஞானோபதேசஞ்செய்ய, அவர்கள் தவஞ்செய்து முத்தி பெற்றனர். இச்செய்தியை ஞானதிருஷ்டியாலறிந்த தக்கன் மீண்டும் ஆயிரம்புதல்வரைப் படைத்து முன்போலவே விடுப்ப, அவர்களும் நாரதமுனிவரதுபதேசம் பெற்றுத் தம்முன்னோர் போலவே மோக்ஷ முற்றனர். இதையுமறிந்த தக்கன் வெகுண்டு முனிவரை "எங்குந் திரிக" எனச் சபித்து, அறுபத்துமூன்று மாதர்களையீன்று தருமன் முதலான முனிவர்க்கு மணம்புணர்த்தி, இருபத்தேழு பெண்களை யளித்துச் சந்திரனுக்கு மணம்புணர்த்தினன். சந்திரன் அவ்வனிதையர்களில், கார்த்திகை உரோகணி யென்னும் மாதரிருவரையன்றி ஏனையோரை முகநோக்காதொழிந்தனன். பலநாள் மனம்பொறுத்து மற்றைய மாதர் தந்தைபாலுற்று முறையிட, தக்கன் சந்திரனையழைத்து மதிகூறி விடுத்தனன். திங்கள் அதனையும் மனந்திரும்பாமையறிந்து சினங்கூர்ந்து 'இன்றோர் கலையாகக் குறைக" வெனச்சபித்தனன். அதனால் நாளுக்கோர்கலையாகக் குறைதல்கண்டு, தக்கன் கொடுத்தசாபத்தினின்று நீங்க விரும்பியசோமன் சிவபிரானைப் பிரார்த்தித்து, பெருமானருளால் வளரவும் தேயவும் வரம்பெற்றனன். அதனையறிந்த தக்கன் கடுங்கோபங்கொண்டு புலகமுநிவர் புகன்ற புத்தியாற்கோப நீங்கி யிருந்தனன்.

கௌரீலீலாசமாவிஷ்காரத்யோகம:

---

உ

சிவமயம.

திருசசிறறமபலம

ஐமபததாருவது

# விஷாபஹரணமூர்த்தி.

பணடொருபகலில அமரருககும அவுணருககும நேரிடடபோரில, இருதிறததவரிலும பலா மடிதலால, அவாகள கமலாசனததிருநது பலகோடி யானமாககளையுமபடைககும பிரமதேவனைச சததியலோகளு சென்று கணடு 'தலைவ! யாஙகளிறவாது நெடுநாள போாபுரியககருதினேமாதலின பாறகடலைககடைநதுஅமுதளிககவேணடும" என வேணட, பதுமன "கமலைகேளவனபாறகூறிக கருதியது முடிபபிபபேன" என்றுரைதது, அவாகளுடன க்ஷீராபதியடைநது சேஷசயனததிற சநகாதியா பரவ யோகநிததிரைபுரியுந திருமாலைவணஙகி அவாகள விருபபை யறிவிகக, விஷ்ணுமூாததி யதறகிணஙகி, "அவவாறே யாகுக" என்று, மந்தரமலையை மததாககடடிச சந்திரனை அடைதூணுககி அடடநாகஙகளு ளொனறுகிய வாசுகியென்னு மரவைத தாமபாகபபூடடி, தேவாஒருபறமும அசுராமறுபுறமும ஈாககுமபடிக கடடளையிடடு, தாம கூர்மவடிவேறறுமலையின அடியையு முடியையு முதுகினுலுங கைகளாலும பறறிநிறக, தேவாசுரா களையெயதக காலம பல கடைநதமையால, கயிறுகிய வாசுகிவருததமாறறுது, உடல பதைதது நாத துடிககத தனது ஆயிரம்வாயகளாலும விஷஞ சொரிநதது

அவவிஷம எஙகும இருளெயதுமபடி யொல லெனப பரவ, தேவா முதலாயினா பயநதோடினா அது கணட விஷ்ணு அமராகளைக் காபபே னென்று ஆறறல கூறி, அவாகன்மேற செலலும் ஆலத்தைத தா மெதிாசென றடாததனா. அவவிஷம் அவா திருமேனி



56. விஷாபஹரண மூர்த்தி.

யைக் கருநிறஞ் செய்ய, அவரும் நிற்றற் கஞ்சி யோட்டெடுத்தனர். அப்பொழுது யாவரும் ஒருங்குசென்று திருக்கைலாயகிரியை நண்ணி, திருநந்திதேவ ரநுஜ்ஞையால், திருச்சந்நிதானத்தினுட் சென்று கருணாநிதியாகிய கண்ணுதலைத் தரிசித்துக் கைகட்டி வாய்பொத்தி நின்றனர். சிவபெருமான் திருமாலை நோக்கி "மாதவ! உருவம் வேறுபட்டுத் தேவர் குழுவுடன் வந்ததென்னை?" என் றறியார்போல வினவ, விஷ்ணு "பரமதியே! தேவரீர் கட்டளையின்படி பாற்கடலை மதித்தமையின் அமுதம் பெறாது விஷம்பெற்றேம், அடியேங்களைக் காத்தருள்புரியவேண்டும்" என் றிரந்து நிகழ்ந்தவையிசைப்ப, சிவபிரான் தம் இடப்பாகத்துள்ள பார்வதியை நோக்க, உமையம்மையார் "இவர்களைக் காக்கவேண்டும்" என்று விண்ணப்பித்தனர்.

சர்வான்மாக்களின் இடுக்கண் களையுஞ் சம்பு சமீபத்திருந்த சுந்தரரைப் பார்த்து, "சுந்தரா! அவ்வாலத்தைக்கொணர்க" என் றாக்ஞாபிக்க, அந்த் திருவாணையைச் சிரமேற்கொண்டு, அவ்வாறே அவர் தமதுள்ளங்கையிற் றுருங்கப் பெருமானிடந் தர, மகாதேவர் அதனை வாங்கித் திருக்கரத்தில் வைத்துக்கொண்டு "தேவர்களே! இதனை யுண்ணவா? விட்டுவிடவா?" என, தேவர்கள் "தேவரீரது திருக்கரத்தில் வரவே இதனுருவம் சிறுத்தது, விட்டால் உலகை யழிக்கும். எவ்வெவற்றினும் முற்பாகர் தேவரீரதே யாதலின், விஷமாயிருப்பினும் இதனைத் தேவரீர் கொண்டருளல் வேண்டும்." என்று பிரார்த்திக்க, சிவபெருமான் அவ்வாறே சம்மதித்துத் திருவமுதுசெய்கையில், அது கண்டத்தளவு செல்ல அதனை யாவருங் கண்டு, "எம்மை யுயிர் காத்தற்குச் சான்றாக இவ்விஷத்தைக் கண்டத்திலேயே தரித்தருளல்வேண்டும்" என்று வேண்ட, எம்பெருமான் அவர்கள் வேண்டுகோளுக் கிரங்கி, அங்கேயே ஒருநீலமணிபோன்று நிறுத்தி மணிகண்டர் நீலகண்டர் சிகண்டர் முதலிய திருநாமங்களைப் பெற்றனர். பிறகு பெருமா னருள்பெற்றுக் கடல்கடைய அமுதமும்

பல பொருளும் பிறநதன திருமால மோகினி வடிவேறறு அசுரரை வஞசிதது அமராக கமுதளிதது, அவரவரிருககைகக கேகவிடுததனா.

திருபபாறகடலிற றோனறிய விஷததாற சாவானமாககளுந துனபுறுவகையாக, தேவமுனிவா வேணடுகோளுக கிரஙகிப பானஞ செயதமையால, சிவபிரான விஷாபஹரணமூாததி யெனப பெயரொ யதினா.

**பாகவதம.**

யேஸமாமநதரியபகவாந பவாநீமவிஸ்வபாவந | ததவிஷஂகசது மாரோபே பரபாவஜ்ஞோநவமோதத | தத காதலீகருதய வயாபிஹா லாஹலமவிஷம | அபக்ஷயநமஹாதேவ கருபயாபூதபாவந | நிஸ மயகாமதசசமபோா தேவதேவஸயமீடுஷ | பாஜ்ஞாதாக்ஷாயணீப ரஹமா வைகுணடஸசஸஸஂஸிரே ||

ఫాగవతపురాణం.

యేసమామంత్ర్యబగవాన్ భవానీంవిశ్వపావనః ॥
తద్విషంగధుమారేథే ప్రభావజ్ఞోన్వమోదత ।
తతఃకరతలీకృత్య వ్యాపిహాలాహలంవిషం ।
అభక్షయన్మహాదేవః కృపయాభూతభావనః ।
నిశమ్యకర్మతచ్ఛంభోర్దేవదేవస్యమీడుషః ।
ప్రజాదాక్షాయణీబ్రహ్మా వైకుంఠశ్చశశంసిరే ॥

**பிரஹமாணடபுராணம்**

**இரணடாமததியாயம - பிரமன வாககியம.**

**தஸயவிஷ்ணுாஹமவாபி ஸாவேவாஸுரபுஙகவா:**
**நஸக்தாவநதிவைஸோடுமே வேகமநயதாஸககராத**
**விஷ்ணோததிஷடமாகேந காலாகலஸமதவிஷா**
**நிாதக்தோாக்தகௌராஙக : க்ருத:கருஷ்ணோஜநாாதந:!**

బ్రహ్మాండపురాణం.

తస్యవిష్ణురహంవాపి సర్వేవాసురపుంగవాః ।
నశక్నువంతి వైసోఢుం వేగమన్యత్రశంకరాత్ ।
విషేణోత్తిష్ఠమానేన కాలానలసమత్విషా ।
నిర్దగ్ధోరక్తగౌరాంగః కృతఃకృష్ణోజనార్దనః ॥

வாமநபுராணம்

தஂதருஷடவாரகதகௌராஙகஂ கருதஂகருஷணம்ஜநாாதநஂ
பீதாஸஸாவேவயஂதேவா ஸதவாமேவசரணஂகதா: ।

వామనపురాణం.

తందృష్ట్వారక్తగౌరాంగం కృతంకృష్ణంజనార్దనం ।
భీతాస్సర్వేవయందేవా స్త్వామేవశరణంగతాః ॥

ராமாயணோத்தர காண்டம்.

ஹாலாஹலமவிஷமஸா்வம ஸஜகராஹாமருதோபமம.

రామాయణోత్తరకాండం

హాలాహలంవిషంసర్వం సజగ్రాహామృతోపమం ॥

காஞ்சிப்புராணம்

“அடுஙகால மிதுவெனன விட மெழலு நனிவெருவி யயனமா லேனோர், கொடுஙகாலன றனைககுமைதத குரைகழறகீழச சரணபு குதகக கொதிததுவாழநாள, பிடுஙகாம லருளபுரிநத பிரானனறிப் பி னையுமோர பிரானுணடெனன, நஙகாதார தமைககாணப பெற றிடினு மெனனுளள நடுஙகுமாதோ.”

விஷாபஹரணமூாததயேநம:

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

---

## ஐம்பத்தேழாவது.

# கருடாந்திக மூர்த்தி

திருமகள் விளங்கிய மருமமும், திசைமுகன் முதலா வகிலமுமி ழ்ந்த முண்டகமும், தண்டம்-சுதரிசனம்- சாரங்கம்- கதை-சங்குட னைம்படை தாங்கிய கரமும், தினகர ரிருவர்சேர்ந் தொளிசெயல் போற் றிருச்செவிக் குழையும், பன்னகப்பாயலும், பாற்கடற்றுயில லும், அவுணரை யழித்தலும் அமரரைப் புரத்தலும் அமைந்துலகளி க்கும் ஆதிகாரணனை, முன்னொருபகலில் முக்கண்ணரைத்தொழ வெண்ணி னனாகி, வண்ணநற்கருட வாகனமேறி வானெறி வழிக்கொடு கண்ணு தல் வீற்றிருக்கும் திருக்கைலையைச் சமீபித்து, தனது வாசஸ்தான மாகிய திருப்பாற்கடல்போல் வெண்ணிற முடையதும், பலபுறங்களி லும் அருவியாறுக ளிறங்குவதும், சங்குகன்னன் - வாணன் - குண் டோதரன் முதலிய கணநாதர்கள் நாற்புறத்திலுங் காவல்செய்வதும் இடையறாது இமையவர் குழாங்கள் "ஹரஹர சங்கர ஜகதீஸ" என்ப் பலவகையாகத் துதிசெய்யும் பேரிரைச்ச லுடையதுமாகிய வெள்ளி மலையின் சிகரங்களைத் தரிசித்துக் கைகூப்பி, மலைச்சாரலைச் சமீபித் துச் சிவத்தியானத்துடன் திருமலைமேலேறி, திருக்கோபுரவாயிலை யடைந்து, வாஹனமாகிய கருடன்பேரிலிருந்திறங்கி, துவாரப்பிரதேசத் தில் வாகனத்தை நிறுத்திவைத்து, நந்தியெம்பெருமானது கனின் பாதங்களை நமஸ்கரித்து, அவர் அநுஜ்ஞைபெற்றுத் தேவதேவரைத் தரிசிக்கத் திருச்சந்நிதானத்தி னுட்சென்று, காளகண்டமும், சூரிய சோமாக்கினியாகிய திரிநேத்திரங்களும், மான்மழு வரதாபயமு முற் றுவிளங்குஞ் சதுர்புஜங்களும், கங்கையுங் கொன்றையுந் திங்களும ணிந்த செஞ்சடையும், பார்வதி தேவிபாகமுமாக ஸ்ரீசிவபெருமான்



57 கருடாந்திக மூர்த்தி.

நவரத்தினகசித மண்டபத்தில், இந்திராதி இமையவரும், நாரதாதி முனிவரும், அட்டவசுக்களும், யக்ஷகிந்நராதி பதினெண்கணங்களும் புடைசூழ்ந்து நிற்கவும், அரம்பை முதலிய தேவதாசிகள் நடிக்கவும், சாவாடம்பர பூர்வமாய் எழுந்தருளியிருக்கும் திருக்கோலத்தைக் கண்களாரத் தரிசித்து, வாயாரவாழ்த்தி ஆனந்தக்கடலில் அமிழ்ந்திருந்தனர். இதுநிற்க,

விஷ்ணுமூர்த்தியின் வாகனமாயும், அவரால் வெளியேயிருக்க ஆஞ்ஞைபெற்றுள்ளதுமாகிய **கருடன்** சிறிதுநேரம் பார்த்து, திருமால் விரைவாகத் திரும்பிவராமையால், தானும் திருச்சந்நிதானத்தினுட்செல்ல விரும்பி, உள்ளேபோகையில், **திருநந்திதேவர்** கண்டு "வைநதேய! உள்ளேபுகாதுநிற்றி, மாதவனும்வருமளவும் ஈண்டிருத்தி" என இசைத்தனர். அதுகேட்ட கருடன் கடுஞ்சினங்கொண்டு "என்னைத் தடுக்க நீ யாவன், நீயோ பிச்சையெடுப்பவன் வாகனம், உன்னை விரைவில் உயிரொழிப்பேன்" என உரைத்து விடைத்தேவர் பிரளயகாலாக்கினிருத்திரர்போற் பெருஞ்சினமுற்றுப் பேசுதலொன்றுமிலராய் அக்கருடன்போல், தமது நிசுவாச உச்சுவாசங்களைச் செலுத்தினர். கருடன் அந்நிசுவாசத்தாற் ககனமார்க்கத்திற் கபிதூரம்போயும், உச்சுவாசத்தால் நந்திதேவரது நாசிகாபில்த்தை யடைந்துங் கஷ்டப்பட்டுக்கொண்டு, ஊழிகாலத்துத் தப்பிரசண்ட வாயுவேகத்தி லலையுறு சிறுதுரும்புபோலத் துன்புற்றுத்தன் வல்லமையால் உயிர்பிழைக்க உபாயமொன்று மில்லாமல் விஷ்ணுமூர்த்தியை "மாதவா! கேசவா! மதுசூதனா! அபயம். அபயம். எனது அஞ்ஞானத்தால் ஸ்ரீநந்திபகவானுக்குண்டாகிய கோபாவேச உச்சுவாச நிசுவாசங்களில் உயிரொழியுந் தறுவாயிலிருக்கின்றேன். அத்துன்பத்தை யகற்றி அடியேனைக் காக்கவேண்டும்" என இறைச்சலிட்டு முறையிட, சிவதரிசனஞ் செய்துகொண்டிருந்த திருமால், அம்முறையிடும் இறைச்சலைச் செவியேற்று, சிவபிரான் சமுகத்தில் திருவிண்ணப்பஞ் செய்தனர்.

சிவபெருமான், தமக்கு மனைவியும் சத்தியும் அம்பும் பரமபத்தருமாகவுள்ள விண்டு மனமவருந்தி வாயவிண்டு விண்ணப்பித்தவற்றைத் திருச்செவிசாத்தி, "மாலே! மாலுறுமல நமது கட்டளையென்று நந்திபால் நவின்று கருடனை விடுத்தி" எனத் திருவாய்மலர்ந்தருளினர். உவணகேதனன் உள்ளங்களித்து ஓடோடி விடைத்தேவர்பால் வந்து விமலர் கட்டளையை விளம்பி, "ஐயனே! அதன் அறியாமையை மன்னித்து அருள்புரியவேண்டும்" என்று பிரார்த்திக்க, நந்திகேஸ்வரர் "என் முன்னே இறைவனை இகழ்ந்து கூறிய இக்கருடனுயிரை இம்மைப்பொழுதில் மாய்ப்பேன்" என்சினத்துடன் செப்ப, நாரணன் நடுக்கெய்தி, மீண்டும் விடையூர்திபால் விண்ணப்பிக்க, சிவபிரான் திருநந்தியெம்பெருமானை விளித்துத் தமது கட்டளையாற் கருடனைவிடுவித்து உயிர்காத்து, மாயனை மகிழ்வித்தனர்.

கருடன் கருப்பங்கமுற்றுக் கமலக்கேள்வனைச் சுமந்து பழயபடியே பத்மநாபனுடன் பாற்கடல் சேர்ந்தது. ஈண்டு நந்திதேவரால் துன்புற்ற கருடனுக்குச் சமீபித்தருள்செய்த காரணத்தால், கடவுளுக்குக் கருடாநதிக்ஷேத்தியெனப் பெயரெய்தியது.

## ருத்ரகோடி ஸ்தலமஹாத்ம்யம்.

உச்வாஸேநஹ்ருதஸந்தாணம் யோஜநாநாம்ஸதத்ரகத
நிச்வாஸேநஸமாக்ருஷ்ய வ்ருஷநாஸாத்ரமவிஸத் இத்யாதி
ஏநாமுகதிமஹேஸ்ருத்வா வ்ருஷோவசனமப்ரவீத்
அநேகாகாரிகோவிந்த ஸிவநிந்தாமஹாத்தரா
ஹரிஷ்யேவைநதேயாஸ்ய நிதிவேகாதவ்ருஷோப்ரவீத் இத்யாதி
ஸ்ருத்வைநாமவ்ருஷபஸ்யோக்திம் மஹாவேகாத்ரியம்பக :
கருடமுஞ்சமுஞ்சேதி வ்ருஷபம்ஸ்யகரோப்ரவீத்
வ்ருஷோமுக்த்வாதகருடம் வேகாதுகதம்விபோ:புர :
தஸ்மாந்மஹிபவத்தோஷ : இதிசிந்தாஸமாகுல:

ఋద్రకోటిమహాత్మ్యం.

ఉచ్ఛ్వాసేనహృతస్తూర్ణం యోజనానాంశతంగతః ।
నిశ్వాసేనసమాకృష్య వృషనాశాంతరంవిశత్ ॥ ఇత్యాది
ఏవం ముక్తి హరేశ్రుత్వా వృషోవచనమబ్రవీత్ ।
అనేనాకారిగోవింద శివనిందామహత్తరా ।
హరిష్యస్యైవతేయాసూ నితివేగాద్వృషోబ్రవీత్ ॥ ఇత్యాది
శ్రుత్వైవనాంవృషభస్యోక్తిం మహావేగాత్రియంబకః ।
గరుడంముంచముంచేతి వృషభంశంకరోబ్రవీత్ ।
వృషోముక్త్వాథగరుడం వేగాదుక్తంవిభోఃపురః ।
తస్మాన్నహ్యభవద్దోషః ఇతిచింతాసమాకులః ।

பதினோராந் திருமுறை

"காமலிசிறகனை கருடனைக்காய்ந்தனை
அனைவரையதிரங்கப் பின்னருமருளினை."

கருடாக்கிரகூறாத்தயேகம

---

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்

---

## ஐம்பத்தெட்டாவது

# ப்ரஹ்மசிரச்சேத மூர்த்தி.

முன்னொருநாளிற் பொன்மலையாகிய மேருகிரியின் மேலுள்ள ஒரு சிகரத்தில் பிரமதேவனும் விஷ்ணுமூர்த்தியும் வீற்றிருக்கையில், கணக்கில்லாத தேவரும் முனிவரும் வந்து வணங்கிக் கைகுவித்து "திரிமூர்த்திகளில் முதன்மையுற்றோரும், ஆதிமத்தியாந்தமற்றவரும், சமஸ்தஜீவான்மாக்களிடத்தும் அந்தரியாமியா யுள்ளவரும் யாவர்? நீங்களிருவருமாக இயம்புங்கள்" என்று பிரார்த்திக்க, ஆதிதேவனருளாலன்றிப் போதலில்லாதமையின் பிணிப்புற்று வருந்தும் பசுக்களாகிய பிரமவிஷ்ணுக்கள் இருவரும் கன்மவசத்தால் இறுமாப்புற்றனர். அப்பொழுது அயன் 'அத்தகைய பிரமம் யான்" என, நாரணன் "நானே யுன்னைப் பெற்றெடுத்தலின் நான்தான் பிரமம்" என, ஒருவரோடொருவர் உரைத்து எண்ணில்காலம் இகல்மொழிபேசி எரிசிந்த விழித்துத் தருக்கஞ்செய்யக் கண்ட தேவர் முனிவர் "நம்மாலிவர் இத்தகைய பகைமைகொள்வானேன்" என்று தத்தமிடஞ் சார்ந்தனர்.

தேவர் முதலியோர் சென்றபின்னும் இருவரும் மமதை மாறாதவராய் வழக்கிட்டுச் சண்டைசெய்கையில் வேதமும் பிரணவமும் வெவ்வேறுருக்கொண்டுவந்து "பிரமவிஷ்ணுக்களே! வீண்வாதெற்றுக்கு? சர்வபரிபூரணராகிய சிவபெருமானே பரம்" எனத் தனித்தனி சாற்றவுங் கேளாதவர்களாய் மீண்டுஞ் சண்டைசெய்கையில், ஆண்டவர் அவர்கள் வழக்கை யொழிக்கச் சோதியுருவாய் நிற்க, இருவரும் ஏதோ சுடரொன்றிருக்க, எம்பிரான் அதனாகவே உமாதேவி



58 பிரம்ஹசிரச்சேத மூர்த்தி.

யாருடன் திருக்கயிலாயத்தில் வீற்றிருப்பதாக வடிவுகாட்ட, விண்டு கண்டு விடையூர்தியென் றுட்கொண்டு நிலமிசைத் தாழ்ந்து துதித்து நின்றனன். மலரோன் மலமுதிர்ச்சியால் மதியாமல் நடுச்சிரத்தால் நக்கனை யிகழ்ந்து பேசினன். எல்லாவுலகங்களும் இன்பமில் எரியுமேயென்று கருதி, சிவபெருமான் சிறிது சினங்கொண்டிலர். எண்கண்ணன் இறுமாப்பொழியவும் மற்றையவர்கள் மதர்ப்பு நீங்கவும் மகாதேவன் மனத்தில் பைரவக்கடவுளை வரச்செய்தனர். "சிறுவனாகிய பிரமன் சிரங்களுக்குள் நடுமையிகழ்ந்த நடுச்சிரத்தை நகநுதியாற் கொய்து கரத்திலேந்தி அவனுக்கு உயிர்ப் பிச்சையளித்து, தேவர்முனிவர் நகரங்கடோறுஞ் சென்று, உதிரப்பலியேற்று இரத்தப்போக்கா லிறந்தோரை யெழுப்பி யாவரகந்தையையு மழித்து அண்டகடாகத்தின்மேலடைந்திரு" என்று ஆஜ்ஞாபித்து பரமன் சோதியிற்கூடிப் பண்டுபோல் வீற்றிருந்தனர்.

மங்கைபாகனருள்பெற்ற பைரவக்கடவுள் வருதல் நோக்கிய மாதவன் வடுகத்தேவன் மலரடிவணங்கி வைகுந்தமடைந்தனன், பிரமன் மரம்போல் நிற்க, பைரவர் சினந்து தமது நகத்தினால் நாதன் கட்டளைப்படி அவனது நடுச்சிரங்கொய்தனர். உதிரவெள்ளம் உலகெலாம்பரத்தலின் உயிர்ப்புநீங்கி மலரோன் மாய்ந்தனன். மேருவைச் சுற்றிய சோரிநீரை நுதல்விழியாலுலர்த்திப் பிரமனையெழுப்ப, நித்திரைதெளிந்தோன்போல் நிலத்தினின்றெழுந்து நின்மலராகிய பைரவரை வணங்கி "மலைவில்லிக்கு யான்செய்த அபராதம் வரையறையில்லை. என்பேதைமையைப் பொறுத்தி பெருமானே!" என்று திருவடியில் வணங்கி "என் சிரசைத் தேவரீர் திருக்கரத்திலேயே வைத்திருக்கவேண்டுகிறேன்; தேவரீரால் அஞ்ஞானமொழிந்தேன்" என்று பிரார்த்தித்தனன். பைரவர் "இனி நான்முகனென்ன நானிலத்துறைதி" என விடுத்து, மேருமலையினின்றிறங்கித் திருவுள்ளக்குறிப் பின்படி சென்றனர். தலையிழந்த பிரமன் சதுர்முகத்தொடு சத்தியலோகஞ் சார்ந்தனன்.

தானே பிரமமெனத் தருக்குற்ற பதுமனது ஐந்தாவது தலையைக் கநுதியா லரிந்தமையின் சங்கரருக்குப் பிரஹமஶிரச்சேதமூர்த்தியென வோர் பெயர் வழங்குகின்றது.

### ப்ரஹ்மாண்டபுராணம்.

ஸஸர்ஜஸ்வாத்மந புச்சித பைரவம்லோகதாஹகம
ஸ்வயம்ஸாக்ஷாந்மஹாதேவ க்ஷேத்ரஜ்ஞகாலபைரவ
சகர்த்தகரஜாக்ரேண ப்ராஹ்மண பஞ்சமம்ஶிர:

### బ్రహ్మాండపురాణం.

ససర్జస్వాత్మనఃపుచ్చ ద్భైరవంలోకదాహకం ।
స్వయంసాక్షాన్మహాదేవః క్షేత్రజ్ఞఃకాలభైరవః ।
చకర్తకరజాగ్రేణ బ్రహ్మణఃపంచమంశిరః।

### வாமநபுராணம்.

தச்ருத்வாக்ரோதயுக்தேந ஶங்கரேணமஹாத்மநா
நகாக்ரேணஶிரஶ்சிந்நம ப்ராஹ்மம்பருஷவாதியத
தச்சிந்நம்ஶங்கரஸ்யைவ ஸவ்யேகரதலேபவத
பதிதேநகதாசித்து தச்சங்கரகராச்சிர | இத்யாதி
ஸக்ருத்வாஸுமஹத்புத்தம ப்ராஹ்மண காலபைரவ .
சகர்த்தஸ்யவதநம விரிஞ்சஸ்யாதபஞ்சமம

### వామనపురాణం.

తచ్ఛ్రుత్వాక్రోధయుక్తేన శంకరేణమహాత్మనా
నఖాగ్రేణశిరశ్ఛిన్నం బ్రాహ్మంపరుషవాదియత్ ।
తచ్ఛిన్నంశంకరస్యైవ సవ్యేకరతలేభవత్
పతితేనకదాచిత్తు తచ్ఛంకరకరాచ్ఛిరః॥ ఇత్యాది
సకృత్వాసుమహద్యుద్ధం బ్రహ్మణఃకాలభైరవః ।
చకర్తతస్యవదనం విరించస్యాథపంచమం॥

பிரஹமஶிரச்சேதமூர்த்தயேநம:



59 கூர்மசம்ஹார மூர்த்தி.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

---

## ஐம்பத்தொன்பதாவது

# கூர்மசம்ஹார மூர்த்தி.

பண்டொரு பதுமகற்பத்தில், திதிமைந்தரும் அதிதிமைந்தருமாகிய தேவரும் அசுரரும் தீராப்பகையால் பலகாலஞ் சமர் புரிந்தனர். இருதிறத்தவரிலும் எண்ணிலர் இறந்தனர், அதனால் அவர்கள் ஒருங்குகூடி, க்ஷீராப்தி மத்தனஞ்செய்து அமுதுண்டு அதிக நாள் ஜீவித்து அரும்போர் ஆற்றவேண்டுமென்று, அகத்துட்கொண்டு, பதுமனுடன் கூறி அவனையுமுடன்படுத்தி, அழைத்துக்கொண்டு அச்சுதன்பாற்சென்று அறைய, திருமால் "அவ்வாறேயாகுக" என்று, மந்தரமலையை மத்தாகவும் சந்திரனை அடைதூணாகவும், வாசுகியைத் தாம்பாகவும் அமைத்து, இருதிறத்தவரையும் இருபுடைநின்று மாறிமாறி யீர்க்கச்செய்ய, மந்தரமலை சாய்ந்தது. அதுகண்ட ஐம்படைக்கிழவன் பெரிய யாமைவடிவுகொண்டு பாற்கடலிற் பாய்ந்து, தன்மேற்புறத்தை யிலக்கயோசனையிடமாக்கி வீழ்ந்த வெற்பை யெழுப்பி முதுகின்மேற் றாங்கி நின்றனர். அந்தரரும் அசுரருங் கடைய அவ்வசலம் மீண்டுஞ் சாய்ந்தது. அதுகண்ட கமடவுருக்கொண்ட கமலாபனுக்குக் கரங்க ளாயிரந் தோன்றின. கரங்கள் பல ஓங்கலின் உச்சியைப் பற்றி யூன்றின. பல கரங்கள் பக்கத்திற் சாயாமற் பர்வதத்தைப் பத்திரமாய்ப் பற்றிநின்றன. சில கரங்கள் தேவாசுரர் கடலைக்கடைந்து களையுறாமல் அவர்கட் குதவியாய் நின்றன. அமரர்-அசுரர்-அச்சுதன் முதலானோர் யாவரும் ஒருங்குகூடிக் கடைந்தமையால் அம்மந்தரம் அதிவேகமாகச்சுழன்று பாற்கடலைக்கலக்கிப் பல சிறு திவலைகளைத் தேவருலகமட்டு மெறிந்தது.

இவவாறு பாறகடல கடையபபுககோா பரமசிவனபால விண ணபபிதது அவா கடடளை பெருமற செயத அபசாரததால, தாமபா கிய வாசுகி வருததந தாஙகாமல தன வாயவழி நஞசு ககியது வா னவரும தானவரும வெருவி வாயுவேகமாகவோடத தலைபபடடனா. திருமால அதுகணடு "தேவாசுராகளே ! சிறிதுமஞசனமின" என று அதனைத தடுகக முயனறு, விடவேகததால உடல கருகித தாறு நிறகறகஞசித தேவாகளை நோககி,—

"எனனை யொபபவ ராயிர கோடிய ரெனினு
முனன ருஙகொடு விடததினை யெதிாபபவ ருளரோ
பினனல வேணியன றிருவரு ளுளதெனிற பிழைபபே
மனன திலலையே லெஙஙனம பிழைததுமென றறைநதான"

எனறபடியே "எனபோனறோா ஆயிரகோடிபேரெனினும, இனைதத றகு மரிய இவவிஷததினை நோகிறபா ருளரோ? சடைமுடி தரித்த சஙகரரது திருவருளிருநதாறபிழைபபோம, அ.்.திலலையாகிற பிழை தத லருமை" எனறு கூறினா அதனுல அமரா-அசுரா-அயிராணி கேளவன-அமபுயனுதியோா அஞசி, அசசததுடன வெளளிமலையை விராடியிலடைநது, விடைததேவாபால விடைகொணடு விமலா சந நிதிசோநது "அரஹர சஙகர ! அபயம ! அபயம !" என றலறியழு தனா. உமாபதி யொனறுமுணராா போனறு "உமபாகாள ! உஙக ளுககுறற துனபம யாது?" என வினவ,இமையவா யாவையும விண ணபபிததனா. இறைவா இமயவலலியைககடைககணிததனா ஈசசு வரியாா "ஈசனே ! எவவாறறானும இவாகளைககாக்கவேணடும" என றிசைப்ப, முனனேனை தமமுன நினற சுந்தரரால அவவிஷததை வருவிதது உளளஙகையி லேற றுடகொணடு, உமபா ஓாகாலததும அகறதை யடையாமல, தமது திருககணடததிலேயே அவாகள விரு ப்பினபடி அவவிஷததை யமாததினா.

நீலகண்டரென இககாரணததா லியம்புந்திருநாம மேறற கின மலா "உம்பர்காள ! உஙகள் உளளக்கருத்தின்படி, பாறகடலை யினி

மதித்து அமுதுண்பீராக" என விடையளித்து விடுத்தனர். திருமால் பிரமன் இந்திரன் வானவர் தானவர் முதலானோர் பெருமகிழ்வுடன் ஆவலுற்று க்ஷீராப்தியை யடைந்து, விண்டு கமடவுருக்கொண்டு மந்தரத்தைப் பண்டுபோற் சுமக்க, தேவரும் அசுரரும் அஃது சுழலும்படி கடாவிருப்பினர். முதலில் மூதேவி தோன்றினள்; அவளை அருணனுக்களித்தனர். தண்டுகமண்டலத்துடன் தன்வந்திரியென்னுந் தேவமருத்துவன் தோன்றினன், உலகமுழுவதுக்கும் மருத்துவனாக விடுத்தனர். அறுபதுகோடி அரம்பாஸ்திரீகள் பிறந்தனர்; அவர்களை இந்திரலோகத்திற் கேகவிடுத்தனர். சுரை தோன்றியது, அதனை வானவருண்டனர், தானவர் நீத்தனர், அதனால் அவர்கள் சுரரென்றும் அசுரரென்றும் பெயரெய்தினர். உச்சைச்சிரவமென்னும் புரவி யுதித்தது; புரவியைப் புரந்தரனுக்களித்தனர். கவுத்துவமணி பிறந்தது; அதனைக் கமலநாபன் மார்பிலணிந்தனன். பஞ்ச தருக்கள் - காமதேனு - சிந்தாமணி இவை பிறந்தன; இவற்றை இந்திரனுக்கீந்தனர். சந்திரன் ஜனித்தான், அவனை ஒளிசெய்யும்படி ஆகாயத்திலனுப்பினர். தாக்கணங்கு தோன்றினள், தாமோதரன் தனது தாரமாகக் கொண்டனன். இவையாவுந் தோன்றிய பின்னர் அமிர்தம் பிறந்தது.

அமரரும் அசுரரும் அமிர்தத்தைத் தமக்குத் தமக்கென்று ஒருவரோடொருவர் சமர்புரிந்து இருதிறத்தவரிலும் எண்ணில்லாதவர் இறத்தல் கண்ட மாயோன் ஓர் மாயையால் மோகினிவடிவேற்று அசுரரை வஞ்சித்து அமரருக்கு அமிர்தத்தைப் பகிர்ந்தளித்தனர். அவ்வானவத் தொகுதியில் மாறியவடிவுடன் அமுதேற்றருந்திய தானவரிருவர், சூரியசந்திரரால் விஷ்ணுவுக்கு வெளியிடப்பட்டனர். அச்சுதன் அக்ஷணமே அளவில்லா வெகுளிகொண்டு தன் கைச்சட்டுவத்தால் அவர்கள் சிரத்தையறுத்தெறிந்தனர். அவர்கள் அமுதுண்ட விசேடத்தாலிறவாமல், சிவார்ச்சனைசெய்து இராகு கேதுவென்னும் கிரகங்களாய்த் தம்மை வெளியிட்ட செங்கதிர் வெண்கதிர்களைத் தீராத்

துயர்செய்து வருகின்றனர். இவையே கிரஹணகாலமாம். சுரர் அமு தருந்தித்திரகாயுவெய்தி அசுரரை ஹதஞ்செய்து பொன்னுலகுசேர்ந்து வாழ்ந்திருந்தனர். இதுநிற்க,

மந்தரமலையாகிய மத்தினைத் தாங்கிநின்ற மாயவன் அவதார மாகிய யாமைகடலேழையும் ஒன்றுகூட்டி, அதன்வெள்ளம் அவனி யை யழிக்கும்படி கலக்கி, சிந்துவைச் சேறுபடுத்தி, இலக்கயோச னை மேன்முதுகும் காலகளினளவைக் கணக்கிட்டறிய ஏலாதவை யுமாயியைந்ததாதலின், திமிங்கலமுதலிய ஜலராசிகளையெல்லாம் புசித்தும் பசிதணியாமல் ஜலத்தையுங்குடித்துத் தரைதெரியும்படி சேற்றையும் நக்கியது, அதனால் கலக்கி வெளிப்படுத்திய கடல்நீர் யுகாந்தவெள்ளம்போல எங்கும் பரவியது, தாமோதரனாகிய யாமை தனக்குக்கிடைத்த பலபொருள்களையுந் தின்னத்தலைப்பட்டது. இதனை யறிந்த சூரியசந்திரர் கடலிற்றோன்றிச் செல்லுவதஞ்சினர். உலக மெங்கும் இருட்பிழம்பாயது. மகபதியும் மலரோனும் வையமழியு மென்று மனங்கலங்கி ஸ்ரீகைலாயமலையை யடைந்து திருநந்திதேவ ரனுஜ்ஞையால் மஹாசந்நிதானத்தினுட் சேர்ந்து சிவபெருமானைச் சேவித்துத் துதித்து நின்று "எம்பெருமானே! எளியேங்கட்கு இடுக் கணெய்தினலை, அதனையகற்றி அருள்செய்வோர் யாவர்? அடைக் கலம்! அடைக்கலம்! அச்சுதன் யாமைவடிவுகொண்டு ஆகவியிலி ருந்து அவனிபுரியும் அல்லல் அறைதற்பாலதோ? அறியார்போன் றிருப்பது தேவரீரது திருவருளுக்கழகாகுமோ? விரைவில் அதனை விலக்கி எங்களைக் காக்கவேண்டும்" என்று குறைகூறி யாசித்தனர்.

சிவபெருமான் தேவமாதுடாகட்குத் திருவருள்செய்யத் திரு வுளங்கொண்டு, "அமரரே! அஞ்சன்மின்" என்று உடன்வரக் கொண்டு உததியையடைந்து தமது திருக்கரத்திருந்த சூலப்படை யால் அக்கூர்மத்தின் உயிரைச்செகுத்து, அதனுடல் விறைச்சியைக் குடைந்தெறிந்தனர். பார்த்துக்கொண்டிருந்த பண்ணவர், களிகூர்ந் தார்த்து "கருணாநிதியே! கமலைகேள்வன் மீண்டுங் கர்வமடை

யாமல் அதன் ஓட்டினையுந்தேவரீர் திருமேனியிலுள்ள திருவாபரணங்களோடு ஒன்றாக அணிந்துகொள்ளவேண்டும்" என்று வேண்ட, அடியவர் அவாவிய அடையே அருள்புரியும் அண்ணலார் அக்கூர்மத்தின் முதுகோட்டையுந் தமது திருமார்பிலுள்ள பிரமவிஷ்ணுக்களின் சிரோமாலைக்கு நடுநாயகமாக அணிந்து அமரர்கட்கு விடையளித்தனுப்பி,விடையூர்ந்து வெள்ளிமலைசேர்ந்து வீற்றிருந்தனர்.

கூர்மவடிவேற்ற விஷ்ணுமூர்த்தி அதனற் பண்டையவுணர்வெய்தி, பரமபதியைத் துதித்துச் சிவலிங்கார்ச்சனை புரிந்து, தேவர் முனிவர் கேட்கும்படி **கூர்மபுராணம்** ஓதித் தனது நிஜவடிவுடன் வைகுந்தமுற்றுச் சிவத்தியானஞ்செய்து வாழ்ந்திருந்தனர்.

பிருகுமுனிவர்சாபப்படி பின்னைக்கேசவனுக்குற்ற கூர்மாவதாரத்தில்,அக்கூர்மத்தின் கொடுமையை யொழிக்கக் கொன்றெறிந்தமையால், கொன்றை வேணியைக் கூர்மாரியெனக் கூறவேண்டுவதாயிற்று.

**காளிகாகண்டம்.**

தத:ப்ராண்யுபகாராய கூர்மம்ஸம்ஹ்ருத்யகர்விதம்
தத்தங்கம்பூஷணத்வேந தாரயாமாஸஶங்கர: ||

కాళికాఖండే.

తతఃప్రాణ్యుపకారాయ కూర్మంసంహృత్యగర్వితం ।
తదంగంభూషణత్వేన ధారయామాసశంకరః ॥

**ஸ்காந்தபுராணம்.**

வீரபத்ரவாக்யம்

**அத்யாபிதவபஶ்யத்வம் கபாலங்கூர்மரூபிண:**
**ஹாரஹாரலதாமத்யே முக்தகஸ்மாந்நபுத்யஸே ||**

## స్కాందం వీరభద్రవాక్యం.

అద్యాపితవపశ్యధ్వం కపాలంకూర్మరూపిణః ।
హరహారలతామధ్యే ముగ్ధకస్మాన్నబుధ్యసే ॥

## கந்தபுராணச்சுருக்கம்.

"மாலவன்கமடத் துருக்கொடுமந்தரந் தனைவெரிந்தனிற்
சாலவன் றுபரித்தன்னகடந்தத்தங்கமுதந்தனை
நீலமாயன கரத்தைக்கொண்டுநிறைந்தவேலையுழக்கவே
யாலமுண்டவனவந்துபற்றியவன்றனவனமையழித்தனன்

## காஞ்சிப்புராணம்

"மகரந்திகிளை கருங்கடலேழுமலங்கக்கலக்கும்பசுந்துளவ
முலைகவிண்டலாதாராமையினைப்பற்றித்தகாத்தமுதுகோடு
கருவெண்டலைமாலிகையணிகருந்நாயகமாககோத்தணிந்து
புகரினறுயாந்தோதொழப்பொலிந்தபுத்தேளசெலவத்திருவுருவ

காமசம்ஹாரமூர்த்தயேநம:



60 மத்சசம்ஹார மூர்த்தி.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்

---

## அறுபதாவது

# மச்சசம்ஹார மூர்த்தி.

சிவாக்கினையால் அரக்கர்குலத்திலே சோமுகாசுரன் என்னும் நாமமுற்ற தீயோன் ஒருவன் ஜனித்து எம்பிரானை நோக்கி யியற்றற்கரிய தவஞ்செய்து, பல வரங்களைப் பெற்றுப் பராக்கிரமசாலியாய்த் தன்னை யெதிர்ப்போர் தரணியிலில்லாது தருக்கெய்தி, தோள்களின் தினவுதீரும்படி மேருமலையை யெடுத்துப் பந்துபோல் விளையாடினன். இயமனுங் கண்டஞ்சத்தக்க காலகாலன்போலவிருக்குஞ் சோமுகன், தன்னொடு போர்செய்யவல்ல சதுரர் சுவர்க்க மத்திய பாதலமென்னுந் திரிலோகத்திலு மொருவருமில்லாமையால், ஒருநாள் தானே சத்தியலோகமுற்றுப் பிரமதேவனுக்குமுன் தோன்றினன்.

அப்போது சதுமுகன் சோமுகனைக்கண்டு பயந்துநிற்க, இராக்கதன் இவன்வலி இவ்வளவுதானோவென்று கருதி யிகழ்ந்து, மலரவன் வசத்திலிருந்த மறைகள் நான்கையுங் கையாற் பறித்துக் கடலிற் பாய்ந்து களித்துலாவினன். அயனோ தனது ஆக்கற்றொழிலுக் காதாரவாகிய ஆரணம் நான்கும் அசுரன் கையி லகப்பட்டமையா லஞ்சிச் செய்வதொன்றுந் தெரியாமல், திருமகள் கொழுநன்பாற் சென்று "பிதாவே! என்வசத்திருந்த எழுதாக்கிளவியைச் சோமுகன் கொண்டுபோயினன்" எனக் கூற, நெடுமால் உடனே கோபாக்கிரசித்தராய்ப் பிருகுமுநிவர் சாபப்படி மீன்வடி வேற்றனர். எண்ணில்லாத யோசனை நீளமுள்ள பெரிய மச்சவடிவேற்ற மாயோன், கடலிற் பாய்ந்து அது சேறுபடும்படி சோமுகனைத்தேடி வாலையெடுத்து உத்து நீர்த்துளி ஆகாயத்திற் படவும் அண்டச்சுவரில் மீன்கள்

மோதவும் விசிறி, திமிங்கலமுதலிய பெருமீன்களை அங்காந்த வாயின் ஊடுகொண்டு வேதத்தைக் கவர்ந்தொளித்த வெய்யோனாகிய சோமுகனைக் கண்டு பின்சென்று துன்புறுத்தி அவனது சோரியாகிய மாரியை வாயாறவுட்கொண்டு அவனைச் சங்கரித்து அவன்வசத்திருந்த அருமறை நான்கையுங் கைக்கொண்டு திரும்புகையிற் கமலயோனி கண்டு மாலோன் மலரடிபணிந்து அச்சத்துடன் கையேந்த, நாரணன் ஆரணங்களை யம்புயன் வசமளித்தனன். அதுபெற்ற அயன் அகங்களிகொண்டு தனது சத்தியலோகஞ் சார்ந்தனன். அசுரன் மெய்யிலிருந்தொழுகும் உதிரப்பெருக்கு உவரியைச் செந்நிறமாக்கியது.

அப்பொழுது மேருகிரிபோலக் கடலைக்கலக்கிய மச்சங்களாகளை யிடித்துக் கிழக்கு மேற்கு, தெற்கு வடக்கு ஆகிய நாற்றிசைக்கணொன்றில் தலையும் பிறிதொன்றில் வாலுமாக நின்று முத்துநீரிலமிழாத பேருருக்கொண்டு மகர முதலிய மச்சங்களைப் புசித்து மரக்கலங்களை யுடைத்து எல்லாவற்றையுமழிக்குந் தியிலிருப்பது தெரிந்து, தேவர்கள் புகலிடந்தேடித் திருக்கைலாயகிரியை யடைந்து அறவடிவாகிய திருநந்திதேவரைப் பணிந்து விடைபெற்றுத் திருச்சந்நிதானத்தினுட்சென்று ஸ்ரீபரமபதியைத் தரிசித்து "எம்பெருமானே! மாயோன் மச்சவடிவாய் எழுகடலையுமொன்றுகூட்டி அதிலுள்ள சலராசிகளைப் புசித்தலின் மாந்தர் வருந்துகின்றனர். இனி யாவரிடம் வருவனோ தெரியோம். அண்டகடாகமுற்று மதிர்கின்றது, ஆதலின் அம் மாயமச்சத்தி னிறுமாப்பை மாய்க்கவேண்டும்" என விண்ணப்பித்து வணங்கி நிற்க, சிவபெருமான் "அவ்வாறே யாகுக. அமரர்களே! அஞ்சல்" என் றபயமளித்து, வலைஞர் வடிவேற்று வாரிதியை யடைந்து, அம்மச்சத்திற் கேற்ற பேருருவாய்ந்து, எழு கடலையும் மறைக்கத்தக்க வலையை வீச, மீனும் அதனு ளகப்பட, சங்கரர் அதன் விழியைப் பறித்தனர். அப்பொழுது தேவர் இருடியர் முதலானோர் "இறைவனே! இத்திருமால் இன்னு மொருதரம்

இததகைய விறுமாப் பெயதாவணணம இவவிழியையும் தேவரீாதிரு மேனியி லணிதல வேணடுமெனறேம" எனப பிராாததிக்க, அனபா எணணியவாறே அருளபுரியும அமலா தன கைவிரலமோதிரததில அமைததணிநது வெளளிமலை சோநது வீறறிருநதனா. கணணிழநத ஈனமாகிய மீனவடிவுறற விஷணு பணடைய வுணாசசியால அவவ டிவை யொழிததுச சிவாாசசனைபுரிநது மசசபுராணமோதி வைகுந தமுறறனா

சிவபெருமான மசசசஙகாரஞசெயகையில கொக்குருவேறறு சசெனறதாய அதாவணவேதம கோஷிககினறது

மாயனாகிய மசசததின மமதையை மாயதது, அதனைச சஙக ரிததமையால, ஐயனுககு மசசாரி யெனறோா திருநாமம அறைதலா யிறறு

**அதர்வண வேதம்.**

தரியமபகோபகோநாமருதர நாராயணஸிரசசஂசுநாசகாத ||

అధర్వణవేదమ్.

త్రియంబకోబకోనామరుద్రః నారాయణశిరచ్ఛంచునాచకర్తః ||

**உபதேசகாண்டம்.**

"எடுததுவீசியவலைகடலேழையுநிரபபிப
படுததிழுததனுமவலையகபபடடதுபாரா
நடுககடறபுகுநதிருவிழிபறிததனனடநதான
கடுததவெஞசெருககழிநததுமீனமாககடவுள."

**காஞ்சிப்புராணம்.**

'வானமபழிததவலைமாககளவடிவுதாஙகிவலமபுரிகதை
மீனமபடுத்துவிழிருனறுவிரனமோதிரததினெவவுயிாக்கு
ஞானமபயப்பகுருவிநதலஙகேழமணிபோறபதிததணிநத
காணம்படிததுசசுரும்புளருஙகேகைததொடையோனதிருவுருவம்'

மசசசம்ஹாரமூாததயேநம:

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

---

## அறுபத்தொன்றாவது

# வராஹசம்ஹாரமூர்த்தி.

தாமரைமலரில் வீற்றிருக்குஞ் சதுர்முகப் பிரமதேவனை நோக்கித் தவஞ்செய்து பலவரம்பெற்ற இரணியாக்கன் பரந்த வுலகத்தைப் பாயபோற் சுருட்டிச் சமுத்திரத்தில் வீழ்ந்து மறைந்தனன். தேவர்கள் அப்பொழுது நடுக்கமெய்தி நாரணனை யடைந்து நடந்தது கூறி "அடியேங்கட்கு அடைக்கலம் வேறில்லை" என்று வேண்டினர். திருமால் "அமரர்களே! அவ்வசுரனைத் தொலைத்து அவனியை யளிப்பேன்" என்று கருடவாகனமேறிச் செல்லுகையில், இந்திரன் பிரமன் இருடியர் முதலானோர் பணிந்தனர். மாயோனவ்வையகத்தைக் கொணர வராகவடிவாயினர். அவ்வராகமோ நீலவெற்பினும் இரட்டிப்புயர்ந்ததும், கால்கள் நடுவே ஆயிரங்காததூரமுள்ளதும், வால் அசையுந்தோறும் திக்குகளிற்படுவதும், சுவாசத்தால் அண்டத்தைக் குலுக்குவதும், உரோஞ்சால் அண்டச்சுவரை யசைப்பதும், வடவாமுகாக்கினிபோற் பார்வையுடையதும், மூக்கின்றறேருண்டபாதலமுட்டுவதுமாயுள்ளது. பன்றியாகிய திருமால் கடலேழையுங் கலக்கிச் சேறுபடுத்திப் பின்னர் புழுதியாக்கி இரணியாக்கனைக் கண்டு, கொம்பினாலே யவனைக் கிழித்துக்கொன்று சுருண்டிருக்கும் பூமியைக் கொம்பின் நுனியாற் றூக்கி யெடுத்துவந்து ஆயிரம் முடிகளையுடைய ஆதிசேடனது உச்சியில் விரித்தனர்.

அவ்வாறு செய்த வராகம் தனதுவெற்றியால் மமதை யுற்று, அட்டகுலபர்வதங்களை யிடித்துத்தள்ளியும், பலவுயிர்களையும் வாயிற் பெய்து குதட்டியும், சப்தமேகங்களும் நாகலோகமும் அஷ்ட கஜங



61 வராஹசம்ஹார மூர்த்தி.

களும் அச்சமெய்தி நடுங்கும்படி ஆர்ப்பரித்துக் காசினியைத் தாங்கும் காசிபர் பெற்ற நவநாகங்களும் உச்சிநடுங்கும்படி தலையை மோந்தும், பூமியைக் குத்தித் தோண்டியும், கடைக்கடையில் வழிந்த நுரையைச் சிந்தியும் உலாவியது. இக்கோலமாகிய கோலத்தைக் கண்டஞ்சிய இமையவர் கண்கூச்சமும் மனக்கலக்கமுமுற்று, இத்தகைய இடுக்கண் விலகும்படி வெள்ளிமலையை யடைந்து முதற்பெருங்காவலாகிய **நந்தியெம்பெருமான்** கட்டளைபெற்றுத் திருச்சந்நிதியுட் சென்று கருணாநிதியைக் கண்டு தரிசித்துச் சாஷ்டாங்கமாகப் பணிந்து கைகட்டி வாய்பொத்தி நின்று "மகதேவா! மாயவன் வராகவடிவேற்று வையக முழுவதும் வருத்துகின்றனன். இமைப்பொழுது கழியின் இமையவருலகு மழியும். இரணியாக்ஷனைச் சங்கரிக்கும்படி திருமாலைத் துதித்தது இத்தீமையை விளைத்தது யாங்கள் துன்புறற்குல, தேவரீரை யன்றி யதனைத் தீர்ப்போர் யாவர்?" எனப் பலவாறு துதித்துப் பணிந்துநின்றனர். விடையூர்தி அத்தேவ முனிவர் வேண்டுகோளுக் கிரங்கி, அவர்கட் கருள்செய்யத் திருவுள்ளஞ்செய்து ஓர் **வேடுவவுருவேற்று** வராகத்தை யடைந்து தமது திருக்கரத் திருந்த முத்தலைவேலால், நெற்றியிற் குத்தி நிலத்திலழுத்தி, ஒரு கொம்பைப் பறித்தனர்

அக்காலத்தில் அகந்தைகழிந்த வராகம் ஐயனைத் துதித்தலால் அருள்கூர்ந்து மற்றொரு கொம்பையும் பறிக்காமல் மன்னித்து விடுக்க, தேவர்கள் "எம்பெருமானே! இன்னுமொருதரம் இதனைப்போல மாயோன் மாலோனுய மமதையுறாமல் இதன் கொம்பையும் தேவரீர் திருமேனியி லணிந்துகொள்ளல்வேண்டும்" என, சிவபெருமான் அவ்வாறே அவர்கள் வேண்டுகோளுக்கிரங்கித் திருமேனியிற் றரித்துத் திருக்கைலாயமலைக்கு எழுந்தருளினார் தன்கருட் பிருகுமுனிவரிட்ட சாபப்படி பன்றியாகிய திருமால் சிவபிரானைத் துதித்துப் பணிந்து **தேவரும்முனிவருங் கேட்கும்படி வராகபுராணம் கூறித் தனது வைகுந்தபதவியைச் சேர்ந்தனர்.**

திருமாலாகிய வராகம் இறுமாப்புற்று உலகிற் றுன்புறுத்துகையில், தேவர்வேண்டுகோளுக்கிரங்கி அதன் அகந்தையை யழித்தமையால் மகாதேவருக்கு வராஹாரிமூர்த்தி யென்பதோர் திருநாமம் வழங்குகின்றது.

காளிகாகண்டம்.

"உத்பாட்யதம்ஷ்ட்ராம்தஸ்யைகாம் ஹரஸ்யோரஸிபூஷணம்
ஏகஶ்ருங்கவராஹோபூத் ததாப்ரப்ருதிமாதவ. |

కాళికాఖండం

ఉత్పాట్యదంష్ట్రాంతస్యైకాం హరస్యోరసిభూషణం ।
ఏకశృంగవరాహోభూత్తదాప్రభృతిమాధవః ॥

லிங்க புராணம்.

த்ருஷ்ட்வாஜ்ஞகராஹதம்ஷ்ட்ராந்தாம் விஷ்ணோஶ்சைவமஹாத்மந:
பபாரசமஹாதேவ: கூர்மம்பராந்தேபிசோரஸி
புத்ரபௌத்ராவ்ருத: ஸர்வோ வராஹஶ்சாபதத்புவி
அத்யாபிஸூகராக்யாதம் தீர்த்தம்கங்காதடேஸ்திதம்
ஸ்கந்தஶக்த்யாஹதோயத்ர வராஹாக்யோம்ருதோஹரி |

లింగపురాణం.

దృష్ట్వాజగ్రాహదంష్ట్రింతాం విష్ణోశ్చైవమహాత్మనః ।
బభారచమహాదేవః కూర్మంప్రాంతేపిచోరసి ।
పుత్రపౌత్రాన్వితఃసర్వో వరాహశ్చాపతద్భువి ।
అద్యాపిసూకరాఖ్యాతం తీర్థంగంగాతటేస్థితం ।
స్కందశక్త్యాహతోయత్ర వరాహాఖ్యోమృతోహరిః ॥

ஷை வீரபத்ரவசநம்.

விஸ்ம்ருதம்தத்தம்ரூபம் த்வம்ஷட்ரோத்பாடேநபீடித:
வராஹவிக்ரஹஸ்தஸ்ய ஶாகரோஹந்தேநஜேதுநா

వీరభద్రవచనం.

విస్తృతంత త్తదంశేన దంష్ట్రిత్వా చైనపీడితః ।
వరాహవిగ్రహస్తేద్య సాక్రోశస్తేన హేతునా ।

**கந்தபுராணம்**

"கணடுகணணுதலவனமருபபொனறினைககாததாற
கொணடவெலலையிறபறிததலுமுணணாவுமுனகுறுக
விணடுமெறறதுமபறிபபணிஙகிவையெனனெருவிப
பணடுபோலநினறேததுமபோயினனபரமன
அனறுகொணடதோராமருபபினைசசினனமாவணிநதா
னினறுமஙகவனமாரபிடைபபிறையெனவிலஙகு
மொனறுமறறிதுகேடடனைநினறதுமுனைபபா
நனறுதோநதுணாமறைகளுமிததிறஙகிலும. '

**காஞ்சிப்புராணம்.**

சுழிகருமபுனலேழகடலசுவறறிமலைகளேழுநதுகளபடததி
விழிகருஙகடவுடபனறியினைவிறலவேடுருககொணடெழுநதருளி
யழிததஙகொருவெணகோடுபறிததணிநதுமறறையிடககோடு
பழிசசுநதுஙகேடடுளமிரஙகிவிடுததபகவனறிருவுருவம "

வராஹசமஹாரஜாததயேகம.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்

# அறுபத்திரண்டாவது

# ப்ரார்த்தநா மூர்த்தி.

முன்னொருகாலத்தில், தவமே முத்தியளிக்கத்தக்கதென்றிறுமாந்திருந்த தாருவன முனிவர் தவத்தையும், அவர் பன்னியர் கற்பையுமழிக்க, சிவபெருமான் பிக்ஷாடநமூர்த்தியாய், திருமால் மோகினி வடிவேற்றுடன்வரக்கொண்டு தாருவனத்தைச் சார்ந்து மோகினியால் முனிவர் தவத்தைப் பொழித்து, தாமே அவ்விருஷிமாதர் கற்பையகற்றினர். அதனால் வெகுளிமீக்கொண்ட அந்தணர் ஆபிசார ஹோமமொன்றியற்றி அதிற்றோன்றிய பலபொருள்களையும் பரமன் மேற் பிரயோகிக்க, இறைவர் அவற்றை உடை படை-அணிமுதலியவாகக் கொண்டனர். அவர்கள் யாகாக்கினியிற்றோன்றிய முயலகனைச் செலுத்த, முன்னோன், அம்முயலகன் முதுகில் ஓர் திருவடியையூன்றி ஓர் நடனஞ்செய்து முனிவர்கட்கு ஞானமளித்து திருமாலுடன் திருக்கைலைசேர்ந்தனர். [இச்சரித்திரங்கள் முறையே பிக்ஷாடன மூர்த்தம் - சார்த்தூலஹதமூர்த்தங்களிற் கண்டுகொள்க]

இதனையறிந்த எம்தனையாகிய கௌரியம்மையார் தாமசத்தியாயிருக்கையில் இறைவர் மாலாகிய மோகினியை உடன்கொண்டு சென்றதும், தாம் உடனில்லாத சமயத்தில் தாருவனத்தில் திருநடனஞ்செய்ததுமாகிய காரணங்களால், ஓர்லீலாமாத்திரையாய் ஊடல்கொண்டனர்.

அதுகண்ட அருள்வள்ளல் "ஏகைவஶக்தி: பரமேஶ்வரஸ்ய ப்ரயோஜநார்த்தாய சதுர்விதாபூத் - போகேபவாநீ புருஷேஷு விஷ்ணு: க்ரோதேசகாளீ சமரேசதுர்கா"—என்றபடியே, "உமையே! எமது ஒருஶக்தியே மாயாகாரிய சம்பந்தத்தால் நான்குவகையுற்று



62 பிரார்த்தனா மூர்த்தி

விளங்கும் அதுவே நீயும் - திருமாலும் - காளியும் - தூர்க்கையுமாக நிற்கும். அதாவது — மனைவியாகையில் நீயும், ஆணுருவாகையில் விணுவும், குரோதமுற்றபொழுது காளியும், யுத்தமுனையில் தூர்க் கையுமாக விளங்குவிராதலின், திருமாலும் நீயும் வேறன்று இதற் காக வெருளி வேண்டியதில்லை" என்று தாமும் லீலாமாத்திரையா யப் பிரார்த்தித்தனர்.

தேவியார் பின்னர் தணிந்து "தேவநாயகா! எளியேன் அத்திரு நடத்தைத் தரிசிக்கும்படி திருவருள்புரியவேண்டும்" எனப் பிரார்த் திக்க, இறைவர் அகமகிழ்ந்து "அவ்வாறே ஆகுக" என்று ஆண மை ஓர் தாண்டவஞ் செய்தருளினர். அதனைக் *கௌரிதாண்டவம் என்பர். இறைவியார் ஈசனைப்பணிந்து "எளியேன் பிழையை மன் னிக்கவேண்டும்" என்று பல முறை பணிந்து பண்டுபோல் பரமன் பக்கலில் வீற்றிருக்கின்றனர்.

இறைவர் லீலாமாத்திரையாக உடல்கொண்ட இமயவல்லி யைப் பிரார்த்தித்த அவசரம் பரார்த்தநாமூர்த்தம் எனப்படும்.

பரார்த்தநாமூர்த்தயோகம்

---

* இதனை இனியசரிடப்பமே நவதாண்டவம் என்னு நூலில் நன் குணரலாம்.

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்.

## அறுபத்துமூன்றாவது

# ரக்தபிக்ஷாப்ரதாநமூர்த்தி.

சிவபிரானை யிகழ்ந்துசிரித்த பிரமனது, * நடுத்தலைகிள்ளிய பைரவக்கடவுள் சிவாக்ஞைப்படி உதிரப்பலியேற்க, அப்பெருமானு லனுக்கிரகிக்கப்பட்ட காலவேகன் கனன்முகன் சோமகன் ஆலகாலன் அதிபலன் ஆகிய கணத்தலைவருடன் சிறந்த தவசிகள் வசிக்கும் வனங்களும் தவச்சாலைகளுமடைந்து அவர்களைச் சூலப்படையாற்குத்திச் சோரிநீரைக்கபாலத்தேற்று, உம்பருலகடைந்து அவ்வாறே உதிரமேற்று அவர்களுள் உயிர்துறந்தாரை உடனேயெழுப்பி அக்கதையொழித்து உலகமெங்குஞ்சஞ்சரித்து மாயவன்வாழும் வைகுந்த நகர மடைந்தனர்.

அவருடன் கூடிவந்த கணநாதர்கள் கொக்கரித்துக் கூச்சலிட்டு முன்செல்ல, விண்டுவின் சாரூபம்பெற்று, தண்டு கோதண்டம் சங்கு கட்கம் சக்கரங்கொண்டு விடுவச்சேனனென்னும்பெயருடைய முற்காவலாளன் பைரவப்பெருமானது பிரதாபத்தையறியாமல், சாமான்யமாகக் கருதி, முன் வந்து தடுத்து எம்பிரான் கணத்துடனெதிர்த்துச் செருச்செய், பைரவர் விசையுடன் சூலநுதியில் விடுவச்சேனனைக்குத்தித் தோள்மேற்சாய்த்து, பூமகள் நிலமகள் இருபுறம் பொருந்த, பல தலையுடைய பன்னகச்சயனத்திற்படுத்துத் திருக்கண் வளருஞ் சீதரன்முன் சிவகணங்களோடணுக, திருமால் இருமாதருடன் துண்ணென்றெழுந்து மண்மிசை விழுந்து மலரடிவணங்கி “எம்பெருமான் ஈண்டுற்றதென்?” எனவினவ, பைரவப்பெருமான்

* இச் சரித்திரத்தைப் ப்ரஹ்மஶிரச்சேதமூர்த்தத்திற் காண்க.



63 இரக்தபிக்ஷாப்ரதான மூர்த்தி.

"பலிக்குவந்தோம், சிரத்திலிருந்திழியுஞ் செந்நீரைச் சீக்கிரந்தருக" என்றனர்.

நாரணன் நன்றென நினைந்து தன் நகத்தினால் நெற்றியிலுள்ள நரம்பொன்றைப்பிளந்து பிரமன் கபாலத்திற்சோரி சொரியும்படிவிட, அதினின்றும் உதிரப் பெருக்கு ஓர் ஆயிரவருடமொழுக, மால் மயக்குற்றனன். கபாலத்திற் பாதியும் நிரம்பியதில்லை. சிதரன் சோர்ந்ததால் மாதர்கள் பைரவரை வணங்கிநிற்க, "மாதர்களே! அஞ்சல்" என்றருளி வாசுதேவனைச் சுவாசமுற்றெழத் திருவுளஞ்செய்து "சகஸ்ருதி" யெனவிடுத்துத் திருமுப்பகைப்பிவ, விண்டு "பண்டுபோல் விடுவசேனனைத் தலைவர் பிலக்காகத் தயைசெய்யவேண்டும்" என்று பிரார்த்திக்க, காரி சூலநுதியிலிருந்த விடுவசேனனை யிறக்கி யுயிரளித்து விடுத்துப் பின்னுமுள்ள தேவர் முனிவர் செருக்கையொழித்துச் சேனை சமுத்திரஞ்சூழ அண்டங்கடோறுஞ் சென்றனர். இவர் சர்வசம்ஹாரகாலமாகிய யுகாந்தங்கடோறும், வேதமே சுவாநமாகவர அதன்மீதேறி அகமகிழ்ந்துலவுவர். இவ்வாறு தேவர் முதலானோர்து உதிரத்தைப் பலியேற்றது அவர்கள் இறுமாப்பொழிக்கவேயன்றிப் பிறிதொரு காரணத்திற்குமன்று.

இறுமாப்புற்ற இமையவர்பால் இரத்தத்தைப்பலியேற்று அவர்கள் அகந்தையை அடக்கினமைத்தமையால் சிவபிரானுக்கு ரக்தபிக்ஷாப்ரதாநமூர்த்தியென வோர்பெயர்விளங்குகின்றது.

ப்ரஹ்மாண்டபுராணம்.

அவிஜ்ஞாயபரந்தாம திவ்யந்தத்பாரமேஸ்வரம்
நிவாரயத்ரிஸூலாங்கம் த்வாரபாலோமஹாபல: | இச்ய
ஸ்ரீபித்யபாதயாமாஸ ஸூலேகோரஸிதம்புவி
தத்யாஜ்ஜீவிதமத்ருஷ்டவா மருத்யுவயாநிஹதோயதா.

అవిజ్ఞాయపరంధామ దివ్యంతత్పారమేశ్వరం ।
నివారయత్రిశూలాంకం ద్వారపాలోమహాబలః ॥ ఇత్యాది

నిభిద్యపాతయామాస శూలేనోరసితంభువి ।
తత్యాజజీవితందృష్ట్వామృత్యువ్యాధిహతోయథా॥ బ్రహ్మాండపురాణం

### ஶிவரஹஸ்யம்.

மஹதாகர்வேணதேவோஸ்மி மாஹாத்ம்யேநவிமோஹிதா
மாம்நஜாநந்திதாதாரம் கர்வக்ரஸ்தாஸ்ஸுராஸுரா
ப்ரஹ்மவிஷ்ணுமஹேந்த்ராத்யா ஸ்தாநஹம்லீலயாமுஹு
ரக்தபிக்ஷாடநவ்யாஜாத்வீதகர்வாநவிதாயச

### శివరహస్యం

మహాగర్వేన దేవోస్మి మాహాత్మ్యేనవిమోహితాః ।
మాంనజానంతిదాతారం గర్వగ్రస్తాస్సురాసురాః ।
బ్రహ్మవిష్ణుమహేంద్రాద్యా స్తానహంలీలయాముహుః ।
రక్తభిక్షాటనవ్యాజా ద్వీతగర్వాన్విధాయచ ॥

### ப்ரஹ்மாண்டபுராணம்

தேவாநாம்தாநவாநாஞ்ச ததாநயேஷாஞ்சமாதயதாம
ரக்தபிக்ஷாசசலேனைவ காவகணடுமேஹராமஹம
இதிஸம்சிந்த்யவிஶ்வாத்மா சசாரபுவநத்ரயம—இத்யாதி
ஜகாமவிஷ்ணோர்பவநம் யத்ராஸ்தேமதுஸூதந.—இத்யாதி
ந்யவாரயத்தத்ரிஶூலாங்கம் த்வாரபாலோமஹாபல.—இத்யாதி
விஷ்வக்ஸேநஇதிக்யாதோ விஷ்ணோரம்ஶஸமுத்பவ
ஶூலேகோரஸிநிர்பித்ய பாதயாமாஸதம்புவி
விஶ்வஶூலேநாதாய ததகணேபரமேஶ்வர —இத்யாதி
திவ்யவர்ஷஸஹஸ்ரந்து கபாலேபைரவஸ்யது
தயாபதம்த்யாவிப்ரேந்த்ர தீர்யாபரமேஷ்டிந:
கபாலஸ்யவிஶாலஸ்ய நாதமப்யபிபூரிதம்
ரக்தஸ்யவிரஹாத்விஷ்ணு: பபாதபுவிமோஹித:.

## బ్రహ్మాండపురాణం.

దేవానాం దానవానాం చ తథాన్యేషాం చ మాద్యతాం ।
రక్తభిక్షాప్రదేనైవ గర్వకండూం హరామ్యహం ।
ఇతినిశ్చిత్య విశ్వాత్మా చచార భువనత్రయం । ఇత్యాది
జగామ విష్ణోర్భవనం యత్రాస్తే మధుసూదనః । ఇత్యాది
న్యవారయత్త్రిశూలాంకం ద్వారపాలో మహాబలః । ఇత్యాది
విష్వక్సేన ఇతిఖ్యాతో విష్ణోరంశసముద్భవః ।
శూలేనోరసి నిర్భిద్య పాతయామాస తం భువి ।
వివేశ శూలేనాదాయ త్రిలోకేశో మహేశ్వరః । ఇత్యాది
దీప్యమానసహస్రాంశు కపాలే భైరవస్స్వతః ।
తయోః పతంత్యాః ప్రాస్నుద్ర ధారయా పరమేష్ఠినః ।
కపాలస్య విశాలస్య నాన్తం మధ్యం ప్రపూరితం ।
రక్తస్య విరహాద్విష్ణుః పపాత భువి మోహితః ॥

## கந்தபுராணச்சுருக்கம்.

“ உன்றலைப்படுசோரிநீயாயுகுத்திடயென்னாகத்திறை
றன்றனுறியினாகத்துசோரிதனைப்பொழிந்திடம்பிரான
வென்றிசேரயனாருப்பெருஞ்சிரமீதிலேறதனனூறநூ
றென்றுகூறிமொண்டுசெலவிங்குமாயன்வீழ்ந்தனன”

ரக்தபிக்ஷாபிரதானம்பாததயோகம:

---

உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்.

# அறுபத்துநான்காவது
# சிஷ்யபாவமூர்த்தி.

ஸ்ரீமுருகக்கடவுள் திருவிளையாடல்கள் பலவியற்றி, தேவர் வேண்டுகோளின்படி அவர்கள் பூசையைக்கொள்ளத் திருவுள்ளங்கொண்டு ஸ்கந்தகிரியில் எழுந்தருளி யிருந்து, நாரதமுநிவர் யாகத்திற்றோன்றிய யாடொன்று அமரருலகத்தை யழித்துவந்ததால் அந்நாரதர் கூற அதனை வீரவாகுதேவரால் பிடிப்பித்து வாகனமாகக்கொண்டு வீற்றிருந்தனர்.

அவ்வாறிருக்கையி லொருநாள், பிரமேந்திராதிதேவர்கள் சிவபெருமானைச் சேவைசெய்யக் கருத்துட்கொண்டு திருக்கைலாயமலையை யடைந்து தரிசித்துத்திரும்பி, குமாரக்கடவுள் வீற்றிருக்குந் திருவாலயத்தைச் சமீபிக்கையில், இளையபிள்ளையார் இலக்ஷத்தொன்பது வீரரும் புடைசூழ்ந்து நிற்க, பொன்மயமான முதற்கோபுரவாயிலில் எழுந்தருளியிருந்தமையால், அவ்வமரர்குழாமிடையே அவர்கட்குத் தலைவனாகவரும் பிதாமகனைத் திருக்கண்சாத்தி, "ஏ சதுர்முகனே வருக" எனவிளிக்க, பதுமன் அக்கட்டளை மேற்கொண்டு சமீபித்துச் சாஷ்டாங்கமாய்ப் பணியாது கைகூப்பி நின்றனன். முருகக்கடவுள் "நீயாவன்?" என்று வினவ, அலரோன் "அண்ணலாக்கினைப்படி அகிலத்தை ஆக்குவோன்" என்றனன். அறுமுகக்கடவுள் "அவ்வாறு சிருட்டிசெய்வோனாகில் உனக்கு வேதந்தெரியுமோ" என, அம்புயன் "அண்ணலே! இறைவரருளிய எண்ணில்லா வேதாகமங்களுட் சிறிதறிவேன்" எனச் செப்பினன். கார்த்திகேய



64 சிஷ்யபாவ மூர்த்தி.

ன் "கமலயோனியே! இருக்கு ஓதுக" என, நான்முகன் "நல்லது" என்று ஓம் என்னப் பிரணவத்தை யுச்சரித்துப் பின் வேதமோதத் தொடங்கினன்.

முருகக்கடவுள் "இரு, முன்னோதிய ஓம் என்பதற்கு முதலில் உரையுரைத்துப் பின்வேதமோதுக" என்றுபணிப்ப, அன்னவூர்தி அஃதறியாததனால் அறைதலொன்றுமில்லனாய் யோசித்துநின்றனன். செவ்வேள் சினமிக்குக் கொண்டோராய் "இதன் பொருளறியாத உனது சிருட்டித்தொழிலும் இவ்வாறேயோ?" என்று திருவாய்மலர்ந்தருளி அவனது நான்குமுடிகளுங் குலுங்குமவண்ணங் குட்டி, நிலத்தின்மேல்விழ வுதைத்து, பரிசனங்களாற் கந்தகிரியிலே சிறையிலிட்டு, தாமே ஜெபமாலை - கமண்டலம் - அபயம் - வரதமேந்திய நான்குதிருக்கரங்களும் ஒரு திருமுகமுமாக வீற்றிருந்து பிரமதேவனைப்போலச் சிருட்டிசெய்துகொண்டிருந்தனர். சதுமுகனேவேந்த வானவர்பயந்து வள்ளலை வணங்கித் தத்தம் பதவியடைந்து பண்டு போல வாழ்ந்திருந்தனர். இவ்வாறே பலகாலங் கழிந்தன.

பதுமன் சிறையிருந்ததற்காக, பன்னகசயனன் தன் னுள்ளமத்தினில் இன்னலமிருந்து எண்கண்ணன் சிறையைவிலக்க வெண்ணி, அட்டதிக்கிறைவர் - எட்டுவசுக்கள் - துவாதசாதித்தர் - சந்திரன்முதலிய கோள்கள் - சத்தருஷிகள் - நவபிரமாக்கள் முதலிய தேவர்முனிவர்களைச் சிந்திக்க அவர்கள் அக்கணமே ஐம்படைக்குரிசில்பா லடைந்தனர். திருமால் தேவர்முனிவரை யுடன்கொண்டு திருக்கைலையை யடைந்து திருநந்திதேவர் விடைபெற்றுத் திருச்சந்நிதானத்தினுட்சென்று திரியம்பகனைச் சேவைசெய்து பலவகையாகத் துதித்துக் கைகூப்பி நின்றனர். உமாபதி ஒன்றுமறியார்போன்று லீலாமாத்திரையாய் "தேவமுனிவர்களே! ஒருகாலத்துமில்லாத பெருந்துயருற்றவ க்தனிர்போலும்; என்னவிசேஷம்" என வினவ, வானவர் கூட்டத்திலிருந்தமாதவன் பணிந்து "மஹாதேவ! தேவரீரது புதல்வராகிய முரு

கப்பிரான பிரமனைப்பிரணவப்பொருள்வினவி அவனறியாமையாற் சிறையிலிட்டுச் சிருட்டியையுந் தாமேசெய்து வருகின்றனர், வேள் போயமேயுறுமோ தேவர் சதுர்முகனையாம், ஆதலின் சிறைநீக்க அருள் புரியவேண்டுமென விண்ணப்பஞ்செய்தனர். எம்பிரான் நந்தியெம்பெருமானை நோக்கி "நமது கட்டளையைக் கூறிப் பிரமனைச் சிறைவிடுவித்தி"யென, அவர் அவ்வாறேகிச் சுப்பிரமணியமூர்த்திகளைத் தரிசித்து, ஆணையை விண்ணப்பித்தனராயினும், வேறுபடையோதிய விமலர் வெகுளியுற்று வேதனை விடுவதில்லை, விரைந்து செல்லாதுற்றபின் நின்னையுஞ் சிறையிலிடுவேன்" எனத்தருளிச்செய்ய, நந்திபகவான் அச்சமுற்று ஒன்றுங்கூறாது உமைபாகரிடமுற்றுரைத்தனர்.

பரமசிவன் அதுகேட்டுப் புன்னகைசெய்து, சகலதேவருந்தம்மைப் புடைசூழ்ந்துவரப் பூட்பக ரதத்திலாரோகணித்து, ஸகந்தகிரியையடைந்துவிடலும், பின்னிழிந்து உடன்வருதல்கண்ட உமைபாகேசுபதி எதிர்ந்து இறைவரது திருச்சரணங்களிற் பணிந்து தமது பீடத்தின்மேலிருக்கச்செய்து "நீயவ்விடமெழுந்தருளிய தென்னகாரணம்" என வினவ, பிறைசூடிய பெருந்தகை "பிரமனை நீயிட்ட சிறையினின்று விலக்குக" எனச், ஸகந்தர் மறுத்து, "பிரணவப்பொருளறியாத இவன் சிருட்டிசெய்வது அடாது." எனக் கூறினர். சிவபெருமான் சினங்கொண்டார்போன்று "வேலவ! விதியை விடுதி" என, அறுமுகக்குரிசில் டர்சனாகளாற பதுமனை விடுவித்தனர். பரமபதி அவ்வலரோனுக்கு அருள்செய்து ஆக்குந்தொழிலிற் பண்டுபோலிருக்கப் பணித்து விடுத்து, மயூரவாகனரைத் தொடைமேலிருத்தி "பிரணவப்பொருள் உனக்குத் தெரியுமாயிற் செப்புக" என, குழகன் "கொன்றைவேணியாய! அன்றென் தனக்கருளிய ஞான்று பிறருணராது பேசியதன்றோ? அன்னதிங் கனைவரு மண்ணியவிடத்தே மறைவிலாதுரைத்தல் மரபதன்றே"

என் மறுமாற்றம் வழங்கினார். ஈசன் "எனக்கு மறைவாகக் கூறுக" என்று திருச்செவி கொடுக்க ஸ்ரீசுப்பிரமணியசுவாமிகள் ஓம் என்னும் பிரணவப்பொருளை யுபதேசித்தருளிச் சிவகுருநாதர் என்ற பெயரெய்தினார். சிவபிரான் களிகூர்ந்து தேவர்களுக்குச் செல்ல விடையளித்து, விடையேறி வெள்ளிமலையடைந்து வீற்றிருந்தனர்.

முருகக்கடவுளிடத்திற் பிரணவப்பொருளைக் கேட்டுக்கொண்டபொழுது சிஷ்யகோலமாக நிற்றலின், சிவபெருமான் சிஷ்யபாவமூர்த்தியென்ப் பெயரெய்தினார்.

சிஷ்யபாவமூர்த்தயே நம

---

**வாழ்த்து**

தண்ணாறு முடிபுனைந்த சங்கரனு மலையரையன் றருமபூங்கொம்பும்
எண்ணாறு கரத்தானு மீராறு கரத்தானு மெண்ணில்கேள்வி
நண்ணுந்தக்கன் மகளுஞ் சிதைத்தானு மறைநூளி நண்ணுவானும்
வெண்ணீறுங் கண்மணியும் வாழ்கவிறை பராக்கிரம நூலொடுமிக்கம்மா

## சிவபராக்கிரமம்

முற்றுப்பெற்றது.

மகாமகோபாத்யாய, டாக்டர்
உ. வே. சாமிநாதையர் நூல் நிலையம்
அடையாறு, சென்னை-20

பரமபதயேநம: